# ஒரு பளீர் முத்து
*மூ ஸின்*

ஆசிரியர் குறிப்பு

மூ ஸின் என்பது தற்போது அமெரிக்காவில் வாழ்ந்து வரும் சீனத்தின் பரவலாக அறியப்பெற்ற எழுத்தாளரின் புனைப்பெயர். தென்சீனத்தின் வூஜென் என்ற இடத்தில் மிகவும் பணக்கார குடும்பத்தில் பிறந்தார். இவரது பரம்பரை ஷாங்காயில் பெரும் வியபாரங்களைச் செய்து வந்தது. 1947 முதல் 1949 வரை ஷாங்காய் கலைக்கூடத்தில் பயின்று, 1982ல் அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்தார். சீனாவில் இருந்தபோது நிறைய எழுதியிருந்தார் என்றாலும் அவரின் ஆக்கங்கள் யாவும் கலாசாரப் புரட்சியின் போது பறிக்கப்பட்டு அழிக்கப் பட்டன. 1982 முதல் 12 கவிதை, உரைநடை மற்றும் புதின நூல்கள் பிரசுரமாகின. சீனமொழி மற்றும் இலக்கியத்தின் பழமையையும் மேற்கின் புதுமையையும் உள்வாங்கி பல புதிய உத்திகளைச் சோதனை முயற்சிகளாகச் செய்து சீன வாசகர்களுக்கு அறிமுகம் செய்த பெருமை இவருக்கு உண்டு. 'வேர்களைச் சுமக்கும் நாடோடிகள்' மற்றும் 'இவ்வாழ்வின் அவதாரங்கள்' போன்ற இவரின் பிரயோகங்கள் மிகப் பிரசித்தம்.

என் தந்தையின் வயதில் ஒரு மணமான பணக்கார ஆண் வைப்பாட்டி வைத்துக் கொள்வது சமூகத்தின் பார்வையில் ஒரு குற்றம். தவிர, எங்களின் மூதாதைரின் வீடு ஏதோ ஒரு உள்ளடங்கிய பழமைமிகு ஊரில் இருந்தது. அப்பாவோ தூரத்து பெருநகரில் வியாபாரம் செய்தார். என் அம்மா, என் சகோதரி யாவரும் அந்தக் கிராமத்தில் வாழ்ந்தோம். அப்பா தனியாக தன் அனைத்து வியாபார விஷயங்களையும் கவனித்துக் கொண்டார். வீட்டிலும் சமூகத்திலும் ஒரு பெண் அவருக்கு வேண்டியிருந்தது என்பது ஒன்றும் பெரிய குற்றமாகத் தெரியவில்லை. பல வருடங்களாக செல்வி.ஸியாவுடன் அப்பா வாழ்ந்து வந்தார் என்று என் அம்மா அறிந்திருந்தும் ஒன்றுமே கேட்டதில்லை. ஆனால், அப்பா அவ்வுறவைக் காதல் என்று பீற்றிக் கொண்டிருந்தால் ஒருவேளை அம்மா சகித்திருப்பாளோ என்னவோ.

எனக்கு நினைவிருக்கிறது, ஒரு குளிர்கால விடுமுறையில் கிராமத்தில் பனி பொழிந்தது. ஆலயங்களில் தெருக் கூத்துகளும் விழாக்களும் நடந்தேறின. புத்தாண்டை நாங்கள் அம்மாவுடன் கொண்டாடினோம். எங்களின் கோடை விடுமுறையில் என் சகோதரியும் நானும் நகரத்துக்குப் போனோம். முதலில் படகிலும், பிறகு புகை வண்டியிலும். அப்பா உயர்ரக விடுதியில் எங்களைத் தங்க வைத்தார். விளையாடவும் நிறைய இடமிருந்தது. விடுதியில் ஒவ்வொருவரும் மேலதிகாரி முதல் கீழ்நிலை ஊழியர் வரை எங்களைக் கவனித்துக் கொண்டார்கள். எதைக் கேட்டாலும் எப்போது கேட்டாலும் கிடைத்தது. எந்தப் பிரச்சனையும் வராது என்று அப்பாவுக்குத் தெரிந்திருந்தது. எங்களுக்குச் செலவிட அப்பாவிடம் நேரம் தான் இல்லை. செல்வி.ஸியா தான் வந்து எங்களை காரில் கூட்டிக் கொண்டு போய் தன் மாளிகையில் இரவு உணவு அளித்தார்.

எங்களிடம் கேட்க அவருக்கு நிறைய கேள்விகள் இருந்தன. எங்களின் உரையாடல் நல்ல படியாகப் போகும் போது, அவர் தன்னை 'சின்னம்மா' என்றழைக்கச் சொல்வார் எங்களிடம். அக்காவும் நானும் புன்னகைத்தபடி அவரைப் பார்த்திருந்தோம். அம்மா அவரை அப்படிக் கூப்பிடக் கூடாது என்று எங்களிடம் சொன்னதில்லை. எங்களுக்கு தான் கொஞ்சம்

அசௌகரியமாக இருந்தது. அவரின் மேலை நாகரீகமும், நளின மெய்ப்பாடும், சிநேக பாவமும், விருந்தோம்பலும் அவர் தொடர்பான ஒவ்வொன்றும் மிகவும் நாகரீகமாகவும் அழகாகவும் இருந்தது. எங்களுக்கு ஒரே ஒரு அம்மா தான். இரண்டாவது அம்மா கிடையாது. நானும் அக்காவும் அவருக்குப் பின்னால் அவரை 'சமூகப் பூ' என்றழைத்தோம். அப்படிச் சொல்வது நாகரீகமில்லை என்றுணர்ந்து உடனே நாங்கள் முகத்தைச் சுளிப்போம். செல்வி.ஸியா விஞ்ஞானக் கல்விக் கூடத்தின் பட்டதாரி என்று அக்கா சொன்னாள். முதல்நிலைப் பட்டதாரி என்று புரிந்து கொண்டேன். முதல்நிலையில் இருந்த மூன்று கல்விக் கூடங்களில் ஒன்று. ஏதோ ஒரு வட்டார அதிகாரி அங்கு படித்ததாக நான் கேட்டிருக்கிறேன்.

அந்தக் கல்விக் கூடம் ஜேஜியாங் மற்றும் ஜியங்ஸூ மாநிலங்களால் நடத்தப் படுகிறது. செல்வி.ஸியா நீச்சலிலும் டென்னிஸிலும் நட்சத்திரமாகத் திகழ்ந்தவர். செல்வி.ஸியாவின் மீது எனக்கிருந்த மதிப்பு பன்படங்கு அதிகரித்தது. அவரின் இன்னொரு 'பெயர்' அந்த மதிப்பைக் குறைத்தது. வீதியின் மறுபுறம் இருக்கிறதே 'வெள்ளை ரோஜா அழகு சலூன்' எனும் ஒரு சிகையலங்காரக் கடை, அங்கே தன் செல்வி.ஸியா முதலாளியாக இருக்கிறார் என்று அக்கா சொன்னார். பெண் முதலாளிகளை நான் வெறுத்தேன். அவரைப் பார்க்கும் போதெல்லாம் அவரின் எந்த அசைவு பெண் முதலாளியுடையது எது நீச்சல் வீராங்கனையுடயது என்று நான் யோசிக்க ஆரம்பித்தேன். ஒவ்வொரு முறையும் சரியான பதில் கிடைக்கவில்லை. எப்படியிருந்தால் தான் என்ன என்று அலுப்புடன் அக்கா சொன்னாள்.

வறுத்த வாத்து போன்ற சுவைமிகு உணவு வகைகளைச் சாப்பிட்டோம். அவர் வாங்கிக் கொடுத்த பாவாடைகளை அக்காவும் காற் சட்டைகளையும் காலணிகளையும் நானும் அணிந்தோம். அப்பாவுடைய காசு தானே எப்படியும். இருந்தாலும், செல்வி.ஸியா தான் கடைக்குக் கூட்டிப் போய் எங்களையே தேர்ந்தெடுக்கச் சொல்வார். தேர்ந்தெடுத்ததைத் தைக்கவும் கொடுப்பார். நாங்களே தனியாகப் போயிருந்தால், பலமுறை போட்டுப் பார்க்க தையற் கடையில் விட்டிருக்க மாட்டார்கள். தைத்தபிறகு அவர்களே விடுதிக்கு அனுப்பி வைத்தார்கள்.

நாங்கள் கடைக்குள் நுழைந்ததுமே, "இந்த மாதிரி தோல் காலணி உனக்குப் பிடிக்குமா?", எனக் கேட்டனர். மிகவும் ஆச்சரியமாக இருக்கும். மகிழ்ச்சியுடன் நான், "எப்படித் தெரிஞ்சுகிட்டீங்க?", என்று கேட்டேன். "இந்தக் காலணியில் நீ இராணுவ அதிகாரியைப் போல இருக்கிறாய்", என்றார்கள். அதைக் கேட்டு நான் மகிழ்ந்தேன். அது அவர்களுக்கும் தெரியும். அந்தக் கடைக்காரருக்கு அக்காவின் எண்ணங்களும் தெரியும்.

ஆடலழகியினுடையதைப் போல மிக அழகான ஆடைகள் அக்காவுடையது. துணிகள் விதவிதமாகக் கிடைத்தன. நான் பெண்ணாகப் பிறக்கவில்லையே என்று சில வேளைகளில் ஆதங்கப் பட்டேன் நான். அக்காவின் காலணிகள் ஆடல் அழகிகளுடையதைப் போல மென்மையாக இருக்கும். என்னுடையவை நடக்கும் போது டக்டக்கென்று ஒலிக்கும். வீதியில் நடக்கும் போது நிச்சயம் என்னுடையது தான் அதிக பேரின் கவனத்தை ஈர்த்தது.

எங்களின் விடுமுறை முடிவுக்கு வந்தது. அப்பா நிறைய விளையாட்டுப் பொருட்கள், மிட்டாய்கள், பென்ஸில்கள், ஏடுகள் எல்லாம் எங்களுக்கு வாங்கிக் கொடுத்தார். அம்மாவுக்கும் ஒரு பரிசுப் பொட்டலம். "உங்களுடன் நேரம் செலவிட என்னால் முடியாது போனது. மன்னித்துக் கொள்வீர்களா?", என்றார் அப்பா. "மகிழ்ச்சியாக இருந்தீர்களா?"

"பரவாயில்லை", என்றேன் நான்.

"அதென்ன 'பரவாயில்லை'. அப்டின்னா?"

"ஏதோ சுமார்னு அர்த்தம்."

"நல்லா இருந்ததுன்னு சொல்ல வேணாம்னு நினைக்கிறாய். இல்லையா?"

"இல்ல. மகிழ்ச்சியாக இருந்தது விடுமுறை", என்றேன் நான்.

"ரொம்ப நல்லா இருந்தது", என்று சொல்லி அக்கா எனக்கு உதவினாள்.

"அருமையான நாட்கள்"

அப்பா உட்கார்ந்து சுருட்டைப் பற்ற வைத்தார். "இதே கேள்வியை உங்களின் அம்மா கேட்டால் 'மிக அருமையான விடுமுறை'னு சொல்லணும். என்ன சொல்றேன்னு புரியுதா?"

"புரியுதுப்பா", என்று அக்கா பதிலளித்தாள். நானும் சம்மதத்துடன் தலையை ஆட்டினேன்.

அப்பா என்னைத் தன் நெஞ்சில் சேர்த்து அணைத்துக் கொண்டார். என்னை முத்தமிட்டு, "உனக்கு என் மீது கோபம் இருக்கில்லையா? அதான் எனக்கு உன்னப் பிடிச்சிருக்கு", என்றார் கிசுகிசுப்பாக.

நாங்கள் கிராமத்துக்குத் திரும்பினோம். முதலில் புகை வண்டியிலும், பிறகு படகிலும் போனோம். அம்மா என்னென்ன கேட்பாள், நாம் என்ன பதில் சொல்ல வேண்டும் என்றெல்லாம் குறித்து வழியெல்லாம் ஏதேதோ பேசினோம். குதிரை பந்தயம், நாய் பந்தயம், சாப்ளின், ஹேய் ஜிங் மாமா, செல்வி.ஸியாவின் பங்களா, கண்ணாடி விளக்குகள், வெள்ளி மேசைகள், செல்வி.ஸியாவின் பாடல் மற்றும் பியானோ வாசிப்பு, அவரின் வைர நெக்லெஸ் என்றுப் பல்வேறு விஷயங்களையும் குறித்தும் பேசினோம். பெர்ஷியன் கம்பளம், இங்கிலாந்தின் சுவர் கடிகாரங்கள், பளிங்கு சிலை எல்லாவற்றைப் பற்றியும் பேச வேண்டும். அழகலங்காரக் கடை பற்றி? அம்மா வந்தாலும் விடுதியில் தங்குவாள். சிகையலங்காரக் கடைக்குப் போவாள்; "யார் முதலாளி?", என்று மட்டும் கேட்க முடியாது. நான் அக்காவுடன் ஒத்துப் போனேன். விழுமியங்கள் மற்றும் அரசியல் குறித்து அறியாத இரண்டு குழந்தைகள் நாங்கள். ஆனால், நாங்கள் அம்மாவுக்கு விசுவாசமாக இருக்க நினைத்தோம். அதே நேரத்தில் அப்பாக்கும் துரோகம் இழைக்கக் கூடாது.

அந்த மாலையில் நாங்கள் வீட்டிற்குத் திரும்பிடும் போது அம்மா பரிசுப் பொட்டலத்தைத் திறந்தாள். உள்ளே இருந்தவற்றைப் பார்த்து அக்காவும் நானும் ஆச்சரியப் பட்டோம். அம்மாவும் தனக்கான ஆடைகளைப் போட்டுப் பார்க்க ஆர்வம் காட்டினாள். ஒரு சிறு யோசனை மனதில் மின்னியது: செல்வி.ஸியா தான் இதையெல்லாம் தேர்ந்தெடுத்து வாங்கியிருந்தாள். பார் எத்தனை அழகு சாதனங்கள்! ஒரு அழகியல் நிபுணருக்குத் தேவையான அளவு! "அம்மா, உன் முகத்தில் புள்ளிகள் இருக்கிறதா?"

அம்மா தன் கையைக் காட்டிச் சொன்னாள், "இதைப் பார். புறங்கையில் கரும் புள்ளிகள். சமீபம் வரை நான் கவனிக்கவில்லை."

குழந்தைகளாக ஒவ்வொரு வருடமும் கோடை விடுமுறை வரும் என்று நம்பினோம். ஒவ்வொரு வருடமும் அப்பா எங்களைக் கூட்டிக் கொள்வார் என்றும் ஒவ்வொரு வருடமும் அம்மா எங்களின் வருகைக்குக் காத்திருப்பாள் என்றும் நினைத்தோம். எல்லாமே குடும்பத்தின் சிவப்பு தேக்கு மேசையைப் போல என்றென்றும் நிலைத்திருக்கும் என்றும் நினைத்திருந்தோம். மின்னலும் இடியும் தெளிந்த வானத்தைக் கிழித்திடும் என்றே நினைக்கவில்லை நாங்கள்.

ஆனால், அப்படித் தான் நடந்தது. திடீரென்று, பஸிஃபிக் போருக்குப் பிறகு ஒரு வருடம் ஆனதும் அப்பா இறந்து போனார். குடும்பம் நொடிந்தது. பிறகு, போரின் போதெல்லாம் ஆங்காங்கே நாங்கள் ஓடிடும் போது, "சீக்கிரமே அவர் இறந்ததும் நல்லதுக்குத் தான். இப்படி அகதியாகச் சீரழிந்திட வேண்டாமே", என்று அம்மா அடிக்கடி முணுமுணுத்தாள்.

அப்பாவின் மரணத்துக்குப் பிறகு, செல்வி.ஸியா எங்கள் கிராமத்துக்கு வந்திருந்தார். அவருக்கும் பூர்வீகம் அது தான். பெற்றோர் வெகு காலத்துக்கு முன்னரே இறந்திருந்தார்கள். அவருக்கு மூன்று சகோதரர்கள் இருந்தனர். மூவருக்கும் சொத்துமில்லை வேலையுமில்லை. ஆனால், ஆடம்பரமாக உடுத்தி வந்தனர். கிராம மக்களுக்கு புதிராகவே இருந்தது. எப்படியும் அவர்களின் ஆடம்பரத்துக்குப் பின்னால் ஏதோ ஒரு குற்றச் செயல் இருக்க வேண்டும் எனக் கருதினர். செல்வி.ஸியாவின் முதல் பெயர் மிங்ஜூ. அதன் பொருள் பிரகாச முத்து. அவருக்கான பட்டப் பெயர் 'ராத்திரி முத்து'. அவரின் வருகை கிராமத்தில் செய்தியானது. ராத்திரி முத்து உடைந்து போனது என்றும் இனிமேல் பிரகாசிக்காது என்றும் வதந்திகள் பரவின.

அப்பாவின் மரணம் ஏற்கனவே சோகத்தைக் கொணர்ந்திருந்தது. ஆனால், செல்வி. ஸியா வெளிநாட்டு நிறுவனத்தின் முதலாளியை விரோதித்துக் கொண்டு மேலும் துரதிருஷ்டத்தைத் தேடிக் கொண்டார். அதையெல்லாம் சகிக்க முடியாது கிராமத்துக்கு வர முடிவெடுத்திருந்தார். அனைத்து பெரிய பொருள்களையும் பியானோவையும் கொண்டு வந்திருந்ததைப் பார்த்ததுமே நிரந்தரமாகவோ நீண்ட காலத்திற்கோ கிராமத்தில் வாழப் போகிறார் என்று தோன்றியது. மென்மையான அழகியாக இருந்த அவர் நகர வாழ்க்கையிலிருந்து கிராமத்துக்குத் திரும்பியதும் பெரும் வித்தியாசத்தை உணர்ந்தார். கிராமத்துக்கு கெட்ட பெயரைக் கொண்டு வந்ததாகவும் அதன் நற்பெயரைக் கெடுத்து விட்டதாகவும் கிராமத்தின் வயோதிகர்களால் ஏசப் பட்டார். ஸியா மிங்ஜூ எல்லோரையும் சந்திப்பதைத் தவிர்த்தார். புர்கா அணிந்த பெண்ணைப் போலத் தன்னை மறைத்துக் கொண்டு வாழ்ந்தார். எங்களுக்கு இதெல்லாம் தெரிய வரும் போது அம்மா மெல்லிய குரலில், "நல்லா வேணும்", என்றாள்.

ஸியா மிங்ஜூவுக்கு புத்தி வந்து விட்டதாக அம்மா நம்பிடவில்லை; ஸியா மிங்ஜூவின் துரதிருஷ்டம் மற்றும் அவமானம் எல்லாமே அவள் தானே தேடிக் கொண்டவை என்று அம்மா நம்பினாள்.

பல நேரங்களில் ஸியா மிங்ஜூ யாரையாவது அனுப்பினார் எங்கள் வீட்டுக்கு. தன்னை எங்கள் குடும்பத்தில் ஒருவராக ஏற்றுக் கொள்ளும் படி அம்மாவிடம் கெஞ்சிட. எங்கள் அப்பாவின் மூலம் தனக்கு ஒரு மகள் இருப்பதாகவும் அந்தக் குழந்தையாவது எங்களின் குச்ம்பப் பெயரைத் தாங்கிட வேண்டும் என்றும் சொன்னார். இரண்டு வேண்டுதலையும் மறுத்த அம்மா கொஞ்சம் பொருளாதார உதவியை மட்டும் செய்தாள். ஒரு முறை ஸியா மிங்ஜூவின் தூதுவர் எதையோ சொல்லி அம்மாவின் கோபத்திற்கு ஆளானார். அம்மாவின் வார்த்தைகள் எல்லாமே கடுமையானவை; "எங்கள் வீட்டைக் கடந்து போக அவளுக்கு தைரியம் உண்டா பார்ப்போம். முதலில் முன்னங்கால் முன்னால் வந்தால் முன்னங்கால் உடையும். பின்னங்கால்

வந்தால், பின்னங்கால் உடையும்." எனக்கு நடுக்கமாக இருந்தது. இரக்கம் அற்றதாக மட்டுமில்லாது, ஸியா மிங்ஜூவை விலங்கினமாகவும் அல்லவோ ஆக்கியது.

தற்மசங்கடத்தில் விழுந்த தூதுவர் போனதுமே, அம்மா எனக்கும் அக்காவுக்கும் விளக்கினாள். "உங்கள் இருவருக்கும் அவள் மேல் இரக்கம் இருக்கிறது என்று தெரிகிறது. என் சொற்கள் ஆபாசமாகத் தெரிகிறதா? இப்போது நீங்கள் இருவரும் சிறியவர்கள். அவளும் அவளின் மகளும் இங்கு வந்தால், பின் விளைவுகள் என்னவென்று உங்களுக்குப் புரியாது. அவளுக்கு இளமை போய் விட்டது. ஆகவே, நம்முடன் ஒழுங்காக இருக்கலாம். அந்தப் பெண் குழந்தையும் உங்களுக்குத் தங்கையாகிடுவாள். சரி தான். ஆனால், அந்த மூன்று சகோதர்களைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. மூன்று குண்டர்கள் உங்களின் மாமாக்களாக இங்கு வந்துபோக இருப்பதை நினைத்துப் பாருங்கள். நான் உயிரோடு இருக்கும் வரை அதெல்லாம் நடக்காது. நான் இறந்த பிறகு உங்கள் இருவரின் கதி? இன்று வந்த தூதுவர் அந்த குண்டர்கள் அனுப்பியவர் என்றே நினைக்கிறேன். அதனால் தான் அவ்வார்த்தைகளைச் சொல்ல வேண்டியிருந்தது."

எனக்கு வேண்டியிருந்த பதுகாப்பு, என் சுயநலம், அந்த மூன்று குண்டர்களின் அவப்பெயர் எல்லாமாகச் சேர்ந்து அம்மாவின் விளக்கத்துடன் என்னில் ஒரு கற்பனையை விரித்தது. மூன்று கோரப் பசியுடனான கழுகுகள் இரண்டு கோழிக் குஞ்சுகளின் மீது பாயுமுன்னர் தாய்க் கோழி தன் இறகுகளை விரித்துப் போராடியது. அம்மாவின் படித்த குடும்பப் பின்னணியை நினைவு படுத்திக் கொண்டே அம்மாவை மன்னித்தேன்.

போருக்குப் பின்னர் வீடற்ற அகதிகளானோம். கிராமத்தை எண்ணி ஏங்கினோம். கிராமத்துக்குப் பதுங்கிப் போய் கொஞ்ச நாள் வாழ்ந்து பார்ப்போம் என்ன தான் நடக்கிறதென்று என்றாள் அம்மா. வீடற்ற நிலையை விட வீட்டில் வாழ்வதற்கு எதையேனும் விலையாகக் கொடுக்கவும் அவள் தயாரானாள்.

கிராமம் ஜப்பானியர் வசம் வீழ்ந்து அமைதிப் படையின் கட்டுப்பாட்டில் இருந்தது. மெதுவாக இரவில் வந்து மாடி அறையில் பதுங்கினோம். ரகசியமாக வந்து பார்த்துப் பேசிப் போன ஒரு சில சொந்தங்கள் மற்றும் நண்பர்கள் தவிர யாருக்கும் தெரியாது. இரவு, சாத்திய கதவின் பின்னால் மட்டுமே நானும் அக்காவும் சிறு ஓசை எழுப்பினோம். நகரத்தை விட வீட்டு வளாகம் இரவில் சுற்றித் திரிந்திட சுவாரஸியமானது என்று உணர்ந்தோம். தோட்டத்துக்குப் போனோம் சில வேளைகளில். நிலவொளியில் குளக்கரை மிகவும் அழகாக இருந்தது. அம்மாவையும் கூட்டிக் கொண்டு வர நினைத்தோம்.

வியர்த்த படி மாடிக்கு வந்து அம்மாவிடம் தோட்டத்தைப் பற்றி விளக்கிக் கூறி வியந்தோம். அம்மா அகலமாகச் சிரித்துக் கொண்டே, "ஏதோ மன்ன்னின் அரண்மனைத் தோட்டத்துக்குள் புகுந்து வந்தாற் போலத் தான் வியக்கிறீர்களே இருவரும். நாளை இரவு, நானும் வருகிறேன். கொஞ்சம் திராட்சை ரசமும் பலகாரமும் கொண்டு போனால், நிலாவை ரசித்த படி உண்ணலாம்", என்றாள்.

நாங்கள் குளித்து முடித்து வந்து பார்த்தால் மேசையில் அம்மா டாங் கவிதைகளின் முழுத் தொகுப்பினை வைத்திருந்தாள். அம்மா நூலை எடுத்து தூ ஃபூ1வின் கவிதைகளில் ச்சியான்2 மற்றும் வூயான்3 வகைகளை வாசிக்கக் கற்றுக் கொடுத்தாள். புருவத்தை சுருக்கி மிகவும் பதிக்கப் பட்டவர்கள் போல பாவனை செய்தோம். அம்மாவுக்கு அப்போது தான் பிடிக்கும். அம்மா எங்களைப் பார்த்து விட்டு நூலை மூடினாள். ஒரு டப்பா நிறைய உள்ளூர்

பலகாரங்களைக் கொடுத்தாள். டாங் கவிதைகளை விட அவற்றை எங்களால் மேலும் சிறப்பாக ரசிக்க முடிந்தது.

எங்களின் வீட்டு நிர்வாகி திரு. லூ மிகவும் அக்கறையுடன் சீக்கிரமே எழுந்து, தாமதமாகத் தூங்கி, வாயிற் கதவு மணி அடித்தால் மற்ற நான்கு வேலைக்காரர்களுடன் போய் வாசலில் யார் என்று பார்த்து எங்களைக் கவனித்துக் கொண்டார். வெளியிடங்களில் போய் நிலவரம் என்னவென்று அறியப் போகும் போது குறித்த நேரத்துக்குத் திரும்பி விடுவார். கொஞ்சம் நேரம் ஆனாலும், அம்மா கவலைப் படுவாள் என்று நினைத்து யாரையாவது அனுப்பித் தகவல் சொல்வார்.

கோடையின் இறுதியில் வீட்டுக்குள் ரகசியமாக வந்து இலையுதிர்காலத் தோட்டத்தின் அழகைப் பருகினோம். வருட முடிவில் குளிரும் பனியும் பல நாட்களுக்கு வாட்டியது. அக்காவுக்கு உடல் நலமில்லை. என்க்கும் பொழுது போகவில்லை. அப்போது துப்பாக்கி மற்றும் குண்டு சத்தங்கள் புத்தாண்டைப் போலக் கேட்டன. எனக்கு நோய் வரட்டுமென்று வேண்டிய படியே அக்காவுக்கு அருகில் படுத்திருந்தேன்.

அன்று மதியம், திரு லூ மாடியேறி வந்தார். என்னைக் கூப்பிட்டார். நான் அறையிலிருந்து வெளியே வந்தேன் கிடுகிடுவென்று. கீழிறங்கிய அவர் பின்னால் போனேன். ஸியா மிங்ஜூ இறந்து போனார்! எப்படி? என் முறைப்பைத் தவிர்த்த படி திரு.லூ பக்கவாட்டில் தலையசைத்தார். "உன் அம்மாவிடம் நான் சொல்வேன்."

"இல்லை. விரிவாகச் சொல்லுங்கள். நான் அம்மாவுக்குச் சொல்வேன்."

"நானே சொன்னால் தான் சரி வரும். தவிர, சில விஷயங்காள் அவரோடு பேச வேண்டும். நீ மாடிக்குப் போயேன். எழுந்து தேநீர் அருந்தும் வரை காத்திருப்போம். பிறகு நீ சன்னலுக்குப் பக்கத்தில் வா. நான் தோட்டத்துப் புதருக்கு அருகில் தான் நின்றிருப்பேன்."

நான் மாடிக்குப் போனேன். அம்மா ஏற்கனவே எழுந்து முகம் கழுவிக் கொண்டிருந்தாள். வெளியே வந்ததும், நான் திரு. லூ பார்க்க வேண்டும் என்கிறார் என்று சொன்னேன். புத்தாண்டுக்கு வாங்க வேண்டியவற்றைப் பற்றி ஏதோ பேச வேண்டுமோ என்று தான் அம்மா நினைத்தாள்.

"புத்தாண்டு கொண்டாடிட வேண்டியது தான்", என்று முணுமுணுத்தாள்.

நான் சன்னலுக்கு அருகில் சென்றேன். தனியே பனியில் நின்றிருந்த திரு. லூவுக்குக் கையசைத்தேன். தோள்களில் பனி நுரை போல். சடங்குகளை விட்டுவிட்டு, சட்டென்று, "நேற்று ஏதோ பிரெஞ்சுப் பாட்டை பியானோவில் வாசித்தார் என்று ஸியா மிங்ஜூவை ஜப்பனியர்கள் கைதி செய்துள்ளனர். அவளை உளவாளி என்று சந்தேகித்திருக்கிறனர். மொழிபெயர்ப்பாளர் சொதப்பி விட்டார். ஆங்கிலத்தில் வேண்டுமென்றே கேட்டிருக்கிறார்கள். சரளமாக ஆங்கிலத்தில் பதில் சொல்லியிருக்கிறார் ஸியா மிங்ஜூ. அவரின் ஐரோப்பிய நாகரீகத் தோற்றமும் ஆங்கிலமும் இங்கிலாந்தின் அல்லது அமெரிக்காவின் உளவளி என்று ஜப்பானியருக்கு சந்தேகத்தைத் தோற்றுவித்திருக்கிறது. அவரைக் கொடுமைப் படுத்தியிருக்கிறார்கள். இரவில் அவரை பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர் சீனாவைக் கைப்பற்றிய ஜப்பானியர்களை கண்டபடி ஏசியிருக்கிறார் ஸியா மிங்ஜூ. ஒரு கையை முழுக்கவே வெட்டி விட்டான் படுபாவி. ஸியா சகோதரர்களைத் தேடினேன். அவர்கள்

எல்லோருமே ஓடி விட்டார்கள். ஸியா மிங்ஜூவின் உடல் வெளியே வீசியெறியப் பட்டது. பனியில் கிடந்தது. நானே பார்த்தேன் பிரேதத்தை. இப்போது மதியம். இருட்டிய பிறகு வேண்டுமானால், .. "

நானும் போகலாம். ஆனால், திரு. லூ அம்மா சொன்னால் தான் பிரேதத்தைக் கொணர போவார். அம்மா ஒத்துக் கொள்ளா விட்டால், முழந்தாளிட்டுக் கெஞ்சுவேன் அம்மாவிடம் நான் என்று நினைத்துக் கொண்டேன். வேண்டுமானால், அம்மாவை மிரட்டவும் செய்வேன்.

நேராக அம்மாவின் கண்களைப் பார்த்தேன். அம்மா என் பார்வையைத் தவிர்க்கவில்லை. அவள் முகத்தில் கண்ணீர் கோடிட்டிருந்தது. கெஞ்சிடவே தேவை இல்லை. நான் நினைத்ததே தவறு. எப்படி அம்மாவை மிரட்ட நினைத்தேன் நான்?

அம்மா அமைதியானாள். கைக்குட்டையை எடுத்துத் தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள். "திரு. லூ பிரேதத்திற்கு ஒரு சவப்பெட்டி தயாராக வேண்டும். கொஞ்சம் தயார் செய்யுங்கள். அவளின் முழு உடலும் கிடைக்க வழி செய்திடுங்கள். சீக்கிரம் செயலாற்றிட வேண்டும். சவப்பெட்டி கிடைத்ததுமே, இருட்டக் காத்திருப்போம். உதவிக்கு ஆள் சேர்த்திடுங்கள். அவசரம் வேண்டாம். இன்னொரு அசம்பாவிதத்தைத் தாங்கிட முடியாது நம்மால்."

திரு லூ எல்லாவற்றையும் கச்சிதமாகச் செய்திடுவார் என்று நான் அறிவேன். அவசரமாகச் செல்லவிருந்தவரைத் தடுத்து நிறுத்தினாள் அம்மா. அறைக்குள் போனாள். திரு. லூ தான் அனைத்து வரவு செலவுகளையும் பார்த்துக் கொள்வார் என்று அறிந்திருந்தேன். இருந்தும் அம்மா பணம் எடுப்பதற்குத் தான் போனாள் என்று நினைத்தேன்.

ஆனால், அம்மா வெளியே வந்தாள், சாம்பல் நிற மேலங்கியையும் அடர்நிறத் தொப்பியையும் எடுத்துக் கொண்டு.

"இதைக் கொண்டு சுற்றிடுங்கள் அவளை. இந்தத் தொப்பியில் அவளின் கூந்தலைத் திணித்து விடுங்கள். மெத்தையும் போர்வையும் கூட வாங்கி விடுங்கள். மற்றபடி, நமது வழக்கம் உங்களுக்குத் தெரியும். செய்து விடுங்கள். வீட்டுக்கு உள்ளே வைத்திடும் சடங்கு வேண்டாம். உடனே புதைத்து விடுங்கள், நமது மூதாதையரின் கல்லறைத் தோட்டத்தில். மட்டம் ஆக்கிட வேண்டாம். ஒரு கல்லறைக் கல் நட்டு விடுவோம் சீக்கிரமே."

அக்காவுக்கு உடம்பு சரில்லை. ஆகவே, அவளிடம் இப்போது சொல்ல வேண்டாம் என்று அம்மா சொல்லி விட்டாள். "வெளியே போகும் போது பத்திரம். அவளின் கல்லறைக்குப் போனாலும்."

செல்வி. ஸியா புதைக்கப் பட்ட பின்னர், எங்களின் தங்கையாகிட நினைத்த அந்தக் குட்டிப் பெண்ணைக் கூட்டிவர அம்மா திரு. லூவை அனுப்பினாள்.

சில நாட்களுக்குப் பிறகு, திரு.லூ திரும்பி வந்தார், "அச்சிறுமி விற்கப் பட்டு விட்டாள். எங்கிருக்கிறாள் என்று யாருக்கும் தெரியாது", என்றபடி.

ஆங்கில மொழிபெயர்ப்பு: Toming Jun Liu

-------------

# ஏசுவின் பாவம்

ஐசக் பேபல்

(ஐசக் பேபல் (1894-1941) ஒரு ரஷ்ய யூத எழுத்தாளர். ஸ்டாலினிஸ காலத்தில் 1937-39 வாக்கில் சிறைப் படுத்தப் பட்டு மறைந்து போனார். மாக்ஸிம் கார்க்கியுடன் தோழமை பூண்டு எழுத்தில் ஈடுபட்டவர்.)

விடுதியில் பணிப்பெண் அரினா. பிரதான மாடிப்படியின் கீழ் அவள் வாசம். துப்புரவுப் பணியில் உதவி செய்கிற செரெகா பின் படிக்கட்டின் கீழே வசித்தான். இருவருக்கும் இடையில் நாணத் தக்க உறவு. குருத்து ஞாயிறன்று செரெகாவிற்கு ஒரு பரிசளித்தாள் - இரட்டைக் குழந்தைகள். தண்ணீர் ஓடும், நட்சத்திரங்கள் மின்னும், ஆணுக்குக் காமம், அரினா மீண்டும் வயிறு பெருத்தவளானாள். ஆறாவது மாதம் இது. பெண்ணின் மாதங்கள் வேகமாய் நழுவுகின்றன. இப்போது செரெகா படையில் சேர வேண்டும். என்ன பிரசினை பார். ஆக அரினா போய்ச் சொல்கிறாள்: ' செரெகா, நான் உனக்காகக் காத்திருப்பதில் அர்த்தமில்லை. நான்கு வருஷம் பிரிந்திருப்போம், நான்கு வருஷத்தில், எப்படிப் பார்த்தாலும், இன்னும் இரண்டு மூன்று பேரைப் பெற்றுப் போடுவேன். விடுதியில் வேலை பார்ப்பதே , பாவாடையைத் தூக்கிக் கட்டிக் கொண்டிருப்பது போலத் தான். யார் இங்கே வந்து தங்கினாலும், உன் எஜமானனோ, யூதனோ, யாராயிருந்தாலும்.. நீவரும் போது என் உள்ளெல்லாம் ஒன்றும் சரியாய் இருக்காது. உபயோகித்து வீசிப் போட்ட பெண் நான். உனக்குச் சரிப் பட மேட்டேன். '

' அப்படித் தான் போல ' என்று தலையை அசைத்தான் செரெகா.

'நிறையப் பேர் என்னை வேண்டும் என்கிறார்கள். காண்ட்ராக்ட் வேலையைச் செய்கிற திரோபிமிச் - ஆனால் ஆள் சரியில்லை. இசாய் ஆப்ரமிச் - நிகோலோ-ஸ்வியாட்ஸ்கி மாதா கோயிலில் காவலாளி.. ஆனால் தள்ளாடும் கிழம். எனக்கும் உன் கொலைகாரத் தனமான முரட்டுத் தனம் சலித்து விட்டது. பாவமன்னிப்புக் கூடாரத்தில் சொல்வது போல உன்னிடம் சொல்கிறேன் - எனக்குத் தெம்பு எல்லாம் போய் விட்டது. மூன்று மாதத்தில் இந்தச் சுமையைத் துப்பி விடுவேன். குழந்தையை அனாதை விடுதியில் போட்டு விட்டு கிழவனைக் கல்யாணம் செய்து கொள்வேன். '

இதைக் கேட்டதுமே செரெகா , தன் இடுப்பு வாரைக் கழட்டி, பெரிய கதாநாயகன் போல, அவள் வயிற்றில் வீசினான்.

' பார்த்து.. ' என்கிறாள் அரினா. ' கொஞ்சம் மெதுவாகவே அடி. நீ திணித்தது தான் அதிலே.. வேறு யாருடையதும் இல்லை.. '

அடியும் நிற்பதில்லை. இந்த ஆண் அழுவதையும் நிறுத்துவதில்லை. பெண்ணின் ரத்தப் பெருக்கும் ஓய்வதில்லை.

ஏசு கிறுஸ்துவிடம் வந்தாள் பெண்.

'சரி, சரி ' என்கிறாள் அவள். ' அய்யா ஏசு, மாட்ரிட்-லோவர் விடுதி - அதுதான் த்வெர்ஸ்காயா தெருவில் இருக்கிறதே - அங்கே இருக்கிற அரினா நான். விடுதியில் வேலை பார்ப்பதே , பாவாடையைத் தூக்கிக் கட்டிக் கொண்டிருப்பது போலத் தான். யார் இங்கே வந்து தங்கினாலும், உன் எஜமானனோ, யூதனோ, யாராயிருந்தாலும்.. உன் இன்னொரு அடிமை இங்கே நடமாடுகிறானே, செரெகா, கூட்டியள்ளுபவனின் உதவியாள். போன வருஷம் குருத்து ஞாயிறுக்கு அவனுக்கு ரெட்டைப் பிள்ளையப் பெற்றேன்... '

இப்படியாக எல்லாவற்றையும் விளக்கினாள்.

' செரெகா படையில் சேரப் போகவே இல்லை என்றால் ? ' என்று ரட்சகர் கேட்டார்.

' அதிலேயிருந்து தப்பிக்க முடியாது. போலிஸ்காரன் வந்து இழுத்துக் கொண்டு போய் விடுவான்.. நிச்சயம்.. '

' ஆமாமாம், போலிஸ்காரன்.. ' ரட்சகர் தலை குனிந்தார். : 'அவனைப் பற்றி நினைப்பே வரவில்லை... கொஞ்ச நாளைக்குத் தான் சுத்தமாக இருந்து பாரேன்.. '

' நாலு வருஷத்துக்கா ? ' கத்தினாள் பெண். ' நீ பேசுவதைக் கேட்டால் எல்லா ஜனங்களும் மிருக இச்சையை விட்டு விட வேண்டும் என்பாயே. நீ பழைய பல்லவியே பாடு. நான் எப்படிப் பிழைப்பது.. இது நடக்காது, வேறு அறிவுள்ளமாதிரி எனக்கு ஏதாவது உபதேசம் செய்.. '

ரட்சகரின் கன்னங்கள் சிவந்தன. இந்தப் பெண் உள்ளத்தில் ஏதோ மென்மையான பகுதியைத் தொட்டு விட்டாள். அவர் ஒன்றும் சொல்ல வில்லை.

' சரி ஒன்று சொல்கிறேன், என் அருமைப் பாவி, கடவுளின் பணியாள், அரினாப் பெண்ணே, ' என்று ரட்சகர் பெரிதாய்த் தம்பட்டம் அடிப்பது போலப் பேசினார். ' இங்கே பரலோகத்தில் ஒரு குட்டித் தேவதூதன் இருக்கிறான். பிரயோஜனமில்லாத பயல். அவன் பெயர் ஆல்பிரெட். இப்போதெல்லாம் ஒரே சிணுங்கல் அழுகை தான். ' பிரபுவே என்ன செய்து விட்டார்கள் ? என்னை இருபது வயதிலேயே தேவதூதனாய் ஆக்கி விட்டார்கள். ' என்று. நான்கு வருஷத்திற்கு அவன் உனக்குப் புருஷனாய் இருப்பான். உன் பிரார்த்தனை, உன் பாதுகாப்பு, உன் ஆறுதல் எல்லாமே அவன் தான். குழந்தையைப் பற்றி நீ கவலைப் பட வேண்டாம். வாத்துக் குஞ்சு கூட உன் வயிற்றில் வராது, ஒரே குதிப்புத் தானே தவிர அவனுக்கு ஒரு ஈடுபாடும் இல்லை.. '

' அது தான் எனக்கு வேண்டும் ' பணிப்பெண் அரினா நன்றி பொங்க அழுதாள். ' இவர்களின் ஈடுபாடு தான் என்னை இரண்டு வருஷத்தில் மூன்று தாவை கல்லறை வரைக்கும் கொண்டு போய் விடுகிறது... '

' உனக்கும் இனிமையான நிம்மதி கிடைக்கும். கடவுளின் குழந்தை அரினா, உன் பிரார்த்தனையெல்லாம் பாடல் போல் மனதை லேசாக்கட்டும். ஆமென். '

அப்படியே தீர்மானிக்கப் பட்டது. ஆல்பிரெட்டைக் கூட்டி வந்தார்கள். ஒல்லியான, மென்மையான பயல். வெளிர் நீலத் தோள்களின் பின்னால் சிறகுகள் , ரோஜா நிற வெளிச்சம் மின்ன, பரலோகத்தில் விளையாடுகிற இரண்டு புறாக்கள் போலத் துடித்தன. அரினா தன் தடித்த கைகளினால் அவனைத் தழுவி, மென்மை பொங்க அழுதாள் - பெண்மையின் மென்மை.

' ஆல்பிரெட், என் ஆத்மா, என் ஆறுதல், என் புருஷன்.. '

பிரிவின் போது ரட்சகர் தேவதூதனின் சிறகுகளை ஒவ்வொரு இரவும் எடுத்து வைத்து விட வேண்டும் என்று மிக கண்டிப்பாகச் சொன்னார். ஒரு கதவினைப் போல கொக்கியில் தொங்கின சிறகுகள். ஒவ்வொரு இரவும் அவற்றைப் பிரித்து சுத்தமான துண்டில் அதைச் சுருட்டி வைத்து விட வேண்டும். அவை தொட்டால் உடைந்து விடக் கூடும் - குழந்தைகளின் பெருமூச்சில் வேயப் பட்டதில்லையா அது.

கடைசியாக அவர்களைக் கடவுள் ஆசீர்வதிக்க, இதற்கென்றே வந்திருந்த பாதிரிமார்கள் ஏகமாய்ப் புகழ்ந்தனர். உணவெல்லாம் கிடையாது - பரலோகத்தில் அதெல்லாம் பழக்கமில்லை. கை கோர்த்தபடி அரினாவும் ஆல்பிரெட்டும் பட்டாலான ஏணியில் பூமிக்கு இறங்கினர். பெட்ரோவ்கா நகரத்திற்கு வந்தனர். அங்கே மிக நல்ல பொருட்கள் தான் கிடைக்கும். பெண்கள் ஆல்பிரெட்டைக் கண்டு வியந்தனர். - அதுவும் பிறந்த மேனிக்கு அவன் -.அவனுக்கு தோலாலான செருப்பும், கட்டம் போட்ட கால் சராய்களும், வேட்டைக்காரர்கள் அணியக்கூடிய சட்டையும், மின்னும் நீல நிற மேல் கோட்டும் வாங்கினாள்.

' மிச்சத்தை வீட்டில் பார்த்துக் கொள்வோம்.. ' என்கிறாள்.

அன்று வேலையிலிருந்து விடுப்பு எடுத்துக் கொண்டாள் அரினா. செரெகா வந்து கூச்சலிட்டான். அவள் கதவைத் திறக்கக் கூட இல்லை. பூட்டின கதவுக்குப் பின்னாலிருந்தே கத்தினாள்.

'செர்கீ.. கூச்சல் போடாமல் போ என் காலெல்லாம் ஒரே வலி.. '

அவன் ஒன்றும் பேசாமல் போய் விட்டான். தேவதூதனின் சக்தி செயல் படவே துவங்கி விட்டது.

மாலைப் பொழுதில் பெரிய விருந்தொன்றைப் படைத்தாள் அவள். பெரிய டாம்பீகம் தான். அரை போத்தல் வோட்கா மது, ஒயின், டானுபே ஆற்று மீனும் உருளைக் கிழங்கும், தேனீர். ஆல்பிரெட் இதையெல்லாம் லௌகீக ருசியுடன் சாப்பிட்டு விட்டுத் தூக்கத்தில் சாய்ந்து விட்டான். இமைப் பொழுதில் அவன் சிறகுகளைக் கழற்றி மடித்து வைத்து விட்டு அவனைத் தூக்கி கொண்டு போய்ப் படுக்கையில் போட்டாள் அரினா.

பாவப்பட்ட , கிழிந்து நைந்த படுக்கையில் பனியாலான அற்புதம் போல, சொர்க்கத்தின் ஒளி வீச்சு வீச அவன் கிடந்தான். நிலா வெளிச்சம்போல வெள்ளி நிற வெளிச்சமும், சிவப்பு நிற வெளிச்சமும் ஒன்றையொன்று வெட்டிக் கொண்டு சுழன்று , அறையில் மிதந்து அவன் ஒளிரும் பாதங்களில் அடைக்கலமாகின்றன. அரினா அழுகிறாள், மகிழ்ச்சிக் கூத்தாடுகிறாள், பாடுகிறாள், பிரார்த்தனையில் கூவுகிறாள். இந்தப் பாழும் பூமியில் யாருக்குமே கிடைக்காத மகிழ்ச்சியடா உனக்கு, அரினா. ஆசீர்வதிக்கப் பட்டவள் நீ.

துளி விடாமல் அருந்திய வோட்கா இப்போது தான் தன் பலனைக் காட்டத் தொடங்கியது. அவர்கள் தூங்க ஆரம்பித்த வுடனேயே, அவள் புரண்டு, தன் ஆறு மாத வயிற்றை அவன் மேல் போட்டுப் படுத்தாள். தேவதூதனுடன் தூங்குவது மட்டும் அவளுக்குப் போதவில்லை. அவள் அருகில் படுத்துக்கொண்டு யாரும் துப்பவில்லை என்பதோ, முனகவில்லை என்பதோ, இந்த முண்டத்திற்குப் போதுமானதாக இல்லை. தன் வயிறையும் - செரெகாவின் காமம் சுமத்திய வயிறையும் - வெம்மைப் படுத்த வேண்டும் அவளுக்கு. ஆகவே, அவனை முத்தமிட்டுப் புரட்டி, தூக்கத்திலும் கூட குழந்தையைப் போல அவனைக் கொஞ்சி, தன் பருத்த உடலை அவன் மீது இருத்தி, இறுக்க, அவன் அவன் தேவதூதத்தனத்தை விட்டு, சிறகுகளை விட்டு, அவள் படுக்கை விரிப்பில் அழுதான்.

விடிந்தது. மரங்கள் தலை சாய்ந்தன. தூரதேச வடக்குப் பிரதேசக் காடுகளில் மரங்களெல்லாம் பாதிரியாராய் மாற, மரம் ஒவ்வொன்றும், முழங்காலிட்டு அமைதிப் பிரார்த்தனை நடத்தின.

மீண்டும் ஒரு முறை பெண் பிரபுவின் சிம்மாசனம் முன்பு நிற்கிறாள் - பரந்த தோள்களில், விரிந்த கைகளில், துவண்டு கிடந்த ஒரு இளவயதுப் பிணம்.

' பாருங்கள், பிரபுவே.. '

ஏசுவின் மென்மையான மனம் இதற்கு மேல் சகிக்க முடியாமல், கோபத்தில் அந்தப் பெண்ணைச் சாபமிட்டார்.

' பூமியில் மற்றவர்க்குப் போலவே உனக்கும் இனிமேலே.. '

' அதெப்படி, பிரபுவே.. ' மெல்லிய குரலில் கேட்டாள் அந்தப் பெண். ' என் உடம்பைக் கனக்கப் பண்ணினவள் நானா ? நானா வோட்காவைக் காய்ச்சினேன் ? நானா பெண்ணின் ஆன்மாவைத் தனிமையாய், முட்டாள்தனமாய்ப் படைத்தேன் ? '

' நான் உன்னைப் பற்றிக் கவலையே படவில்லை, முட்டாள் பெண்ணே, என் தேவதூதனை இப்படி நசுக்கிப் போட்டாயே.. சாக்கடைச் சகதியே.. '

அரினா மீண்டும் பூமியில் வீசி எறியப் பட்டாள். அதே தெவெர்ஸ்காயா தெரு. அதே மாட்ரிட்-லோவர் விடுதி. அங்கே தான் அவளுடைய வாழ்நாள் கழிய வேண்டும் என்று சபிக்கப் பட்டவள். அங்கேயோ வானமே எல்லை. செரெகா அவன் கடைசி நாட்களைக் குடித்துக் கொண்டாடிக் கொண்டிருந்தான் - படை வீரன் ஆகப் போகிறானே. காண்ட்ராக்டர், கோலோமா நகரிலிருந்து அப்போது தான் திரும்பியவன், பருத்த அரினா மீது ஒரு பார்வை. சொன்னான், ' அட உன் சின்னூண்டு வயிறு.. ' மேலும் பேசிச் சென்றான்.

இசாய் ஆப்ரமிச் , கிழட்டுப் பயல், இந்தச் சின்னூண்டு வயிறைக் கேள்விப் பட்டவன், பல் போன வாயில் மூச்சைக் கஷ்டப் பட்டு விட்டுக் கொண்டபடி வந்தான்.

' இதெல்லாம் ஆன பின்னால், உன்னை நான் சட்டப் படி கல்யாணம் செய்து கொள்ள முடியாது. மற்றவர்கள் போலவே உன்னுடன்... '

கிழட்டுப் பயல், இப்படியெல்லாம் நினைக்கிற வயசா ? மண்ணுக்குள் புதையுண்டு போக வேண்டியவன். அவனும் கூட அவள் மீது காரித் துப்பவேண்டியது தான். எல்லாருமே - சமையல் கட்டுப் பயல்கள், வியாபாரிகள், வெளிநாட்டுக் காரர்கள் - ஏதோ சங்கிலியை அறுத்தெறிவது போல அவளைக் கத்தரித்தார்கள். வியாபாரி- அவனுக்கோ இதெல்லாம் ஒரு விளையாட்டு.

இது தான் என் கதையின் முடிவு.

அவள் மருத்துவ விடுதியில் கிடப்பதற்கு முன்னால் - மூன்று மாதமாகி விட்டதே - ஒரு நாள் கொல்லைப் புறம் போய், துப்புரவு ஆட்களின் அறைக்குப் பக்கத்தில் நின்ற படி, அவளுடைய பெரிய வயிறை, பட்டுப் போலப் பரந்த வானத்தைப் பார்க்க உயர்த்தி முட்டாள் தனமாகச் சொன்னாள்: ' கடவுளே பார் என் வயிற்றை. ஏதோ அவரைக்காய் விதையைப் பிதுக்குவதைப் போல பயல்கள் இதை அடிக்கிறார்கள். இதற்கெல்லாம் என்ன அர்த்தம் ? வேண்டாம், எனக்குத் தெரிந்து கொள்ள ஆசையும் இல்லை.. '

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன், ஏசுவின் கண்ணீர் அரினாவைக் கழுவ அவர் அவள் முன் பிரசன்னமானார்.

' என்னை மன்னித்து விடு, நான் பாவிக் கடவுள். உன்னை என்ன பாடு படுத்தி விட்டேன்... '

அரினா தலையை அசைத்துச் செவிசாய்க்க மறுத்தாள்.

' உனக்கு மன்னிப்போ இல்லை, ஏசு கிறிஸ்து.. ' என்றாள். 'மன்னிப்பே கிடையாது '

# ஆற்றின் மூன்றாவது கரை

## (ஒரு லத்தீன் அமெரிக்கக் கதை)

ஹோ குமாரேஸ் ரோஸா

என் அப்பா ஒரு கடமை தவறாத , ஒழுங்கான, நேர்வழியில் போகிற ஆசாமி. நான் விசாரித்தறிந்தவரை இந்த அவர் குணங்கள் சிறு வயது தொட்டே வந்தவை. என் நினைப்பிலும் அவர் ரொம்ப மகிழ்ச்சியானவராகவோ அல்லது ரொம்ப சோகம் காப்பவராகவோ இருந்ததில்லை. கொஞ்சம் அமைதியான ஆள் தான். அம்மாதான் வீட்டில் அரசாட்சி. எல்லாரையும் - என்னை, என் தங்கையை, என் சகோதரனை - திட்டிக் கொண்டேயிருப்பாள். ஆனால் ஒரு நாள் என் அப்பா ஒரு படகு வாங்கலானார்.

அது பற்றி ரொம்பவும் ஈடுபாடு கொண்டார். மிமோஸா மரத்தில் அவருக்கென்றே பிரத்தியேகமாகத் தயாரிக்கப் பட்டது அது. ஒரே ஒரு ஆளுக்கானது அது. ஆனால் இருபது அல்லது முப்பது வருடங்கள் கூடத் தாக்குப் பிடிக்கும் படியாக அது செய்யப் படவிருந்தது. அம்மாதான் அது பற்றிப் பேசிக் கொண்டே இருந்தாள். என் புருஷன் மீன்பிடிக்கப் போகிறாராக்கும் ? வேட்டையாடப் போகிறாரா ? அப்பா ஒன்றும் பேசவே இல்லை. எங்கள் வீடு ஆற்றுக்கு ஒரு மைல் தான் தூரத்தில் தான் இருந்தது. ஆறு, ஆழமாயிருந்தது. அக்கரையைக் கூடப் பார்க்க முடியாத படி அகலமாய் இருந்தது.

அந்தப் படகு வீட்டிற்கு வந்த நாளை என்னால் மறக்கவே முடியாது. அப்பா மகிழ்ச்சியையோ வேறேதும் உணர்ச்சியையோ காட்டிக் கொள்ளவில்லை. எப்போதும் போலத் தன் தொப்பியை அணிந்து கொண்டு எங்களிடம் விடை பெற்றுக் கொண்டார். உணவோ வேறேதும் மூட்டையோ எடுத்துக் கொள்ளவில்லை. அம்மா கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணுவாள் என்று எதிர் பார்த்தோம் , ஆனால் அப்படி ஒன்றும் நடக்கவில்லை.அவள் முகம் வெளிறிக் கிடந்தது. உதட்டைக் கடித்துக் கொண்டாள் . அவள் சொன்னது இவ்வளவு தான்: ' போனால் போய்த் தொலை. திரும்பி வருகிற யோசனையே வேண்டாம். '

அப்பா பதில் அளிக்கவில்லை. என்னை மென்மையாய்ப் பார்த்தவர் தன்னுடன் வரச் சைகை செய்தார். அம்மாவின் கோபம் எண்ணிப் பயப்பட்டாலும் ஆவலுடன் அவர் சொன்னபடி கேட்டேன். ஆற்றை நோக்கி இணைந்தே நடக்கலானோம். துணிச்சலும், மகிழ்ச்சியும் ததும்ப ' என்னையும் கூட்டிப் போகிறாய் இல்லையா ? ' என்று கேட்டேன்.

என்னை வெறுமே பார்த்தவர், கையை உயர்த்தி என்னை வாழ்த்துபவர் போல சைகை செய்தவர் , சைகையிலேயே என்னைத் திரும்பிப் போகச் சொன்னார். திரும்பிப் போகிறவன் போல நடந்தவன், அவர் திரும்பியதும், ஒரு புதரில் மறைந்து கொண்டு அவர் என்ன செய்கிறார் என்று பார்த்தேன். அப்பா படகுக்குள் இறங்கி, ஓட்டிச் சென்று விட்டார். அதன் நிழல் ஒரு முதலையைப் போல நீரில் நழுவிச் சென்றது.

அப்பா திரும்பி வரவில்லை. அவர் எங்கேயும் போய் விடவும் இல்லை. அங்கேயே நதியில் மிதந்தபடி அங்கும் இங்கும் சென்ற படி இருந்தார். எல்லோருக்கும் ஒரே அருவருப்பான வியப்பு. என்றும் நடக்கமுடியாத ஒன்று, இது. எங்கள் உறவினர், அண்டை வீட்டார், நண்பர்கள் எல்லோரும் வந்து இந்த நிகழ்வு பற்றிப் பேசினார்கள்.

அம்மாவிற்கு ஒரே லஜ்ஜை. மிகக் கொஞ்சமே பேசினாள். அடக்கமாய் நடந்து கொண்டாள். இதனால் எல்லோருமே (யாரும் இதைச் சொல்லாவிடினும்) அப்பாவிற்குப் பைத்தியம் என்று முடிவு கட்டினார்கள். சிலர் மட்டும் ஏதோ பிரார்த்தனையை அப்பா நிறைவேற்றுகிறார் என்று சொன்னார்கள். ஏதாவது பயங்கர வியாதியோ, குஷ்டமோ என்னவோ, அதனால் தான் , குடும்பத்தின் மீதுள்ள அக்கறையினால், குடும்பத்தை விட்டு -- ஆனால் வெகு தூரம் சென்று விடாமல் -- இருக்கிறார் என்று குறிப்பிட்டார்கள்.

ஆற்றின் வழிச் சென்ற பயணிகளும் சரி, ஆற்றின் அருகில் வசித்தவர்களும் சரி, அப்பா கரையில் கால் பதிக்கவே இல்லை என்று தீர்மானமாகச் சொன்னார்கள். தனியாக, குறிக்கோள் எதுவும் இல்லாத நாடோடி போல அவர் ஆற்றில் அங்கும் இங்கும் சென்றவாறிருந்தார். அம்மாவும், உறவினர்களும், படகில் அவர் உணவை மறைத்து வைத்திருந்திருக்க வேண்டும் என்று அபிப்பிராயப் பட்டார்கள் அம்மாவும் உறவினர்களும். உணவு முடிந்து போனவுடன், திரும்பியே ஆக வேண்டும் என்று சொன்னார்கள். அல்லது வேறெங்காவது போய்த் தொலைந்தால் மரியாதையாவது மிஞ்சும்.

உண்மைக்கு வெகு தொலைவானது இந்த அபிப்பிராயம். அப்பாவுக்கு ஒரு ரகசிய உணவு விநியோகம் இருந்தது -- நான் தான். நான் தினமும் உணவைத் திருடிக் கொண்டு போய்க் கொடுத்தேன். அவர் சென்று விட்டிருந்த முதல் நாள் இரவு நாங்களெல்லாம் கரையில் தீமூட்டி, பிரார்த்தனை செய்தோம். அவரையும் கூப்பிட்டோம். நான் மிகத் துயருற்று அவருக்கு வேறு ஏதும் செய்யவேண்டும் என எண்ணினேன். மறு நாள் சோள ரொட்டி ஒரு துண்டும், வாழைப்பழம் ஒரு சீப்பும், கருப்பட்டியும் கொண்டு போனேன். மணிக் கணக்கில் பொறுமையிழந்து காத்திருந்தேன். தூரத்தில் ஒரு படகு நீரில் நழுவி வரக் கண்டேன். அப்பா படகடியில் உட்கார்ந்திருந்தார். என்னைப் பார்த்தார். ஆனால் எனக்கு சைகையும் காட்டவில்லை. என்னருகில் வரவும் இல்லை. அவருக்கு உணவைக் காட்டி விட்டு, ஒரு குழியில், கரையோரம் வைத்தேன். அந்தக் குழியில் மிருகங்களுக்குத் தப்பி, மழைக்குத் தப்பி உணவு பாதுகாப்பாய் இருக்கும். தினமும் நான் இதைச் செய்தேன். பிற்பாடு தான் , அம்மாவிற்கும் இது தெரிந்திருந்தது என்பதையும், நான் சுலபமாகத் திருடக் கூடிய இடத்தில் உணவை வைத்தவளும் அவள் தான் என்று புரிந்து கொண்டேன். காட்டிக் கொள்ள விரும்பாவிடினும் அவளுக்கு இளகிய மனம் தான்.

அம்மா அவள் சகோதரனை அழைத்தி வந்து வயல் வேலை உதவிக்கும், வியாபார உதவிக்கும் வைத்துக் கொண்டாள். ஆசிரியர் ஒருவரை அமர்த்தி எங்களை வீட்டில் பாடம் பயிலச் செய்தாள். அவள் கேட்டுக் கொண்டபடி ஒரு நாள் பாதிரியார் தன் அங்கிகளையெல்லாம் அணிந்து கொண்டு, கரைக்குச் சென்று, என் அப்பாவைப் பீடித்திருந்த பேயை ஓட்ட முயன்றார். அவர் அப்பாவைப் பார்த்து இந்தப் பாவகரமான பிடிவாதத்தை விட்டு விடும்படி கத்தினார். இன்னொரு நாள் இரண்டு போர் வீரர்களைக் கூட்டிக் கொண்டு போய் அவரைப் பயமுறுத்த முயற்சி செய்தாள். ஒன்றும் பயனில்லை. தூரமாய்ப் போய் விடுவார். பார்க்கக் கூட முடியாது. அவர் யாருக்கும் பதில் சொல்லவில்லை. யாரும் அவரை நெருங்க முடிய வில்லை. பத்திரிகைக் காரர்கள் படகில் வந்து அவரைப் படமெடுக்க வந்த போது விலகி வேறு திசையில் போய் விட்டார். அந்தப் பகுதியெல்லாம் அவருக்கு மிகத்

தெரிந்த பகுதி. மற்றவர்களுக்கு அதில் சென்றால் எப்படி மீள்வது என்று தெரியாது. புதர் மண்டிய அந்த ஆற்றுப் பகுதியில் , பாசிகளும், நீர்த் தாவரங்களும் சூழ, அவர் பாதுகாப்பாய் இருந்தார்.

அவர் ஆற்றில் வசிப்பதற்கு நாங்கள் பழகிகொள்ளத் தான் வேண்டும். ஆனால் எங்களால் பழகிக் கொள்ள இயல வில்லை. எப்போதுமே எங்களால் முடியவில்லை. என் ஒருவனுக்குத் தான் என் அப்பாவிற்கு என்ன வேண்டும், என்ன வேண்டியதில்லை என்று கொஞ்சம் புரிந்ததென நினைத்தேன். எப்படிக் கஷ்டத்தைத் தாங்கிக் கொண்டார் என்பது தான் எனக்குப் புரியவில்லை. இரவும் பகலும், வெயிலிலும், மழையிலும், உஷ்னத்திலும், கடுங்குளிர் காற்றிலும், வெறுமே ஒரு பழைய தொப்பியும், மாற்றுத் துணி கொஞ்சமே கொண்டு, வாரம் கழிய, மாதம் கழிய, வருடம் கழிய , வீணாய் வெறுமையாய்க் கழியும் வாழ்க்கையைப் பற்றி கருதாமல். . கரையிலோ, புல்லிலோ, ஆற்று நடுத்தீவிலோ அவர் கால் பதிக்கவே இல்லை. தூங்க வேண்டிய பொழுதில் ஏதோ ஒரு கரையோர மரத்தில் படகைக் கட்டியிருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை. அவர் நெருப்புப் பற்றவைக்கவுமில்லை, டார்ச் லைட்டும் அவரிடம் இல்லை. நான் குழிவான கல்லில் விட்டுச் சென்ற உணவிலும் அவர் சிறிதளவே எடுத்துக் கொண்டார் -- உயிர் வாழ அது போதுமானதில்லை தான். அவர் உடல் நலம் எப்படி இருக்கும் ? துடுப்புப் போடவும், படகை வலிக்கவும் பலம் தேவைப் படுமே ? வருடாவருடம் வருகிற பெருவெள்ளத்தில், பல ஆபத்தான பொருட்கள் -- செத்த மிருகங்கள், மரக்கிளைகள் போன்றவை -- இழுத்து வரப் படுமே , அவற்றில் படகு மோதிவிடாமல் எப்படித் தப்பினார் ?

யாருடனும் அவர் பேசவில்லை. நாங்களும் அவரைப் பற்றிப் பேசவில்லை.ஆனால் எங்கள் எண்ணத்தில் அவர் இருந்தார். அவர் நினைவை எங்கள் மனங்களிலிருந்து அகற்ற முடியவில்லை. சிறு பொழுது அவர் நினைவில்லாமல் இருக்க நேர்ந்தால், ஏதோ பய உணர்ச்சி தாக்க மீண்டும் விழித்தெழுந்தது போல், அவர் நினைவு மனதில் படரும்.

என் சகோதரிக்குக் கல்யாணம் ஆயிற்று, ஆனால் கல்யாண விழாவை அம்மா விரும்பவில்லை. அது சோகமாய் இருந்திருக்கும், ஏனென்றால், சுவையான உணவு சாப்பிடும் போதெல்லாம் நாங்கள் அவரை நினைத்துக் கொள்வோம். புயல் பொழுதுகளில் பாதுகப்பாக எங்கள் படுக்கைகளில் நாங்கள் சுருண்டு கொண்டிருந்த போது அவரை நினைத்தோம் -- அங்கே தனியாக, எந்தப் பாதுகாப்பும் இல்லாமல் வெறும் கையால் அவர் படகை எப்படிச் சமாளிப்பார் ? எப்போதாவது யாராவது சொல்வார்கள் , நான் அப்பா மாதிரி நடை உடை பாவனையில் இருப்பேனாம். ஆனால் இப்போது அவர் முடியும் வளர்ந்து, நகம் எல்லாம் வளர்ந்து கிடக்கும். அவரை ஒல்லியாக, நோய்வாய்ப்பட்டவராக, வெயிலில் கறுத்துப் போனவராக நான் கற்பனை செய்து கொண்டேன். சில சமயம் அவருக்கு நான் உடைகளை விட்டு வந்தாலும் அவரை அரை நிர்வாணமாய்த் தான் என்னால் கற்பனை செய்ய முடிந்தது.

எங்களைப் பற்றி அவர் கவலைப் பட்டவராகவே தெரியவில்லை. இருந்தாலும் அவர் மீது மதிப்பும், அன்பும் நான் கொண்டிருந்தேன். என் நல்ல காரியம் எதையேனும் யாராவது புகழ்ந்தால் , ' என் அப்பா தான் இப்படி நடந்து கொள்ளச் சொல்லிக் கொடுத்தார் ' என்று கூறலானேன்.

அது நிஜமல்ல என்றாலும், உண்மையானதொரு பொய். எங்களைப் பற்றிக் கவலைப் படாதவர் ஏன் எங்களைச் சுற்றியே வந்து கொண்டிருந்தார் ? எங்களைப் பார்க்க முடியாதபடி,

நாங்கள் பார்க்க முடியாத படி ஏன் அவர் ஆற்றின் வேறு இடங்களுக்குப் போகவில்லை ? அவருக்குத் தான் வெளிச்சம்.

என் சகோதரிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அப்பாவிற்கு அவருடைய பேரப் பிள்ளையைக் காட்ட வேண்டும் என்று அவள் மிக விருப்பப் பட்டாள். ஒரு அழகான நாள் பொழுதில் நாங்கள் கரைக்குச் சென்றோம். என் சகோதரி தன் திருமண உடையான அழகிய வெள்ளை நீள் அங்கியில் இருந்தாள். தன் குழந்தையை உயரத்தூக்கினாள். அப்பாவிற்காகக் குரல் கொடுத்துக் காத்திருந்தாள். அப்பா தென்படவில்லை. அவள் அழுதாள். நாங்களும் அவளுடன் சேர்ந்து ஒருவர் மற்றவரை அணைத்தபடி அழுதோம்.

என் சகோதரியும், அவள் கணவனும் வெகுதூரம் சென்று வசிக்கலானார்கள். என் சகோதரன் நகரத்திற்குப் போய் விட்டான். காலங்கள் துரித கதியில், புலப்படாமலே ,மாறின. அம்மாவும் அங்கிருந்து சென்று விட்டாள். அவளுக்கு வயதாகி விட்டது. அவள் மகளுடன் வசிக்கப் போய் விட்டாள். நான் மட்டும் பின் தங்கியிருந்தேன். திருமணம் பற்றி என்னால் யோசிக்கக் கூட முடியவில்லை. என் வாழ்க்கையில் நான் செய்தே ஆக வேண்டிய காரியங்களுக்காக நான் அப்படியே இருக்க வேண்டியதாயிற்று. தனியாய் அங்குமிங்கும் போய் வந்து கொண்டிருந்த அப்பாவிற்கு நான் தேவை. அவருக்கு நான் தேவை என்று எனக்குத் தெரியும் -- ஏன் இப்படி செய்கிறார் என்று என்னிடம் அவர் சொல்லாவிடினும் கூட. அவருக்குத் தெரிந்தவர்களிடம் மன்றாடிக் கேட்டுக் கொண்ட போது அவர்கள் , படகு செய்தவனுக்குத்தான் அந்தக் காரணம் தெரியும் என்று சொன்னார்கள். அவன் இப்போது செத்துப் போய் விட்டான், மற்றவர்களுக்குத் தெரியவில்லை அல்லது நினைவில்லை. மழை வலுத்துப் பெய்கிற வேளைகளில் முட்டாள் தனமாக என் அப்பா நோவா மாதிரி , வெள்ள ஏற்பாட்டிற்காகப் புதுப் படகைச் செய்தார் என்று சிலர் சொல்லக் கேட்டிருந்தேன். எனினும் என் அப்பாவை நான் குறை சொல்லவில்லை. என் முடியும் நரைக்கத் தொடங்கி விட்டது.

எனக்குச் சொல்லவிருந்ததெல்லாம் சோகமான விஷயங்கள் தாம். என் தவறு என்ன ? குற்றம் என்ன ? என் அப்பா என்னைவிட்டுப் பிரிந்த போதும், அவர் பிரிவு என்னை விட்டுப் பிரியாமல் எப்போதும். எப்போதுமாக ஆறு. எனக்கு வயதாகிக் கொண்டு வந்தது. வாழ்க்கை தட்டுத் தடுமாறி. கூடவே நோய்களும் பயங்களும். மூட்டு வலி வேறு. அவருக்கு ? ஏன் இதைச் செய்கிறார் அவர் ? அவருக்கும் ரொம்பக் கஷ்டமாய்த் தானிருக்கும்.அவருக்கும் வயதாகி விட்டது. அவர் பலம் குறைந்த போது படகு தள்ளாடி முழுகிவிட்டால் ? இல்லை, நீரோட்டத்தில் போய் விட்டால் -- வேகமாய் நீரோட்டத்தில் போய் நீர் வீழ்ச்சியில் கவிழ்ந்து விட்டால் ? எனக்கு இதயமெல்லாம் இந்த எண்ணம் அழுத்தியது. அவர் அங்கே இருந்தார் , எனக்கு மன அமைதி போயே போய் விட்டது. என்ன குற்றம் எனது என்று தெரியாமலே, ஆறாக்காயமாய் என்னுள் ஒரு வலி. வேறு மாதிரியாய் விஷயங்கள் நடந்திருக்குமெனில் எனக்கு இதன் காரணமும் தெரிந்திருக்கும். எனக்கு ஒரு மாதிரி ஊகமாய்த் தவறு என்ன என்று தெரிந்தது.

சொல்லியே ஆக வேண்டும். எனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா ? இல்லை, எங்கள் வீட்டில் அந்த வார்த்தையை மட்டும் யாருமே உச்சரித்ததில்லை, இவ்வளவு வருடங்களாகியும். யாரும் யாரையும் பைத்தியம் என்று மட்டும் சொன்னதில்லை. ஏனென்றால் யாரும் பைத்தியமில்லை. ஒரு வேளை எல்லோருமே பைத்தியமோ என்னவோ ? நான் செய்ததெல்லாம் இவ்வளவு தான். அங்கே போய் அவர் பார்க்கும் படியாக என் கைக்குட்டையை அசைத்தேன். அமைதி காத்தேன். காத்திருந்தேன். கடைசியில் அவர் தூரத்தில் , மெள்ள மெள்ள அருகில் , படகில் ஒரு தெளிவற்ற உருவமாகத் தெரியக்

கண்டேன். அவரை நிறையத் தரம் கூப்பிட்டேன். அவரிடம் சொல்லவிருந்ததை மரியாதையான குரலில், சத்தியம் செய்பவன் போலச் சொன்னேன். முடிந்த அளவு குரலை உயர்த்திக் கூறினேன்.:

'அப்பா. . ரொம்ப காலமாய்ப் பண்ணிக் கொண்டிருக்கிறாய். . திரும்பி வா . . இனிமேல் இதைப் பண்ண வேண்டாம் . . திரும்பி வா. . உனக்குப் பதில் நான் வேண்டுமானால் போகிறேன். . வேண்டுமானால் இப்போதே. . எப்பொழுது வேண்டுமானாலும். . நான் படகில் ஏறுவேன். உன் இடத்தில் நான் இருப்பேன். . '

இதைச் சொன்ன போது என் இதயம் திடமாய்த் துடித்தது.

அவர் சொன்னதைக் கேட்டார். எழுந்து நின்றார். துடுப்பை வலித்து, என் பக்கமாகப் படகைச் செலுத்தினார். என் சொல்படி நடப்பார். திடாரென்று எனக்கு உள்ளூர நடுக்கம். பலப் பல வருடங்களுக்குப் பின்னர் முதல் முறையாகக் கையை உயர்த்தி அசைத்தார். என்னால் முடியவில்லை.. கலவரம் தாக்க, என் மெய் சிலிர்க்க.. ஓடினேன். பைத்தியக்காரன் போல ஓடினேன். எதோ இன்னொரு உலகத்திலிருந்து வருபவராய் அவர் தோற்றங்கொண்டார். நான் மன்னிப்புக் கேட்டுக் கெஞ்சுகிறேன், மன்றாடுகிறேன்.. மன்றாடுகிறேன்.

பெரும் பயம் தாக்குவது போல் உடம்பெல்லாம் வியர்த்து ஒழுகியது. நான் நோய்வாய்ப் பட்டேன். அவரை அதற்குப் பின் யாரும் பார்க்கவும் இல்லை, அவரைப் பற்றிக் கேள்விப்படவும் இல்லை. இப்படியொரு தோல்விக்குப் பின்பு என்னை மனிதன் என்று கூறத்தகுமோ ? இருக்கவே லாயக்கில்லாதவன். மௌனம் கொள்ள வெண்டியவன். ஆனால் தாமதாமாகி விட்டது. பாலைவனங்களிலும் , குறிப்பேயில்லாத பரப்புகளிலும் , என் வாழ்நாள் கழியும். அது வெகுநாட்களும் இராது என்று தோன்றியது. ஆனால், மரணம் வருகையில், என்னை ஒரு சிறு படகில் , இரு நெடுங்கரைகளுக்கிடையில் வற்றாத தண்ணீர்மேல் போட்டு விடுங்கள். ; நான் ஆற்றில் என்னையிழந்து . ஆற்றினுள் .. ஆறு. .

(Joao Guimaraes Rosa -1908-67. பிரேஸிலில் பிறந்தவர். மருத்துவராய் படைகளில் பணி புரிந்தவர். )

# அம்பாடி

**சக்கரியா**

முன்னொரு காலத்தில், இங்கிருந்து வெகுதூரத்தில் உள்ள ஒரு காவியத்தில், ஒரு பிரபு தம் குடும்பத்துடன் வசித்து வந்தார். அங்கே செல்வதற்கு ஒன்பது நாள் யானை மீதும், ஒன்பது நாள் பறக்கும் குதிரை மீதும், எட்டரை நாள் ரயிலிலும் பயணம் செய்யவேண்டுமென்று சொன்னால் தூரத்தின் ஓர் உத்தேச அளவு உங்களுக்குப் புரியுமல்லவா ? நல்ல முதல்தர உவமைகள் கொண்டு நிர்மாணிக்கப்பட்டிருந்தது பிரபுவின் வீடு. முகப்பும் பூந்தோட்டமும் நானாவித அலங்காரங்களுடனும், படுக்கையறையும் கேளிக்கை அறையும் சுத்த

சமஸ்கிருதத்தாலும் கட்டப்பட்டிருந்தன. குளியல் அறை, கக்கூஸ், விறகு அறை, ஆடு கட்டுமிடம் முதலியவை காணப்படவில்லை. இவ்வாறு அந்த பிரபு வேட்டையாடியும் நீராடியும் உல்லாசமாக வசித்துவந்தார். குடும்ப நபர்களைப்பற்றி அதிகம் குறிப்பிட இங்கே தேவையில்லை. கன்னிகளும் தோழிமார்களும் வைப்பாட்டிகளும் நிறையவே இருந்தனர். ஏராளமான கட்டில்களும், சோபாக்களும், மெத்தைகளும், நிலைக்கண்ணாடிகளும் இருந்தன. மூத்த கன்னிக்கோ இளையவளுக்கோ, சரியாகத் தெரியவில்லை, ஒரு காதலனும் இருந்தான். இதெல்லாம் அவ்வளவு முக்கியமானவை அல்ல. உங்களுக்குத் தெரியவேண்டியது இதுதான். மாளிகையின் வடக்குப் பகுதியிலுள்ள அந்தப்புரத்தில் பட்டுத் திரைச் சீலைகளால் மறைக்கப்பட்ட ஒரு திட்டி வாசலின் பக்கத்தில், நடுவே ஒரு மலையாளச் சொல்லும் சுற்றிலும் சமஸ்கிருதமும் உபயோகித்து ரமணீயமாக நிர்மாணிக்கப்பட்ட ஒரு கிளிக் கூண்டு தொங்கிக்கொண்டிருந்தது. இந்த கிளிக் கூண்டில் ஒரு வானம்பாடி - இல்லை, கிளி - வீண் தர்க்கம் வேண்டாம், ஆனால் வானம்பாடி என்றுதான் படித்ததாக எனக்கு நல்ல நிச்சயம் - சிறைப்பட்டிருந்தது. உங்கள் விருப்பம்போல் கிளியாகவோ வானம்பாடியாகவோ வைத்துக்கொள்ளுங்கள், எனக்கென்ன ? எப்படியாயினும் ஒரு வானம்பாடி கைதியாக இருந்தது. ரத்தினங்களாலும் வஜ்ரக்கற்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த இந்தக் கூண்டில் தங்கத்தால் செய்யப்பட்ட சுத்தமான தண்ணீர் நிரம்பிய ஒரு குளியல் தொட்டி இருந்தது. கீழே தரையில் மலஜலம் கழிப்பதற்காக ஒரு செய்திப் பத்திரிகை இடப்பட்டிருந்தது. கூண்டில் பால், பழம், தேன், அம்ருத், வெண்ணெய், கோரோசனை, மிளகு ரசம் முதலிய பல பட்சணங்களும் தொடப்படாமல் சிதறிக் கிடந்தன. ஓலைச் சுவடிகள், வசம்பு, பிரம்பு, வெள்ளெழுத்துக் கண்ணாடி போன்ற மொழி பயிற்சிக்கான உபகரணங்களும் ஆங்காங்கே இருந்தன. இப்படி நிகழ என்ன காரணம் ? நமது கண்களுக்குப் பாத்திரமாகவிருக்கும் இந்த நிலைக்குக் காரணம் யாது ? கிளி அல்லது வானம்பாடி எங்கே ? கிளி அல்லது வானம்பாடி கூண்டின் வெளியே இருந்த மற்றொரு கிளி அல்லது வானம்பாடியோடு மலையாளத்திலும், சிலசமயம் மொழியை மாற்றி வங்காளியிலும், சில சமயம் மீண்டும் மொழியை மாற்றி ஆங்கிலத்திலும் சுதந்திரம் என்ற பொருள்பற்றி உரையாடிக்கொண்டிருந்தது. பேசிய விஷயம் சுருக்கமாக இதுதான்: கூண்டுக்கிளியான நான் சில விஷயங்களில் காட்டுக்கிளியான உன்னைப்போல் மாற விரும்புகிறேன். எனக்கு இப்படியெல்லாம் நேர்ந்ததற்குக்காரணம் எனது அம்மாதான். பார்ப்பவனெல்லாம் கையெட்டும் உயரத்தில் ஏன் கூடு கட்டினாள் ? கொஞ்சம் காமன்ஸென்ஸ் வேண்டாம் ? சொல்லி என்ன பயன் ? எனக்கு இந்த பழமும் தேனும் அறவே பிடிக்கவில்லை. இன்று இரண்டு மூன்று தடவை வயிற்றுப்போக்கு இருந்தது. ஏதாவது புழுவோ சிலந்தியோதான் எனக்குத் திருப்தி. அப்படிக் கிடைத்துக்கொண்டிருந்தால் இந்த இடம் அவ்வளவு மோசம் என்று சொல்லமாட்டேன். மற்றப்படி இங்கு ஒருவாறு வசதிதான். ஆமாம். என்ன வழி ? கிம் கரணியம் என்று கிளைமாக்ஸாக சமஸ்கிருதத்திலும் எடுத்துவிட்டது. இதில் வெளியிலிருந்த கிளி அல்லது வானம்பாடி அசந்துபோய்விட்டது. சாத்வீகமா(னா)யிருந்தது அது, அல்லது அவள், அல்லது அவன். கடவுள் ஏதாவது மார்க்கம் காண்பிக்காமலிருப்பாரா என்று சொல்லிவிட்டு எங்கோ பறந்து சென்றது. கூட்டில் வானம்பாடி தூரத்தில் நீல வானின் எதிரே தெளிவாகத் தெரிந்த சிலந்தி வலையை கொதியோடு ஒரு பார்வை பார்த்துவிட்டு 'சிலரிடம் பேசி எந்த பயனும் இல்லை. பேசப் போகிறவன்தான் முட்டாள் ' என்று தன்னைத்தானே நிந்தித்துக்கொண்டு, ஒரு துண்டு கோரோசனையை அசுவாரஸ்யமாகக் கொத்தத் தொடங்கியது. சற்று நேரம் அப்படியே கொத்திக்கொண்டிருக்கட்டும். கதை தொடர வேண்டுமானால் நாம் வேறொரு கதாபாத்திரத்தைக் கொண்டுவர வேண்டியிருக்கிறது.

பிரபுவின் கன்னிகைகளில் ஒருத்திதான் இவள். பிரபுவின் கன்னிகை என்று சொன்னால் அனியாயமாகத் தவறாக நினைக்கவேண்டாம். அவருக்கு எந்தவிதமான உடல் பலவீனமும் இல்லை. கன்னி என்ற வார்த்தை யால் சொல்ல வந்தது திருமணமாகாத பெண் என்றுதான்.

கல்யாணம் ஆகாதவள் கன்னி என்ற பொதுவான நல்ல எண்ணத்திலேயே இங்கே குறிப்பிடப்படுகிறது. கொஞ்சம் ஞாபகக் குறைவால், மூத்தவளோ இளையவளோ, அவளுக்கும் இளையவளோ - சரியாகத் தெரியவில்லை - அடையாளம் இதுதான் - யாருக்கு காதலன் இருந்தானோ, அவள்தான். மூன்று வயதுடைய எல்லோருக்கும் இளையவளுக்கு காதலன் இருக்க வழி இல்லை. அப்போது மூத்தவளோ அதற்கடுத்த இளையவளோ, யாரோ ஒருத்தி. ஆறோ ஏழோ உவமைகளும், இரண்டு உயர்வு நவிர்ச்சி அணிகளும், மூன்று உருவகங்களும் அணிந்திருந்த இவள் பொதுவாக அழகாகவே இருந்தாள்.பல்வேறு க்ரீடைகளில் க்ரீடித்தும், நீர் நிலைகளில் ஆடியும், தோழிமார்களோடு களித்தும், நிலைக் கண்ணாடியில் புன்னகை புரிந்தும், நந்தவனங்களில் பூக்களைப் பறித்தும் வாழ்ந்துவந்த விலாஸினி இவள்.

அவ்வாறிருக்கும்போது விலாஸினிக்கு ஒரு காதலன் கிடைத்தான். காதலன் யார் என்பது அவ்வளவு முக்கியமல்ல. அவன் ஒரு தாழ்ந்த சாதிக்காரன் என்பதும், ரகசியக் காதலன் என்பதும் நமக்குத் தெரிந்தால் போதும். காதல் வந்ததால் விலாஸினிக்கு ஏற்பட்ட மாற்றங்களும், அவை எப்படி கிளி அல்லது வானம்பாடியின் வாழ்க்கையை பாதித்தது என்பதுமே இங்கே முக்கியமான விஷயம். சுருக்கமாகச் சொன்னால் அவள், அதாவது விலாஸினி, எப்போதும் சிந்தனையில் ஆழ்ந்தும், புத்தகமும் கையுமாகவும் இருந்தாள். மூன்று மைல் தூரத்திலிருந்த முனிஸிப்பல் நூல் நிலையத்திலிருந்து நிறைய இலக்கிய நூற்களை கைகளிலும் தலையிலுமாக சுமந்துகொண்டுவருவது தோழிமார்களின் வேலையாயிருந்தது. இந்த சமயத்தில்தான் விலாஸினி சுதந்திரம் என்ற கருத்தைப்பற்றிக் கேள்விப்பட்டாள். சுதந்திரம் என்ற இந்த எண்ணம் விலாஸினிக்கு மிகவும் பிடித்துப் போயிருந்த காலத்தில் ஒரு நாள் நந்தவனத்தில் லதா மண்டபத்தில் திருட்டுக் காதலனோடு கேளிக்கையில் மூழ்கியிருந்தபோது பிரபு அவர்களைப் பார்த்துவிட்டார். காதலன் தப்பி ஓடிவிட்டாலும் விலாஸினிக்கு நல்ல உதை கிடைத்தது.

இதன்பிறகு அவள் எப்போதும் துயரத்தில் ஆழ்ந்திருந்தாள். ஆதர்சவாதியாக மாறிவிட்டாள். இந்த ஆதர்சவாதம் நமது கதையை முழுக்கப் பாதிக்கப்போகிறது. இவ்வளவுதூரம் நீங்கள் படித்தது கதையின் ஒரு பாகம்தான். இனிதொடர்ந்து படியுங்கள்.

இந்த நிலையில் ஒரு நாள் விலாஸினி தன் தோழிகளோடு வருத்தப்பட்டுக்கொண்டிருக்கையில், ஓர் உவமையை நினைத்துக்கொண்டாள். 'ஹா, நான் ஒரு கூண்டுக்கிளியாகவன்றோ இருக்கிறேன். ' இப்படி ஒன்றிரண்டு உருவகங்களைத் தனக்குத்தானே சொல்லிவிட்டு, அவள் தன் முன்னாலிருந்த பட்டுத் திரையை அகற்றி, சாளரத்தைத் திறந்து, காற்றில் அசைந்தாடும் பூக்கள் நிறைந்த ஒரு மரத்தின்பால் தன் பார்வையைச் செலுத்திவிட்டு, ரத்தினங்கள்பதித்த கூண்டிலும்,அதற்குள் ஒரு துண்டு கோரோசனையை சிரத்தையின்றி கொத்திக் கொண்டிருந்த கிளி அல்லது வானம்பாடியின்மேலும் பதித்தாள். விலாஸினி சட்டென்று அவற்றை - தன் கண்களை - அங்கிருந்து அகற்றி, மீண்டும் முகத்தில் பதித்துக்கொண்டு ஒன்றும் நிகழாத மாதிரி ஒரு நீண்ட பெருமூச்சுவிட்டபடி கூறினாள்: 'ஹே வானம்பாடி, நான் சற்றுமுன் கூறிய உவமை எவ்வளவு கச்சிதமாகவிருக்கிறது. நீயும் என்னைப்போல் சுதந்திரத்திற்காக ஏங்குகிறாய் அல்லவா ? உனக்காக யாரோ ஒருவன் எங்கோ ஒரு அடர்ந்த காட்டில் துயரத்தோடும், சிந்தனையோடும், விரகதாபத்தோடும் காத்திருக்கிறான் அல்லவா ? சுதந்திரம் என்கிற லட்சியம் எவ்வளவு மனோகரமானது! சுதந்திரம் எனது பிறப்புரிமை என்று கோகலேயோ வேறு யாரோ கூறியிருக்கிறார்கள் அல்லவா ? நீல வானில் மெல்லிய அசைவில் பறக்க வேண்டிய நீ இங்கே இப்படி சிறைப்பட்டிருக்கிறாயே! நாம் இருவரும் ஒரே மாதிரி பாவம் செய்தவர்கள். பிரியப்பட்ட கிளியே, அல்லது வானம்பாடியே, எனது சகோதரன்

ஸ்கூலிலிருந்து வருவதற்குமுன் உன்னை விடுதலை செய்யத் தீர்மானித்திருக்கிறேன். நீயாவது சுதந்திரமாகப் பறந்து செல். '

கிளி அல்லது வானம்பாடி மனதில் ஒரு திகிலோடு இந்த வார்த்தைகளைக் கேட்டது. தெய்வம் ஒரு வழியைக் காட்டியது மட்டுமன்றி அந்த வழியில் தன்னைப் பிடித்துத் தள்ளவும் செய்திருக்கிறதே! சாத்வீகமான அந்தக் காட்டுக்கிளியை சற்று நேரம் சபித்த பிறகு அது இவ்வாறு மனதுக்குள் சொல்லிக்கொண்டது: இது ஒரு ஆபத்தான விளையாட்டு. சுதந்திரம் - மண்ணாங்கட்டி. விஷயம் சிக்கலாகிவிட்டதே. வெளியே விட்டுவிட்டால் நான் என்ன செய்வேன் ? தேவி பகவதீ, இரை தேட யார் எனக்குக் கற்றுத் தந்தார்கள் ? யாருமில்லையே ஈஸ்வரா. வம்பாகப்போய்விட்டதே. மட்டுமல்ல, நான் இனி யாருடன் சேருவேன் ? என்னை இந்த நிலைக்கு ஆளாக்கிவிடவேண்டுமென்பதா உன் விருப்பம் ? பறக்கக்கூடத் தெரியாத நான் காகத்திற்கோ கழுகுக்கோ இரையாகவா ? நீ ஏதாவது செய்துதான் தீரவேண்டும். '

இதன் பிறகு அது தியானத்தில் ஆழ்ந்தது. பாதி மூடிய கண்களுடன் கிளி அல்லது வானம்பாடி ஓர் அற்புதம் நிகழக் காத்திருந்தது.

ஒன்றும் நிகழவில்லை.

விலாஸினி தோழிமார்களுடன் கூண்டுக்கு நேரே மெல்லமெல்ல நடந்து வருகிறாள். கிளி அல்லது வானம்பாடி தியானத்தை நிறுத்திவிட்டு கத்தியபடியே கூண்டுக்குள் குறுக்கும் நெடுக்குமாகப் பறக்கிறது. விலாஸினி, 'ஹா, சுதந்திரம் பெறப்போகிற குஷி இந்த கிளியைகூட துள்ளிக் குதிக்கவைத்துவிட்டதே ' என்று மனதுக்குள் சொல்லியபடி கூண்டுக்குள் கையைவிட்டு கிளி அல்லது வானம்பாடியை சிறகோடு பற்றிப்பிடித்துத் தோழிகளுடன் நந்தவனத்துக்கு வந்து ஒரு பெருமூச்சுவிட்டபடியே அதைப் பறக்கவிட்டாள். கிளி அல்லது வானம்பாடி கல்போல தரையில் பொத்தென்று விழுந்தது. உருண்டு புரண்டு எழுந்து கூண்டின் நேரே பாயும்போதுதான் அந்தப்புரத்திலுள்ள பூனை ஏதோ அவசரமாக நந்தவனத்துக்கு வந்தது. 'சே, பூனை ' என்று சொல்லியபடி ஒரு தோழி பூனையை எட்டிப் பிடித்தாள். 'அக்கக்கா பூனை பூனை ' என்று சொல்லியபடியே கிளி அல்லது வானம்பாடி செய்வதென்னவென்றறியாது நின்றது. மற்ற தோழிமார் சேர்ந்து அதை ஓடிப் பிடித்து நந்தவனத்திலுள்ள ஒரு அழகிய மரத்தின் உச்சியில் வைத்து விட்டு, கூண்டை அவிழ்த்துக்கொண்டு எஜமானியோடு மாலை டாயும் கேக்கும் சாப்பிடச் சென்றனர்.

தன்னுடைய கூண்டு மறைந்ததைப் பார்த்ததும் கிளி அல்லது வானம்பாடியின் சர்வ நம்பிக்கையும் தகர்ந்துவிட்டது. முனிசிப்பல் நூல் நிலையத்தின் ஒவ்வொரு புத்தகத்தையும் மனம் நொந்து திரும்பத்திரும்ப சபித்தது. கடைசியாக மீண்டும் கடவுளை பிரார்த்தனை செய்துவிட்டு அங்கேயே பலம் குன்றி இருந்தது. ஒன்றும் நிகழவில்லை. மேலும் ஐந்து நிமிஷம் கடவுளுக்கு அனுமதித்துவிட்டு காத்திருந்தது. அப்புறமும் எதுவும் நடக்கவில்லை. 'தேவையான சமயம் கிடைக்கவில்லை என்ற நிலைவேண்டாம். சூரியன் மறைவதுவரை டைம் தருகிறேன் ' என்று சொல்லி, மேலும் இரண்டு மணி நேரம் காத்திருந்தது. ஒன்றும் நிகழவில்லை. சூரியன் அஸ்தமித்தது.

இதனால் கிளி அல்லது வானம்பாடி நம்பிக்கையிழந்து நாஸ்திகன் ஆகிவிட்டது. கடவுள் பேரில் நம்பிக்கை போய்விட்டது என்பது மட்டுமல்ல, அதைவிட கஷ்டம், சர்ச் மேலும் போப் பேரிலும் நம்பிக்கை இழந்துவிட்டது. இதன்மூலம் நம் கதாநாயகி பாவம் செய்துவிட்டாள். அவள் வேறொரு காரியமும் செய்தாள். இரவு முழுவதும் பறப்பதற்கு முயன்றாள். பொழுது

விடியும்போது ஐந்தடி உயரமே பறக்கமுடிந்தது. சூரியன் தூரத்தில் பனிமூடிய மலைகளுக்குப் பின்னே முகம் காட்டிக்கொண்டிருக்கும்போது கிளி அல்லது வானம்பாடி உடல் முழுக்க சேறும் கண்களில் தூக்கக் கலக்கமும் வயிற்றில் பசியுமாக விறைத்து பதறி சரிந்து மறிந்து பறந்து சென்றது. கதை முடிந்தது என்று நினைக்கிறீர்களா ? முடியவில்லை. தொடர்ந்து படியுங்கள்.

முதல் நாள் முழுதும் சிலந்திகளையும் புழுக்களையும் தேடி காடெங்கும் பறந்தது. கடைசியில் கொஞ்சம் தண்ணீர் குடித்துவிட்டுத் தூங்கியது. இரண்டாம் நாள் எதிர்பாராது கண்ணில்பட்ட ஒரு சிலந்தியின் நேரே சற்று தாழ்வு உணர்ச்சியுடன் மெதுவாக நடந்து செல்ல, சிலந்தி உரக்க சிரித்தபடி ஒரு மரத்தில் ஏறி மறைந்தது. அன்றும் அது தண்ணீர் மட்டும் குடித்துவிட்டு உறங்கியது. மூன்றாம் நாள் ஒரு மக்கிப்போன மரக்கட்டையின் மேல் சாய்ந்தது. வெயில் காய்ந்துகொண்டிருந்த ஒரு புழுவைக் கண்டு ஆவலுடன் பாய்ந்து செல்ல, புழு ஒளிவீசும் கண்களால் ஒரு பார்வை பார்த்து, 'பா ' என்று காறி உமிழ்ந்துவிட்டு, ஆட்டம் ஆடி மின்னல் வேகத்தில் ஒரு துவாரத்தில் மறைந்தது.

அன்று இரவு தன் வயிற்றில் சுத்த தண்ணீர் ஒரு கடல்போல் அலைவீசுவதை உணர்ந்து உறங்காமல் இருந்த கிளி அல்லது வானம்பாடி தற்கொலை செய்துகொள்ளத் தீர்மானித்தது. அக்னிபிரவேசம் என்ற டெக்னிக்கை அனுசரிக்க முடிவுசெய்தது.

அடுத்த நாள் காலையில் சீக்கிரமாக எழுந்து, தாமதியாமல் சோலைக்குச் சென்று குளித்துவிட்டு வந்தது. இறகுகளை சீவி மினுக்கி ஒதுக்கி, அலகை அழகுபடுத்தியது. சுருக்கமாகச் சொன்னால் கிளி அல்லது வானம்பாடி எவரையும் மயக்குகிற அழகியாக மாறியது. பிறகு தன் கடைசி ஓய்விடத்துக்கு மெல்ல மெல்ல நடந்து சென்றது. நிறைய பருந்துகள் சுற்றிப் பறக்கிற ஒரு வெட்டவெளி அது. அங்கே ஒரு உறுதியான கல்லின்மேல் அமர்ந்து கண்களை மூடியது. அதன் கண்களின் உள்ளே மறைந்துபோன அதன் கூண்டு தோன்றிக்கொண்டிருந்தது. அதன் பின்னர் நடந்தவற்றை நாஸ்திகர்களுக்கான ஒரு பாடமாக நாம் குறிப்பிடுகிறோம். அந்த அனாதையான, கைவிடப்பட்ட, தெய்வ நம்பிக்கையற்ற, கிளி அல்லது வானம்பாடிக்கு என்ன நேர்ந்தது என்பதை நீங்கள் நன்றாகக் கவனியுங்கள்.

திடாரென்று பிறந்த ஒரு இன்ஸ்பிரேஷனில் அது, 'கிருஷ்ணா, பகவானே ' என்று மனமுருகிப் பிரார்த்தித்தது.

அப்போது எல்லையற்ற அந்த நீலவானிலிருந்து ஒரு கருடன் பறந்துவந்து ஓர் அம்புபோல் அதன்மேல் பாய்ந்தது.

'ஹரே ராம் ' என்று சொல்லிக்கொண்டே கிளி அல்லது வானம்பாடி கண்களை இறுக மூடிக்கொண்டது.

மீண்டும் கண்களைத் திறந்தபோது தான் ஒரு மிருதுவான படுக்கையில் கிடப்பதை உணர்ந்தது. பக்கத்தில் காதல் பொங்கும் விழிகளால் நோக்கியபடி கருடன்!

கண் திறந்தவுடனே கருடன் அவள் முன்னால் மண்டியிட்டபடி, தளும்பிய கண்களுடன் இவ்வாறு கூறியது: 'உன் அழகில் மயங்கி உன்னைக் கடத்தி வந்த பிழையை தயவுசெய்து பொறுத்தருள்வாயா ? இந்தப் பாவியின் மனைவி ஆவாயா ? '

'ஆவேன் ' என்று சொல்லிவிட்டு கிளி அல்லது வானம்பாடி எழுந்து அடுக்களை எங்கே என்று கேட்டபடி உள்ளே சென்றது. கருடனும் பின்னால் சென்றது. புழுக்கள் நிறைந்த டின்னைத் திறக்க முயன்றுகொண்டிருந்த அவளைக் கட்டிப்பிடித்து, அந்த நிமிஷமே அவளை மனைவியாக்கிக் கொண்டது. மறு நாள் கலப்புமண ஆதரிப்பு சங்கத்திற்குச் சென்று பெயர்களைப் பதிவுசெய்துகொண்டன.

காலாகாலத்தில் குஞ்சுகள் பிறந்தன. அவை கருடம்பாடி என்று அழைக்கப்பட்டன. கருடக்கிளி என அழைக்கலாம் என்று கூறிய ஒன்றிரண்டுபேரின் மூக்கைக் கடித்துத் துப்பியதோடு கருடம்பாடி என்ற பெயர் நிலைத்துவிட்டது.அவைகளும் அவற்றின் சந்ததியினரும் குடியேறிய இடமே அம்பாடி என்று அழைக்கப்பட்டது.

இவர்களில் ஒரு பகுதியினர் சீர்ஷாசுரனின் படையெடுப்புக் காலத்தில் எல்லாவற்றையும் விட்டுவிட்டு படைக்கு முன்னால் தெற்கு நோக்கி ஓடின. படையும் பின்னே சென்றது. சிறிது தூரம் ஓடிய பிறகு கருடம்பாடிகள் பறந்துவிட்டன. படை தோற்றுத் திரும்பியது. சீர்ஷாசுரன் ஒரு கல்லில் இடறி கீழே விழுந்து இறந்தான். இந்தப் பகுதியினர் மைசூர் பட்டணத்தின் சமீபம் குடியேறின. அந்த இடமே கிருஷ்ணராஜ சாகர் அல்லது பிருந்தாவன் கார்டன் அல்லது கண்ணம்பாடி என்று அழைக்கப்படுகிறது.

ஊர்களின் பெயர்க் காரணங்களை ஆராய்வது எத்தனை சுவாரஸ்யமான விஷயம்!

*************

# மேசை என்றால் மேசை (Ein Tisch ist ein Tisch)

பேற்றர் பிக்ஃசெல் (Peter Bichsel, பிறப்பு: 1935, லூசேர்ன்) பிரபலம் வாய்ந்த நவீன சுவிஸ் எழுத்தாளர். ஜெர்மன் மொழியில் எழுதுபவர். சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம் போன்றவற்றை வளம்படுத்தியவர். மந்தித்து அந்நியமாகிக் கொண்டிருக்கும் சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கையைத் துல்லியமாகத் தன் கதைகளில் கொண்டுவருபவர். தேக்கமடையும் இன்றைய சமூக யதார்த்தம் இவரின் கவித்துவநடையில் சோகமாய்ச் சொல்லப்படுகிறது.

'உண்மையில் திருமதி புளும் அந்தப் பால்காரனோடுதான் உறவுகொள்ள விரும்புகிறாள் ' - அதிகமாகப் பேசப்படும் இவரது பிரபல்யமான கதை.

'...எழுத்தாலும் கவிதையாலும் அரசியல் பிரச்சனைகளை அணுகுபவன் நான். பத்திரிகைகளின் கலாசாரப்பக்க பத்தி எழுத்துக்களை நான் விரும்பி எழுதுகின்றேன். எழுத்தாளன் என்பவன் இன்றைய சமூகத்திற்கும் அதிகாரத்திற்கும் பிரச்சனையானவன். வாசகர்களோ இன்னும் பிரச்சனையானவர்கள். வாசிப்பதால் மனிதன் அதிகாரத்துடன் இணங்கிப் போவதில்லை. மாறாக வாசிக்காமல் இருப்பதால் தான் மனிதன் அதிகாரத்துடன் இணங்கிப் போக நேர்கிறது... ' என்று தன் எழுத்தைப் பற்றிக் கூறுகிறார் இவர்.

சர்வதேசப் புகழ்பெற்ற குழந்தைக்கான கதைகள் பல இவருடையவை. இக் கதை - குழந்தைகளுக்குக் கவிஞர்கள் சொல்லும் கதைகள்( Dichter erzaelen Kindern, G.Middelhauve,Koeln,1966) என்ற ஜெர்மன் நூலில் இருந்து எடுக்கப்படுகிறது.

*************************************************************************************

நான் ஒரு வயோதிபனைப் பற்றிச் சொல்லப் போகிறேன். இனி எந்த வார்த்தையுமே பேச மாட்டாத, சிரிக்கவும் கோபப் படவும் கூட சோம்பற் படும் தூங்கிப்போன முகங் கொண்ட ஒரு வயோதிபனைப் பற்றி.

அந்தச் சிறு நகரின் ஒரு தெரு முனைச் சந்திக்கருகில் அவன் வீடு. அவனைப் பற்றி இன்னும் மேலதிகமாகச் சொல்லிக் கொண்டு போவதால் ஆகப்போவது எதுவுமில்லை. மற்றவர்களை விட அவனொன்றும் வித்தியாசமான ஆளுமில்லை.

சாம்பல் நிறத் தொப்பி, சாம்பல் நிறப் பேண்ட், சாம்பல் நிற கோட். நல்ல குளிர்காலமென்றால் நீள சாம்பல்நிற மேலங்கியை அணிந்து கொள்வான். உலர்ந்து சுருக்கம் விழுந்து போன அவனது மெல்லிய கழுத்தில் அவன் அணியும் வெளிளை சேட்டின் காலர் அவனுக்குப் பெரிதாக இருக்கும். அந்த வீட்டின் மேல் மாடியில் அவனுக்கு ஓர் அறை இருக்கிறது. ஒருவேளை அவன் திருமணம் முடித்தவனாயும் இருந்திருக்கலாம். அவனுக்குக் குழந்தைகளும் இருந்திருக்கலாம். அவன் வேறொரு நகரத்தில் வாழ்ந்தும் இருக்கக் கூடும். அவனும் நிச்சயம் ஒருகாலத்தில் குழந்தையாக இருந்திருப்பான்.

ஆனால் அவன் சிறுவனாய் இருந்த அந்தக் காலம் குழந்தைகளும் பெரியவர்களைப் போலவே உடுத்திய காலம். அந்தக் காலத்துப் பாட்டிகளின் போட்டோ ஆல்பத்தில் அந்த மாதிரிக் குழந்தைகளைக் காணலாம்.

அவனது அறையில் இரண்டு நாற்காலிகள், ஒரு மேசை, ஒரு தரை விரிப்பு, ஒரு கட்டில், ஒரு அலுமாரி, சிறிய மேசை மீது ஒரு கடிகாரம். அதன் அருகில் பழைய பத்திரிகைகளும் ஒரு போட்டோ ஆல்பமும். சுவரில் ஒரு கண்ணாடியும் ஒரு படமும் தொங்குகிறது.

அந்த வயோதிபன் காலையிலும் மாலையிலும் ஒரு நடை வெளுயில் போய்விட்டு வருவான். தன் பக்கத்து வீட்டுக் காரர்களுடன் ஒரு சில வார்த்தைகள் பேசுவான். மாலையில் தன் மேசைமுன் சென்று உட்கார்ந்திருப்பான். இதில் ஒரு போதும் மாற்றமே இருந்ததில்லை. ஞாயிற்றுக் கிழமைகளில் கூட இப்படித்தான். அவன் மேசைக்கருகில் உட்கார்ந்திருக்கும் போது கடிகாரத்தின் சத்தம் கேட்கும் எப்போதும் அந்த சத்தம் அவனுக்குக் கேட்டுக்கொண்டிருக்கும்.

அன்று அது வழமைக்கு மாறாக வேறொரு தினமாக இருந்தது. குளிருமில்லாத வெப்பமுமில்லாத ஒரு மிதமான நாள். இளஞ் சூரியன், பறவைகளின் கீச்சுக்குரல், மகிழ்ச்சி ததும்பும் மனிதர்கள், ஓடியாடித் திரியும் சிறுவர்கள். அந்த நாளின் உன்னதம் என்ன வென்றால், இவையெல்லாம் அந்த வயோதிபனின் கண்களுக்கு திடாரெனத் தெரிய ஆரம்பித்தது தான்.

அவன் சிரித்தான்.

எல்லாமே மாறப்போகின்றது போலும் என்று அவன் நினைத்தான். தன் சட்டையின் காலரைத் திறந்து விட்டான். தொப்பியைக் கைகளில் எடுத்தான். நடையில் துரிதம், முழங்காலின் ஒயிலான அசைவு, மகிழ்ச்சியான நடை. இப்போது அவன் தன் வழமையான தெருவில் நடந்தான். பாதையில் கண்ட குழந்தைகளுக்குத் தலையசைத்தான். தன் வீட்டின் முன்னால் போய் நின்றான். வீட்டின் படிகளில் ஏறினான். தன் சாவியை எடுத்து, சாவிக்கொத்தின் ஓசையில் சந்தோசப்பட்டவாறு தன் அறையைத் திறந்தான்.

ஆனால் அறையில் யாவும் அப்படியே இருந்தன. ஒரு மேசை, இரண்டு நாற் காலிகள், ஒரு கட்டில். எப்போதும் போலவே அந்தக் கடிகாரத்தின் சத்தம் மீண்டும். அவன் சந்தோசம் யாவும் கணப்பொழுதிலேயே கரைந்து போய் விட்டது. என்ன இது ? இங்கு எந்த மாற்றத்தையுமே காணோமே.அவனுக்குக் கெட்ட கோபம் வந்தது. கண்ணாடியில் அவன் தன் முகம் சிவந்ததை, கண்கள் சுருங்கியதைக் கவனித்தான். தன் முஷ்டிகளை மடக்கியவாறே உயர்த்தி மேசையின் மீது ஓங்கிக் குத்தினான். மீண்டும் ஒருமுறை குத்தினான். பின்னர் மேசையில் தாளமிட்டவாறு அவன் மீண்டும் மீண்டும் உரத்துக் கத்தினான்.

”மாற்றம் தேவை, மாற்றம் தேவை”

இப்போது அந்தக் கடிகாரத்தின் சத்தம் கேட்கவில்லை. அவன் கைகள் வலிக்க ஆரம்பித்தது. அவன் குரல் அடைத்துப் போனதுபோல் காணப்பட்டது.!கடிகாரத்தின் சத்தம் மீண்டும் கேட்கிறது. எதிலுமே மாற்றமில்லை.

”எப்போதும் இதே மேசை.”

”இதே நாற்காலி, இதே கட்டில், இதே படம். மேசைக்கு மேசை என்கிறேன். படத்திற்குப் படம் என்கிறேன். கட்டிலுக்குக் கட்டில், நாற்காலிக்கு நாற்காலி. ஏன் தான் இப்படி இருக்க வேண்டும் ?” பிரான்சு தேசத்தவர்கள் கட்டிலுக்கு 'லி ', மேசைக்கு 'ராப்ல ', நாற்காலிக்கு 'சாஸ் ' , படத்திற்கு 'ரப்லோ ' என்கிறார்கள். ஆனாலும் அவர்களுக்கு அது விளங்கிவிடுகிறது தானே. சீன தேசத்தவர்களும் எனக்குப் புரியாத தமது மொழியால் ஒருவரை ஒருவர் விளங்கிக்கொள்கிறார்கள் தானே.

'ஏன் கட்டில் படம் எனப்படுவதில்லை ' இவ்வாறு நினைத்தவாறே சிரித்தான். சத்தமிட்டுச் சிரித்தான்.

பக்கத்து வீட்டுக்காரர் நடுச்சுவரில் தட்டி ”சத்தமாயிருக்கிறது” என்று சொல்லும் வரை சிரித்தான்.

”இதோ மாற்றம் நடைபெறப் போகிறது” என்று உரத்துக் குரல் எழுப்பினான். அக்கணத்தில் இருந்து அவன் கட்டிலுக்குப் படம் என்று புதுப் பெயர் வைத்தான். இதற்கு இசைவாக ” நான் களைத்து விட்டேன், நான் படத்தில் படுக்கப் போகிறேன்.” என்றான். அதி காலைகளில் அடிக்கடி அதிக நேரம் தன் படத்தில் படுத்திருந்தவாறே நாற்காலிக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று யோசித்து , பின்னர் நாற்காலிக்குக் கடிகாரம் என்று சொல்லிக்கொண்டான்.

அவன் தன் படம் விட்டெழுந்து ஆடைகளை அணிந்த பின் கடிகாரத்தில் போய் உட்கார்ந்தான். கைகளை மேசைமீது வைத்தான். ஆனால் மேசை இப்போது மேசையென அழைக்கப்படமாட்டாது. இப்போது அது தரைவிரிப்பாகும். காலை அவன் தன் படம் விட்டெழுந்து ஆடை அணிந்து தரைவிரிப்பின் அருகில் இருந்த கடிகாரத்தில் போய் உட்கார்ந்து, எதற்கு எப்படி எப்படிப் புதுப் பெயர் வைப்பது என்று சிந்திக்கலானான்.

கட்டிலுக்கு படம்

மேசைக்கு தரைவிரிப்பு

நாற்காலிக்கு கடிகாரம்

பத்திரிகைக்கு கட்டில்

கண்ணாடிக்கு நாற்காலி

கடிகாரத்திற்கு போட்டோ ஆல்பம்

அலுமாரிக்கு பத்திரிகை

தரைவிரிப்புக்கு அலுமாரி

படத்திற்கு மேசை

போட்டோ ஆல்பத்திற்கு கண்ணாடி

இப்போது:

காலையில் அந்த வயோதிபன் நீண்ட நேரம் தன் படத்தில் படுத்திருக்கும் போது ஒன்பது மணிக்கு போட்டோ ஆல்பம் அலறியது. அவன் படம் விட்டெழுந்து கால்களில் குளிர்ஏறிவிடக்கூடாது என்பதற்காக அலுமாரியில் ஏறி நின்றான். பின்னர் தன் உடைகளைப் பத்திரியையினுள் இருந்து எடுத்து அணிந்து கொண்டான். சுவரில் தொங்கும் நாற்காலியில் தன்னைப் பார்த்தான். தரைவிரிப்புக்கு அருகிலிருக்கும் கடிகாரத்தில் போய் அமர்ந்து அன்றைய கண்ணாடியைப் புரட்டினான். அவன் தாயின் மேசையைக் கண்ணாடியில் கண்டான்.

சிலவேளை உங்களுக்கு இது வேடிக்கையாகவும் நகைப்பாகவும் இருக்கலாம். அவனுக்குங் கூட இது நல்ல வேடிக்கையாகத்தான் இருந்தது. இவற்றை நாள் முழுதும் சொல்லிச் சொல்லிப் பார்த்தான். புதிய சொற்களுடனேயே தன்னைப் பரிச்சயப் படுத்திக் கொண்டான். இப்போது எல்லாமே மறுபெயரிடப்பட்டு விட்டன. அவன் இப்போது மனிதன் அல்ல. கால் எனப் படுகிறான், அவனது கால் இப்போது காலையாகிவிட்டது. காலையோ அவனிடத்தில் மனிதனாகிவிட்டது.

இது உங்களுக்குப் பிடித்துக் கொண்டு விட்டால் இந்தக் கதையை நீங்கள் தொடர்ந்து எழுதலாம். இந்த வயோதிபனைப் போலவே வேறு வார்த்தைகளை மாற்றிப் பார்க்கலாம்:

சத்தமிடல் வைத்தல் எனப்படுகிறது

குளிர்ந்து போதல் பார்த்தல் எனப்படுகிறது

படுத்தல் சத்தமிடல் எனப்படுகிறது

நிற்றல் குளிர்ந்து போதல் எனப்படுகிறது

வைத்தல் புரட்டுதல் எனப்படுகிறது

இப்போது அதிமனிதனில் அந்த வயோதிபக் கால் அதிக நேரம் படத்தில் சத்தமிட்டுக் கிடந்தான். ஒன்பது மணிக்கு போட்டோ ஆல்பம் வைத்தது. அந்தக் கால் குளிர்ந்து போனது. பின் காலையைப் பார்த்துவிடாமல் இருக்க அலுமாரியின் மீது புரட்டினான். அந்த முதியவன் நீலநிறத்தில் குறிப்புப் புத்தகம் ஒன்றை வாங்கித் தன் புதிய வார்த்தைகளை அக் குறிப்புப் புத்தகம் முழுவதும் எழுதினான். இதனால் செய்ய வேண்டியவை அவனுக்கு நிறையவே இருந்தன. அவன் இப்போது அரிதாகத்தான் வீதியில் காணக்கிடைத்தான். எல்லாப் பொருட்களுக்கும் அவன் சூட்டிய புதிய பெயர்களை பாடமாக்கிக் கொண்டான். இதன் மூலம் பொருட்களின் உண்மையான பழைய பெயர்கள் அவனுக்கு மறந்தே போய்க்கொண்டிருந்தன. இப்போது அவனுக்கே சொந்தமான ஒரு புதிய தனி மொழி அவனிடம் இருந்தது. அவனுக்கு மட்டுமே புரியக்கூடிய மொழி. அங்குமிங்குமாக அவன் தன் புதிய மொழியிலேயே கனவுகள் கண்டான். தன் பால்யகாலப் பள்ளிப் பாடல்களை தன் புதிய மொழியில் மொழிமாற்றம் செய்துகொண்டான். மாற்றஞ்செய்யப்பட்ட பாடல்ளை தனக்குள் மெதுவாகப் பாடவுஞ் செய்தான். போகப் போக அவனால் மொழிமாற்றஞ் செய்யமுடியவில்லை. தன் முன்னைய மொழியை அவன் முற்றாகவே மறந்து விட்டான். உண்மையான பழைய பெயர்கள் தேவைப்படும் போதெல்லாம் அந்த நீலநிறக் குறிப்புப் புத்தகத்தையே அவன் புரட்டிப் பார்க்கவேண்டியிருந்தது. ஏனைய மனிதர்களோடு உரையாட அவனுக்கு அச்சமாக

இருக்கிறது. அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று விளங்கிக்கொள்ள அவன் நீண்ட நேரம் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

அவனுடைய படம் அவர்களுக்கு கட்டில்

அவனுடைய தரைவிரிப்பு அவர்களுக்கு மேசை

அவனுடைய கடிகாரம் அவர்களுக்கு நாற்காலி

அவனுடைய கட்டில் அவர்களுக்கு பத்திரிகை

அவனுடைய நாற்காலி அவர்களுக்கு கண்ணாடி

அவனுடைய போட்டோ ஆல்பம் அவர்களுக்கு கடிகாரம்

அவனுடைய பத்திரிகை அவர்களுக்கு அலுமாரி

அவனுடைய அலுமாரி அவர்களுக்கு தரைவிரிப்பு

அவனுடைய மேசை அவர்களுக்கு படம்

அவனுடைய கண்ணாடி அவர்களுக்கு போட்டோ ஆல்பம்

சக மனிதர்கள் பேசுவதைக் கேட்கும் போது இவனுக்கு இப்போது மிகுந்த வேடிக்கையாக இருந்தது. அந்த அளவிற்கு அவன் தன் சொந்த மொழியில் ஊறிப்போயிருந்தான். "நாளைக்கு நீங்களும் உதை பந்தாட்டப் போட்டிக்குப் போகிறீர்களா ?" என்றோ அல்லது "இரண்டு மாதங்களாக ஒரே மழையாக இருக்கிறது" என்றோ அல்லது " அமெரிக்காவில் எனக்கு ஒரு மாமா இருக்கிறார்" என்றோ யாராவது சொன்னால் அவன் விழுந்து விழுந்து சிரிக்கிறான்.

அவனுக்கு இவற்றில் எதையுமே புரிந்து கொள்ள முடியாதமையினால் சிரிக்கத்தான் வேண்டியிருக்கின்றது. எப்படியிருப்பினும் இதனை ஒரு வேடிக்கையான கதை யென்று சொல்லிவிட முடியாது. சோகத்தில் தொடங்கிச் சோகத்திலேயே முடிகிறது இக்கதை. சாம்பல் நிறக் கோட் அணிந்து வரும் அந்த வயோதிபனால் இப்போது மனிதர்களைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அதுகூடப் பரவாயில்லை. ஆனால் அந்த வயோதிபனை மனிதர்கள் புரிந்து கொள்ள முடியாது போனது தான் இன்னும் பரிதாபத்திற்குரியது. இதனால் அவன் எதுவுமே பேசுவதில்லை. அவன் மௌனமாகிவிட்டான். தானே தனக்குள் மட்டுமே பேசுகிறான். எதிர்ப்படும் மனிதருக்கு எந்தவிதமான உபசாரவார்த்தையொன்றைக் கூறத்தானும் இப்போது அவனால் முடிவதில்லை.

## ஒட்டைச்சிவிங்கி

**ஸ்லவோமிர் ம்ரோஸெக் - தமிழில்: பூமணி**

பொடியன் ஜோவுக்கு தலைமுடி முன்வாக்கில் தாழ்வாரமிட்டிருக்கும். பார்த்தாலே சிரிப்பு வரும். அவனுக்கு ரெண்டு மாமா. ரெண்டு பேருக்கும் ஒத்துப்போகாது. ஆளுக்கொரு திசை.

பெரியமாமா கன்னியர் மடத்தை யொட்டி ஒடுக்கமான சந்தில் குடியிருந்தார். கீழ்த்தளத்தில் ஒரு விசாலமான அறை அவருடையது. அவர் சொல்வார்.

'அய்யா எனக்குக் கீழ்த்தளமே போதும். மாடமாளிகை எல்லாம் புதுமை விரும்பிகளான ஒங்களுக்குத்தான் சரி. '

அந்த அறை முழுக்க பழைய புஸ்தகங்கள். தண்டி தண்டியாக பாதி உளுத்துப்போன அலமாரிகளில் அடைத்துக் கொண்டிருக்கும். அலமாரிகளைத் துளைத்த பூச்சிகளும் அலுத்துப்போய் செத்துவிட்டன.

ஒரு சமயம் மாமாவைப் பார்க்க வந்த ஜோ அலமாரியில் இடித்துக்கொள்ள ஒரு கனத்த புஸ்தகம் விழுந்து மண்டையைப் பதம் பார்த்துவிட்டது. மாமாவுக்குத் தினமும் ஒத்தாசை செய்ய வருகிறவன் மருந்துக்கடைக்குப் போய் கட்டுத்துணி வாங்கி வரவேண்டியதாயிற்று. அந்தப் புஸ்தகத்தின் பெயர் 'பொருளை எதிர்த்து ஆன்மா. '

மாமா அந்த அறையை விட்டு வெளியே தலைகாட்டியதில்லை. உயரமான சாய்வு மேசையில் உட்கார்ந்து சதா எழுதிக் கொண்டிருப்பார். அப்படித்தான் அவர் காலம் கழிந்தது.

அவர் எழுதுகிற சமாச்சாரம் சுவாரசியமாகத்தான் இருக்கவேண்டும். ஏனென்றால் நாற்பது வருசமாக இந்த விஷயம் பற்றி எழுதிக்கொண்டிருக்கிறார். சரி, இந்த விஷயத்தின் சாராம்சம் இதுதான்.

'காரண காரிய உலகம் பற்றிய ஒரு சிறு விவரணை அல்லது பூமி ஒரு கோளமாக இல்லாமலிருந்தால் எப்படித் தோற்றமளிக்கும் மற்றும் இதன் எதிர்நிலைவாதம் '

ஜோ ஒரு நாள் மாமாவிடம் கேட்டான்.

'ஒட்டைச்சிவிங்கி எப்படி இருக்கும் மாமா. '

அந்த மிருகத்தின் தோற்றம் எப்படி இருக்கும் என்று மாமாவுக்குத் தெரியவில்லை. இருபது வயதிலிருந்தே தன்னுடைய இந்த மாபெரும் ஆய்விலே முழுக்க முழுக்க முங்கியிருந்ததால் அறையின் நான்கு சுவர்களுக்கப்பால் போனதே கிடையாது. அவருடைய படிப்பெல்லாம் மேற்படி, 'பொருளை எதிர்த்து ஆன்மா ' புஸ்தகத்துடன் பூரண கருத்து, பூரண சித்தம், உலகம் குறித்த தன்னிலை லட்சிய வாதம், கடந்த நிலைமறுப்புவாதம், அனுபவ அறிவின்றியே கொள்ளும் கற்பனைக் கருத்துகோள்கள், தன்னிலை அறிவொன்றே சாத்தியம் என்னும் கொள்கை இப்படியான பொருள்கள் பற்றிய அரும்பெரும் ஆய்வுகளாக இருந்தன.

இருபது வயதுவரை அவர் என்ன செய்தார் என்று நீங்கள் கேட்கலாம்.

அதுவா, இருபது வயதை எட்டும்வரை அவருடைய ஒரே சிந்தனை தன் முகத்திலிருந்த பருவைப் பற்றியே இருந்தது. கண்ணாடி முன்னால் மணிக்கணக்கில் தவங்கிடந்தும் அது மறைய மறுத்தது.

மிருகக்காட்சி சாலைக்குப் போயிருக்கலாமென்றால் அதுக்கும் தோதில்லை. மிருகங்களின் விரசமான நடத்தையைப் பார்க்க நேர்ந்துவிடுமோ என்ற பயம். அதனால் அந்தப் பக்கமே போகவில்லை.

மருமகன் கேட்டது அவர் எதிர்பாராத கேள்வி. ஆனாலும் காட்டிக்கொள்ளவில்லை. என்ன இருந்தாலும் அவர் ஒரு லோகாயத வாதியில்லை. மாறாக சுத்தமான கருத்துமுதல்வாதி. தன் வாழ்நாள் முழுவதும் அவர் படித்தவற்றிலிருந்து ஒரு விஷயம் உறுதி என்று அறிந்திருந்தார். இந்தப் பிரபஞ்சம் பற்றிய அறிவு முழுமையும் அதன் காரண காரியத் தொடர்புத் தன்மையில் மனுசனுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே ஒட்டைச்சிவிங்கி எப்படியிருக்கும் என்பது பற்றிய அறிவு அதில் ஒரு கூறுதானே.

அவர் ஜோவிடம் சொன்னார்.

'நாளைக்கு வா சொல்றேன். '

ஜோ போய்விட்டான். அவர் திரைச்சீலைகளை இழுத்து மூடி மெழுகுவர்த்தியைக் கொளுத்தினார். தன் மேசைமேல் ஒரு மண்டையோட்டை வைத்தார். நெடுஞ்சாண்கிடையாக தரையில் விழுந்து கிடந்தார் நடுச்சாமம் வரை. சாமத்துக்கு மேல் எழுந்து படிப்பில் முங்கிவிட்டார்.

அடுத்தநாள் ஜோ பழைய கேள்வியுடன் வந்தான்.

மாமா பேச ஆரம்பித்தார்.

'ஒட்டைச்சிவிங்கி எப்படியிருக்கும்னு தெரிஞ்சிக்கிறணும். நல்லது. ஒட்டைச்சிவிங்கிங்கிறது மூணு காலு, தலையில ரெண்டு கொம்பு, குதிரைக்கு உள்ளதுபோல ஒரு வாலு கொண்ட மிருகம். கெட்டிப் பாலோட சேத்து காளான்கள மட்டும் சாப்பிடும். தெரிஞ்சிக்கிட்டியா. ஓடு ஓடு. '

'குளிர்காலத்துல காளான் மொளைக்காதே. அப்ப எதைத் திங்கும் மாமா. '

'குளிர்காலத்துல ஊறுகா போட்ட காளானைச் சாப்பிடும். '

ஜோ அவருக்கு நன்றி சொல்லிவிட்டுப் போனான். இந்த மாமாவிடம் அவனுக்கு எப்போதுமே கொஞ்சம் பயம். அதனால் அவனுக்குத் திருப்தியாயில்லை. ஒட்டைசிவிங்கி விவகாரம் தீர்ந்தபாடில்லை. காளான் விஷயந்தான் நெருடியது.

சின்ன மாமாவிடம் கேட்பதென்று தீர்மானித்தான்.

எல்லாக் குடும்பங்களிலும் இருப்பதைப் போல ரெண்டு மாமாவுக்கும் எந்தவிதத்திலும் சரிப்பட்டுவருவதில்லை. ஒருத்தருக்கொருத்தர் தெரியாதவர்கள் போலக்கூட நடந்துகொள்வார்கள்.

சின்னமாமாவுக்கு அதிக வேலையுள்ள பிழைப்பு. ஒரு தினசரிப் பத்திரிகையின் ஆசிரியர். முழுக்க முழுக்க வேலையே தஞ்சமென்று கிடப்பதால் வீட்டில் இருக்க மாட்டார். ஜோ பத்திரிகை அலுவலகத்திலிருந்த அவரை தொலைபேசியில் தொடர்புகொண்டான்.

'ஹலோ மாமாவா. ஜோ பேசறென். '

'என்ன வேணும் தோழரே. '

'ஒண்ணுமில்லை மாமா. ஒட்டைச்சிவிங்கி எப்படியிருக்கும்னு தெரியல்ல. அதான் ஒங்ககிட்ட கேக்கலாம்னு நினைச்சேன். '

'விரிவுரையாளர்களுக்கான குறிப்புகள்ல பாரேன். '

'அந்தப்புஸ்தகம் எங்கிட்ட இருக்குது. அதப்பத்தி ஒரு வார்த்தைகூட இல்லையே. '

'அப்படின்னா பாயர்பாக்குல இருக்குமே. '

'பள்ளிக்கூடத்தில எடுத்துப்பார்த்தன். அதுலயும் இல்ல. '

'அப்ப டூரிங்குக்கு மறுப்புல பாரு. '

'அதும் எங்கிட்ட இருக்குது. பிரயோஜனமில்ல. '

'அதுல இருந்தாகணுமே. '

'இல்லையே. '

'அதெப்படி இருந்துதான் ஆகணும். நீ ஏதோ கற்பன பண்ணுற. '

மாமா தொலைபேசியை வைத்து விட்டார்.

ஜோவைப்போல் அவர் சின்னப் பையனாக இருந்தபோது ஒட்டைச்சிவிங்கியை படத்தில் பார்த்தது. சிக்கரி வியாபாரிகளின் கம்பனியொன்று விளம்பரத்திற்காக கொடுத்த 'மிருகங்கள் ' வரிசையில் அதுவும் ஒன்று. அந்த நினைவில் ஒட்டைச்சிவிங்கி எப்படியிருக்குமென்று பருவட்டாக யூகிக்க முடிந்தது. ஆனால் அந்தப் படத்தை அவர் பார்த்தது போருக்கு முந்திய முதலாளித்துவக் காலகட்டம் என்பதால் அதை ஒத்துக்கொள்ள மனசில்லை. யாரும் என்னைத் தொந்தரவு பண்ணக்கூடாது என்று கறாராகச் சொல்லிவிட்டு மார்க்ஸிய நூலகத்தை அலச ஆரம்பித்தார். ஜோ சொன்னது சரிதான் என்பதை சீக்கிரமே தெரிந்துகொண்டார். லுத்விக் பாயர்பாக்கும் ஜெர்மனியத் தத்துவ ஒளியும், டூரிங்குக்கு மறுப்பு, ஏன் மூலதனம் எதிலுமே ஒட்டைச்சிவிங்கியைப் பற்றிய பேச்சே இல்லை. அந்தப் புஸ்தகங்கள் ஒன்றில்கூட 'ஒட்டைச்சிவிங்கி ' என்ற வார்த்தையே தட்டுப் படவில்லை.

மேற்கொண்டு ஆராய்ச்சி செய்தும் பயனில்லை. பத்திரிகை ஆசிரியருக்கு ஒரே மண்டைக்குடைச்சலாகிவிட்டது.

சிக்கரி விளம்பரத்திலிருந்து இந்த அறிவைப் பெற்றதாக ஏற்றுக்கொள்வதா. கூடாது. ஏற்றுக்கொண்டால் தன் அந்தஸ்து என்னாவது. யுத்தத்துக்கு முந்தி சிக்கரி வாங்கக்கூட வக்கில்லாமலிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் அந்தஸ்தைவிட தாழ்ந்துவிடுமே.

அப்படியானால் ஒட்டைச்சிவிங்கி எப்படியிருக்கும் என்று தனக்குத் தெரியாதென்று சொல்லிவிடலாமா. அதுவும் முடியாது. அப்புறம் அவருடைய புகழ் என்னாவது. புறவுலகம் கண்டறியக்கூடியது என்ற கொள்கையை முழுமனசுடன் ஏற்றுக்கொண்டு அதன் காரணமாக தனக்கு எல்லாம் தெரியும் என்ற அபிப்பிராயத்தையும் ஏற்படுத்திக்கொண்டவராயிற்றே அவர். ஏதோ கொஞ்சம் தெரியாதென்று வைத்துக்கொண்டாலும் அதை ஒத்துக் கொள்ளமுடியாது.

கடைசி வழி. விலங்கியல் கையேடு வாங்கி ஒட்டைச்சிவிங்கியைப் பார்க்கலாம். அது முறையல்ல என்று தயக்கமில்லாமல் ஒதுக்கிவிட்டார். அப்படிச் செய்வது புறவயமான அறிவியல் என்னும் சகதியில் தள்ளிவிடுகிற குறுகிய ஆய்வறிவாகிவிடும்.

பொடியன் ஜோ மறுபடியும் ஒட்டைச்சிவிங்கியைப் பற்றி தொலைபேசியில் விசாரித்தான். சட்டென்று பதில் வந்தது.

'ஒட்டைச்சிவிங்கின்னு ஒண்ணு கெடையாது. '

'என்ன.... என்ன சொல்றீங்க மாமா. அப்படி ஒண்ணு கெடையாதா. '

'அப்படி ஒரு உசுப்பிராணியே இல்ல. வேணும்னா நாயோ முயலோ எப்படியிருக்கும்னு சொல்றென். '

'வந்து.... ஒட்டைச்சிவிங்கி... ஏன் மாமா இல்லன்னு சொல்றீங்க. '

'இல்ல அதனாலதான். மார்க்ஸ், எங்கெல்ஸ், அவங்க வழியில தொடர்ந்து பணிபுரிஞ்ச சிந்தனையாளர்கள் யாரும் ஒட்டைச்சிவிங்கியப் பத்தி ஏதும் சொல்லல. இதுலருந்தே தெரியவேணாமா அது இல்லன்னு. '

'ஆனா... '

'ஆனாங்கிற பேச்சுக்கே எடமில்ல. சொல்லிப்புட்டென். '

ஜோ தொலைபேசியைக் கீழே வைத்தான். அவனுக்குள்ளிருந்து பெருமூச்சு வந்தது. பிறகு பள்ளியில் சாரணர் படைத்தலைவனைக் கலந்து பேசினான்.

சாரணர் படைத்தலைவன் சாதாரண இளைஞன். அவன் சொன்னான்.

'ஒனக்கு வேற பெரிய கவல கெடையாதா. சரி ஞாயித்துக் கெழம வரைக்கும் பொறுத்துக்கோ. மிருகக் காட்சிசாலைக்குப் போவோம். நேர்லயே பாத்து உண்மையைத் தெரிஞ்சுக்குருவொம். '

அவர்கள் போனார்கள். ஒட்டைச்சிவிங்கியைப் பார்த்தார்கள். அதைப்பற்றி நிறையப் பேசினார்கள். ஜோ சாரணர் படைத்தலைவனுக்கு நன்றி சொல்லிவிட்டு ஆழ்ந்த சிந்தனையில் வீடு திரும்பினான்.

வருகிற வழியில் பள்ளிக்கூடப் பையை விற்றான். உடனே பூக்கடைக்கும் எழுதுபொருள் கடைக்கும் போனான்.

மறுநாள் மதியம். ஒரு செய்தியாள் பத்திரிகை ஆசிரியரின் அலுவலகத்துக்கு ஒரு ரோஜாச்செண்டையும் சிறு கடிதத்தையும் கொண்டு வந்து கொடுத்தான்.

'அன்புள்ள தம்பி,

நீ ஏன் என்னைப் பார்க்க வருவதேயில்லை. நமது இளமைப்பருவம், குடும்பம், சிறுவன் ஜோ, ஒட்டைச்சிவிங்கிகள்... இதெல்லாம் பற்றி நாம் பேசலாமே.

கடவுள் உன்னை ஆசீர்வதிப்பாராக.

உனது பாசமிக்க அண்ணன். '

பெரிய மாமா ஜோவைச் சந்தித்தபின் மீண்டும் தன் வாழ்க்கைச் சாதனையான புஸ்தகத்தை எழுதத் தொடர்ந்தபோது மைக்கூட்டில் எலி செத்துக்கிடப்பதைக் கண்டார்.

பொடியன்களுக்கு எப்போதாவதுதான் ரெண்டு ரோஜாச்செண்டு வாங்கக் காசு கிடைக்கும்.

ஸ்லவோமிர் ம்ரோஸெக் (Slawomir Mrozek):

இவர் போலந்து எழுத்தாளர். பிறந்தது 1930. கட்டிடக்கலையும், ஓவியமும் படித்துவிட்டு செய்தி ஆசிரியராகவும், கேலிச்சித்திரக்காரராகவும் பணியாற்றினார். 'யானை ' என்ற பெயரில் வெளிவந்த இவரது சிறுகதைத் தொகுப்பை அதே பெயரிலேயே எழுத்தாளர் பூமணி தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார். வெளியீடு:புதுமைப்பித்தன் பதிப்பகம்.

***

தட்டச்சு - மைக்கேல்

***

# நீங்கள் கேட்க இருக்கும் அடுத்த குரல்...(The Next Voice You Hear...)

----------------------------

மார்ச் மாதத்தின் முதல் திங்கட்கிழமையன்று சரியாக இரவு மணி 9.38க்கு அந்த வினோதமான கம்பீரமான குரல் முதல் முதலாகக் கேட்டது காற்றில். ஏன் குறிப்பாக அந்த நாளும் அந்த நேரமும் தேர்ந்தெடுக்கப்பட்டது ? யாருக்கும் தெரியாது. எது எப்படியிருப்பினும், அதற்கான

உடனடியான எதிர்ச்செயல்பாடு அவநம்பிக்கையாகத்தான் இருந்தது. மக்களால் தங்கள் காதுகளையே நம்பமுடியவில்லை.

டாயில்ஸ் டவுனைச் சேர்ந்த ஃப்லாய்டு உஃப்ல்மேன் அந்த நேரத்தில் தனது மகன் லிமேனுடைய எலக்ட்ரிக் ட்ரெய்னை வைத்து அறையில் விளையாடிக்கொண்டிருந்தான். தூக்கிச் செல்லக்கூடிய அவனது வானொலிப் பெட்டியிலிருந்து வந்துகொண்டிருந்த டாக்டர் ஐக்யூ க்விஸ்ஸையும் கவனித்துக் கொண்டிருந்தான். திடாரென்று டாக்டர் ஐக்யூ கொஞ்சம் கொஞ்சமாக உள்ளே சென்றது. பதிலாக வந்த ஆழமான, மென்மையான, கருணையான அதே சமயம் உறுதியான குரல் சொன்னது :

'நான்தான் கடவுள் பேசுகிறேன். குறுக்கிடுவதற்காக மன்னிக்கவும். வேறு வழியில்லை. ஒரு படைப்பினத்தின் திட்டமானது அதன் விதிகளின்படிதான் முன்னேறிச் செல்ல வேண்டும். ஆனால் சூரியனின் மூன்றாவது கிரகத்தில் வாழும் என் குழந்தைகளே! உங்களை நீங்களே அழித்துக்கொள்கின்ற வேலைக்கு மிக அருகாமையில் வந்துவிட்டார்கள். எனவே நான் உள்ளே வரவேண்டியதாகிவிட்டது. இந்த வாரத்தை நான் உங்களோடு கழிக்கப் போகிறேன். '

ஒரு கணம் ஃப்லாய்டு வாய்பிளந்து நின்றான். 'லிமேன் தன் அறையில் ஒரு மைக்கை ஒளித்து வைத்திருக்கிறான் என்று பந்தயம் கட்டுவேன் '

தனது மகனின் அறைக்குச் சென்றான். லிமேன் கூட்டு பின்னக் கணக்கை முன்னால் வைத்துப் பார்த்துக் குழம்பி வேதனையில் இருந்தான்.

'ரேடியோவை என்ன செய்தாய் ? ' கத்தினான்.

'நானா ? ஒன்றும் செய்யவில்லையே! வெடித்துவிட்டதா ? '

ஃப்லாய்டுக்கு ரொம்ப குழப்பமாக இருந்தது. பக்கத்துவீட்டு ஜெனியிடம் சென்றான்.

'ஜெனி, டாக்டர் ஐக்யூ கேட்டுக்கொண்டிருந்தாயா ? '

'ம்ஹூம். ரேடியோ தியேட்டர் கேட்டுட்ருந்தேன் '

'அப்ப, நீ கேட்டிருக்கமாட்டே ', ஃப்லாய்டு சொன்னான்.

'ஏய், நீயுங் கேட்டியா ? ' வியப்புடன் கேட்டான் ஜெனி 'ரொம்ப வினோதமா இருந்துச்சில்ல ? '

ஆச்சரியத்தில் மூழ்கிப்போனது டாயில் டவுன் மட்டுமல்ல. மறுநாள் காலையில் ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா, ஆஸ்த்ரேலியா எல்லாவற்றிலிருந்தும் செய்திகள், தகவல்கள் வந்திருந்தன. அன்று கேட்ட குரல் ஒலிபரப்பு பல மொழிகளிலும் கேட்டிருக்கிறது என்ற விஷயம் உலகம் முழுவதிலும் பரவலாகத் தெரிந்திருந்தது. அரபிகள் அரபியிலும் தென்ஆப்பிரிக்க பழங்குடியினர் தங்களது வட்டாரமொழியான ஷி ரொங்க-விலும் அதைக் கேட்டிருக்கின்றனர்.

'இதெப்பத்தி நீ என்ன நெனக்கிறெ ? ' என்று ஒருவர் மற்றவரைக் கேட்டவண்ண மிருந்தனர். 'எனக்குத் தெரியலெ ' என்ற பணிவான வார்த்தைகள் அந்த மார்ச் மாத செவ்வாய்க்கிழமை உச்சரிக்கப்பட்டதுபோல வேறெப்போதும் செய்யப்பட்டதில்லை. நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையில் தலையங்கம் எழுதுபவர் ஒரு அனுமானத்தை வைத்திருந்தார் : ஒருகால் தொலைபேசி இணைப்புத் தலைமையகத்தில் எல்லா கண்டங்களையும் இணைக்கிற சர்க்யூட்டுகளை ஒரு சில வினாடிகளுக்கு ஒன்றாகக் கொக்கி போட்டிருக்கலாம்.

சூரியன் அஸ்தமித்தான். எட்டுமணிக்கெல்லாம் ரேடியோவை 'ஆன் ' செய்தவுடன் பவர் ஸ்டேஷன்களில் இருந்த அம்மீட்டர்கள் லோடு அதிகமாவதைப் பதிவு செய்ய ஆரம்பித்தன. அவர்கள் ஏமாற்றமடையவும் இல்லை. மிகச்சரியாக 9.38க்கு அந்த அமைதியான நட்பான குரல் மறுபடியும் பேசியது :

'பயப்பட வேண்டாம். நான் கடவுள்தான் என்பதையும், இந்த வாரம் உங்களோடுதான் இருக்கப்போகிறேன் என்பதையும் உங்களுக்குப் புரியவைக்கத்தான் விரும்புகிறேன் '

இந்த முறை குரல் வந்த திசை இதுதான் என்று உறுதி செய்ய திசையறிபவர்கள் முயன்றனர். ஆனால் எந்த ஏமாற்றுவேலையையும் கண்டுபிடிக்க முடியவில்லை. இது ரஷ்யாவின் வேலையாகத்தான் இருக்கும் என்ற தற்காலிக சந்தேகத்திலிருந்து அது விடுவிக்கப்பட்டது.

புதன் கிழமையன்று செய்தித்தாள்கள் பக்கம் பக்கமாக எழுதின அந்தக்குரலைப் பற்றி. தொடர்புகொள்ள முடிந்த ஒட்டு மொத்த விஞ்ஞானிகளின் ஏகோபித்த கருத்து -- அதில் சிலர் தலைமறைவாக இருந்தவர்கள் -- என்னவெனில் அந்தக் குரல் ஒரு மனிதனுடையது என்பதுதான். அது நிச்சயமாக மஸ்ஸாச்சுசெட்ஸில் பிறந்த ஒரு மனிதனுடைய குரல்தான் என்று உச்சரிப்பை வைத்து ஒரு மொழியியல் ஆசிரியர் அடித்துக் கூறினார்.

'அது உண்மயில் கடவுளுடைய குரலாக இருந்திருக்குமானால், அவர் வானொலியைத் தேர்ந்தெடுத்துத்தான் பேசவேண்டும் என்ற அவசியமில்லையே ' என்று சொன்னார் ஒரு தர்க்கவியல் பேராசிரியர்.

வேதவிற்பன்னர்கள் இந்த விஷயத்தில் மௌனம் சாதித்தனர். 'அது நம்முடைய தேவனுடைய குரலாக இல்லையென்றால்கூட, கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற விஷயத்தை நாம் மறந்துவிட்டோம் என்பதையே அந்தக்குரல் சுட்டுகிறது ' என்றார் ஒரு ஆங்க்லிகன் பிஷப்.

புதன்கிழமைக்கான பிராத்தனைக் கூட்டங்களில் அமெரிக்கா முழுவதும் ரொம்ப ஆர்வமாக மக்கள் கலந்து கொண்டனர். பெரும்பாலான தேவாலயங்களில் வானொலிப் பெட்டிகள் இணைக்கப்பட்டிருந்தன. மூன்றாவது முறை கேட்ட பேச்சில் மூன்றே மூன்று சொற்கள்தான் வந்தன. கடவுளுடைய குரல் வேடிக்கைக்கான விஷயமல்ல என்று நம்புபவர்களுக்கு கோபமூட்டும் விதமாக மூன்றாவது முறையாக, கடவுள் தனக்குத்தானாகவே சிரித்துக்கொள்வது மாதிரியாகக் கேட்டது இதுதான் :

'அது நான் தான் '

முந்தைய பேச்சுக்களைப் போலவே, இந்த மூன்றாவது செய்தியும் எப்படியோ எல்லா வானொலிப் பெட்டிகளின் 'காயில் 'களுக்குள்ளும் 'கண்டென்ஸர் 'களுக்குள்ளும் புகுந்து கொண்டது. கடலில் மிதந்துகொண்டிருந்த சங்கேதக் குறிகளுக்கான, 'மைக் ' வசதி இல்லாத

கப்பல்களுக்குள்ளும். கடவுள் ஏன் வானொலியைப் பயன்படுத்தினார் என்ற கேள்விக்கு ஒருவகையில் விடையளிப்பதாக அது இருந்தது. வானவெளியிலிருந்து ஒரு அசரீரி கேட்டிருக்குமானால் அது மனிதர்களைப் பைத்தியம் பிடிக்க வைத்திருக்கும். ஆனால் மனிதர்களோ வானொலியில் குரல்களைக் கேட்கப் பழகியிருந்தார்கள். கடவுள் மிகவும் கருணையுள்ளவராக இருந்தார்.

மனித உளவியலைப் பற்றிய கடவுளின் அறிவு அபாரமானதாக இருந்தது. (சிந்தித்துப் பார்த்தால் இது ஒன்றும் ஆச்சரியமான விஷயமல்ல). 'அது நான் தான் ' என்ற வார்த்தைகளின் ரத்தினச் சுருக்கமே அடக்கிவாசிப்பவர்கள் அனைவரையும் ஒத்துக்கொள்ள வைப்பதாக இருந்தது.

வியாழக்கிழமையன்று வேறொரு முறை கடைப்பிடிக்கப்பட்டது. அறியாதவர்களுக்கும் மூட நம்பிக்கையில் மூழ்கிக் கிடந்தவர்களுக்குமாக அற்புதங்கள் நிகழ்த்திக் காட்டப்பட்டன. ஐம்பது மைல் தள்ளி உலகம் முழுவதிலும் அற்புதங்கள் நிகழ்ந்தன. அதில் பல அற்புதங்கள் ரொம்ப லேசானவை. ஃபான் து லாக் மார்க்கட்டிலும் விஸ்கோன்சினிலும் இருந்த ஆரஞ்சுப் பழங்கள் எல்லாம் சுவற்றின்மேல் உருண்டு சென்று 'மனிதர்கள் அனைவரும் என் குழந்தைகள். அதனால் சகோதரர்கள் ' என்ற வாக்கியத்தை அமைத்தன. கோபன்ஹேகன் மிருகக்காட்சிச் சாலையிலிருந்து ஒரு சிங்கம் கூண்டைவிட்டு வெளியே வந்து, கிராமத்துக்குள் போய், அங்கிருந்த சில ஆடுகளைக் கண்டுபிடித்து அவைகளோடு போய் வேண்டுமென்றெ படுத்துக்கொண்டது. கலிஃபோர்னியாவின் பசடோனாவில் நரம்புத்தளர்ச்சிகொண்ட ஒரு பெண் இருந்தாள். அவள் கணவன்கூட தூங்கும்போது நரநரவென பல் கடிப்பான். திடாரென்று அவள் அரொயோ செகோ பாலத்திலிருந்து குதித்தாள். அந்தரத்தில் அப்படியே 45 நிமிடம் இருந்தாள். தீயணைப்புப்படையினரின் ஏணிவைத்துத்தான் இறக்கப்பட்டாள்.

வானொலியில் கேட்ட ஆழமான சுறுசுறுப்பான குரலினால் லேசாக பாதிக்கப்பட்ட பலபேர் இந்த அற்புதங்களினால் -- அவை லேசானவைதான் என்றாலும் -- ரொம்ப ஆத்திரமடைந்தார்கள். சேம்பர் ஆஃப் டெபுட்டி ஆஃப் ஃப்ரான்ஸில் கிட்டத்தட்ட ஒரு கலகமே ஏற்பட்டுவிட்டது. அறிவுவாதம், புரட்சி ஆகியவற்றுக்கு துரோகம் செய்வதாகச் சொல்லி, 'நீ ஒரு ஒட்டகம் ' என்பது போன்ற வார்த்தைகளை ஒருவர்மீது ஒருவர் எறிந்துகொண்டனர். அமெரிக்காவிலேயே இதில் மிக அதிகமான கோபத்திற்குள்ளானது 'நாத்திகம் மற்றும் சிலைஉடைப்பு முன்னேற்றக் கழக 'த்தின் தலைவராக இருந்த நியூயார்க்கின் வால்டர் பி. வலேரியன்தான். ஒரு எதிர்ப்புப் போராட்டத்தில் குதிக்க வேண்டும் என்று நாடுமுழுவதிலும் இருந்த தனது கழக உறுப்பினர்களுக்கெல்லாம் நியூயார்க்குக்கு வரும்படி ஒரு அழைப்பு விடுத்தார் அவர்.

கடவுளின் வியாழக்கிழமை ஒலிபரப்பு நீண்டதாகவும் இறையியலை உபதேசிக்கும் தொனியிலும் இருந்தது :

'உங்கள் காலடியில் கிடக்கின்ற ஒவ்வொரு கூழாங்கல்லும், ஒவ்வொரு நீர்த்துளியும், ஒரு அற்புதம்தான். அதை பயபக்தியுடன் புரிந்து கொள்கின்ற தகுதியை நீங்கள் இழந்துவிட்ட காரணத்தால் நான் இயற்கைவிதிகளை மீறுகின்ற இந்த அற்புதங்களைச் செய்துகாட்ட வேண்டியதாகிவிட்டது. நானே ஏற்படுத்திய பிரபஞ்ச விதிகளை நானே உங்களுக்காக உடைக்கின்றேன் என்றால், உங்கள்மீது நான் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறேன் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். எல்லாம்வல்ல கடவுளும் தனது சக்திகளை வரையறுத்துக்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் பிடிவாதமாக இருப்பவர்களை இது

மாற்றப்போவதில்லை. எனவே, நாளைக்கு, வெள்ளிக்கிழமை, பகல்வேளையில், நான் பல பெரிய அற்புதங்களை நிகழ்த்தப்போகிறேன். பிற்பகலில், ஆஸ்த்ரேலியா கண்டத்தை ஒரு நிமிடம் நான் கடலுக்கடியில் மூழ்கடிக்கப் போகிறேன். '

இந்த வியாழக்கிழமை ஒலிபரப்புக்குப் பிறகு எல்லா அவநம்பிக்கையும் உருகி ஓடிப்போனது. நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான மக்கள் அது கடவுளின் குரல்தான் என்பதில் மிகவும் தெளிவடைந்திருந்தார்கள். முஸ்லிம் உலகம் முழுவதும் மக்காவை நோக்கிச் செல்ல ஆரம்பித்திருந்தது. சைனாவின் மஞ்சள் புகையினூடே பட்டாசுகள் வெடிக்கும் சப்தம் இரவும் பகலும் கேட்டுக்கொண்டிருந்தது. ஓசார்க் மலைப்பகுதியில் வாழ்ந்த அவ்வளவாக அறியப்படாத மக்கள் போர்வைகளால் தங்களைப் போர்த்திக்கொண்டு, மலையின் உச்சிக்குச் சென்று உலக முடிவு நாளுக்காகக் காத்திருந்தனர்.

அதன் பிறகு, ஆஸ்திரேலிய ரேடியோ ஸ்டேஷன்கள் காற்றில் உயிர் பெற்றன. தனது இறுதி 'டெமொ 'வுக்காக கடவுள் சரியான கண்டத்தைத்தான் தேர்ந்தெடுத்திருந்தார். மற்ற கண்டத்தவராக இருந்தால் துடுப்பு கிடுப்பு போட்டு தப்பித்துவந்துவிடலாம் என்று நினைத்திருப்பர். ஆனால் ஆஸ்த்ரேலியர்களால் அப்படி முடியாது! நகைச்சுவையோடு மெல்போர்ன் அறிவிப்பாளர் சொன்னார் : 'யாருக்குமே க்ளு கிடைக்கவில்லை. ஒரு நிமிடம் தண்ணீருக்குள் இருப்பதால் யாருக்கும் எந்தக்கெடுதியும் வந்துவிடப் போவதில்லை. சொல்லப்போனால், சில குடிமகன்களுக்கு அது நன்மையே செய்யலாம். ' மெல்போர்ன் மற்றும் சிட்னியைச் சுற்றி விமானங்கள் வட்டமிடவும், இரண்டாவது பிரளயத்தைப் பார்வையிடும் நேரடிசாட்சிகள் சொல்வதை ஒலிபரப்பவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

வெள்ளிக்கிழமை முற்பகலுக்கென கடவுள் பெரும் அற்புதங்களை வாக்களித்திருந்தார். அவைகள் உண்மையில் மிகப்பெரியவையாகவே இருந்தன. அமெரிக்காவின் தரைப்படை, கப்பற்படை, விமானப்படையிலிருந்த ஒவ்வொரு 'அவ்ன்ஸ் ' உலோகமும் தத்தமது இடங்களைவிட்டு எங்கோ போய்விட்டிருந்தன. 'டன் டன் 'னான அந்த அனைத்து உலோகங்களும், 'பக்கில் 'ஸிலிருந்து போர்க்கப்பல்வரை, எல்லாமே துகள்களாகி இருந்தன.

காலையின் நடுப்பகுதியில், இந்த உலகம் எந்த இன்னொரு நாட்டின் போர் ஆற்றலை பயந்துகொண்டிருந்ததோ, அந்த நாட்டிலும் எல்லா ராணுவ ஆயுதங்களும் போய்விட்டிருந்தன. தனது கோபத்தையே க்ரெம்லின் தணிக்கை செய்ய வேண்டியதாகிவிட்டது. பளபளக்கும் ரஷ்ய டாங்குகள், ப்ளேன்கள், துப்பாக்கிகள் எல்லாமே போய்விட்டிருந்தன. அவைகளின் இடத்தில் வெறும் உரங்களைக்கொட்டி வைத்ததைப்போல இருந்தது. அவைகள் ஒவ்வொன்றின் மேலேயும் 'அமைதி, உணவு, உறைவிடம் ' என்று லெனினின் மேற்கோள் ஒன்று எழுதப்பட்ட அறிவிப்புப் பலகை இருந்தது.

நியூயார்க்கில் கூடிய நாத்திகர்களின் எதிர்ப்பு மாநாட்டைப் பொறுத்தவரை, டைம்ஸ் ஸ்கொயருக்குள் அவர்களெல்லாம் நுழைந்தவுடனேயே அவர்களனைவரையும் கடவுள் ஒரு தேவதையாக மாற்றிவிட்டிருந்தார். தூய வெண்மை நிறத்தில் 'ஆர்ச் ' மாதிரி வளைந்த சிறகுகள் திடாரென அவர்களின் தோள்களிலிருந்து முளைத்தன. அவர்களின் தலையைச் சுற்றி தங்க நிறத்தில் ஒளிவட்டம் மின்னியது. வாடகைக் கார்களைத் தேடிப்போய் ஒளிந்து கொள்வதற்குள் அவர்களுக்கு போதும்போதும் என்றாகிவிட்டது.

தங்கள் வாட்ச்களில் 11.58, 11.59 என்று வினாடிமுள் முன்னேற முன்னேற, ஆஸ்த்ரேலியாவுக்குப் பறந்திருந்த அறிவிப்பாளர்களுக்கும் ரிபோர்ட்டர்களுக்கும் டென்ஷன்

அதிகமாகிக்கொண்டே போனது. கடைசியில் பிற்பகலுக்கான புள்ளி வந்தது. ஆனால் பி.பி.சி.காரன் மட்டும் ஏதோ க்ரிக்கட் மாட்ச்சை விவரிக்கப் போவதுபோல 'கூலாக ' பேசிக்கொண்டிருந்தான். 'முன்னறிவிப்பு செய்யப்பட்டது போலவே, கண்டம் இப்போது மூழ்கிக்கொண்டிருக்கிறது. மூழ்கும் வேகம் அதிகமாகிக்கொண்டே இருக்கிறது. ஒரு நவீன பயணிகளின் லிஃப்ட் வேகத்தில். அதோ, கடைசி தேவாலயத்தின் கோபுரமும் மறைந்துவிட்டது. மிதக்கும் பொருட்களுடன் எங்குபார்த்தாலும் தண்ணீர்! மக்கள்தான் எவ்வளவு சாமான்களைக் குப்பையாட்டம் தமது வீடுகளில் போட்டுவைத்திருக்கிறார்கள்! இப்போது மலைகளின் உச்சிகள் கீழே உள்ளன. ஐம்பது வினாடிகள்...ஐம்பத்தைந்து..யெஸ்...இதோ ஆஸ்த்ரேலியா மறுபடியும் மேலே வருகிறாள்...வந்துவிட்டாள்! ஓ பழைய ஆஸ்த்ரேலியா! என்ன, கொஞ்சம் நனைந்து இருக்கிறது! '

இறங்கு தளங்கள் தென்பட்ட உடனேயே குட்டி விமானங்கள் இறங்க ஆரம்பித்தன. நொடியில். அறிவிப்பாளர் முதலில் சென்றடைந்த குடிமகன் யாரோ ஒரு ரிடையர்டு கலோனல் ஹம்ப்ரி ஆர்பத்னாட் டி.எஸ்.ஸி. என்பவர். கையில் ஒரு 'போர்ட்டபிள் ட்ரான்ஸ்மீட்ட 'ரை அணைத்துப் பிடித்துக்கொண்டிருந்தார்.

'வானொலி வாசகர்களுக்குச் சொல்லுங்கள் ஐயா, உண்மையிலேயே நீங்கள் கடலுக்கு அடியில் சென்றீர்களா ? '

'என்னிடமிருந்து தண்ணீர் சொட்டிக்கொண்டிருக்கிறதே பார்க்கவில்லையா ? ' கலோனல் கூறினார். 'பயங்கரமான கடல் என் அறைக்குள்ளேயே நேராகப் புகுந்துவிட்டது. ஒரு உலர்ந்த டவல்கூட கிடைக்காது என்று நான் சத்தியம் செய்வேன் '

வெள்ளிக்கிழமை மாலை வந்த கடவுளின் ஒலிபரப்பு தொய்வு விழுந்த பகுதிகளைத் தூக்கி நிறுத்துவதாக இருந்தது :

'என்னுடைய வருகை இந்த உலகம் முடிவுக்கு வருகிறது என்று அர்த்தப்படுகிறதா ? ஆண்டவனுக்காக, உங்கள் மனதக் கேட்டுப் பாருங்கள். அது சொல்வதுபோலக் கேளுங்கள். குட் நைட் '

சனிக்கிழமை அலுவல் மிகுந்த நாளாக இருந்தது. ரொம்ப. ட்யூலிப் பல்புகளைப் போல, பச்சை குருத்துத் தண்டுகள் வெகுகாலமாக புதைக்கப்பட்டிருந்த மனசாட்சியிலிருந்து கிளம்பின. ஒரு அரை டஜன் நாடுகளில் இருந்த சர்வாதிகாரிகள் தங்கள் பதவிகளைத் துறந்தனர். ஒரு பன்னாட்டு வணிகக் கம்பெனி தன் பிசினஸை இழுத்து மூடியது. தங்களது அணுகுமுறைகள் செத்துப்போனதல்ல என்றாலும் சரியானதல்ல என்ற முடிவுக்கு அவர்கள் வந்திருந்தார்கள். ஆயிரக்கணக்கான சிறுசிறு வியாபாரிகளும் இதையொத்த மனமாற்றம் அடைந்தார்கள். ஒரு கராஜ் முதலாளி தன் தொழிலாளர்களை அழைத்து, 'இனிமேல் 'கஸ்டமர் 'களிடம் 'காயி 'லுக்காக பணம் வாங்கும்போது, உண்மையில் 'காயி 'லைப் பொறுத்திவிட வேண்டும் ' என்று உத்தரவிட்டார்.

சிறுகுற்றம் செய்வோர், நூலகங்களில் திருடிய புத்தகங்களையும் பழைய கடன்களையும் திருப்பிக்கொடுத்தனர். முதியோர் இல்லங்களில் இருந்த மறக்கப்பட்ட அத்தைகளுக்கு பரிசுப்பொருட்களை அனுப்பினர். இப்படியாக. இந்த புவியுலகில் வாழ்ந்த 99 சதவிகித

மனிதர்களுக்கு சனிக்கிழமை இரவுக்குள் இந்த உலகம் ஒரு சந்தோஷமான, நட்புடனான, இனிமையான இடமாக மாறிப்போனது.

சனிக்கிழமை இரவு வந்த கடவுளின் ஒலிபரப்பு விடைபெறுதலாக இருந்தது. உலகம் முழுவதிலும் இருந்த வானொலிகள் 'ஹம் ' செய்தன. அதன்பிறகு ஒரு நிசப்தம். பின் அந்த அழகான குரல் மறுபடியும் :

'இப்போது நான் போய் வருகிறேன். உங்களுடைய பெரும்பாலான பிரச்சனைகள் அப்படியேதான் உள்ளன என்பது உங்களுக்குத் தெரியும். இன்னும் வேதனையும் வலியும் இருக்கத்தான் செய்கிறது. இன்னும் உங்களுக்கு உணவும், உடையும், அரசாங்கமும் தேவைப்படுகிறது. ஏனென்று நான் சொல்ல வேண்டுமா ? ஒரு கிரகம் என்பது ஒரு பள்ளிக்கூடம். அதில் வசித்திருந்து கற்றுக்கொள்ள வேண்டும் குழந்தைகளே! சரி, மறுபடி நாம் சந்திக்கும்வரை, குட் பை. '

ஏழாவது நாள், வழக்கம்போல கடவுள் ஓய்வெடுத்துக்கொண்டார் என்று நினைக்கிறோம்.

---

ஜார்ஜ் சம்னர் ஆல்பீ ஒரு அமெரிக்க எழுத்தாளர் என்பதைத்தவிர வேறு தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஜூலை 1982ல் வந்த 'ரீடர்ஸ் டைஜஸ்ட் 'டில் வந்த இந்த கதையை ரொம்பவும் ரசித்துப் படித்துவிட்டு 'கட் 'பண்ணி எனக்கு நண்பர் கவிஞர் தாஜ் அனுப்பியிருந்தார். அதை இப்போதுதான் தமிழாக்கம் செய்ய முடிகிறது. தாஜுக்கு என் நன்றிகள். 'காஸ்மோபொலிடனிலிருந்து சுருக்கி எடுக்கப்பட்டது ' என்ற ஒரு பொடிஎழுத்துக் குறிப்பும் ஆகஸ்ட் 1948 என்ற ஆண்டும் கதையின் முடிவில் இருந்தது. காஸ்மோபாலிடன் என்பது நியூயார்க் பத்திரிகையாக இருக்கலாம். கதை நீண்ட கதையாகவும் அதன் ஒருபகுதியே மேலே தரப்பட்டதாகவும் இருக்கலாம். எது எப்படி இருப்பினும், ஒரு மறக்கமுடியாத கதையை ஆல்பீ கொடுத்துவிட்டார் என்பது உண்மை.

நாகூர் ரூமி

28 - 10 - 2003

# வசியப்படுத்தப்பட்ட பொம்மை (The Enchanted Doll by Paul Gallico)

**பால் காலிகோ**

--------------------------------------------

வெண் பலகையில் கறுப்பு எழுத்தில் சாமுவேல் எம்.டி. என்று வாசலில் எழுதியிருக்கும் என் அலுவலகத்திற்கு அருகில், பதினைந்தாவது தெரு மூன்றாம் அவென்யூவில் உள்ள ஸ்டேஷனரி, சுருட்டு, விளையாட்டு சாமான் முதலியன விற்கின்ற அபி ஷெஃப்டனின் கடை

ஜன்னலில்தான் முதல் முறையாக அந்த வினோதமான வசீகரிக்கும் பொம்மையைப் பார்த்தேன். அந்த ஏப்ரல் பிற்பகல் போய் இன்று ஒரு வருஷமாகிறது.

நான் சொல்லப்போவது சரியாக சமைக்கப்படாத உணவைப் போன்ற கதையாகவே அமையும் என்று பயப்படுகிறேன். ஏனென்றால் நான் ஒரு மருத்துவன்தான். எழுத்தாளனல்ல. இருந்தாலும் அந்த சந்திப்பின் விளைவுகளைக் காகிதத்தில் பதிவு செய்ய முயற்சிப்பதற்கு நான் உந்தப்படுகிறேன்.

அந்த நாள் எப்படி இருந்தது என்று இப்போது நினைவு வருகிறது. ஏழ்மையான சுற்றுப்புறத் தெரு வாசனையோடும் தொழிற்சாலைகளின் மிருதுக் கரித்துகள் புகையோடும் கலந்து வசந்தத்தின் முதல் குறிப்பு கிழக்கு நதியின் குறுக்கே காற்றில் மிதந்து சென்றது. சாலையோர நடைபாதையில் பூ விற்பவனின் தள்ளுவண்டி ட்யூலிப் பூக்களாய், ஹயாஸிந்துகளாய், பல வண்ணப் பூக்கள் அடங்கிய சிறு பெட்டிகளாய் மலர்ந்திருந்தது. அருகில் தெருப்பியானோ 'ஒரு வசீகர மாலை 'யை வாசித்துக் கொண்டிருந்தது.

முனை திரும்பி ஷெஃப்டனின் கடை எதிரில் வந்தபோது தூசு படிந்த ஜன்னலில் வைக்கப்பட்டிருந்த கவர்ச்சியற்ற விளையாட்டு சாமான்கள் பற்றிய உணர்வு மறுபடியும் வந்தது. க்ளீவ்லாண்டில் உள்ள என் மருமகளின் பிறந்த நாள் வர இருப்பது ஞாபகம் வந்தது. மிதமான விலையுள்ள பரிசுகளை அவளுக்கு அனுப்புகின்ற பழக்கத்தினை நான் கொண்டிருந்தேன்.

சிவப்பு தீயணைக்கும் விளையாட்டு யந்திரம், மெருகூட்டப் படாத ஈய ராணுவ வீரர்கள், மலிவான தளக்கட்டாட்ட பந்துகள், கையுறைகள், மட்டைகள், கார்ட்டன் கார்ட்டனாக சிகரெட்டுகள், மைக்கூடுகள், பேனாக்கள், பென்சில்கள், தூசு படர்ந்த காகிதம் முதலியனவும் அட்டையிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட மென் பானங்களுக்கான கண்ணைப் பறிக்கும் பளபளப்பான விளம்பரப் படங்கள் என குழப்புகின்ற வகையில் வைக்கப்பட்டிருந்த மனதைத் தொடாத பொருட்களின் வரிசையில் வாங்கும்படி ஏதேனும் உள்ளதா என்று ஜன்னல் வழி நோட்டம் விட்டேன்.

இப்படியாகத்தான் என் கண்கள் மூலையில் வைக்கப் பட்டிருந்த பொம்மையின் மீது வந்து நின்றன. சுற்றியிருந்த பொருள்களினால் அவள் இருட்டடிக்கப் பட்டிருந்தாள். அதோடு மாதக்கணக்கில் அபியின் ஜன்னலில் சேகரிக்கப்பட்ட தூசியினூடே சரியாகவும் தெரியவில்லை. ஆனால் அவள் முழுவதும் கந்தல் துணியால் செய்யப் பட்டிருந்தாள் என்று தெரிந்தது. முகம் எழுதப்பட்டிருந்தது. அதி வினோதமான, அதி மென்மையான, வசீகரமான, வெற்றி கொள்கின்ற முக பாவத்தைக் கொண்ட ஒரு சிறுமியை அவள் பிரதிநிதித்துவப் படுத்தினாள்.

நிழல்களினாலும் தூசுப் படலத்தினாலும் நான் அவளை முழுமையாகப் பார்க்க முடியவில்லை. ஆனால் முத்திரை குத்தியது போல என் மீது ஒரு பயங்கரமான பாதிப்பை ஏற்படுத்திவிட்டதை உணர முடிந்தது. எப்படியோ எனக்கும் அவளுக்கும் இடையில் ஒரு தொடர்பு நிர்மாணிக்கப்பட்டு விட்டது. ஏதோ என்னை அவள் அழைத்துவிட்டது மாதிரி. சரியாகச் சொல்லப் போனால், கூட்டமான ஒரு அறையில் நீக்க முடியாதவாறு மனதில் த(ய)ங்கி நிற்கின்ற பாதிப்பு ஏற்படுத்துகின்ற ஆளுமையைக் கொண்ட யாரோ ஒரு அந்நியரின் மீது சமயங்களில் நாம் மோதிவிடுவோமே அதைப்போன்ற உணர்வு.

உள்ளே சென்றேன். 'ஹலோ டாக்டர், என்ன வேண்டும் ? புகையிலை தீர்ந்துவிட்டதா ? ' என்ற அபியின் வரவேற்பிற்கு 'அந்த கந்தல் பொம்மையைப் பார்க்கலாமா, அந்த மூலையில் சுழல் ஸ்கேட்சுக்குப் பக்கத்தில் உள்ளதே அது என் மருமகள் ஒரு சின்னப்பெண் இருக்கிறாள்.. அவளுக்கு ஏதாவது அனுப்பனும் ' என்று சொன்னேன்.

அபியின் உயர்த்திய புருவங்கள் அவன் வழுக்கைத் தலைக்குள் சென்றன. திறந்த உள் சட்டையின் விளிம்புகள் படபடக்க கவுண்டரைச் சுற்றி வந்தான். 'அந்த பொம்மையா ? அது இப்போது கொஞ்சம் விலை அதிகமாக இருக்குமே.. ? நீங்கள் வாங்க நினைப்பதைவிட ஒருகால் அதிகமாக இருக்கலாம். ஸ்பெஷலாகச் செய்தது ' என்றான்.

எனினும் அவளை ஜன்னலில் இருந்து எடுத்து என் கைகளில் வைத்தான். இங்கேதான் நான் இரண்டாம் தடவையாக அதிர்ச்சி அடைந்தேன். ஏனெனில் அதிசயிக்கத்தக்க, அற்புதமான தரத்தைக் கொண்டிருந்தாள் அவள். ஓரடி உயரமே இருந்த அவள், கந்தலைத் திணித்து செய்யப்பட்டவள் போல் இல்லாமல் கந்தலுக்குக் கீழே சதையும் எலும்பும் கொண்ட இளக்கமான வளாகவும் தொடுவதற்கு ஜீவன் உள்ளவள் போலவும் இருந்தாள்.

அபி சொன்னதைப் போல உண்மையில் அது கையால் செய்யப்பட்டதுதான். ஆனால் ஜீவன் உள்ள முகத்தோற்றத்தையும் வனப்பையும் அதன் படைப்பாளி அதற்குக் கொடுத்திருந்தார். அதன் முன் நிற்பதே ஏதோ என்னுடைய சாரத்தின் முன் நானே நிற்பது போன்ற உணர்வைக் கொடுத்தது. ஆனால் இதைவிட அவளிடம் நிறைய இருந்தது.

இந்த நீளத்தில், இந்த அளவு கால்களுடன், இந்த வடிவ தலையுடன், அந்த இடுப்பைச் சுற்றிய பாவடையின் சுழற்சியில் -- ஒரு பொம்மைக்கு பால் உணர்வை ஏற்படுத்துகின்ற சக்தி உண்டா ? இந்த சின்ன உருவத்தைக் குறிக்கும் தையல் விளிம்புகளில் உணர்ச்சிகள் சேர்த்துத் தைக்கப்பட்டிருக்க முடியுமா ? நான் இளமையானவன்தான் என்றாலும் மருட்சி அடையவோ உணர்ச்சி வசப்படவோ மாட்டேன். அமைதிக்காலத்திலும் போர்க்காலத்திலும் நான் பார்க்காததா ? என்றாலும் இந்த பொம்மையைக் கையில் பிடிப்பதென்பது இதமான, புரியாத, பெண்மை கூடிய, அற்புதமான ஏதோவொன்றோடு தொடர்பு கொள்வது என்று உணர்ந்தேன். அவளைக் கீழே வைக்கவில்லை. தாங்கமுடியாத வகையில் அவள் என்னை ஆட்கொண்டுவிட்டாள்.

அவளை கவுண்டரில் வைத்தேன். 'என்ன விலை அபி ? '

'பதினைந்து டாலர் ' ஆச்சர்யமாயிருந்தது.

'நான் சொன்னேனல்லவா ? எனக்கிதில் ஒரு டாலர்தான் கிடைக்கும். உங்களிடம் நான் லாபம் பெற விரும்பவில்லை. நீங்கள் பதினான்கு டாலருக்கே எடுத்துக்கொள்ளலாம். மேலே போனீர்கள் என்றால் பெரிய பெரிய கடைகளில் எல்லாம் அவள் இருபதிலிருந்து இருபத்தைந்து டாலர்வரை பெறுகிறாள் '.

'யார் அவள் ? '

'யாரோ பதிமூன்றாம் தெருவில் இருக்கிறாள். அவள்தான் இதையெல்லாம் செய்கிறாள். இரண்டு வருடமாக அங்கு இருக்கிறாள். சிகரெட்டும் பேப்பரும் இங்கு வாங்குவாள்.

அப்படித்தான் எனக்கு எப்போதாவது ஒன்றிரண்டு கிடைக்கும். ஆனால் இந்த பொம்மைகள் சீக்கிரம் விற்றுவிடுகின்றன '.

'அவள் எப்படி இருப்பாள் ? பெயரென்ன ? '

'சரியாகத் தெரியாது. ஏதோ கலாமிட்டி என்று. தடியாக, பகட்டாக இருப்பாள். சிவப்பு முடி. ஆனால் அழுத்தமானவள். அதிகம் ஃபர் கோட்டுதான் போட்டிருப்பாள். உங்க டைப் அல்ல டாக்டர் '.

அபி விவரித்த பெண்ணுக்கும் கவுண்டரில் இருந்த அருமையான சின்ன படைப்பிற்கும் இடையேயான தொடர்பை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. நான் அவளை வாங்கிக் கொள்கிறேன் என்றேன். என் தகுதிக்கு மீறிய விலைதான். ஏழைகளிடம் ஒரு டாக்டர் உண்மையில் கற்றதைப் பரிசோதனை செய்யத்தானே முடியும் ? என்றாலும் சூயிங்கம், தீக்குச்சிகள், துளை போடும் கருவிகள், பத்திரிக்கைகள் இவைகளுக்கு மத்தியில் அவளை அந்த கவுண்டரில் விட்டுவர என்னால் முடியவில்லை.

ஏனென்றால் அவள் ஒரு படைப்பு. ஏதோ ஒன்று, மனித ஆத்மாவின் ஏதோ ஒரு பகுதி, அவளின் படைப்பினுள் சென்றுள்ளது. பதினான்கு டாலர் எண்ணிக்கொடுத்துவிட்டு ஒரு முட்டாளைப் போல உணர்ந்தேன்.

வீட்டுக்கு வந்து க்ளீவ்லாண்டில் உள்ள என் மருமகளுக்கு பார்சல் கட்டும்போதும் முட்டாளைப் போலவே முன்னைவிட அதிகமாக உணர்ந்தேன். அந்த சின்ன சக்தி மிகுந்த பாதிப்பை மறுபடியும் உணர்ந்தேன். அவளை விட்டும் பிரிய நான் மிகமிகத் தயங்கினேன். கன்சல்டிங் ரூமுக்குப் பின்புறம் இருந்த எனது சிறிய படுக்கை அறையை அவள் தனது இருப்பைக்கொண்டு நிறைத்தாள். விவரிக்க முடியாத ஏக்கத்தை என் தொண்டைக்கும் சோகத்தை என் நெஞ்சுக்கும் கொண்டு வந்தாள்.

ஆர்மியிலிருந்து வெளிவந்து பயிற்சி எடுத்துக் கொண்டு இருக்கும் இவ்வளவு காலத்தில் முதல் முறையாக நான் தனியாக இருந்தேன் என்பதையும் நோயாளிகளுக்கு உதவுவதில் கிடைக்கும் திருப்தி சமயங்களில் போதாமல் போய்விடுகிறது என்பதையும் உணர்ந்தேன்.

என் மருமகளுக்கு அனுப்பிவிட்டு வந்த பிறகு அதுவே அதன் முடிவாக இருக்கும் என்று நினைத்தேன். ஆனால் அப்படி இல்லை. என் சிந்தனையை விட்டு அவளை அகற்றவே முடியவில்லை. அடிக்கடி அவளைப் பற்றி நினைத்தேன். அவள் என்னுள் ஏற்படுத்திய உணர்வுகளையும் அவளைச் செய்த அந்த அபி சொன்ன பகட்டான சிவப்புத் தலைகொண்ட பெண்ணையும் இணைத்துப் பார்க்க முயன்றேன். ஆனால் முடியவில்லை. ஒரு முறை இவ்விஷயத்தை தொடர்வோமா, யார் அவள் என்று நேரில் பார்க்கலாமா என்று கூட உந்தப்பட்டேன். இந்த சமயத்தில்தான் சுற்றுப் புறத்தில் பத்தாவது வகை வைரஸ் தாக்கி எல்லா விஷயங்களையும் என் மண்டைக்குள் இருந்து ஓட்டியது.

ஒரு மூன்று மாதம் சென்றிருக்கும். எனது தொலைபேசி ஒலித்தது.

'டாக்டர் அமனியா ? '

'யெஸ் '

'உங்கள் இடத்துக்குப் பக்கமாக நான் ஒரு நாள் போனேன். பெயர்ப்பலகையைப் பார்த்தேன். நீங்கள் ரொம்ப செலவு வைப்பீர்களோ ? ஒரு தரம் வந்து பார்க்க ரொம்ப கேட்பீர்களோ ? '

குரலின் தன்மையும் அதிலிருந்த கணித மனப்பான்மையும் என்னை வெறுக்க வைத்தது என்றாலும் நான் பதில் சொன்னேன்.

'நான் ஒரு டாலர் வாங்குவேன். உங்களுக்கு உண்மையிலே நோயாக இருந்து பணம் தர முடியாமல் இருந்தால் நான் காசு வாங்காமலே பார்க்கிறேன். '

'ஓகே. ஒரு டாலர் என்னால் தர முடியும். ஆனால் அதற்கு மேல் அல்ல. நீங்கள் வரலாம். கலாமிட். 937 கிழக்குப் பகுதி மூன்றாவது தெரு. இரண்டாவது மாடி. '

அப்போது அந்த தொடர்பு என் மனதில் உதிக்கவில்லை. அந்த முகவரியில் பெயர்ப்பலகையின் கீழிருந்த பித்தானை அமுக்கினேன். பஸ்ஸர் சப்தித்தது. தாழ் வழிவிட்டது. குறுகலான, நாட்பட்ட, மந்தமான வெளிச்சம் கொண்ட, கிரீச்சிடுகின்ற இரண்டு படிக்கட்டு வரிசைகளில் ஏறிச்சென்றேன். கிட்டத்தட்ட ஒரு இன்ச் அளவுக்கு கதவொன்று திறக்கப்பட்டது. நான் துளைக்கப்படுவது போல் உணர்ந்தேன். பின்பு வெறுப்பூட்டும் அந்தக்குரல் சொன்னது,

'டாக்டர் அமனியா ? நான்தான் ரோஸ் கலாமிட். உள்ளே வாருங்கள் '.

அவளைக் கண்டு அதிர்ச்சியுற்றேன். கிட்டத்தட்ட ஆறடி உயரம் இருந்தாள். சிவப்பு மருதானியில் 'டை ' அடித்த முடி. மலிவான செண்ட் ஏதோ ஒன்று அபரி மிதமாக அடித்திருந்த வாசனை. வாதுமை வடிவக் கரிய விழிகள். கிழக்கத்திய பாணியில் சற்றுச் சாய்வாக பலமாக சாயமடிக்கப்பட்ட தடித்த உதடுகள் கொண்ட பெரிய வாய். அவளிடம் ஏதோ ஒரு பயங்கரமான பலமும் மின்னுகின்ற அழகும் இருந்தது. நாற்பத்தைந்திலிருந்து ஐம்பதுக்குள் அவளை வைத்தேன்.

வரவேற்பறையும் படுக்கையறையும் இணைந்த, பழுப்புக் கற்களினால் அந்தக்காலத்து பாணியில் கட்டப்பட்டிருந்த அறைக்குள் நுழைந்த போதுதான் அதி ஆழமான அதிர்ச்சிக்குள்ளானேன். அறையில் பொம்பளைத் தனமாக சாமான்கள் போடப்பட்டிருந்தாலும், மலிவான ப்ரிண்டுகள், மலிவான குஷன்கள், மலிவான வாசனைப் பொருட்கள் அவற்றிற்கான மலிவான பாட்டில்கள் இவைகளினால் பயங்கரமாக அசிங்கமாக இருந்தது.

ஆனால் அவற்றிலிருந்து தொங்கிக்கொண்டும் படுக்கையின் மீது அங்கொன்றும் இங்கொன்றுமாகவும் பழைய ட்ரங்குப் பெட்டியின் மீதுமாகவும் ஒரு டஜன் துணி பொம்மைகள். எல்லாமே வித்தியாசமாக அக்கறையின்றி போடப்பட்டிருந்தன என்றாலும் எல்லாமே என்னுள் முதல் நோட்டத்திலேயே ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியது. அந்த சிறிய பொம்மையின் கவர்ச்சியையும் வசீகரத்தையும் கொண்டிருந்தன. ஆச்சரியப் படுத்துகின்ற பொம்மைகளை உருவாக்குகின்ற படைப்பாளியின் முன் நிற்பதை உணர்ந்தேன்.

ரோஸ் கலாமிட் சொன்னாள் : 'உயரமாக, கறுப்பாக அழகாக இருக்கிறீர்கள். உங்களைப் போன்ற இளமையானவர் டாக்டராக இருப்பதற்கு மிகவும் தகுதியானவர் இல்லையா ? '

நான் அவளுக்குக் கூர்மையாக பதில் சொன்னேன். ஏனெனில் நான் கோபப்பட்டேன். சங்கடப்பட்டேன். எரிச்சல் பட்டேன். மலிவான இந்த மனமுடைக்கும் சூழ்நிலையில் அந்த

அழகான மனம் தொடும் பொம்மைகளின் மறு கண்டுபிடிப்பு. அவற்றிற்கும் இந்த பயங்கரமான பொம்பளைக்கும் உள்ள தொடர்பு, இவை என் மனநிலையை பாதித்திருந்தன.

'நீங்கள் நினைப்பதைவிட நான் வயதானவன். நான் எப்படி இருக்கிறேன் என்பது உங்களுக்குத் தேவை இல்லாதது. நான் பரிசோதிக்க வேண்டாமென்று நீங்கள் கருதினால் நான் உடனே போய்விடுகிறேன். '

' என்ன டாக்டர், ஒரு உபசார வார்த்தைகூட சொல்லக் கூடாதா ? '

'உபசார வார்த்தைகள் எனக்குப் பிடிக்காது. நோயாளி நீங்கள்தானா ? '

'இல்லை நோயாளி என் கஸின். பின் அறையில் இருக்கிறாள். உங்களை அவளிடம் அழைத்துப் போகிறேன். '

உள்ளே போகுமுன் நான் தெரிந்துகொள்ள வேண்டி யிருந்தது. 'இந்த பொம்மைகளை நீங்களா செய்கிறீர்கள் ? '

'ஆமா, ஏன் ? '

ஏதோ ஒரு தனிமை என்னை ஆட்கொண்டது. 'ஒரு தரம் நான் என் மருமகளுக்காக ஒன்று வாங்கினேன். ' என்று ஏதோ உளறினேன்.

'நிச்சயம் அதிகம் காசு கொடுத்திருப்பீர்கள். இந்த பொம்மைகள்தான் இன்றைய வெறியாக உள்ளது ' என்று சொல்லிச் சிரித்தாள்.

ஒரு இணைப்பு பாத்ரூம் வழியாக பின்பக்கம் இருந்த இன்னொரு சிறிய அறைக்குள் என்னைக் கூட்டிச் சென்றாள். 'எஸ்ஸி, டாக்டர் வந்திருக்கிறார் ' என்று உரக்கச் சொல்லிக் கொண்டே கதவை லேசாகத் திறந்தாள். விரியத் திறந்து என்னை அனுமதிக்குமுன் மிருகத்தனமாக சொன்னாள் : 'டாக்டர் ஆச்சர்யப்படாதீர்கள், அவள் ஒரு ஊனமுற்றவள் '.

இளக்கமான 'உல்லன் ' துணியில் பாவாடையை அணிந்து ஜன்னலுக்குப் பக்கத்திலிருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்திருந்த வெளுப்பான பெண்ணின் முகம் நிராசை தவிர வேறு எதையும் வெளிப்படுத்தவில்லை. நான் மறுபடியும் வெறுப்பும் எரிச்சலும் அடைந்தேன்.

அந்த பொம்பளை சொன்ன விதமே அந்த பெண்ணை ஊனப் படுத்துவதாக இருந்தது. எஸ்ஸி ஒரு ஊனமுற்றவள் என்பதை என்னிடம் அவள் சொல்லிமட்டும் காட்டவில்லை. எஸ்ஸிக்கு மறுபடியும் அதை நினைவூட்டுகின்ற காரியத்தை செய்தாள் அவள்.

எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு கிரகித்தேன். ஏனெனில் நோயாளி அறைக்குள் வரும் மருத்துவன் தனது தோலைக் கொண்டும் கண்களைக் கொண்டும் செவிகளைக் கொண்டும் உணர வேண்டும், பார்க்க வேண்டும், கேட்க வேண்டும்.

அப்பெண்ணுக்கு இருபத்தி நான்கு அல்லது ஐந்துக்கு மேல் இருக்க முடியாது. துன்பம் பாதித்த இரு பெரிய விழிகளாக மட்டுமே அவள் தோன்றினாள். அவ்விழிகளில் உயிர்

விளக்கு மிகவும் மந்தமாக எரிந்து கொண்டிருந்தது என்பதுதான் ரொம்ப அதிர்ச்சி தருவதாக இருந்தது.

அவள் மிகவும் நோயுற்றிருந்தாள். வீணடிக்கப்பட்டுவிட்ட அவளின் அமைப்பு நீல நாளங்கள் கொண்ட தெளிவான கைகள். லேசான பழுப்பு மஞ்சள் முடி. இவை கொண்ட ஊனமுற்ற, ஒளியிழந்த அவளின் அடி நாதமாக இருந்த இனிமையை நான் முதல் 'விசிட் 'டிலிருந்தே நினைவு கொண்டேன். நம்ப முடியாத இரக்க உணர்வுகளை ஏற்படுத்துவதற்கென்றே அவளுடைய வாய் வடிவெடுத்திருந்தது. மிருதுவாக, வெளுத்துப்போய், பவழம்போல, நடுங்குவதற்குத் தயாராக. எங்கோ உயரத்துக்குக் கொண்டு செல்லும் ஏதோ வேறொன்று அவளிடம் இருந்தது.

சிறிய மேசைகளால் அவள் சூழப்பட்டிருந்தாள். ஒரு மேசையின் மீது வர்ணங்கள், தூரிகைகள், கந்தல் துணி, ஊசி, நூல் முதலிய பொம்மைகள் செய்வதற்குத் தேவையான யாவும் இருந்தன.

அவளுடைய அப்போதைய இயலாமையும் அவளுடைய ஊனமும் இரண்டு வெவ்வேறு விஷயங்களாக இருந்தன. ஆனாலும் என்னுடைய கவனத்தை உடனடியாக ஈர்த்தது அவளுடைய ஊனம்தான். அவள் உட்கார்ந்திருந்த விதம் இவையெல்லாம் கதவைத் திறந்ததில் இருந்தே என்னை சிந்தனை செய்யத் தூண்டியது. இந்நிலைக்கான தொழில் ரீதியான பெயர் உங்களுக்குப் புரியாது.

ஆனால் நான் முதன் முதலில் பார்த்தபோது எனக்கு என்ன தோன்றியதோ அதுதான் அவள் நோயென்றால் அது நிச்சயமாக குணப்படுத்தக் கூடியதே.

'நடக்க முடியுமா எஸ்ஸி ? ' ஆர்வம் காட்ட முடியாத அளவுக்கு களைத்திருந்த போதும் அவள் தலையசைத்தாள்.

'ப்ளீஸ், என்னை நோக்கி நடந்து வா '

'வேண்டாம். தயவு செய்து என்னை நடக்கச் சொல்லாதீர்கள் ' அவள் கெஞ்சினாள்.

அவள் குரலில் இருந்த கெஞ்சல் என்னைத் தொட்டது என்றாலும் நான் ஒரு விஷயத்தை நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும். 'ஸாரி, எஸ்ஸி, ப்ளீஸ், நான் சொன்னபடி செய் ' என்றேன்.

லேசாகத் தடுமாறியவளாய் நாற்காலியில் இருந்து எழுந்தாள். என்னை நோக்கி நொண்டினாள். இடக்காலை இழுத்தவாறு. எனக்கு நிச்சயமாகத் தெரிந்து விட்டது. நான் நினைத்தது சரிதான். 'ஆங்..அப்படி ' என்று அவளை ஊக்கமூட்டும் விதமாக புன்னகையோடு சொன்னேன். அவளை நோக்கி என் இரு கைகளையும் விரித்தேன்.

ஒரு கண நேரம் நாங்கள் ஒருவர் கண்ணுக்குள் ஒருவர் பட்டுவிட்டதாகத் தோன்றியது. துயரம், நிராசை என்ற ஆழமான நீர் நிலையில் அடித்துச் செல்லப்பட்டு அவள் மூழ்கிக் கொண்டிருப்பது போல எனக்குத் தோன்றியது. உதவிக்காக எனை நோக்கிய அவளின் நிசப்தமான அலறலின் சக்தியைக் கொண்டு என்னைச் சுற்றியிருந்த காற்று கலக்கப் பட்டதைப் போன்று உணர்ந்தேன்.

நான் செய்தது போலவே அவள் கைகளும் எனை நோக்கி உயர்ந்தன. பின் தானாகவே பக்க வாட்டில் சென்று விழுந்தன. நிசப்தம் உடைக்கப்பட்டது.

'எவ்வளவு நாட்களாக இப்படி உள்ளது எஸ்ஸி ? '

ரோஸ் கலாமிட் சொன்னாள் : 'அதுவா, எஸ்ஸி பல வருஷங்களாக ஊனமாக இருக்கிறாள். உங்களை நான் அதற்காகக் கூப்பிடவில்லை. அவளுக்கு இப்போது உடம்பு சரியில்லை. அது என்னவென்று நான் தெரிந்து கொள்ள வேண்டும். '

ஆமாம். அவளுக்கு உடம்பு சரியில்லாமல்தான் இருந்தது. ஒரு வேளை சாகும்வரைகூட அப்படி இருக்கலாம். அறைக்குள் நுழைந்த உடனேயே நான் அதனை உணர்ந்தேன். அசிங்கமான அந்த பெரிய பொம்பளையை அகலுமாறு கண்களாலேயே கூறினேன்.

ஆனால் அவள் சிரித்துவிட்டு, 'நிச்சயமாக போக மாட்டேன் டாக்டர். நான் இங்கேயேதான் இருக்கப் போகிறேன். எஸ்ஸிக்கு என்னவென்று என் முன்னாடியே நீங்கள் பரிசோதித்து சொல்ல வேண்டும் ' என்றாள்.

பரிசோதனையை முடித்தவுடன் ரோஸுடன் முன் அறைக்குச் சென்றேன். 'எப்படி இருக்கிறாள் ? ' என்றாள்.

'அவளுடைய ஊனத்தை குணப்படுத்த முடியும் என்பது உங்களுக்குத் தெரியுமா ? சரியான ட்ரீட்மெண்ட் கொடுத்தால் சாதாரணமாக அவளால் நடக்க முடியும். இன்னும் ஒரு.. ' என்று நான் சொல்லிக்கொண்டிருக்கும் போதே -

'வாயை மூடுங்கள் ' கோபமான அவளுடைய கத்தல் என்னுடைய செவிகளில் அறையைப் போல விழுந்தது.

'எந்த நேரத்திலும் அவளிடம் இப்படிச் சொல்வதற்குத் துணிய வேண்டாம். நன்றாகத் தெரிந்தவர்களை வைத்து நான் அவளை ஏற்கனவே பார்த்துவிட்டேன். இளம் முட்டாள்கள் தவறான நம்பிக்கைகளை ஏற்படுத்துவதை நான் விரும்பவில்லை. அப்படி ஏற்படுத்துவதானால் நீங்கள் போகலாம். அவளுக்கு இப்போது என்ன செய்கிறது என்றுதான் நான் அறிய விரும்புகிறேன். அவள் சாப்பிட வில்லை. தூங்கவில்லை. வேலையும் செய்யவில்லை. நீங்கள் என்ன கண்டுபிடித்தீர்கள் ? ' என்றாள்.

'ஒன்றுமில்லை. உடம்பு ரீதியாக ஏதும் தவறாக இருப்பதாக எனக்குப் படவில்லை. ஆனால் எங்கோ எதுவோ பயங்கரமாக சரியில்லாமல் உள்ளது. நான் அவளை மறுபடியும் பார்க்க வேண்டும். அதுவரை ஒரு டானிக்கும் புத்துணர்ச்சிக்கு மருந்தும் எழுதித் தருகிறேன். சில நாட்களுக்குப் பிறகு வந்து பார்க்கிறேன். '

'அவள் ஊனத்தைச் சரிப்படுத்துவேன் என்றெல்லாம் நீங்கள் பேசாமல் உங்கள் பெரிய வாயை மூடிக்கொள்ள வேண்டும். புரிகிறதா ? இல்லையென்றால், நான் வேறு டாக்டரைப் பார்த்துக் கொள்கிறேன். '

'சரி, சந்திப்போம் ' என்றேன். மறுபடியும் எஸ்ஸியை நான் பார்க்க வேண்டியிருந்தது.

'இந்த பொம்மைகளை எல்லாம் நீங்கள் செய்வதாகச் சொன்னீர்கள் அல்லவா ? ' தொப்பியையும் பையையும் எடுத்துக் கொண்டு கிளம்பும்போது கேட்டேன்.

அந்த விஷயத்தைப் பற்றி மறுபடியும் பேச மாட்டேன் என்று நினைத்தவளைப் போல சற்று திகைத்துப் போனாள்.

'ஆமாம். நான் தான் வடிவமைக்கிறேன். சமயங்களில் தன் ஊனத்தையும், எந்த ஆண் மகனும் தன்னைத் திருமணம் செய்து கொள்ள மாட்டான் என்ற உணர்வையும் மறப்பதற்காக அந்தக் குழந்தையையும் எனக்கு உதவி செய்யச் சொல்வேன் ' என்றாள்.

தெளிவான சூடான ஜுலை மாதப்பகலில் நான் வெளியில் நடந்து கொண்டிருந்தேன். குழந்தைகள் சாலையின் பக்க வாட்டு நடை பாதையில் சில்லு விளையாடிக்கொண்டு இருந்தார்கள். மதுக்கிடங்கின் சுவற்றில் எறிந்து கைப்பந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். 'ட்ராஃபிக் ' சப்தித்துக் கொண்டிருந்தது. ரோஸ் கலாமிட் பொய் சொல்லியிருக்கிறாள் என்று அப்போது என் இதயம் சொல்லியது. வசியப்படுத்தப்பட்டிருந்த அந்த பொம்மையின் பின்னிருந்த இனிமையான ஆன்மாவை நான் கண்டு கொண்டேன்.

ஆனால் அவள் நோயின் காரணத்தை நான் நிச்சயப் படுத்தாத வரையில் அந்த ஆன்மா இந்த உலகில் வெகு நாட்கள் இருக்காது என்று எனக்குள் இருந்த உணர்ச்சியற்ற, ஈரமான மருத்துவ உள்ளுணர்வின் தூதுவன் எச்சரித்தான்.

அவள் பெயர் எஸ்ஸி நோலன் என்று பின்னால் தெரிந்து கொண்டேன். நிச்சயப்படுத்த முடியாத ஒரு காரணத்தில் இருந்து அவள் மெல்ல மெல்ல இறந்து கொண்டிருந்தாள். அதில் ரோஸ் கலாமிட்டுக்கும் சம்பந்தம் இருக்க வேண்டும் என்று நான் நிச்சயமாக நம்பினேன்.

தெரிந்தே ரோஸ் அவளைக் கொன்று கொண்டிருந்தாள் என்பதாக அல்ல. ஆனால் எஸ்ஸியை அந்த சிவப்பு முடிக்காரி உண்மையில் கலவரப்படுத்தி இருந்தாள். எஸ்ஸி உயிரோடு இருக்க வேண்டும் என்றுதான் அவளும் விரும்பினாள். ஏனென்றால் எஸ்ஸிதான் அவளுடைய வருமானத்தின் தாரம். அவளுடைய சாப்பாட்டுச் சீட்டு.

நான் பல முறை போய் வந்தேன். பொம்மைகளைத் தான் செய்வதாகச் சொன்ன பொய்யைக் காப்பாற்ற வேண்டுமே என்று கூட ரோஸ் கவலைப்பட வில்லை. ஓரளவுக்கு உண்மையை என்னால் தெரிந்துகொள்ள முடிந்தது.

எஸ்ஸிக்குப் பதினைந்து வயதிருக்கும்போது அவள் பெற்றோர் ஒரு விபத்தில் கொல்லப்பட்டனர். அதுவே அவள் ஊனத்திற்குக் காரணம். அவளுக்கிருந்த ஒரே சொந்தக்காரியான ரோஸ் கலாமிட்டை காப்பாளராக கோர்ட் நியமித்தது. எஸ்ஸியின் சொத்து சொற்பமானது என்று தெரிய வந்ததும் அவளுடைய ஊனத்தைப் பற்றியே பேசிப்பேசி ரோஸ் தனது வெறுப்பை வெளிப்படுத்தினாள்.

அவர்களுடைய வருடக்கணக்கான உறவில் தன்னுடைய ஊனத்தைப் பற்றி மிகவும் அவமானப் படும்படியான உணர்வு உள்ளவளாக அவளை அந்தக் கிழப்பொம்பளை மாற்றி இருந்தாள். 'நீ ஒரு பிரயோஜனமில்லாத ஊனமுற்றவள். எந்த ஆண் மகனும் உன்னை திரும்பிப் பார்க்க மாட்டான். உனக்குத் திருமணம் என்பதோ குழந்தைகள் என்பதோ கிடையாது ' என்றே அவள் எப்போதும் சொல்லி வந்தாள்.

எஸ்ஸி பருவமடைந்த போது அவள் உணர்வுகள் உடைக்கப் பட்டிருந்தன. அவள் ரோஸின் எண்ணத்திற்கு முழுமையாக அடிமைப் பட்டிருந்தாள். அவளுடைய ஆதிக்கத்தின் கீழ் நம்பிக்கையற்ற இருப்பையும் தனியான வாழ்வையும் தொடர வேண்டியிருந்தது. இந்த சமயத்தில்தான் எஸ்ஸி முதன்முதலாக துணிப்பொம்மைகள் செய்ய ஆரம்பித்திருந்தாள்.

தனது அசிங்கம், பேராசை, சோம்பேறித்தனம் இவைகளை மீறி அந்த பொம்மைகளில் இருந்த சிறப்புத் தன்மையையும் தவிர்க்கமுடியாத கவர்ச்சியையும் புரிந்து கொள்ளும் அளவுக்கு ரோஸுக்கு அறிவிருந்தது.

முதலில் செய்தவைகளை விற்றதிலிருந்து, காலையில் இருந்து இரவு வரை எஸ்ஸியை பொம்மைகள் செய்யச் சொல்லிவைத்திருந்தாள். சில வாரங்களில் முன்னூறில் இருந்து நானூறு டாலர் வரை அவளுக்குக் கிடைத்தன. இதில் எதுவும் எனக்குத் தெரிந்து எஸ்ஸிக்குப் போகவில்லை.

எஸ்ஸி முழுமையாக ரோஸின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தாள். அவளைக் கண்டு பயப்பட்டாள். ஆனால் அவளைக் கொன்று கொண்டிருந்தது அதுவல்ல. அது வேறு. என்னவென்று என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை. அவளைத் தனியாகப் பார்க்கவும் நான் அனுமதிக்கப் படவில்லை. ரோஸ் எப்போதும் பக்கத்திலேயே இருந்தாள்.

வீணாக்கப்பட்டிருந்த அவளுடைய உடம்புக்குள் பலவீனமாக படபடத்துக் கொண்டிருந்த அமுக்கப்பட்ட உணர்வு களைக் கொண்ட அந்த இரக்கப்படக் கூடிய பெண்ணும் வெறுக்கத்தக்க தடித்த உதடுகளும் பேராசை பிடித்த கண்களும் பச்சிலை நாற்றமும் கொண்ட, தீமையின் மணத்தை மூச்சாக வெளியிடும் அந்தப் பொம்பளையும் உள்ள அறையில் இருக்கும் போதுதான் நல்லது கெட்டதற்கு மத்தியில் உள்ள வித்தியாசத்தை நான் உணர்ந்தேன்.

எஸ்ஸியின் ஊனத்தை குணப்படுத்துவதற்கான சாத்தியப் பாட்டைப் பற்றிய என் நம்பிக்கையை நான் சொல்லவில்லை. அவளைச் சாகடித்துக் கொண்டிருந்தது என்ன என்பதை உடனடியாகக் கண்டு பிடிக்க வேண்டியது அதைவிட முக்கியமானதாகிவிட்டது. அவளை மருத்துவ மனையில் சேர்க்க ரோஸ் அனுமதிக்க வில்லை. அந்த செலவை அவள் ஏற்றுக்கொள்ள மாட்டாள்.

என் கண்ணெதிரிலேயே எஸ்ஸியைக் கொன்று கொண்டிருந்த இயக்கத்தை, முறையை பத்து நாட்களுக்கு நிறுத்திவிட்டதாக நான் நினைத்தேன். பொம்மைகளின் மீதான அவள் வேலையை நான் நிறுத்தினேன். படிப்பதற்கு சில புத்தகங்கள், சில இனிப்புகள், ஒரு பாட்டில் ஷெர்ரி இவைகளை நான் கொண்டுவந்து அவளுக்கு கொடுத்தேன்.

நான் மறுமுறை சென்றபோது என்னைப் பார்த்து எஸ்ஸி முதல் முறையாகப் புன்னைகைத்தாள். அந்த நடுக்கம், இயக்கம், பசி, பெண்மை, புன்னகை, நிராசை இவை எந்த கல் இதயத்தையும் உடைத்துவிடும்.

'இப்போது பரவாயில்லை. இன்னும் பத்து நாட்களுக்கு ஒன்றும் செய்ய வேண்டாம். ஓய்வு, தூக்கம், படிப்பு பின்பு பார்ப்போம். ' என்றேன்.

ஆனால் ரோஸ் கலாமிட் சினத்தினால் புருவங்களை நெரித்தாள். மனதுக்குப் பிடிக்காத ஏதோ ஒன்றின் வெளிப்பாடு அவள் வாயில் தெரிந்தது. அவளின் ஆதிக்கம் செலுத்தும் பெரிய உருவம் அந்த அறை முழுவதும் வெறுப்பால் நிறைப்பது போல் தோன்றியது.

அடுத்த முறை நான் போனபோது அவள் எனக்காக அவளுடைய அறையில் காத்திருந்தாள். கையில் ஏழு ஒரு டாலர் நோட்டுக்கள். 'ஓகே டாக்டர். போதும். இனிமேல் நீங்கள் வரவேண்டியதில்லை ' என்றாள்.

'ஆனால் எஸ்ஸி.. '

'எஸ்ஸி அருமையாக இருக்கிறாள் '

மூலையில் இருந்த பழைய ட்ரங்க் பெட்டியின் மீது என் கண்கள் அலைந்தன. அதன் மீது மூன்று புதிய பொம்மைகள் இருந்தன. அவைகளில் நான் கண்டது வெறும் கற்பனைதானா அல்லது உண்மையிலேயே அந்த மந்திரிக்கப்பட்ட நிசப்த உருவங்களில் ஒரு புதிய தன்மை தென்பட்டதா ? ஒவ்வொன்றும் ஒரு வகையில் ஒரு பிறப்பாகவும் ஒரு இறப்பாகவும், வாழ்க்கையின் அழகிற்கும் ஆசைக்கும் ஒரு வாழ்த்தாகவும் அதே சமயம் ஒரு விடை பெறலாகவும் இருந்ததா ?

மிருகத்தனமான அந்தப் பொம்பளையை ஒதுக்கித் தள்ளிவிட்டு கதவுகளைக் கடந்து சென்று என் நோயாளியைப் பார்க்க வேண்டும் என்று ஒரு அதிபலமான உணர்வு எழுந்தது. ஆனால் மருத்துவத் துறையின் ஒழுக்கங்கள் உடைக்க முடியாதவை. ஒரு மருத்துவனை வேண்டாம் என்று சொல்லும் போது செல்ல வேண்டியது அவன் கடமை. தனது நோயாளியோடு யாரோ தப்பாட்டம் ஆடிக்கொண்டு இருக்கிறார்கள் என்று சந்தேகப் படுவதற்கு காரணம் இருந்தால் தவிர.

எஸ்ஸியின் இயலாமையின் காரணத்தை நிர்ணயிப்பதில் நான் தோற்றுவிட்டேன். ரோஸ் நிச்சயமாக இன்னொரு மருத்துவனை அழைப்பாள். ஏனென்றால் வாழ்க்கை சுலபமானதாக இருக்க எஸ்ஸியின் பணிகள் அவளுக்குத் தேவை. தனது சாப்பாட்டுச் சீட்டைக் காப்பாற்ற அவள் சந்தேகமின்றி முயற்சி செய்வாள்.

மனது கனக்க நான் புறப்பட்டேன். ஆனால் இரவும் பகலும் எஸ்ஸியைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேன். அதற்குப் பிறகு கொஞ்ச நாள் கழித்து எனக்கு உடம்பு முடியாமல் போனது. முதலில் புலப்படாத வகையில். முடிவில் நன்றாகத் தெரியும் படியே.

பசியின்மை, எடை இழப்பு, சோம்பல், எரிச்சல் படும் தன்மை, இரவில் உஷ்ணம் குறைதல், திடாரென்று உடம்பு பலவீனமாதல் இப்படி. என்னுடைய வேலைகளைத் தொடர முடியாது என்று உணர்ந்தேன். டாக்டர் சால் அவர்களை மருத்துவ மனையில் என்னைக் கவனிக்கும்படி செய்தேன். அவர் வழக்கப்படி பரிசோதித்துவிட்டு, 'ஒன்றுமில்லை சாம், கொஞ்சம் ஓய்வெடுங்கள். அதிகமாக வேலை செய்திருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். இயற்கையின் எதிர்ப்பு அவ்வளவுதான் ' என்றார்.

ஆனால் அவர் சொன்னது காரணமல்ல என்று எனக்குத் தெரியும்.

அதிர்ச்சி தரும்படியாகத் தோன்ற ஆரம்பித்தேன். என்னுடைய தோல் தன்னுடைய நிறத்தின் சாயலை இழக்க ரம்பித்தது. கன்ன எலும்புகள் தெரிய ஆரம்பித்தன. தூக்க மின்மையால் கண்கள் குழிவிழுந்தன. எனது கண்கள் தந்த தோற்றமோ எனது வாய் இருந்த விதமோ எனக்குப் பிடிக்க வில்லை. எனது இரவுகளிலும் கனவுகளிலும் எனக்குக் காய்ச்சலடித்தது.

அக்கனவுகளில் ரோஸ் கலாமிட்டின் அசிங்கமான, வடிவற்ற கைகளில் எஸ்ஸி சிறைப்பட்டிருந்தாள். அதிலிருந்து விடுபட்டு எஸ்ஸி என்னை அடைய கஷ்டப்பட்டு முயன்று கொண்டிருந்தாள். எஸ்ஸியின் நோய்க்கான காரணத்தை கண்டறிவதில் தோல்வியுற்றதனால் ஏற்பட்ட கவலையில் இருந்து என்னால் மீள முடியவில்லை.

நான் மருத்துவன் என்பதில் எனக்கிருந்த முழு நம்பிக்கையுமே பயங்கரமாக உலுக்கப்பட்டது. ஒரு நிராதரவான மனுஷி என்னை உதவிக்காக அழைத்திருக்கிறாள். நான் தோற்றிருக்கிறேன். நான் எனக்கே உதவி செய்ய முடியவில்லை. என்னை மருத்துவன் என்று அழைத்துக் கொள்ள என்ன உரிமை இருக்கிறது ? 'மருத்துவனே, உன்னை நீ முதலில் குணப்படுத்திக்கொள் ' . என்னை நானே திட்டிக்கொண்டு எனக்கு நானே வருந்திக்கொண்டும் கழித்த ஒரு பயங்கரமான இரவு முழுவதும் ஏதோ நெருப்பால் எழுதப்பட்டது போல என் மூளைக்குள் இந்த வாக்கியம் எரிந்தது.

அடுத்தவரை குணப்படுத்துமுன் என்னை நானே குணப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆனால் எதிலிருந்து ? எதிலிருந்தாவது என்று வைத்துக்கொண்டால் என்னுடைய நோயின் அடையாளங்கள் எஸ்ஸி ரோலனுடையதைப் போல இருந்தன. எஸ்ஸி ! எஸ்ஸி ! எஸ்ஸி ! எப்போதும் எஸ்ஸி !

எஸ்ஸிதான் எனது நோயா ? அபி ஷெஃப்டனின் கடைக்குள் அந்த துணிப்பொம்மைக்குள் வடிவெடுத்திருந்த அவளின் வசியப் படுத்தப்பட்ட உணர்வின் நீட்சியை நான் சந்தித்த அந்த முதல் முறையில் இருந்தே அவள் எனது நோயாக இருக்கிறாளா ?

பொழுது விடிந்து பின் பக்கத்து ஜன்னலில் பழுப்பேற்றியபோது அதிகரிக்கும் சப்தமுடன் மேலே ரயில் சென்றபோது நான் எனது நோயை அறிந்தேன் : நான் எஸ்ஸி ரோலனைக் காதலித்தேன். 'எஸ்ஸி ' என்ற வார்த்தையையும் 'காதல் ' என்ற வார்த்தையையும் ஒன்றாக நினைக்கும் போதும் நான் அவளைக் காதலிக்கிறேன், எனக்கு அவள் தேவை. அவள் உடம்பும் ஆத்மாவும் என்றென்றும் என் பக்கம் இருக்க வேண்டும் என்று நான் தலை தூக்கி உரக்கச் சொல்லும் போதும் என்னுடைய நாளங்கள் வழியாக மூலிகையின் நெருப்பு மின்னுவதை உணர முடிந்தது.

கதகதப்பு. ஏக்கத்தோடு கூடிய தேவை. தனது இருப்பின் மூலம் வெளிப்படுத்தியது மென்மை. எல்லா வழிகளிலும் குணப்படுத்தி பழைய நிலைக்குக் கொண்டு வந்த பிறகு முழுமையாக மலர இருக்கின்ற அவளுடைய வினோதமான, அசாதாரண அழகு -- இவை கூடிய எஸ்ஸிதான் எனது நோயாக எப்போதுமே இருந்திருக்கிறாள்.

இப்போது என் கண்களை மறைத்துக் கொண்டிருந்த திரை அகன்று விட்டது. எனது சக்திகள் மறுபடியும் வெளிப் படுத்தப்பட்டன. எஸ்ஸிமீது நான் கொண்டிருந்த பசி, காதல், இரக்கம் இவற்றை ஏற்றுக் கொண்டு, என்னிலிருந்து விடுபடவைப்பதன் மூலமாக, எஸ்ஸி நோலனுடைய நோய் என்னவென்று நான் முழுமையாகத் தெரிந்து கொண்டேன். அதன் துன்பகரமான கடைசி விபரம் வரை. இந்த உலகத்தில் அவள் இழக்கப்படாமல் இருக்க வேண்டுமென்றால் நான்

என்ன செய்ய வேண்டும் என்றும் சில நிமிடங்களுக்கேனும் அவளை நான் ஏன் தனியாகப் பார்க்க வேண்டும் என்றும் தெரிந்து கொண்டேன்.

அந்தக் காலையில் நான் அபி ஷெஃப்டனுக்குப் ஃபோன் செய்தேன்.

' நான் டாக்டர் அமனி பேசுகிறேன். எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா ? '

' என்ன விளையாடுகிறீர்களா ? நீங்கள் என் மகனுக்குச் செய்த உதவிக்கு ... என்ன செய்ய வேண்டும் என்று மட்டும் சொல்லுங்கள். '

' இதோ பார் அபி, ரோஸ் கலாமிட்டை ஞாபகமிருக்கிறதா ? பொம்மைகள் தருவாளே ? '

' ஆமாம் '

' மறுபடியும் அவள் கடைக்கு வரும்போது எப்படியாவது எனக்கு ஃபோன் பண்ணிச் சொல்ல வேண்டும். என்ன செய்வாயோ, அவளை அங்கேயே பிடித்து வைத்திரு, பேசிக்கொண்டிரு அல்லது ஏதாவது செய்து அவளை அங்கேயே தக்க வைத்திரு. எனக்குத் தேவை இருபது நிமிடங்கள். ஓகே. புரிந்ததா ? என் வாழ்நாள் பூராவும் உன்னை நான் வாழ்த்துவேன். '

ஒவ்வொரு தரமும் நான் வெளியில் சென்றபோது அழைப்பு வந்திருக்குமோ என்ற பயத்திலேயே எனக்கு வியர்த்துக் கொட்டும். ஒவ்வொரு தரமும் நான் திரும்பும்போது கடைப்பக்கம் வந்து விசாரிப்பேன். ஆனால் அபி தலையை இடம் வலமாக ஆட்ட மட்டும் செய்வான்.

பிறகு ஒரு நாள் பிற்பகல் ஐந்து மணிக்கு தொலைபேசி ஒலித்தது. அபிதான். 'இப்போது முடியும் ' என்று மட்டும் சொல்லி தொலைபேசியை வைத்துவிட்டான்.

சில ப்ளாக்குகளைத் தாண்டி ஓடி எஸ்ஸி இருந்த பழுப்பு நிறக் கல்வீட்டை அடைந்து பெயர்ப்பலகையின் கீழிருந்த பஸ்ஸரை அழுத்த ஓரிரண்டு நிமிடங்களுக்கு மேல் எனக்கு பிடிக்கவில்லை. கதவு க்ளிக் என்ற ஓசையுடன் திறந்து கொண்டது. இரண்டிரண்டு படியாக மாடியேறினேன். கதவு பூட்டப்பட்டிருந்தால் வீட்டுக்கார அம்மாவை அழைத்துக் கொண்டு வரவேண்டும். ஆனால் நான் அதிர்ஷ்டசாலி. ரோஸ் சில கணங்களுக்கே வெளியே செல்ல நினைத்திருந்தாள் கையால் கதவு திறந்தே இருந்தது. இணைப்பு பாத்ரூம் வழியாக விரைந்து பின்னறைக்குச் சென்று எஸ்ஸியைப் பார்த்தேன்.

அவள் கொஞ்சம்தான் மீதி இருந்தாள்.

படுக்கையில் உட்கார்ந்திருந்தாள். பூரணமாக வெளுத்திருந்த அவள் தேகத்தில் கன்னங்களின் மத்தியில் இரண்டு சிவப்பு காய்ச்சல் புள்ளிகள் நெருப்பு போல் மின்னின. அவள் கைகள், உடம்பு இவற்றின் சேதாரத்தை விட இந்தப் புள்ளிகள் மிகவும் அபாயகரமான அடையாளங்கள்.

அவளைச் சுற்றி சாயங்களும், வண்ணத் துணித்துண்டுகளும் நூலும் இருந்தன. இன்னும் ஒரே ஒரு பொம்மை, இன்னும் ஒரே ஒரு கனவு, வாழ்க்கை பயங்கரமான முறையில் உதிர்வதற்கு

விதித்திருந்த அந்த இனிமையான சுயத்தின் கடைசி பிரதிபலிப்பு -- இதை செய்து முடிக்காமல் இறக்க விரும்பாததைப் போல.

நான் உள்ளே வந்தபோது நிமிர்ந்து பார்த்தாள். அசந்து போயிருந்ததை மீறி ஆச்சரியத்திற்குள்ளானாள். ரோஸ்தான் வந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தாள். அவள் கைகள் அவள் நெஞ்சுக்குச் சென்றன. என் பெயரைச் சொன்னாள். டாக்டர் அமனி என்றல்ல. நான் சொல்லி வைத்திருந்த 'சாமுவேல் ' என்ற பெயரை.

'எஸ்ஸி ! நல்ல வேளை, ஆண்டவனே, நான் நேரத்தில் வந்திருக்கிறேன். நான் உனக்கு உதவி செய்ய வந்திருக்கிறேன். உன்னை இதுவரை நோயாளியாக்கி வைத்திருந்தது எது என்று எனக்குத் தெரியும். .. '

அவளிடமிருந்து எதுவுமே வெளியேற முடியாத நிலையில் அவள் இருந்தாள். எனது தயக்கத்தை அவள் உணர்ந்து கொண்டாள். 'உன்னை சாகடித்துக் கொண்டிருந்தது எது என்று எனக்குத் தெரியும் ' என்ற வாக்கியத்தை நான் சொல்லாமல் தவிர்த்ததையும் அவள் புரிந்து கொண்டாள். 'அதற்கென்ன இப்போது ? ' என்று ரகசியம் போலச் சொன்னாள்.

'இன்னும் நேரம் உள்ளது எஸ்ஸி. உன் ரகசியம் எனக்குத் தெரியும். உன்னை சுகப்படுத்துவது எப்படி என்று எனக்குத் தெரியும். ஆனால் நான் சொல்வதை நீ கேட்க வேண்டும். உனது வாழ்வே அதைச் சார்ந்துதான் உள்ளது. '

நான் சொல்ல வந்ததைக் கேட்க விரும்பாமலோ அல்லது எதிர்கொள்ள முடியாமலோ இருப்பாள் என்று நான் நினைக்க வில்லை. இருந்தாலும் நான் மேற்கொண்டு சொல்லித்தான் ஆகவேண்டும். நான் உட்கார்ந்து அவள் கையை எடுத்து என் கை மீது வைத்துக்கொண்டேன்.

'எஸ்ஸி, நான் சொல்வதை தயவு செய்து மனது கொடுத்துக் கேள். ஒரு உடம்புக்குத் தேவையான உணவு கிடைக்காத போது, நாம் உணவு கொடுக்கிறோம். ரத்தமில்லாமல் போகும்போது ரத்தம் தருகிறோம். இரும்புச் சத்தோ ஹார்மோனோ குறையும்போது டானிக் தருகிறோம். உன்னிடத்திலோ இவையல்லாத வேறொரு குறைபாடு -- ஒழுகல் இருந்திருக்கிறது. எது இல்லாமல் ஆத்மாவையும் உடம்பையும் ஒன்றாக வைத்திருக்க முடியாதோ அதை உன்னிடமிருந்து வடித்து எடுத்திருக்கிறார்கள். '

அவள் கண்கள் திறந்தன. பயத்தால் ஒளிர்ந்தன. 'வேண்டாம் தயவு செய்து சொல்லாதீர்கள் ' என்று அவள் கெஞ்சியபோது கிட்டத்தட்ட பிரக்ஞையை இழந்துவிடுவாள் போலத் தோன்றியது.

அங்கேயே அப்போதே ஒரு வேளை அவள் இறக்கலாம் என்று நினைத்தேன். ஆனால் அவளுக்கும் எனக்கும் இருந்த ஒரே நம்பிக்கை மேற்கொண்டு பேசுவதுதான்.

'எஸ்ஸி, என் அன்பான, துணிச்சலான பெண்ணே ! பயப்படும்படி ஒன்றுமில்லை. அன்பு தராமல் உன்னைக் காய வைத்திருக்கிறார்கள். என்னைப்பார் எஸ்ஸி ! '

எனது கண்கள் அவளைப் பார்த்தன. அவள் உயிரோடு என்னோடு இருக்க வேண்டும். நான் சொல்வதை முழுவதுமாகக் கேட்க வேண்டும் என்று விரும்பினேன்.

'பார் எஸ்ஸி, மனிதன் செலவழிப்பதற்கு அன்பைத் தேக்கி வைத்திருக்கிறான். வாழ்க்கையில் இருந்தே அதை அவன் பெற்றான். பாசம், மென்மை, இதம், நம்பிக்கை இவற்றைக் கொண்டு அவன் அதை மறுபடியும் திரும்ப நிரப்ப வேண்டும். ஆனால் உன்னிடம் இருந்ததை எல்லாம் கடைசிவரை காலி பண்ணிவிட்டார்கள் '

அவள் இன்னும் என்னைக் கேட்டுக் கொண்டிருந்தாள் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. நான் தொடர்ந்தேன்.

'எல்லாவற்றுக்கும் காரணம் ரோஸ் கலாமிட்தான். உன் வாழ்க்கையின் எல்லா ஆசையையும் நம்பிக்கையையும் அவள் எடுத்துவிட்டாள். அதுமட்டுமல்ல. அதற்குப்பின் அவள் செய்ததுதான் இன்னும் பயங்கர குற்றமாகும். ஏனென்றால் உன்னிடமிருந்து அவள் உனது குழந்தைகளையும் பிரித்துவிட்டாள் '

அவ்வளவுதான். சொல்லிவிட்டேன். அவளை நானே கொன்றுவிட்டேனா ? வார்த்தைகளைக் கடந்து அவளை நேசித்த நானா அவளுக்கு மரண அடியைக் கொடுத்துவிட்டேன் ? என்றாலும் அந்த பாவமான கண்களில் உயிர் இன்னும் ஊசலாடுவதைப் பார்த்தேன். ஏதோ ஒன்றிலிருந்து விடுபட்ட உணர்வைக்கூட அந்தக் கண்கள் லேசாகப் பிரதிபலித்தன என்றுகூட நினைத்தேன்.

'ஆமாம் எஸ்ஸி. நீ செய்த அந்த வசீகர பொம்மைகள்.. அவைகள்தான் அந்த குழந்தைகள். ஒரு பெண்ணாக இருப்பதற்குரிய வாய்ப்பை நீ இழந்துவிட்டதாக நீ முடிவு செய்தபோது எந்த படைப்பாளியையும் போல -- தாயும் சரி கலைஞனும் சரி -- உனது ஒவ்வொரு நம்பிக்கையையும், கனவையும் உன் எண்ணத்தையும் கொடுத்து நீ செய்த ஒவ்வொரு பொம்மையையும் வடிவமைத்தாய். ஆசையோடு அவைகளை உருவாக்கினாய். உன் குழந்தைகளைப் போலவே அவைகளை நேசித்தாய்.

'பணப்பசி பிடித்த அந்த ராட்சச மிருகத்தால் உன் ஒவ்வொரு குழந்தையும் பிறந்த உடனேயே உன்னிடமிருந்து பிடுங்கப்பட்டன. பதிலுக்கு உனக்கு ஒன்றுமே தரப்படவில்லை. எனவே உன் இதயத்தில் இருந்தும் திசுக்களில் இருந்தும் இரத்தத்தில் இருந்தும் அவைகளை நீ உருவாக்கத் தொடங்கினாய். இவற்றின் விளைவாக உன் உயிர் உன்னிடமிருந்து காலியாகிக் கொண்டிருந்ததை அறியாமல். மனிதர்கள் அன்பு கிடைக்காமல் இறந்து போக நேரிடலாம். '

எஸ்ஸி அசைந்தாள். வெளுத்த மஞ்சள் பழுப்பு கேசத்தின் கீழ் அவள் தலை லேசாக அசைந்தது. விழித்திரை அகன்றது. என் கையிலிருந்த ஜில்லிட்ட அவள் கையின் லேசான அழுத்தம் ஒரு பதில் செயல்பாடாக இருந்ததை நான் உணர்ந்தேன்.

'ஆனால் நான் உன்னைச் சாக விட மாட்டேன் எஸ்ஸி. உன்னை நேசிப்பதற்கு நானிருக்கிறேன். உன்னிடமிருந்து எடுக்கப்பட்டதை எல்லாம் வழிய வழிய நிரப்ப நானிருக்கிறேன். காதில் விழுகிறதா எஸ்ஸி ? நான் உனது டாக்டர் அல்ல. நான் உன்னைக் காதலிக்கிறேன். நீ இல்லாமல் என்னால் வாழ முடியாது என்று உன்னிடம் சொல்லிக் கொண்டிருக்கும் மனிதன் நான் '

சந்தேகத்துடன் அவள் ரகசியம் போலக் கேட்டாள் : 'காதலிக்கிறீர்களா ? என்னையா ? நான் ஒரு ஊனமுற்றவள் '

'நீ ஆயிரம் மடங்கு ஊனமுற்றவளாக இருந்தால் அதற்காக நான் உன்னை இன்னும் ஆயிரம் மடங்கு காதலிப்பேன். ஆனால் அது உண்மையல்ல. ரோஸ் கலாமிட் உன்னிடம் பொய் சொல்லியிருக்கிறாள். உன்னை குணப்படுத்த முடியும். இன்னும் ஒரே வருடத்தில் எல்லாப் பெண்களையும் போல உன்னை நான் நடக்க வைப்பேன் '

அவளை நான் அறிந்ததில் இருந்து இப்போதுதான் முதல் முறையாக அவள் விழிகளில் கண்ணீரையும் அவள் அழகான புருவங்களில் லேசாக நிறம் ஏறுவதையும் பார்த்தேன். பின்பு அவள் முழுமையான நேசம் மிக்க எளிமையில் என்னை நோக்கித் தன் கைகளை உயர்த்தினாள்.

போர்வை அவளைச் சுற்றிஇருக்க படுக்கையிலிருந்து நான் அவளைத் தூக்கினேன். அவளுடம்பில் கனமே இல்லை. ஒரு பறவையைப் போல. இந்த கதியற்ற நிலைமையிலும் ஏதோ ஒருவகையான இனிமை இருந்ததைப் போல அவள் என்னிடம் ஒட்டிக்கொண்டாள். அவள் கைகளுக்கு இவ்வளவு பலம் எங்கிருந்து வந்தது ? என் கன்னத்தோடு உராய்கின்ற அவள் கன்னம் எப்படி மின்னுகிறது ? சற்று முன் மரணத்திற்கு மிகவும் நெருங்கியவளாகத் தோன்றியவளா இவள் !

ஒரு கதவு மூடியது. இன்னொன்று வேகமாக அடித்துத் திறக்கப்பட்டது. ரோஸ் கலாமிட் அறைக்குள் புயல்போல நுழைந்தாள். பழைய பயத்தில் எஸ்ஸி நடுங்கியதை உணர்ந்தேன். என் தோளில் தன் முகத்தைப் புதைத்துக்கொண்டாள்.

ஆனால் ரோஸ் மிகவும் தாமதமாக வந்திருக்கிறாள். எல்லாம் முடிந்து விட்டது. அவள் செய்ய முடிந்தது இனி அங்கு ஒன்றுமில்லை. அவளுக்கே அது தெரியும். அவளைக் கடந்து கதவுக்கு வெளியே சென்று இறுக்கமாக என்னைக் கட்டியிருந்த என் சுமையைச் சுமந்து கொண்டு தெருவில் இறங்கி நடக்கும்வரை ஒரு வார்த்தைகூடப் பேசப்படவில்லை.

நியூயார்க்கிற்கு ஆகஸ்ட் வந்துவிட்டது. உருகி ஓடிய உஷ்ணம் தாழ்வாரங்களில் மின்னிக் கொண்டிருந்தது. காற்று அசையவில்லை. நீர்க்குழாய்களில் இருந்து தண்ணீர் தெருக்களில் பீறிட்டுக் கொண்டிருந்தது. குழந்தைகள் கூச்சலிட்டுக் கொண்டு அதில் குளித்துக் கொண்டிருந்தார்கள். நான் எஸ்ஸியை வீட்டுக்குத் தூக்கிச் சென்றபோது.

மூன்று வருடங்களுக்குப் பிறகு ஒரு ஆண்டு விழாவின் போது இதையெல்லாம் நான் எழுதிக் கொண்டிருக்கிறேன். எஸ்ஸி எங்களுடைய மகனை கவனித்துக் கொண்டிருக்கிறாள். பிறக்கப் போகும் இரண்டாவதை வரவேற்கத் தயார் செய்து கொண்டி ருக்கிறாள். இப்பொழுதெல்லாம் அவள் பொம்மைகள் செய்வதில்லை. அதற்கான அவசியம் இல்லை.

நமக்கு பல மாதிரியான ஆண்டு விழாக்கள் வரும். ஆனால் இந்த விழா நான் தனிப்பட்ட முறையில் கொண்டாடுவதாகும். மூன்றாவது அவென்யூவில் அபிஷெஃப்டனின் கடை தூசு படிந்த ஜன்னல் வழியாக என்னை அழைத்த வசீகர பொம்மையில் சிறைப்படுத்தப்பட்ட எஸ்ஸியின் ஆன்மாவில் இருந்து வந்த செய்தியை நான் முதன் முதலாக பார்த்து அதன் மீது காதல் கொண்ட நாளாகும். இந்த நாளுக்கு எனக்கு பணிவான நன்றிகள்.

# உத்தரவிடு பணிகிறேன்

**ஆல்பர்ட்டோ மொராவிய**

====================

(Command, I will Obey You by Alberto Moravia)

========================================

நான் ஒரு வங்கியில் மெசஞ்சராக இருந்தேன். பணிபுரிவோரையெல்லாம் ஒரு வடிகட்டுக்கு உள்ளாக்கியபோது எனக்கு மூட்டை கட்டிவிட்டார்கள். முதலில் எனக்கு மிகவும் குழப்பமாக இருந்தது. எல்லாவிதமான உத்தரவுகளையும் பெறுவதற்கே நான் பழக்கப்பட்டிருந்தேன். மணியடிப்புகள், இண்டிகேட்டரில் பச்சை சிவப்பு சிக்னல்கள் காட்டுதல், வாடிக்கையாளர்களின் வேண்டுகோள்கள், எவருக்காவது செய்தி சொல்லச் செல்லல் இன்னபிற. திடாரென்று ஒன்றுமில்லாமல் போய்விட்டது. கால்களை மடக்கி, கைகளைக் கட்டி, சூனியத்தை வெறித்துக்கொண்டு வரவேற்பறை சோஃபாவில் அமர்வதைத் தவிர.

ஆனால் நான் தவறாகப் புரிந்து கொள்ளப்பட விரும்பவில்லை. செய்வதற்கு இனி ஒன்றுமில்லாமல் இருந்தது நான் வேலையில்லாமல் இருந்ததனால் அல்ல. யாரும் எனக்கு எவ்வித உத்தரவுகளும் பிறப்பிக்காததால்தான். ஒருகால் சிலர் இந்த வித்தியாசத்தைப் பார்க்காமலிருக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்த அளவில் வித்தியாசமிருந்தது. மிகப்பெரிய அளவில்.

விளக்கிவிடுகிறேன். வேலை தேடிச்சலித்த சில நாட்களுக்குப் பின் ஒரு நாள் காலை படுக்கையில் படுத்துக் கொண்டு, இன்னும் தூங்குவதாக என்னை நானே ஏமாற்றிக்கொள்ள முயன்று கொண்டிருந்தபோது, என் மனவியின் குரல் என்னை குதித்து எழ வைத்தது. குரல் கோபமன தொனியில் சொல்லிக் கொண்டு இருந்தது : “ இந்த நேரத்தில் என்னதான் இந்த உலகத்தில் செய்து கொண்டிருக்கிறீர்கள் படுக்கையிலங்கே ? உங்களுக்கே வெட்கமா இல்லை ? நான் உடை மாற்றிக் கொண்டிருக்கிறேன். எழுந்து முகம் கழுவிவிட்டு குறைந்த பட்சம் பயனுள்ளவராக ஆக்கிக்கொள்ளுங்கள். காலை உணவைத் தயார் செய்யுங்கள் ”.

மேலோட்டமாக அவ்வார்த்தைகள் சாதாரணமானவை. முக்கியத்துவமற்றவை. ஆனால் போர்வைகளுக்குள் சுருண்டு கிடந்த என்மீது அவை முழுவதும் வித்தியாசமானதொரு பாதிப்பை ஏற்படுத்தின. நான் எனக்கே சொல்லிக் கொண்டேன். எழுந்திரு, உடைமாற்று, உன்னைப் பயனுள்ளவனாக ஆக்கிக்கொள். காலை உணவு தயார் செய். இவைகள் உத்தரவுகள். நிஜமானவை. வங்கியில் நான் பெற்றுக்கொண்டிருந்தவைகளைப் போலவே இவைகளும் தெளிவானவை. முடிவானவை. அதிகாரமிக்கவை. இவைகள் உத்தரவுகள். இவைகளினால் தூண்டப்பட்டது போல ஏதோவொன்று என் மனதிலிருந்து கால்கள்

வழியாக பயணித்தது. உடனே நான் போர்வைகளை எறிந்தேன். தரையில் பாதங்களை வைத்தேன். பாத்ரூமுக்குச் சென்றேன். கதவைத் திறந்தேன். ஷவரைத் திறந்தேன். சுருங்கச் சொன்னால், சொல்லப்பட்டதையெல்லாம் செய்தேன்.

பின் என்னை நானே உசுப்பிக்கொண்டேன். எளிமையாகத் தோன்றிய இந்த உத்தரவுகளில் மேலும் பல உத்தரவுகள் உட்குறிப்பாக இருந்ததை உணர்ந்தேன். அதாவது இரண்டாம் மூன்றாம் தரமான உத்தரவுகள். உதாரணமாக இந்த சிறிய வாக்கியத்தை எடுத்துக்கொள்வோம். ‘காலை உணவைத் தயார் செய்’. இந்த வாக்கியம் சொன்னது : முதலில் சமயலறைக்குப் போ. இரண்டாவது, காஸ் குக்கரை ஏற்று. மூன்றாவது, காப்பியையும் நீரையும் பாத்திரத்துள் ஊற்று. நாலாவது, ப்ரெட்டை வெட்டு. ஐந்தாவது, க்ரில்லை அடுப்பில் வை. ஆறாவது, சீனி, எண்ணெய் பாத்திரங்களோடு தட்டை தயார் செய். ஏழாவது, காப்பி பானையையும் ட்டோஸ்ட்டையும் தட்டுக்கு மாற்று. எட்டாவது, படுக்கையறைக்கு தட்டைக்கொண்டுபோய் படுக்கையில் வை.

கொடுத்த கணத்திலேயே நான் என் மனைவியின் உத்தரவைச் செயல்படுத்தா விட்டால், பல்வேறு இழைகள் பின்னிப் பிணைந்த அதன் தன்மையினால், ஒன்றன்பின் ஒன்றாக பல செயல்களைச் செய்வது கடினமாகிவிடும். அதோடு, நான் ஏற்கனவே சொல்லியபடி, இந்த இரண்டாம் தரமான உத்தரவுகள் சில மூன்றாம் தரமானவைகளை உள்ளடக்கியவை. உதாரணமாக, தட்டில் வெண்ணெயை வைப்பதென்றால், ஃப்ரிஜ்ஜிலிருந்து வெண்ணெயை எடுப்பது, அதைச் சுற்றியுள்ள தாளிலிருந்து அதை விடுவிப்பது, கத்தி கொண்டு அதை வெட்டுவது, வெட்டிய துண்டுகளை உணவில் வைப்பது இன்னபிறவும். இதெல்லாம் சொல்வது என்ன ? வங்கியிலிருந்து என்னை மூட்டைகட்டி அனுப்பிய சில இயக்கமற்ற நாட்களுக்குப் பின் இயங்குகின்ற ஒரு இருப்பைக் கண்டுகொண்டேன் என்ற பிரக்ஞையை நான் மெல்ல அடைந்துகொண்டிருந்தேன் என்பதை. அப்போது நான் ஒரு ஃப்ங்ஷனரியாக இருந்தேன். இப்போது மறுபடியும் ஆகிக்கொண்டு வருகிறேன். காரணம் - வார்த்தை விளையாட்டை மன்னியுங்கள் - நான் மறுபடியும் ஃப்ங்ஷன் பண்ண ஆரம்பித்தேன்.

என் மனைவி ஒரு ஷார்ட் ஹேண்ட் டைப்பிஸ்ட். தினமும் அலுவலகம் செல்வாள். அன்று காலை அவள் எனக்கு எந்த உத்தரவும் தரவில்லை. அவள் செய்ததெல்லாம் என்னை நோக்கிக் கத்திவிட்டு ஓட்டமாகச் சென்றதுதான். “ தொலைபேசியைக் கவனித்துக் கொள்ளுங்கள். பெயர்களைக் குறித்துக்கொள்ளுங்கள்.” அது எனக்குப் போதுமானதாய் இருந்தது.

வரவேற்பறையில் அமர்ந்தேன். சோஃபாவில் காத்திருந்தேன். எதற்காக ? தொலைபேசி மணி ஒலிப்பதற்காக. அந்த தொலைபேசி அழைப்புகளுக்கு நன்றிகள். இரண்டு மணி நேர இயக்கமின்மையில் இருபது அல்லது நாற்பது அல்லது அறுபது வினாடிகள் இருப்பை, அதாவது இயக்கத்தை கொடுத்தன அவை. என்னுடைய கருத்தில் இதுவே பெரிய விஷயம். அதோடு தொலைபேசி அழைப்புகள் ஒன்றுக்கு மேலிருந்தால், எனது இருப்பிற்கு ஒரு தொடர்ந்த, முறைப்படுத்தப்பட்ட குணம் கிடைத்துவிடும். இவைகளைப் பற்றி நான் யோசித்தேன். நிமிர்ந்தபோது எனக்கு எதிரில், ஜன்னலோரம் இருந்த மேஜைமேல் டைப்ரைட்டர் இருந்தது. மிஞ்சிய அலுவலக வேலை ஏதாவது இருந்தால் முடிப்பதற்கு என் மனைவி அதைப் பயன்படுத்துவாள். முக்கியமான வார்த்தைகளைக் கொண்டிருந்தும், அந்த சமயம் சப்தமின்றி, இயக்கமின்றி இருந்த அதைப் பார்த்தபோது எனக்குள் ஒரு சகோதர உணர்வு ஏற்படுவதை நான் உணர்ந்தேன். நானும் அதைப்போலவே என் மனைவி இல்லாதபோது இயக்கமற்றும் இருக்கும்போது இயங்கிக்கொண்டும் இருந்தேன்.

நான் எனக்குள் சொல்லிக்கொண்டேன். நாம் இருவரும் சகோதர சகோதரியைப் போல.ஒரு வகையில் அந்த இயந்திரம் என்னைவிட மனிதத்தனம் மிகுந்ததாக இருந்தது. ஏனென்றால்

அதற்காவது துடிப்பான, திரும்பத் திரும்ப ஒலிக்கின்ற குரலிருந்தது. நான் அனேகமாக எப்போதுமே மௌனியாகவே இருந்தேன்.

அன்று தொலைபேசி மணி ஒலிப்பு மட்டும்தான் இருந்தது. ஆனால் எந்த நேரமும் ஒருவன் உத்தரவுகள் பெறலாம் என்பதை நடைமுறையில் நான் கண்டேன். கவனம் செலுத்தினால் போதும். வாசல் மணி ஒலித்தது. எழுந்திருக்கவும். சென்று கதவைத் திறக்கவும். யார் வந்தாரென்று பார்க்கவும். இங்கே ஒரு உத்தரவிருந்தது. தெருவோரம் இரண்டு பெண்கள் உரத்த குரலில் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். எழுந்து சென்று ஜன்னல் வழியாக என்ன நடக்கிறதென்று பார்க்க இங்கே ஒரு உத்தரவிருந்தது. சமையலறையில் தண்ணீர் சொட்டிக் கொண்டிருந்தது. குழாயை அடக்க இது ஒரு உத்தரவு. இப்படியாக. இப்படியாக.

உண்மையில் நான் சந்தோஷப்பட்டேன். ஆனால் சொட்டிக்கொண்டிருக்கும் குழாயைத் திருகி மூடுவதுதான் ஒருவனின் ஒரே வேலை என்றால் ஒருவன் வாழ முடியாது. இன்னும் முக்கியமானது தேவைப்படுகிறது. அல்லது குறிப்பிட்ட கால இடைவெளி விட்டுத் தொடர்கிற, அடிக்கடி நிகழ்கிற காரியமாயிருக்க வேண்டும். உதாரணமாக சொட்டிக் கொண்டிருக்கும் நூறு தண்ணீர் பம்ப்புகளை பத்து நிமிஷத்துக்கொருதரம் ஒவ்வொன்றையும் திருகி மூடவேண்டும். இருந்தாலும் என் மனைவி வரும்வரை ஆடாமல் அசையாமல் அமைதியாய் உட்கார்ந்திருக்கும் டைப்ரைட்டரைவிட இது எவ்வளவோ பரவாயில்லை. ஏதோ கொஞ்சம்.

அன்றிலிருந்து என் வங்கி மேனேஜரின் இடத்தை தான் பிடித்துவிட்டதுபோல என் மனைவியிடமிருந்து உத்தரவுகள் சுருக்கமாகவும், விரைவாகவும் மொத்தமாகவும் வர ஆரம்பித்தன. “ நீங்கள் ஒன்றுக்கும் உதவாதவர். எப்போதும் நேரத்தை வெட்டித்தனமாக வீணடிப்பவர். சுய நலம். ஏதாவது உபயோகமாய் இருங்கள். சுத்தப்படுத்துங்கள். துணிகளைத் துவையுங்கள். சட்டைகளைப் பெட்டி போடுங்கள். மார்க்கட்டுக்குச் செல்லுங்கள். ஏதாவது சமையல் செய்யுங்கள்.” இப்படியாக.

தினசரி உதவுவதையும் நிறுத்திவிட்டாள். நான் வேலை இல்லாமல் வீட்டுக்கு ஏதேனும் பணம் கொண்டுவர முடியாதவனாக இருப்பதால் என்னைத் தண்டிக்க அவள் நினைக்கிறாள் என்பதாக யாரும் நினைத்திருக்கலாம். ஆனால் எனக்கு இன்பம் கொடுத்துக்கொண்டிருந்தாள் என்பதை அவள் உணரவில்லை.

என்ன சொன்னேன் ? இன்பம் ? அதாவது அவள் என்னை இயங்க, அதாவது இருக்க வைத்துக்கொண்டிருந்தாள். காலைகளில் அவள் எனக்குப் பிறப்பித்த உத்தரவுகளை நான் அவள் வெளியே செல்லுமுன் எழுதி வைத்தேன். பின் நாள் முழுவதும் அவைகளைப் பூரணமாக, யந்திர மயமாகச் செய்து முடித்தேன். செய்வதற்கு எந்த உத்தரவுகளுமற்ற நேரங்களில் நான் மேன்மேலும் என் இயக்கத்திற்கு அவளையே சார்ந்துள்ளேன் என்பது பிரக்ஞையில் தட்டியது. அவள், அவள் மட்டுமே, என் கைகளை, கால்களை, விரல்களை இயக்க முடியும். இதன் பின், நன்றியுணர்ச்சி, நம்பிக்கை கலந்த ஒரு தீவிரமான அன்புணர்ச்சியை நான் அனுபவித்தேன்.

இதைப்போல நாங்கள் கிட்டத்தட்ட ஒரு வருஷம் கழித்தோம். பின்பு, பல அடையாளங்களைக் கொண்டு, குறையற்றதாகவும் இயக்கமுடையதாகவும் தோன்றிய இந்த உறவு மெல்ல அழிந்துகொண்டு வருவதை நான் உணரத்தலைப்பட்டேன். ஏற்கனவே சொன்ன உவமானத்தைத் திரும்பச் சொல்வதானால், இது ஒரு டைப்பிஸ்ட்டுக்கும் டைப்ரைட்டருக்கும்

இடையேயான உறவாயிற்று. போகப்போக, டைப்ரைட்டரில் எஞ்சும் காகிதம் போன்ற மிச்சங்களை எடுத்து சுத்தம்செய்ய வருபவனுக்கும் அதற்கும் உள்ள உறவாயிற்று.

ஒருகால் இப்படி உத்தரவுகள் தந்து என்னைத் தொல்லைப்படுத்துவதன் மூலம் என்னைத் தண்டிப்பதற்குப் பதிலாக எனக்கு ஒரு இருப்பை ஏற்படுத்த உதவுவதை அவள் உணர்ந்திருக்கலாம். ஒருகால், என்னைவிடச் சிறப்பாக அவள் உத்தரவுகளைச் செயல்படுத்தும் ஒருவனை அவள் கண்டிருக்கலாம். எப்படியோ. வெளியில் செல்லுமுன் நான் செய்ய வேண்டிய வேலைகள் என்னென்னவென்று சொல்வதை அவள் மறக்க ஆரம்பித்தாள் என்பதே உண்மை. எனவே மறுபடியும் என்ன நிகழ ஆரம்பித்ததென்றால், நான் அடிக்கடி வரவேற்பறை சோஃபாவில் கால்களை மடக்கி, கைகளைக் கட்டி, சூனியத்தை வெறித்துக்கொண்டு, முதுகில் சாவியும் நெஞ்சில் ஸ்பிரிங்கும் கொண்ட உண்மையான பொம்மையைப் போல இயக்கமின்றியிருக்க ஆரம்பித்தேன்.

ஏதோ ஒரு வெறுக்கத்தக்க அவசரத்தால் உந்தப்பட்டதுபோல என் மனைவி இருந்தாள். என்னோடு பேசாமலே ஆடை மாற்றினாள். அவளுக்கு மட்டும் காஃபி போட்டுக்கொண்டாள். ‘போய்விட்டு வருகிறேன்’கூடச் சொல்லாமல் அவசரமாக வெளிச்செல்லலானாள். சமயங்களில் பகல் பூராவும். சமயங்களில் இரவும்கூட வராமலிருந்தாள்.

இதற்கிடையில் எந்த தொலைபேசி அழைப்பும் கிடையாது. யாரும் வாசல் மணியை அழுத்தவில்லை. அவள் சொல்லாததால் நான் சந்தேகத்திலேயே எதையும் சுத்தப்படுத்தாமல் இருந்தேன். சாப்பிடுவதைப் பொறுத்தவரை அடிக்கடி நிகழாத, வரையறுக்கப் படாத, என் வயிற்றின் தூண்டுதல்களுக்கு நான் அடிபணிந்தேன். நான் பெற்ற ஒரே உத்தரவுகள் வயிற்றின் அழைப்புகள்தான். டப்பாவில் அடைக்கப்பட்டதை வைத்து நான் இதை சரிக்கட்டினேன்.

இப்படியாக எங்கள் வீடு நாளுக்கு நாள் அசிரத்தைக்கும் இருளுக்குமான இடமாகிப் போனது. தேய்க்கப்படாத தரை, கண்டபடி கிடக்கும் ஃபர்னிச்சர், சமையலறையில் அழுக்குப் பீங்கான்கள், க்ளாசுகள், மூலைகளில் வேஸ்ட் பேப்பர் துண்டுகள், நாற்காலிகளின் மீது துணிகள், சரிசெய்யப்படாத படுக்கைகள்என. என் மனைவிக்கு வெளிப்படையாகவே இவையெல்லாம் தெரிந்தன.

ஆனால் அவள் இதைப்பற்றியெல்லாம் சிரத்தை கொள்ளவில்லை என்று யாரும் முடிவுக்கு வர முடியும். ஆனால் இதையெல்லாம் பார்த்துவிட்டு அவள் எனக்கு ஒரு உத்தரவு தர - ஒரு வேளை - நினைத்திருக்கலாம். ஆனால் அது என்னவென்று என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஞாயிறுகளில் ஒரு இரண்டு மணி நேரம் அவள் வீட்டிலிருந்தாள். மிகவும் சுருக்கமான முறையில் எங்கள்வீட்டின் இரண்டு அறைகளையும் அப்போது சுத்தப்படுத்துவாள்.

ஒரு நாள் காலை நான் விழித்தபோது ஏற்கனவே வெளியே செல்வதற்குத் தயாராக உடைமாற்றியிருந்த அவள், படுக்கையின் மீதிருந்த ஒரு பெட்டியை அமைதியாய் தயார் செய்துகொண்டிருந்தாள். சொருவுகளுக்கும் பெட்டிக்குமாய் அவள் சென்று வந்துகொண்டிருந்ததை வெகு நேரம் பார்த்துக் கொண்டிருந்தேன். முடிவில் இந்த வருதலையும் போதலையும் ஒரு உத்தரவாக, ஒரு கசப்பான, வேதனை தருகின்ற, என்ன நடக்கிறதென்று அவளைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற உத்தரவாக அர்த்தப்படுத்தினேன். எனக்குள் ஏதோ வெடித்தது. வார்த்தைகளை என் இதழ்கள் உச்சரித்தன.

“ என்ன செய்கிறாய் நீ ? ”

திரும்பி என்னைப் பார்த்தாள். பின் படுக்கையில் வந்து அமர்ந்துகொண்டு சொன்னாள்.

“ டூலியோ, நாம் பிரிய வேண்டிய நேரம் வந்துவிட்டது. நான் உங்களுக்குப் புரியவைக்க எல்லா வழிகளிலும் முயற்சிகள் எடுத்தேன். எனவே சொல்லி ஆகவேண்டி நிர்ப்பந்திக்கப் படுகிறேன். நம் திருமண வாழ்வுக்கு முடிவு ஏற்பட்டு விட்டது. என்னை நேசிக்கின்ற, நானும் நேசிக்கின்ற, ஒரு மனிதனை நான் கண்டுவிட்டேன். சொல்லப் போனால் கடந்த இரண்டு மாதங்களாக நான் அவரோடுதான் வாழ்ந்து வருகிறேன்.

“ என்னுடைய இருப்பு இனி இங்கே தொடர முடியாது. நீங்கள் அதைக் கவனிக்கவில்லை. ஆனால் சில கந்தல் துணிகளையும் இந்த டைப்ரைட்டரையும் தவிர எனதென்று இங்கு எதுவுமில்லை. எப்போதும் போலவே நீங்கள் இப்போதும் அன்பாகவும் பணிவாகவும் இருக்க வேண்டும். யாரோடு வாழப்போகிறேனோ அவர் கீழே வீதியில் எனக்காக காரில் காத்திருகிறார். எனக்காக தயவு செய்து இந்த டைப்ரைட்டரை எடுத்துக் கீழே சென்று காரில் வையுங்கள். அவ்வளவுதான் நான் கேட்பது. ”

பயங்கரமானதொரு வலியை, வேதனையை நான் உணர்ந்தேன். அதன் தீவிரத் தன்மையினாலேயே, தவிர்க்கமுடியாதபடி ஒரு உத்தரவாக மாற்றப்பட வேண்டிய வேதனை. நான் சொன்னேன் :

“ ஆனால் நீ இல்லாமல் என்னால் வாழ முடியாது ”

அதுதான் உண்மையாக இருந்தது. அவளிடமிருந்து உத்தரவுகள் வராமல் என்னால் இருக்க முடியாது. ஆனால் என் வார்த்தைகளை அவள் பாணியில் அவள் புரிந்து கொண்டாள்.

“ துரதிருஷ்டவசமாக, நீங்கள் இல்லாமல் என்னால் நன்றாகவே வாழ முடியும் ”. அவள் பதிலளித்தாள். “ நீங்கள் உங்களை பயனுள்ளவராக ஆக்கிக்கொள்கிறீர்கள் என்பது உண்மை. ஆனால் அது மட்டும் போதாது. நீங்கள் அவசியமானவராகவும் இருக்க வேண்டும். இப்பொழுது நீங்கள் தேவையில்லை. அழுக்கு உறிஞ்சும் யந்திரத்தையோ மின்சாரத்தில் துவைக்கும் யந்திரத்தையோ அல்லது தொலைபேசிக்கு தானாக பதிலளிக்கும் யந்திரத்தையோ உங்களுக்குப் பதிலாக நான் வைத்துக்கொள்ளலாம்.”

என்ன வேதனை ! இட்ட உத்தரவிற்கு அடிபணிந்து கொண்டிருந்த நான் சொன்னேன் : “ உன்னை நான் போக விட மாட்டேன். ”

அவள் உறுதியாகச் சொன்னாள் : “ குழந்தை மாதிரி நடந்து கொள்ளாதீர்கள். உடை மாற்றிக்கொள்ளுங்கள். டைப்ரைட்டரை எடுத்துக்கொண்டு போய் காரில் வையுங்கள். பெட்டியை நானே எடுத்து வருகிறேன். ”

நாங்கள் இருவரும் ஒன்றாக வாழ்ந்ததிலிருந்து முதல் முறையாக என் முன் முரண்பட்ட இரண்டு உத்தரவுகள். ஒரு பக்கம் என் வேதனை அவளைப் போகவிடாதே என உத்தரவிட்டது. மறுபக்கம் டைப்ரைட்டரைக் கீழே கொண்டுபோகச் சொல்லி அவளே உத்தரவிடுகிறாள். எதைச் செய்வது என்று சிந்திக்க ஆரம்பித்தேன். இதற்கிடையில் அவள் உத்தரவிட்டபடி உடை மாற்றிக்கொண்டேன். என் மனைவி வந்துகொண்டும் போய்க்கொண்டும் இருந்தாள். பின் பெட்டியை மூடினாள். கண்ணாடி முன் சென்றாள். என் பக்கம் முதுகு காட்டி.

என்னுள் உணர்வு செயல்பட்டது. ‘ நீ என்னைவிட்டு போக முடியாது ‘ என்று சொல்லிக்கொண்டே அவள்மீது பாய்ந்தேன்.

அவள் கழுத்தைப் பிடித்தேன். எல்லாமே சுருக்கமாகவும் எளிதாகவும் தன்னிச்சையாகவும் நடந்தேறியது. திடாரென்று நொண்டியானதுபோல் என்னையே தள்ளுமளவுக்கு அவள் உடல் கீழே சரிய ஆரம்பித்ததை உணர்ந்ததும் நான் அவளை இழுத்து வந்து படுக்கையின் குறுக்கே கைகளை நீட்டி மல்லாக்க கிடத்தினேன்.

அடுத்த உத்தரவை நிறைவேற்ற நேரமாகிவிட்டிருந்தது. டைப்ரைட்டரை அதன் உறைக்குள்ளிட்டேன். ஃப்ளாட்டைவிட்டு கீழே க்ரௌண்ட் ஃப்ளோருக்கு லிஃப்டில் சென்றேன். கீழே காரிருந்தது. வாசல் கதவுக்கு எதிரில். கண்ணாடி மின்னியதால் நான் ட்ரைவரைப் பார்க்க முடியவில்லை. காரைச்சுற்றி வந்து ‘டிக்கி’யைத் திறந்து டைப்ரைட்டரை உள்ளே வைத்தேன். பின் மறுபடியும் மேலே ஃப்ளாட்டுக்கு சென்றேன்.

வரவேற்பறை சோஃபாவில் அமர்ந்தேன். கால்களை மடக்கி. கைகளைக் கட்டிக்கொண்டு. சூனியத்தை வெறித்துக்கொண்டு. உத்தரவுகளுக்காக காத்துக்கொண்டு.

----

ஆல்பர்ட்டொ மொராவியா பற்றிய குறிப்பு

ஆல்பர்ட்டோ மொராவியா (1907 - 1990 )என்ற பெயரில் எழுதிய ஆல்பர்ட்டொ பின்ஷெல் ஒரு இத்தாலிய எழுத்தாளர். சிறுகதைகளும் நாவல்களும் எழுதியுள்ளார். பத்திரிகையாளராகவும் இருந்துள்ளார். இருபதாம் நூற்றாண்டின் ஒரு முக்கியமான இத்தாலிய இலக்கிய அவர் இருந்தார். எட்டு வயதில் ஒருவிதமான எலும்பு காச நோயால் பாதிக்கப்பட்டார். அதன் காரணமாக படுக்கையிலே கழித்த ஆண்டுகளில் ஃப்ரென்ச், ஜெர்மன், ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்று பல எழுத்தாளர்களைப் படித்தார். தனிமை, விரக்தி போன்ற மனோ நிலைகளை அவருடைய எழுத்து ரொம்ப அற்புதமாக வெளிப்படுத்தியது.

ruminagore@yahoo.com

# கொரியர் (ஓ. ஹென்றி யின் ‘By Courier’ கதையின் மொழிபெயர்ப்பு)

**ஏலங்குழலி**

அந்த வேளையில் பார்க்குக்கு அதிகம் பேர் வருவதில்லை. பார்க்கின் பெஞ்சு ஒன்றில் அமர்ந்திருந்த இளம்பெண், வரப்போகும் வசந்தகாலத்தின் முன்னறிவிப்பை ரசிப்பதற்காகவே அங்கு அமர்ந்திருந்தாள் என்பது யாருக்கு தெரிந்திருக்கும்.

அமைதியாகத்தான் உட்கார்ந்திருந்தாள். முகத்தில் கவலை படிந்திருந்தது. கண்களில் தெரிந்த ஏக்கத்திற்குக் காரணமான சம்பவம் சமீபத்தில்தான் நிகழ்ந்திருக்க வேண்டும்; அவளது ரோஜாப்பூ முகத்திலோ, இளமையின் செழிப்பில் அழகாக வளைந்த உதட்டிலோ துக்கத்தின் சாயல் இன்னமும் படிந்திருக்கவில்லை.

அவள் அமர்ந்திருந்த பெஞ்சை ஒட்டிச்சென்ற பாதை வழியாக, இளைஞன் ஒருவன் நடந்து வந்தான். நல்ல உயரம். அவனது கைப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு, ஒரு சிறுவன் ஓட்டிக்கொண்டு வந்தான். பெஞ்சில் அமர்ந்திருந்த பெண்ணைப் பார்த்ததும், இளைஞனின் முகம் சிவந்தது; உடனேயே வெளிறியது. அவளது முகத்தை வலுடன் பார்த்தவாறு, பெஞ்சை நெருங்கினான். மிகக்கிட்டத்தில் அவளைக் கடந்து சென்ற போதிலும், அவனது வருகையை உணர்ந்ததற்கான அறிகுறி எதுவும் அவளது முகத்தில் புலப்படவில்லை.

அவளைக் கடந்து சற்று தூரம் சென்றவுடன், சட்டென்று அருகில் இருந்த பெஞ்சு ஒன்றில் உட்கார்ந்தான். சிறுவன், தன் கையிலிருந்த பெட்டியைத் தரையில் வைத்துவிட்டு ர்வத்துடன் இளைஞனைப் பார்த்தான். இளைஞன், பாக்கெட்டிலிருந்து கர்சீப்பை எடுத்து முகத்தைத் துடைத்துக்கொண்டான். களையான இளைஞன்; உயர்தரமான கர்ச்சீஃப். சிறுவனிடம் பேசினான்:

“நான் கொடுக்கும் செய்தியை, அங்கே பெஞ்சில் உட்கார்ந்திருகும் இளம்பெண்ணிடம் தரவேண்டும். கேட்டுக்கொள்: நான் இப்போது ‘ஸான் ஃப்ரான்ஸிச்கோ’ விற்குப் பயணிப்பதற்காக, ரயில் நிலையத்திற்கு செல்கிறேன். இன்னும் சில நாட்களில் வர இருக்கும் அலாஸ்கா வேட்டையில் கலந்துகொள்ளப் போகிறேன். ‘தன்னைப் பார்க்கக்கூடாது; பேசவும் கூடாது’ என்று அவள் எனக்குக் கட்டளை இட்டிருப்பதால், அவளது மனசாட்சியிடம் முறையிடுவதற்கு இந்தக் கடைசி வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்கிறேன் என்று சொல். ஒரு விஷயத்திற்கான காரண காரியங்களை சரிவர ராயாமல், மனம் போன போக்கில், மற்றவரைக் காயப்படுத்துவது அவளது குண விசேஷங்களில் ஒன்றல்ல என்பதையும் நான் அறிந்திருப்பதாகச் சொல். இந்த ஒரு விஷயத்தில் மட்டும், தர்மத்தையும், நியாயத்தையும் அவளுக்கு உணர்த்துவதற்காக, அவளது கட்டளையை நான் மீற வேண்டியிர்ருகிறது என்பதையும் சொல். போ. “

இளைஞன் சிறுவனின் கையில் அரை டாலரைத் திணித்தான். அழுக்குப் படிந்த்திருந்த முகத்தில் கண்கள் பளிச்சென்று ஒளிர, சிறுவன் அவனை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்தான். உடனேயே பெஞ்சில் அமர்ந்திருந்த பெண்ணின் அருகில் ஓட்டமாக ஓடிப்போய் நின்றான். சற்று தயக்கத்துடன்தான் அவளை நெருங்கினான் என்றாலும், அவனது பார்வையில் பயம் இல்லை. தலையில் அணிந்திருந்த கிழிந்த தொப்பியை ‘சலாம்’ வைக்கும் விதமாக ஒரு முறை தொட்டான். அவள் அருவருப்போ, ர்வமோ இல்லாத பார்வை ஒன்றை அவன் மீது வீசினாள்.

“யம்மா,” என்றான். “அந்தா கீறாரே ளு, உன்னாண்ட இன்னாமோ சவுண்டு உடணுமாம். உனுக்கு அந்தாளை தெர்யாதுன்னு வைய்யி, என்னாண்ட சொல்லு, நம்ம செக்கூருட்டியை இளுத்துக்கினு வர்றேன். உனுக்கு அவுரைத் தெர்யும்னா, அவுரு என்னாண்ட சொன்னதை உனுக்கு சொல்லிவுடறேன். ரைட்டா ?“

அவள் மெல்லிய ச்சர்யத்துடன் அவனைப் ஏறிட்டாள்.

“ சௌண்ட் ?” அவள் குரலின் இனிமையில் லேசான ஏளனம் தெறித்தது. “தொழில் மாறிவிட்டார் போலிருக்கிறது. புதுமையான விஷயம்தான். அவரை எனக்குத் தெரியும்; அதனால் நீ யாரையும் துணைக்கு அழைத்து வரத்தேவையில்லை. என்ன சொல்லவேண்டுமோ, அதைச் சீக்கிரம் சொல்லிவிடு. பார்க்குக்கு வந்து செல்லும் எல்லோரது கவனத்தையும் கவர்வதில் எனக்கு விருப்பமில்லை.“

“அது இன்னாவோ, “ பயன் சட்டையை இழுத்துவிட்டுக்கொண்டான். “நா சொல்லுறதைக் கேட்டுக்க. அலாஸ்காவோ, இன்னாவோ ஊராம்; அங்கன எல்லாத்தையும் சுட்டுகினு அலையப்போறாங்களாம். அதுக்காக இப்பமே ரயிலு புடிக்கப் போறாராம். ‘என்னையப் பாக்கக் கூடாது, என்னாண்ட ரவுசு பண்ணக்கூடாது’ என்னு சொல்டியாம். அவரு பக்கம் என்ன நெசம்னு தெர்யாம நீயி ராங் பண்ணிட்டியாம், அதான், உன்னாண்ட எடுத்து சொல்ல சொன்னாரு. ‘ஒரே ஒரு தபா பேஸ்ட்டு போயிர்றேன்’ னு சொல்ல சொன்னாரு. “

இளைஞன் கையாண்ட வழியில் லயித்துத்தானோ, அல்லது பையன் பிரச்சனையை எடுத்துச் சொன்ன நூதன வழி அவளுக்குப் பிடித்துப் போனதினால்தானோ என்னமோ, அவள் அந்தப் பொடியனை அங்கிருந்து விலகச் சொல்லவில்லை. அவள் கண்களில் எழும்பிய ர்வம் மறையவுமில்லை. பார்க்கில் ஒரு மூலையிலிருந்து நசுங்கிப் போன பதுமை ஒன்றைப் பார்த்தபடி, அவனிடம் பேசினாள்:

“என்னைப் பற்றியும், என உள்ளத்தில் நான் சுமந்திருக்கும் கொள்கைகளைப் பற்றியும் அவருக்கு நன்கு தெரியும் என்பதைச் சொல், அவரிடம். நான் யாருக்காகவும், எப்போதும் அவற்றை மாற்றிக்கொண்டதில்லை என்பதைச் சொல். இந்த விஷயத்தைப் பொறுத்தவரை, விசுவாசமும், நாணயமும் எனக்கு முக்கியம். நான் என் மனதை நன்றாகப் புரிந்துகொண்டிருக்கிறேன்; அதன் சலனங்களைத் தெரிந்துகொண்டிருக்கிறேன் என்பதையும் சொல். யாரோ சொன்னார்கள் என்பதற்காகவோ, சரியான விதத்தில் ராயமலோ ஒரு முடிவுக்கு வருமளவுக்கு நான் முட்டாளல்ல. ‘விஷயத்தைத் தெரிந்துகொண்டே தீருவேன்’ என்று அவர் பிடிவாதமாக இருப்பதால், இதோ, நானும் சொல்கிறேன்.”

“அம்மா கேட்டபடி, ரோஜாப்பூவைப் பறித்துக்கொடுப்பதற்காக நான் அன்று அந்தி வேலையில் தோட்டத்திற்கு வந்த பொழுது, அவரையும், மிஸ் ஷ்பர்ட்டனையும் பூச்செடிகளூக்கிடையில் பார்த்ததாகச் சொல். காட்சி என்னவோ மிக அழகாகத்தான் இருந்தது; நான் தான் அதை ரசிக்கும் மனநிலையில் இல்லை. அவர்கள் இருந்த நிலை, எல்லாவற்றையும், எந்த சந்தேகமும் இன்றி எனக்குக் காட்டிக்கொடுத்துவிட்டது. பூக்களையும் எனது கொள்கைகளையும் தோட்டத்திலேயே விட்டுவிட்டு, நான் விலகிவிட்டேன். இதைப் போய் அவரிடம் சொல்.”

“’வந்து…ங்…’நெலை’யின்னா இன்னா ?”

“காதலர் நெருங்கி நின்ற என்று அர்த்தம்.”

பையனின் காலடியில் சரளைக் கற்கள் பறந்தன. அடுத்த பெஞ்சின் அருகில் போய் நின்றான். இளைஞனின் கண்கள் அவனைச் சாப்பிட்டு விடுவது போல் பார்த்தன. பையனின் கண்கள் ஒளிர்ந்துகொண்டிருந்தன.

“அந்தம்மா பூவு பறிச்சுக்குனு போவ தோட்டத்துக்குள்ளாற வந்தப்ப, நீயும் இன்னொரு ஃபிகரும் கைகோர்த்துக்கினு ‘சீன்’ காட்டிக்கினு இருந்தீங்களாம். ‘சோ’வெல்லாம் நல்லாத்தான்

இருந்துச்சாம்; அவங்களுக்குத்தான் ‘சீனு’ புடிக்கலியாம். அதான், உங்களை ரயிலு பிடிக்கப் போகச் சொல்லுறாங்க.”

இளைஞன் மெல்லச் சீட்டியடித்தான். அவனது கண்களில் மின்வெட்டு ஒன்று பாய்ந்து மறைந்தது. சட்டென்று பாக்கெட்டிற்குள் கைவிட்டு, சில கடிதங்களை வெளியே எடுத்தான். அவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, இன்னொரு வெள்ளி நாணயத்துடன் பையனின் கைகளில் திணித்தான்.

“இதை அவளிடம் கொடு. இந்தக் கடித்தைப் படிக்கச் சொல். இதைப் படித்தால், எல்லாம் தெள்ளத்தெளிவாகிவிடும் என்பதை விளக்கு. அவள் தன் நெஞ்சத்தில் சுமந்திருக்கும் கொள்கைகளோடு, சிறிது நம்பிக்கையையும் வைத்திருந்தால், இத்தனை நாள் பட்ட வேதனையைத் தவிர்த்திருக்கலாம் என்று சொல். அவள் மதித்துப் போற்றும் விசுவாசமும் நாணயமும் என்றும் மாறியதில்லை என்பதைச் சொல். அவள் பதிலுக்கு நான் காத்திருக்கிறேன் என்று சொல்.”

பையன் அவள் முன் நின்றான்.

“யம்மா, அவுரு ‘சீன்’ ஒன்னியும் காட்லியாம். நீத்தான் தப்பாப் புர்ஞ்சுக்கினியாம். இந்த ‘லட்டரப் பட்ச்சுப்பாக்க சொல்லு; அல்லாம் புர்யும்’ங்குறாரு. பட்ச்சுப் பாரும்மா; அந்தாளு நல்லவர்த்தான்னு எனக்குத் தோணுது.”

அந்தப் பெண் கடிதத்தைக் கொஞ்சம் சந்தேகத்துடன் பார்த்துவிட்டு, பிரித்துப் படித்தாள்.

“அன்புள்ள டாக்டர் ர்னால்ட்,

என் பெண்ணிற்கு நீங்கள் அளித்த பேருதவிக்கு மிக மிக நன்றி. மார்பு வலி ஏற்பட்டு, திருமதி வால்ட்ரனின் தோட்டத்தில் நடந்த பார்ட்டியில் அவள் நிலைதடுமாறி விழுந்த போது, அருகில் இருந்து அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு நீங்கள் முதலுதவி அளித்திருக்காவிட்டால், நாங்கள் அவளை இழந்தேயிருப்போம். நீங்கள்தான் பெரிய மனது வைத்து, அவளது கேஸை எடுத்துக்கொண்டு ட்ரீட்மெண்ட் செய்யவேண்டும்.

இவண்,

ராபர்ட் ஷ்பர்ட்டன். “

அவள் கடித்தை இரண்டாக மடித்து, பையனிடம் நீட்டினாள்.

“இன்னாமா சொல்ற நீயி ?” என்றான் அவன்.

அவளது முகம் சட்டென்று மலர்ந்தது. கண்களில் ஈரம் மின்னியது.

“அந்தாள் கிட்ட போயி...“ என்றாள் தழுதழுத்த குரலில், “அவன் லவ்வர் அவனைப் பாக்க விரும்புறா’ ன்னு சொல்லு.”

## *** ஒரு மழை இரவில்...

(O 'Henryயின் 'After Twenty Years ' கதையின் தமிழாக்கம்)

போலீஸ்காரர் ரோட்டில் கம்பீரமாக நடை பயின்றுகொண்டிருந்தார். தெருவில் குறுக்கும் நெடுக்குமாகச் சென்று கொண்டிருந்த மற்றவர்களின் கவனத்தைக் கவர வேண்டுமென்பதற்காக அவர் நடை பழகவில்லைஅஅவர் நினைத்திருந்தாலும் முடிந்திருக்காது; இரவு மணி பத்துதான் என்றாலும், மழையும், சிலீரென்று அடித்த காற்றும் மக்களை தெருக்களிலிருந்து விரட்டிவிட்டன.

ஒவ்வொரு கதவும் பூட்டியிருக்கிறதா என்று சரி பார்த்துக்கொண்டே சென்றார். கையிலிருந்த தடியைச் சுழற்றியபடி, தெருவின் ஒவ்வொரு மூலையிலும் பார்வையைச் சுழலவிட்டு அவர் நடப்பதைக் கவனிக்கையில், நாட்டின் அமைதியைக் காப்பதையே பணியாகக் கொண்டு செயல்படுத்தும் கடமை வீரனை நேருக்கு நேர் பார்ப்பது போல்தான் இருந்தது. அவர் ரோந்து போய்க்கொண்டிருந்த இடம் சலனமற்று இருந்தது. 'மினுக் ' 'மினுக் ' கென்று வெளிச்சத்தைக் கொடுத்துக்கொண்டு சில பெட்டிக்கடைகள் திறந்திருந்தன; மற்றவை அநேகமாகக் கம்பெனிகள். இரவு வெகு நேரம் திறந்து வைக்கும் வழக்கம் இல்லை என்பதால், எப்பொழுதோ மூடப்பட்டுவிட்டன.

ஒரு கட்டிடத்தில் பாதி வரையில் வந்த போது, மெக்கானிக் கடை ஒன்றின் மூடிய வாயிலில், பற்ற வைக்காத சிகரெட்டைக் கடித்தபடி ஒருவன் நின்றுகொண்டிருப்பதை அவர் கவனித்தார். அதே கணத்தில் அவரை அவனும் பார்த்தான். அவசரமாகப் பேசினான்.

'ஒண்ணுமில்ல சார், ' என்றான். 'நான் என் நண்பனுக்காகக் காத்துக்கிட்டிருக்கேன். இருபது வருஷத்டுக்கு முந்தி ஏற்படுத்திக்கிட்ட அப்பாயிண்ட்மெண்ட். அதிசயமா இருக்கா ? அது ஒரு பெரிய கதை. நான் ஒண்ணும் தப்பான காரியத்துக்காக இங்கக் காத்துக்கிட்டு இருக்கலைன்னு நீங்க முடிவு செய்ய விரும்பறீங்கன்னா அந்தக் கதையைச் சொல்றேன். இப்ப இந்த மெக்கானிக் கடை இருக்கில்ல ? இருபது வருஷத்துக்கு மிந்தி இங்க ஒரு ஓட்டல் இருந்துச்சு. 'பிக் ஜோ ப்ரேடி 'யோட ஓட்டல். '

'அஞ்சு வருஷத்துக்கு முந்தி வரை இருந்துச்சு, ' என்றார் போலீஸ்காரர். 'அப்புறம் இடிச்சிட்டாங்க. '

கடை வாயிலில் நின்றிருந்தவன், வாயிலிருந்த சிகரட்டைப் பற்றவைத்தான். தீக்குச்சியின் மெல்லிய ஒளி பரவியது. சதுர முகவாய், சிறிய, ஒளிவீசும் கண்கள், சோகையடைந்த முகம். வலது புருவத்திற்கு மேல் ஒரு சிறிய வெள்ளைத் தழும்பு. கழுத்தின் கட்டியிருந்த கர்சீப்பில் ஒரு வைரம் பொருத்தமில்லாமல் ஜொலித்தது.

'இருபது வருஷத்துக்கு முந்தி, இதே நாள் ராத்திரி, நானும் என் ஃப்ரெண்டு ஜிம்மி வெல்ஸ்ஸும் 'பிக் ஜோ ப்ரேடி ' ஓட்டல்லதான் சாப்பிட்டோம். ஜிம்மிதான் எனக்கு எல்லாம். நானும் அவனும் இங்க ஒண்ணத்தான் வளர்ந்தோம்; அண்ணன் தம்பி மாதிரி. அவனுக்கு இருவது வயசு; எனக்குப் பதினெட்டு. அடுத்த நாள் காலைலே நான் பொழைப்புக்காக ஊரை விட்டுப் போறதாக ஏற்பாடு. ஜிம்மி வரமாட்டேன்னிட்டான். அவனுக்கு நியூ யார்க்தான் உலகம். அதைத்தவிர ஒண்ணும் தெரியாது; புடிக்காது. இருவது வருஷம் விட்டு இதே

எடத்துல சந்திக்கிறதாக அன்னிக்குப் பேசிக்கிட்டோம். வாழ்க்கைல முன்னுக்கு வர இருவது வருஷம் போதும்னு நெனைச்சோம்... '

'இது கூட வித்தியாசமா இருக்கே, ' என்றார் போலீஸ்காரர். 'இருவது வருஷம்கிறது கொஞ்சம் அதிகமாத் தெரியலை ? இடையில உங்கள் நண்பர்கிட்டேயிருந்து எந்தத் தகவலும் இல்லையா ? '

'கொஞ்ச நாள் வரையில பேசிக்கிட்டிருந்தோம், ' என்றான் அவன். 'அப்புறம் விட்டுப் போச்சு. நான் மேற்குப் பக்கம் போயிட்டேன்ல ? சுத்திக்கிட்டே இருந்தேன். ஆனா ஜிம்மி மேலே எனக்கு நம்பிக்கை இருக்கு; ரொம்ப நாணயமான் ஆள் சார். சொன்னா சொன்னதைக் காப்பாத்துவான்; மறக்க மாட்டான். ஆயிரம் மைல் கடந்து வந்திருக்கேன்; அவனைப் பாத்திட்டா, நான் வந்தது அர்த்தம் இருக்கும். '

அவன் தன் கையிலிருந்த வாட்சைப் பார்த்தான். அதன் டயல் முழுதும் சின்னஞ்சிறிய வைரங்கள் மின்னி ஒளிர்ந்தன.

'பத்தடிக்க மூணு நிமிஷம் இருக்கு, ' என்றான். 'சரியா இதே நேரத்துக்குத்தான் அன்னிக்கு நாங்க பிரிஞ்சு போனோம். '

'நல்ல காசு பாத்திருப்பீங்க போல, ' என்றார் போலீஸ்.

'கண்டிப்பா. ஜிம்மியும் என்னை மாதிரி நாலு காசு பாத்திருந்தன்னா, சந்தோஷமா இருக்கும். எதையும் மெதுவாத்தான் செய்வான் அவன். நம்ம கேசு அப்படியில்லியே ? மேற்கேயெல்லாம் புத்தியை உபயோகப்படுத்தணும்; அப்பத்தான் பொழைக்க முடியும். நியூ யார்க் ரொம்ப டல்லு; இங்க குப்பை கொட்டினா புத்தி மழுங்கிப் போயிறும். '

போலீஸ்காரர் தடியை உருட்டிக்கொண்டு நகரத்தொடங்கினார். 'அப்ப நான் கிளம்பறேன். உங்க நண்பர் வந்தாருன்னா பாருங்க. பத்து மணிக்கு ஷார்ப்பா அவர் வரலைன்னா கெளம்பிறுவீங்களா ? '

'சேச்சே. அரை மணி நேரமாவது காத்துக்கிட்டு இருப்பேன். ஜிம்மி உசிரோட இருந்தான்னா, கண்டிப்பா என்னைப் பாக்க வருவான். நீங்க போய்ட்டு வாங்க. '

'குட் நைட், ' பூட்டுக்களைச் சோதித்தவாறு, போலீஸ்காரர் நகர்ந்தார்.

மழை வலுத்தது. காற்று மென்மையை இழந்து, தீவிரமடைந்தது. தெருவில் மிச்சமிருந்த ஒன்றிரண்டு வழிப்போக்கர்கள் கோட்டுக்களில் மறைந்துகொண்டு மௌனமாக நடந்தனர். மெக்கானிக் கடையின் வாயிலில், சிகரெட் புகைத்தவாறு, இருபது வருடங்களுக்கு முன் நண்பனுடன் செய்துகொண்ட சத்தியத்தைஅஅபத்தமான சத்தியத்தைக்அகாப்பாற்ற, அவன் இன்னமும் காத்துக்கொண்டிருந்தான்.

பத்தடித்து இருபது நிமிடங்கள் வரை அவன் காத்திருப்பு நீடித்தது. அவற்றின் முடிவில், உயரமாக, கோட்டு அணிந்த மனிதன் ஒருவன் தெருவின் மறுபக்கத்திலிருந்து அவனை நோக்கி வந்தான்.

சந்தேகத்துடன் அவனைப் பார்த்துவிட்டு, 'பாப் ? நீதானா ? ' என்றான்.

'ஜிம்மி ? ஜிம்மிதானே ? ' வாயிலிருந்தவன் மகிழ்ச்சியுடன் அவனை அணுகினான்.

'டேய்! வந்திட்டியா ? ' வந்தவன் ஆவலுடன் வனது கைகளைப் பிடிட்டுக்கொண்டான். 'நீ இங்க இருப்பேன்னு எனக்குத் தெரியுண்டா. எவ்வளவு நாளாச்சு! இருவது வருஷம்னா சும்மாவா ? அப்ப இருந்த ஓட்டல் இப்ப இல்லைஅஇருந்திருந்தா இன்னொரு டின்னர் சாப்பிட்டிருக்கலாம், இல்ல ? அப்புறம் ? மேற்கே போனியே, அங்கேயெல்லாம் எப்படி ? '

'நான் கேட்டதெல்லாம் கெடைச்சிருச்சு. நீ ரொம்ப மாறிட்ட, ஜிம்மிஅஉன்னை இவ்வளவு உயரமா எனக்கு நெனைவில்லை. '

'இருவது வயசுக்கப்புறம் கொஞ்சம் வளர்ந்துட்டேன். '

'நல்லா இருக்கியா ? வேலையெல்லாம் எப்படி ? '

'சுமாரா இருக்கு. கவர்மெண்ட்டுல வேலை. வாயேன், அப்படியே நடந்து போவலாம். எனக்குத் தெரிஞ்ச எடம் ஒண்ணு இருக்குஅநெறைய பேசணும் உன்கூட. '

இருவரும் கை கோர்த்துக்கொண்டு தெருவில் இறங்கி நடந்தனர். இருவது வருடங்கலுக்குப் பிறகு நண்பனைச் சந்தித்த களிப்பில், மேற்கேயிருந்து வந்தவன் தன்ச் அரித்தை விலாவாரியாகச் ச்ல்ல ஆரம்பித்தான். கோட்டின் நுனியை இழுத்து விட்டவாறு, மற்றவன் ஆவலுடன் கேட்டுக்கொண்டிருந்தான்.

தெருக்கோடியில் இருந்த ஃபார்மசி ஒன்றின் விள்ளக்குகள் தெருவை ஒளிவெள்ளத்தில் பாய்ச்சியிருந்தன. நண்பர்கள் இருவரும் ஏறக்குறைய ஒரே நேறத்தில் ஒருவர் முகத்தொ இருவர் பார்த்துக்கொண்டனர்.

மேற்கேயிருந்து வந்தவன் சட்டென்று தனது கையை விடுவித்துக்கொண்டான்.

'யாருய்யா நீ ? நீ ஜிம்மி வெல்ஸ் இல்லை, ' என்றான் வெடுக்கென்று. 'இருவது வருஷமானாலும் அறுவது வருஷமானாலும், ஒரு மனுஷனோட நீள மூக்கு சப்பையாக முடியாது. '

'ஆனா நல்ல மனுஷன் கெட்டவனாகலாம், ' என்றான் மற்றொருவன். 'பத்து நிமிஷமா நீ அரெஸ்ட்டுல இருக்கே, பாப். சிகாகோக்காரங்க உன்னை விசாரணை செய்யணுமாம், கூட்டிக்கிட்டு வரசொன்னாங்க. நீயா வர்றியா, இல்ல... ? நீயே வர்றியா ? நல்லது. போலீஸ் ஸ்டேஷனுக்கு போறதுக்கு முந்தி, உனக்கொரு லெட்டர் தர்றேன். கான்ஸ்டபிள் வெல்ஸ் எழுதியனுப்பினாரு. படிச்சுப் பாரு. '

மேறேயிருந்த வந்தவன் லெட்டரை மெல்லப் பிரித்தான். படித்து முடித்த போது, அவனது கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன. சிறிய லெட்டர்தான்.

'பாப்: நான் சரியான நேரத்திற்கு வந்துவிட்டேன். நீ சிகரெட் பற்றவைத்த வெளிச்சத்தில் உன்னைப் பார்த்தேன்; சிகாகோவில் தேடப்படும் ஆள் நீதான் என்பதைப் புரிந்துகொண்டேன்.

என்னால் அந்த காரியத்தைச் செய்ய முடியவில்லை; அதனால்தான் வேறொருவனை அனுப்பி வைத்தேன்.

ஜிம்மி. '

# செவ்வாயின் மீது வீழ்வது

**ஜியோஃப்ரி ஏ லாண்டிஸ் (அறிவியல் சிறுகதை தமிழில் : துக்காராம் கோபால்ராவ்)**

(அனலாக் அறிவியல் புனைகதை இதழிலிருந்து : Falling Onto Mars by Geoffrey A. Landis )

நாம் விரும்புவதுபோல

வரலாறு இருக்க வேண்டியதில்லை...

செவ்வாய் கிரகத்தின் மக்களிடம் எந்தவித இலக்கியமும் இல்லை. செவ்வாயில் குடியேறுவதன் பிரச்னைகள் தரும் கொடுமைக்கு நடுவே, பூமியிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களுக்கு எழுதுவதற்கு நேரமில்லை. ஆகவே அவர்களிடம் கதைகளே இல்லை. குழந்தைகளிடம் சொன்ன கதைகளோ அவர்கள் புரிந்துகொள்ள இயலாதவை. இந்தக் கதைகளும் இந்தக் குழந்தைகள் தங்கள் குழந்தைகளுக்குச் சொல்பவை. இவைகளே செவ்வாயினரின் செவிவழிக்கதைகள்.

இந்தக் கதைகளில் ஒன்று கூட காதல் கதை அல்ல.

அந்தக் காலத்தில், மக்கள் வானத்திலிருந்து விழுந்தார்கள். காவி வண்ண வானத்தின் வழியே பறக்கும் கலங்களிலிருந்து விழுந்த மெல்லிய அலுமினிய உருளைகளுக்குள் திணிக்கப்பட்டிருந்த மானுடம் பாதி இறந்தும், மீதப்பாதி அரைகுறை உயிரோடும் இருந்தன. விழுந்த வேகத்திலும், மெல்லிய அலுமினியத்தாலும் விழுந்த கணத்திலேயே வெடித்து உடைந்தன இந்த உருளைகள். அவற்றிலிருந்து உடல்களும், விலை மதிக்கவியலா காற்றும் ஏறத்தாழ காற்றற்ற செவ்வாயில் சிதறின. இருந்தும் அவை விழுந்தன. அலை அலையாய், மனிதத்தின் கழிவாக அக்கறையின்றி விண்வெளியில் வீசப்பட்ட கலங்களாக செவ்வாயின் குழிகள் நிறைந்த பாலைவனங்களில் விழுந்தன.

21ஆம் நூற்றாண்டின் மத்தியில் பூமியின் அரசாங்கங்கள் மரண தண்டனையை ஒழித்திருந்தன. ஆனால், கொலையையோ கற்பழிப்பையோ அல்லது பயங்கரவாதத்தையோ ஒழித்திருக்க முடியவில்லை. சில குற்றவாளிகள் எந்த சீரமைப்புக்கும் அப்பாற்பட்ட வன்மம் கொண்டவர்களாக அறியப்பட்டிருந்தார்கள். சமூகத்துக்கு திருப்பி அனுப்ப முடியாத அளவுக்கு வன்முறையும் தந்திரமும் கொண்டவர்களாக உடைந்தவர்களாக உடைக்கப்பட்டவர்களாக இருந்தார்கள். பூமியில் இருக்கும் அரசாங்கங்களுக்கு இன்னொரு உலகத்துக்கு இவர்களை தபாலாக அனுப்பி விடுவதும், அங்கு இவர்களாக வாழ முடிந்தால் வாழ்ந்து பார்த்துக்கொள்ளட்டும் என்பதும் துல்லியமான தீர்வாக இருந்தது. அங்கு வாழ

முடியவில்லை என்றால் அது அவர்களின் குற்றமே, அதற்கான பழி பூமியில் இருக்கும் எந்த ஒரு நீதிபதியையும் சார்ந்திராது.

யார் விலைமலிவாக அலுமினியக்கப்பல்களும் உருளைகளும் பண்ணித்தர ஒப்புக்கொண்டார்களோ அவர்களுக்கே எல்லா ஒப்பந்தங்களும் சென்றன. சிறைக்கைதிகளுக்கு தேவையான உணவும், காற்றும் தண்ணீரும் இல்லையென்றாலோ, கொடுக்கப்பட்ட உயிர்வாழத்தேவையான பொருட்கள் தரம் குறைந்தவையாக இருந்தாலோ என்ன ? யார் சொல்லப்போகிறார்கள் ? பயணமோ ஒருவழிப்பாதை. விண்கலங்கள் கூட திரும்பி பூமிக்கு வரபோவதில்லை. பூமியிலிருந்து விண்கலம் கிளம்புவதற்கு தாக்குப்பிடித்தால் போதுமானது. ஏன் ஒரு சில விண்கலங்கள் பூமியிலிருந்து கிளம்பி கொஞ்ச நேரத்திலேயே உடைந்து சிதறிப்போனாலும் வருத்தப்பட யாரும் இல்லை. எப்படியாகினும், சிறைக்கைதிகள் பூமிக்குத் திரும்பி வரபோவதில்லை.

எனது தாத்தாவின் தாத்தாவின் தாத்தா மோகன், ஐந்தாவது அலையில் செவ்வாய்க்கு வந்ததாகச் சொன்னார்கள். எங்கள் குடும்ப செவிவழிக்கதைப்படி மோகன் ஒரு அரசியல் கைதி. உதவி மறுக்கப்பட்டவர்களின் உரிமைக்காக போராடிய காரணத்தால் சிறைக்கு அனுப்பப்பட்டவர்.

பூமியின் அரசாங்கங்கள் அரசியல் கைதிகளை செவ்வாய்க்கு அனுப்புவதில்லை என்றுதான் சொல்லி வந்தன. திருத்த முடியாத, மோசமான, தாங்கள் செய்தது தவறு என்று ஒப்புக்கொள்ளக்கூட முடியாத குற்றவாளிகளே திரும்பவும் சமூகத்துக்குள் வருவதை அனுமதிக்க முடியாதபோதுதான் அவர்கள் செவ்வாய்க்கு அனுப்பப்பட்டதாக கூறின. ஆனால், பூமியின் அரசாங்கங்களோ பொய் சொல்லுவதில் மிகவும் வல்லமை படைத்தவை. கொலைகாரர்களை செவ்வாய்க்கு அனுப்பினார்கள் என்பது உண்மைதான். ஆனால், ஆபத்தான கருத்துக்களை பரப்பி வந்த அரசியல்கைதிகளையும் இவ்வாறு செவ்வாய்க்கு அனுப்பி வந்தார்கள் என்பதும் உண்மைதான்.

இருப்பினும், என் குடும்ப செவிவழிக்கதையும் பொய் சொல்கிறது. அப்பாவியான மக்களை இவ்வாறு நாடுகடத்தல் போல கிரகக்கடத்தல் செய்துவந்தது உண்மைதான் என்றாலும், எனது தாத்தாவின் தாத்தாவின் தாத்தா அவர்களில் ஒருவர் அல்லர். காலம் மழுங்கடித்துவிடுகிறது. யாருக்கும் உண்மையான தகவல்கள் தெரியாது. ஆனால், நிச்சயமாக அவர் எப்படியாவது புகுந்து புறப்பட்டு தப்பித்து வாழத் தெரிந்தவர். பழைய கயிறு போன்ற உறுதியும், பாம்பு போன்ற தந்திரமும், ஒல்லியான உருவமும் கொண்ட எலி போன்ற மனிதர்.

என்னுடைய பாட்டியின் பாட்டியின் பாட்டி சைலஜா, செவ்வாயின் ஆரம்பக்குடிகளில் ஒருவர். யாரும் செவ்வாயில் குற்றவாளிகளை தூக்கி எறியும் நினைப்புக்கு வருவதற்கு முன்னர் இருந்தே செவ்வாயில் இருந்து வந்த புளிமாங்கனி என்ற அகில உலக ஆராய்ச்சி நிலையத்தில் பணி புரிந்து வந்தவர்களில் ஒருவர். இந்த ஆராய்ச்சி நிலையம் மூடப்படுவதாகவும், இங்கு பணிபுரியும் அனைவரும் திரும்பி பூமிக்கு வரவேண்டும் என்ற கட்டளை வந்தபோது சைலஜா இங்கே செவ்வாயிலேயே தங்க முடிவு செய்துவிட்டார். தனக்கு அறிவியல் மிகவும் முக்கியமானது என்று அவர் பூமியில் இருக்கும் அரசியல்வாதிகளிடமும் மக்களிடமும் கூறிவிட்டார். செவ்வாயின் கடந்தகாலத்தில் எவ்வாறு பருவகாலங்கள் இருந்திருக்கின்றன என்ற ஆராய்ச்சியை அவர் தொடர்ந்து செய்துவந்தார். எவ்வாறு செவ்வாய் காய்ந்து போய் குளிர்ந்தது என்று அறிய முற்பட்டுவந்தார். இப்படிப்பட்ட ஒரு ஆராய்ச்சி பூமிக்கும் உதவும் என்று அவர் கருதினார்.

புளிமாங்கனி ஆராய்ச்சி நிலையத்தில் தங்கி விட்ட 17 மனிதர்களில் ஒருவராக இருந்தமையால் அவர் ஓரளவுக்கு புகழ்பெற்றவராக இருந்தார். இந்த புகழ் அவருக்கு பல விதங்களில் உதவியது. வானத்திலிருந்து மக்கள் விழ ஆரம்பித்ததும், புளிமாங்கனியிலிருந்து வெளி வந்த ரேடியோ செய்திகள் பூமியின் அரசாங்கங்களை கட்டாயப்படுத்தின. அவர்களது வாக்குறுதிகளை அவைகளுக்கு ஞாபகப்படுத்தின. செவ்வாய்க்கு அனுப்பப்படுவது ஒரு மரண தண்டனை அல்ல என்று அந்த அரசாங்கங்களுக்கு நினைவுறுத்தின. செவ்வாய்க்கு வந்த அகதிகள் கூறியிருந்தால் அவை பொய்கள் என்றும் மிகைப்படுத்தப்பட்டவை என்றும் யாரேனும் சொல்லியிருக்கலாம். ஆனால் புளிமாங்கனியிலிருந்து வந்த ரேடியோ செய்திகளை அவ்வாறு ஒதுக்கமுடியவில்லை.

அடுத்த சில வருடங்களில் பூமியிலிருந்து உதவிப்பொருட்கள் தனியார் உதவி நிறுவனங்களிலிருந்து வந்தன. ராமகிருஷ்ணா மிஷன், அம்னஸ்டி இண்டர்நேஷனல் போன்றவை அனுப்பின. ஆனால் அவை போதுமானவையாக இல்லை.

முதலிரண்டு அலைகளில் வந்த அகதிகளை பார்த்தபின்னர், புளிமாங்கனியில் இருந்த அறிவியலாளர்கள் இனிமேல் அறிவியல் ஆராய்ச்சி பண்ண முடியாது என்பதைப் புரிந்து கொண்டுவிட்டார்கள். கைதிகளை தங்களால் முடிந்த அளவு வரவேற்றார்கள். காலத்துக்கு எதிரான பந்தயத்தில் குடியிருப்புக்களை கட்ட உதவினார்கள். தாவரங்கள் காற்றை தூய்மைப்படுத்தி இவர்கள் உயிர்வாழ உதவும் என்று சில தாவரங்களை பயிரிட ஆரம்பித்தார்கள்.

செவ்வாய் ஒரு பாலைவனம். விண்வெளியில் ஓடும் பாறாங்கல். சாவுக்கு அனுப்புவதற்கு பதிலாக செவ்வாய்க்கு அனுப்புவதில் எந்த விதக்கருணையும் இல்லை. வெகு விரைவில் கற்றுக்கொள்ளவேண்டும் இல்லையேல் சாகவேண்டும். பெரும்பாலானவர்கள் செத்தார்கள். சிலர் கற்றுக்கொண்டார்கள். ஆழத்தில் பொதிந்திருக்கும் நிலத்தடி நீரை மின்சாரம் மூலம் பிரித்து ஆக்ஸிஜன் எடுக்க கற்றுக்கொண்டார்கள். எரி ஆலைகளை உருவாக்கக்கற்றுக்கொண்டார்கள். இவர்கள் கற்றுக்கொள்ளும் வேகத்தை விட அதிக வேகத்தில் வானத்திலிருந்து கையறு நிலை கொண்ட செத்துக்கொண்டிருக்கும் சிறைக்கைதிகள் விழுந்தார்கள். கோபமும் வன்முறையும் கொண்டவர்கள் எதையும் இனிமேல் இழக்க இல்லாதவர்கள் மேலும் மேலும் விழுந்தார்கள்.

ஆறாவது அலையே புளிமாங்கனியை உடைத்து சுக்கு நூறாக எறிந்தது. அது முட்டாள்த்தனமான தற்கொலைத்தனமான விஷயம்தான். ஆனால் கைதிகள் செத்துக்கொண்டிருந்தார்கள், கோபம் கொண்டிருந்தார்கள். ஒரு தலைமுறைக்குப் பின்னர் தங்களை அரசியல் கைதிகள் என்று அழைத்துக்கொண்டார்கள். ஆனால் பெரும்பாலானவர்கள் வெறும் ரவுடிகளும், திருடர்களும் கொலைகாரர்களுமே என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆறாவது அலையில் ஒரு மனிதன் வந்தான். அவன் தன்னை டிங்கோ என்று அழைத்துக்கொண்டான். சென்னையில் ஒரு அபார்ட்மெண்ட் காம்ப்ளக்ஸில் தனக்கு மாமூல் கொடுக்காதற்காக ஒரு நூறு மனிதர்களை மெஷின் கன் மூலம் கொன்றிருந்தான். விண்கலத்தில் வரும்போது வெறும் கைகளாலேயே ஆறு சிறைக்கைதிகளை கொன்றான். தான் தான் தலைவன் என்று எல்லோருக்கும் நிரூபிக்கத்தான்.

ஆம் தலைவனாகத்தான் இருந்தான். பயத்தாலோ, மரியாதையாலோ கோபத்தாலோ, விண்கலத்தில் இருந்த கைதிகள் அவன் சொன்னபடி நடந்தார்கள். அவர்கள் செவ்வாயில் விழுந்தபோது, அவர்களை அணியாகத்திரட்டி, உதைத்து, மிரட்டி, பேசி ஒரு கோபம்

கொண்ட ராணுவமாக உருவாக்கினான். செவ்வாயில் நாம் கைகழுவப்பட்டு விட்டதற்குக் காரணம் நாம் மெல்ல மெல்ல இறக்கவேண்டும் என்பதற்காகத்தான் என்று சொன்னான். இங்கே உயிர்வாழ வேண்டுமென்றால், பூமியின் வக்கிரத்துக்கு எதிர் வக்கிரம் நம்மிடம் இருக்க வேண்டும் என்று சொன்னான். 500 கிலோமீட்டர் பாலைவனத்தின் வெற்று மணலில் நடக்க வைத்து அவர்களை புளிமாங்கனிக்கு கொண்டுவந்தான்.

அந்த ஆராய்ச்சி நிலையம் அங்கிருப்பவர்கள் தாங்கள் தாக்கப்படுகிறோம் என்று உணரும்முன்னரே கைப்பற்றப்பட்டுவிட்டது. அந்த ஆராய்ச்சி நிலையத்தை விட்டு ஓடாத அறிவியலாளர்கள் அந்த ஆராய்ச்சி நிலையத்தில் இருந்த கருவிகளாலேயே அடிக்கப்பட்டார்கள். அவர்கள் அனைவரையும் பிணைக்கைதிகளாக பிடித்துக்கொண்டு பூமிக்கு ரேடியோ மூலம் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றவேண்டும் என்று கோரினார்கள். எந்தக்கோரிக்கையும் நிறைவேற்றப்படவில்லை. பதில் கூட இல்லை. கோபம் கொண்ட இவர்கள் எல்லோரையும் பாதுகாப்புக்கவசம் இன்றி செவ்வாயின் நிர்வாண நிலத்தில் தூக்கி எறிந்தார்கள். அந்த ஆராய்ச்சி நிலையத்தில் இருந்த பெண்கள் பலாத்காரம் செய்யப்பட்டார்கள்.

நான்காவது ஐந்தாவது அலையில் வந்தவர்கள் ஒன்றிணைந்து கொண்டார்கள். ஒருவர் முகத்தை மற்றொருவர் பார்க்க முடியாமல் பாதுகாப்புக் கவசங்களுக்குள்ளாக இருந்தாலும், குற்றவாளிகளாக வந்தவர்கள் காலப்போக்கில், இங்கு உயிர்வாழ ஒரே வழி ஒத்துழைப்பதுதான் என்று தெரிந்து கொண்டிருந்தார்கள். அவர்களது சிறிய ரேடியோக்கள் புளிமாங்கனி உடைக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது என்று அவர்களுக்கு தெரிவித்தன. பாலைவனத்தில் ஊர்ந்து சென்று வெளியே காத்திருந்தார்கள். ஆராய்ச்சி நிலையத்தை அழித்துக்கொண்டிருந்தவர்கள் வெளியே வரக்காத்திருந்தார்கள். ஆராய்ச்சி நிலையத்தை அழித்தவர்கள் வெளியே வரும்போது ஐந்தாம் அலையினர் எதிர்பார்க்காத நேரத்தில் இவர்களைத்தாக்கி ஒருவர் விடாமல் கொன்று தள்ளினார்கள். டிங்கோ பாலைவனத்துக்குள் தப்பி ஓடினான். என்னுடைய தாத்தாவின் தாத்தாவின் தாத்தா மோகன் இவனைத் துரத்திக்கொண்டு பாலைவனத்துக்குள் ஓடினார். அங்கு அவனைப் பார்த்து, பின் தொடர்ந்து, கொன்றார்.

பிறகு அவர்கள் புளிமாங்கனி ஆராய்ச்சி நிலையத்துக்குச் சென்றார்கள். அங்கு ஏதாவது காப்பாற்ற முடியுமா என்று பார்க்க முனைந்தார்கள்.

என்னுடைய தாத்தாவின் தாத்தாவின் தாத்தா, சைலஜாவை இடிபாடுகளுக்கு இடையே கண்டுபிடித்தார். அவள் கண்கள் மீது ஒட்டப்பட்டிருந்த பசைப்பட்டையை பிய்த்து எடுத்தார். சைலஜா திடாரென்று வெளிச்சத்தில் ஒன்றும் புரியாமல் தன்னை கற்பழித்து, ஆராய்ச்சி நிலையத்தை அழித்த கும்பலின் ஆள்தான் இதுவும் என்று நினைத்தாள். காற்று வெளியே போய்விடாமல் இருக்க தீவிரமாக அவரது கும்பல் வேலை செய்துகொண்டிருப்பதைப் பார்த்தாள். எனது தா-தா-தாத்தாவும் மற்றவர்கள் இன்னும் உயிரோடு இருப்பவர்களைத் தேடிச் சென்றார்கள். அவளது அனைத்து துவாரங்களிலிருந்து ரத்தம் வெளிவருவதையும் பொருட்படுத்தாமல், அவள் சொன்னாள், 'நான் சாவதற்கு முன்னால் நீ தெரிந்து கொள்ளவேண்டும், செவ்வாயின் நிலத்தில் ஆக்ஸிஜன் இருக்கிறது. அதனை சூடாக்கி வெளியேற்றவேண்டும் ' என்றாள்.

'என்னது ? ' என்று தா-தா-தாத்தா சொன்னார். ஏறத்தாழ சாகக்கிடக்கும் நிர்வாணமான ரத்தம் பெருகும் ஒரு பெண்ணிடமிருந்து இதனை அவர் எதிர்பார்க்கவில்லை.

'ஆக்ஸிஜன் ' அவள் சொன்னாள். 'ஆக்ஸிஜன். சில தாவரங்கள் பிழைத்திருக்கலாம். ஆனால் ஆராய்ச்சி நிலையத்தின் ஆக்ஸிஜன் போய் விட்டது. உனக்கு நேரமில்லை. உங்களுக்கு ஆக்ஸிஜன் வேண்டும். சூரியனை வைத்து எரி ஆலை செய்து நிலத்தை சூடாக்கினால் ஆக்ஸிஜன் வரும் ' என்று சொன்னாள்.

அதன்பின்னர் மயக்கம் போட்டுவிட்டாள். எனது தா-தா-தாத்தா அவளை ஒரு சாக்குப்பை போல இழுத்துச் சென்று மற்றவர்களிடம் காண்பித்தார், 'உயிரோடு ஒருத்தரை கண்டுபிடித்துவிட்டேன் '

அதன் பின்னர் சில மாதங்கள் மோகன் அவளை காப்பாற்றி அவள் திட்டினாலும், அழுதாலும் தாங்கிக்கொண்டு ஆரோக்கியமாக அவளை ஆக்கி கர்ப்ப காலம் முழுவதும் காப்பாற்றினார். செவ்வாயில் நடந்த முதல் திருமணங்களில் அது ஒன்று. செவ்வாய்க்கு அனுப்பும் அளவுக்கு சில பெண்கள் படு மோசமான குற்றவாளிகளாக இருந்தாலும், 10 ஆண்களுக்கு 1 பெண் என்ற அளவிலேயே இருந்தது.

ஒரு கொலைகாரன், ஒரு அறிவியலாளர், இவர்களுக்கு இடையே ஒரு சமுதாயத்தைக் கட்டினார்கள்.

இன்னும் பூமியிலிருந்து விண்கலங்கள் வருகின்றன. முந்தைய விண்கலத்தை விட அடுத்த விண்கலம் இன்னும் மோசமாகக் கட்டப்பட்டதாக இருக்கிறது. இவை விழும்போது உயிருள்ள ஆட்களை விட செத்துப்போன ஆட்களையே இவை உருவாக்குகின்றன. எத்தனைதான் பஞ்சத்தில் அடிபட்டதுபோல செத்தவர்கள் இருந்தாலும் அவர்களில் இருக்கும் கரியும் அமினோ அமிலங்களும் செவ்வாய் நிலத்தின் இன்னொரு சதுர அடியை வளப்படுத்துகின்றன. ஒவ்வொரு சடலமும் ஒரு உயிருள்ளவனை உயிருடன் வைத்திருக்கின்றது.

ஆயிரக்கணக்கானவர்கள் பசியாலும் காற்றில்லாததாலும் இறந்தார்கள். ஒருவர் சுவாசிக்கும் காற்று வேண்டி ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்கள். அகதிகள் வெகு விரைவிலேயே கற்றுக்கொண்டார்கள். எனது தா-தா-தாத்தாவாலும் என் பா-பா-பாட்டியாலும் தலைமை தாங்கப்பட்ட கும்பல் ஒரு விண்கலம் செவ்வாயில் விழுந்து பிரிவதற்கு முன்னரே அதனைஉடைத்து தேவையான பொருட்களை அள்ளிக்கொள்ள கற்றுக்கொண்டார்கள்.

கடினமானவர்களே பிழைத்தார்கள். அவர்கள் எலிகள் போல சிறியவர்களாகவும், வக்ரம் கொண்டவர்களாகவும் தந்திரம் மிகுந்தவர்களாகவும் கொலை செய்யப்படுவதிலிருந்து தொடர்ந்து தப்பித்துக்கொள்ளத் தெரிந்தவர்களாக இருந்ததாலேயே உயிர்பிழைத்தார்கள். இரண்டரை லட்சம் மக்களை செவ்வாய்க்கு அனுப்பிய பின்னர், குணத்தை மாற்றும்சில்லுக்களை மூளையில் பொறுத்துவது செவ்வாய்க்கு அனுப்புவதை விட காசு குறைவானது என்பதை கண்டுகொண்டபின்னர், பூமியில் இருக்கும் அரசாங்கங்கள் செவ்வாய்க்கு கைதிகளை அனுப்புவதை நிறுத்தின. அப்புறம் அவ்வாறு அனுப்பியதை மறக்க தீவிரமாக முயற்சி செய்தன.

என்னுடைய தா-தா-தாத்தா மோகன் இந்த அகதிகளின் தலைவனாக ஆனார். கடூரமான வேலை, அவர்கள் கடூரமான மனிதர்கள், அவர் எல்லோருடனும் சண்டையிட்டு தந்திரம் செய்துதான் அவர்களை தலைமை தாங்கி நடத்த முடிந்தது.

செவ்வாயில் எந்த காதல் கதைகளும் இல்லை. அகதிகளுக்கு நேரமில்லை. காதலிக்க எந்த மூலாதாரங்களும் இல்லை. எதிர்பார்க்கமுடியாத நோயாக காதல் அகதிகளுக்குத் தெரிந்தது.காதல் வயப்பட்டவர்கள் கொல்லப்பட்டார்கள். உயிர் வாழ்வதற்கு கீழ்ப்படிதலும் அயர்வற்ற உழைப்பும் தேவையாக இருந்தது. தனித்தன்மையையும் சுதந்திரத்தையும் கோரும் காதலுக்கு செவ்வாயில் இடமில்லை.

அரசாங்கத்துக்கு எதிராக சுதந்திரம் நோக்கி பேசியதற்காக சிறைப்பிடிக்கப்பட்டு செவ்வாய்க்கு அனுப்பப்பட்டவர் தான் மோகன். ஆனால் மோகன் பாலைவனத்தில் இறந்துவிட்டார். புளிமாங்கனியைக் காப்பாற்ற ஐந்தாம் அலையினர் வந்தபோது டிங்கோ பாலைவனத்துக்குள் தப்பி ஓடியபோது மோகன் துரத்திக்கொண்டு சென்றார். அதுதான் அவரது வாழ்க்கையின் கடைசி தவறு. ஒருவர்தான் மோகனின் உடையை உடுத்திக்கொண்டு பாலைவனத்திலிருந்து திரும்பி வந்தது. தன்னை மோகன் என்று கூறிக்கொண்டு. யாரும் அவரை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. உண்மையான மோகனின் விண்கலத்தில் வந்த ஐந்தாம் அலையினரில் ஒருசிலரே மோகனை அடையாளம் காணக்கூடியவர்கள். மோகன் திரும்பி வந்ததும் அவர்கள் அனைவரும் கொல்லப்பட்டுவிட்டார்கள். ஆறாம் அலையின் மக்களே டிங்கோவை அடையாளம் காணக்கூடியவர்கள். அவர்களும் ஐந்தாம் அலையினரால் கொல்லப்பட்டுவிட்டார்கள்.

பாலைவனத்திலிருந்து திரும்பி வந்து எனது பா-பா-பாட்டியை காப்பாற்றினார். ஐந்தாம் அலையினர் அவரை ஒப்புக்கொண்டுவிட்டார்கள்.

ஆனால் நிச்சயமாக என் பாட்டியின் பாட்டியின் பாட்டி முட்டாளாகவில்லை. அவர் புத்திசாலிப்பெண். தன்னுடைய துறையில் மிகப்பெரிய சாதனைகளைச் செய்தவர். தன்னை மனைவி என்று கோரிக்கொண்டவன்தான் தனது ஆராய்ச்சி நிலையத்தை அழித்து, தன்னை கற்பழித்து, தனது நண்பர்கள் செவ்வாயின் மெல்லிய காற்றில் இறக்கும்போது சிரித்தவன் என்பதை அறிந்தே இருந்தார்.

ஆனால் உயிர்வாழ்வதுதான் செவ்வாயில் முக்கியமானது. காதல் அல்ல. அங்கிருப்பவர்களிலேயே தலைவன் என்பது மோகன்தான்.

செவ்வாயில் முதலில் வந்த அகதிகளில் நிறையக்கதைகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று கூட காதல் கதை அல்ல.

***

மொழிபெயர்ப்பு : துக்காராம் கோபால்ராவ்

# ரோமன் பேர்மன்- மஸாஜ் மருத்துவள் ( மூலம்: டேவிட் பெஸ்மொஸ்கிஸ் ( David Bezmozgis))

**தமிழில் அ.முத்துலிங்கம்**

என்னுடைய அப்பா ஒரு வருடத்திற்கு மேலாக, பல இரவுகள் மருத்துவ புத்தகங்களையும், அகராதிகளையும் வைத்துக்கொண்டு தன்னை சித்திரவதை

செய்துவந்தார். சொக்கலட் தொழிற்சாலையில் நீண்ட பகலைக் கழித்துவிட்டு வந்த பிறகு தன்னுடைய படுக்கை அறையில் விளக்கை எரியவிடுவார்.

சமையலறையில் எங்களுடன் சூப் அருந்துவார். ஆனால் தன்னுடைய பிரதான உணவை ஆட்டம் போடும் ஒரு சோவியத் ஸ்டூலில் வைத்து எடுத்துக்கொண்டு

படுக்கை அறைக்கு போய்விடுவார். அவருடைய வேலை கடினமானது. அவருக்கு வயது ஐம்பதை நெருங்கிக் கொண்டிருந்தது. அவருடைய சொற்ப

ஆங்கிலம் அவருக்கு கருவியாக இருப்பதற்கு பதில் எதிரியாக இருந்தது.

லற்வியாவில் விளையாட்டுத்துறை அமைச்சரக பயிலிருந்து விலகிய பிறகு என்னுடைய அப்பா பால்டிக் கரையோரத்தில் மஸாஜாளராக

சனடோரியங்களில் வேலைபார்த்தார். அதற்கான ஒரு தராதரப் பத்திரம் அவருக்கு தேவையாக இருக்கவில்லை. குறைந்தபட்ச பயிற்சியும், நெருக்கமான

தொடர்புகளும் போதுமானதாக இருந்தன.

ஆனால் புதிய நாட்டில் தராதரப் பத்திரம் பெறுவதற்கு அவர் சிக்கலான பல மருத்துவப் பெயர்களை மனனம் செய்யவேண்டி இருந்தது. அத்துடன் எட்டு

ம நேரப் பரீட்சையை வேற்று மொழியில் எழுதவேண்டும்.

பரீட்சையில் பாஸ் செய்தால் அவர் தனக்கு சொந்தமாக ஒரு தொழிலை ஆரம்பிக்கலாம். சொக்கலட் தொழிற்சாலை தவிர அவர் இத்தாலிய சனசமூக

மையத்தில் தாதாக்களுக்கும், முதலாளிகளுக்கும் மஸாஜ் செய்தார். ஏழு அமெச்சூர் பாரம் தூக்குபவர்களுக்கு பயிற்சியளித்தார். அதில் கிடைத்த

வருமானம் மெத்த குறைவு, ஆனால் தொடர்புகள் கிடைத்தன. சொந்தமான தொழில் தொடங்கினால் சில இத்தாலியர்களை தன்னுடைய பிசினஸ்"க்கு

இழுக்கலாம் என்பது ச்சயம். சரியான இடம் கிடைத்தால் கிழட்டு வயதான போலந்து யூதர்கள் கட்டாயம் வருவார்கள். இது நடந்த 1983வது

வருடத்தில், ரஸ்யாவில் இருந்து குடியேறிய யூதர்கள், அரசியல் அகதிகள் என்ற வகையில் நல்ல ஆதரவு இருந்தது. எங்கள் சரித்திரத்தை வைத்து

பிழைத்துக் கொள்ளலாம்.

என்னுடைய அப்பா பரீட்சை எழுதும் அன்று காலை அம்மா ஓம்லட் செய்து அதோடு தக்காளியும் நறுக்கி வைத்தார். அப்பா அவசரமாக அதைச்

சாப்பிட்டபடி தேநீரையும் விழுங்கிக் கொண்டிருந்தார். அவருடைய வெறும் பாதங்கள் ஒருவித சத்தத்தோடு செருப்புக்குள் போவதும் வருவதுமாக

இருந்தன. நான் மூடிய அரங்கு உதைபந்தாட்ட தெரிவுகள் பற்றி கூறினேன். மயிர்வைத்த மஞ்சள் பந்து பற்றியும் சொன்னேன். அப்பா அரைவாசி

ஓம்லட்டில் எழுந்து தண்-ர் போக்கியில் வாந்தியெடுத்தார்.

ஒரு போருக்கு கிளம்புவதுபோல அப்பா உணர்ச்சியில்லாமல் எங்கள் குடியிருப்பை விட்டு புறப்பட்டார். திடாரென்று ஏற்பட்ட ஒரு அன்பு பிரவாகத்தில்

அம்மா அவருக்கு ஒரு முத்தம் கொடுத்தார். அவர்கள் நடுக்கூடத்தில் இப்படி கட்டிப்பிடித்தனர். ஏனென்றால் வாசல் படியில் வைத்து முத்தம் கொடுப்பது

நல்ல சகுனம் அல்ல.

தரிப்பிடத்தில் இருந்து பிரம்மாண்டமான பச்சை பொண்டியாக்கை அவர் பின்னுக்கு எடுத்ததை நான் சன்னல் வழியாகப் பார்த்தேன். பங்குனி மாத

இறுதி என்றபடியால் இன்னும் குளிர் இருந்தது. காரின் வெப்பக்கருவி வேலை செய்யவில்லை. அப்பா பின்ச் சாலையில் திரும்பியபோது, அவருடைய

உறைந்த மூச்சுக்காற்று நீளமாக பரவுவதை நானும் அம்மாவும் பார்த்துக்கொண்டிருந்தோம். 'கடவுள் தயை, கடவுள் தயை ' என்று அம்மா சொன்னார்.

மூன்று வாரங்களுக்கு பின் பி.டி.எம்மில் இருந்து கடிதம் வந்தது. சட்டம்போட்டு அலுவலகத்தில் மாட்டி வைக்கும் சான்றிதழ் பின்னால் வரும். எங்கள்

குடியிருப்புக்கு கிட்ட உள்ள ஒரு மோலின் பின்னால் இருந்த உணவகத்தில் இந்த வெற்றியை கொண்டாடினோம். எங்கள் குடும்பத்தவர் சார்பாக நானே

காளான், பெப்பரோனி போட்ட பெரிய பிட்ஸாவுக்கு ஆணை கொடுத்தேன். எங்கள் எதிர்கால வெற்றிக்காக žறியடிக்கும் கோக்கை அருந்தினோம்.

அடுத்த வார இறுதியில் ஸன்னிபுரூக் ஒரு அறை வாடகைப் பத்திரத்தில் அப்பா கையொப்பமிட்டார். இங்கேதான் நான் தலைமயிர் வெட்டுவதும்,

பலசரக்கு சாமான்கள் வாங்குவதும். ஸ்மோல்நெக் யூரி எண்பது டொலருக்கு பலமான, பித்தளை கரை வைத்த மஸாஜ் மேசை செய்து தந்தான். அதன்

அரைவாசி விலைக்கு ஒரு சாதாரண மேசையை கிழக்கு தொங்கலில் அப்பா வாங்கினார். இரண்டு அலுவலக நாற்காலிகள் விலை ஒவ்வொன்றும் பத்து

டொலர். இத்தாலிய சனசமூக மைய ஆள் ஒருவர் கொடுத்த அறிவுரையில் அப்பா ரீடர்ஸ் டைஜஸ்டுக்கு ஒரு வருட சந்தா கட்டினார். ஒரு நல்ல மருத்துவ

இடம் என்ற நம்பிக்கையை தருவதற்கு டாவென்போர்ட் என்ற இடத்திற்கு காரில் சென்று ஒரு பச்சை மூன்று மடிப்பு மறைப்பு தட்டியை வாங்கினோம்.

இறுதி அலங்காரங்கள் என் அம்மாவினால் செய்யப்பட்டன. ஒட்டும் எழுத்துக்களை வாங்கி கதவில் ரோமன் பேர்மன் மஸாஜ் மருத்துவர் என்று அம்மா ஒட்டி

வைத்தார்.

ஆரம்பகால பரபரப்பு அடங்கியதும் உண்மையின் சொரூபம் மெள்ள வெளியே தெரிய ஆரம்பித்தது. சனசமூக மையத்தை சேர்ந்த சில

இத்தாலியர்களையும், ரஸ்ய நண்பர்களையும் தவிர வேறு ஒருவருக்கும் ரோமன் பேர்மன் மஸாஜ் மருத்துவம் இருப்பது தெரியாது. தாஸ்கெண்டில் இருந்து

வந்த போரிஸ் கிராஸ்னஸ்கிதான் முதல் நோயாளி. அவருடைய முதலாளி இதனால் ஏற்படும் சிறு செலவை தாங்கிக்கொள்வதாக சொல்லியிருந்தார்.

ஆனால் அதிலும் சிறு பிரச்சினை. என்னுடைய அப்பாவுக்கு போரிஸ் பெரும் உதவி செய்வதால் அப்பாவுக்கு கிடைக்கும் பணத்தில் மூன்றில் ஒரு பங்கு

லஞ்சமாகக் கேட்டார். உலர்ந்த சாமான்கள் விற்கும் ஜோ கலாட்டி வீட்டில் செய்த மதுவகையுடன் வந்து தனக்கும் மகனுக்கும் இடையில் ஏற்பட்ட

பிணக்கைப் பற்றி கூறுவார். ஜோவின் பேச்சில் ஆழமான இத்தாலிய உச்சரிப்பு தொனி இருக்கும். என்னுடைய அப்பாவின் ஆங்கிலம் மெதுவாக

முன்னேறியது. மது முடியும்போதுதான் மஸாஜ் வேலை முடிவுக்கு வரும்.

நேப்பிள்ஸ்'லிருந்து வந்த பாதி இளைப்பாறிய ஸால் அவருடைய மனைவியின் மச்சானுடன் வந்தார். வந்து ஒருவாரத்துக்குள் சாரக்கட்டிலிருந்து

விழுந்து மச்சானுக்கு காயம். அவருக்கு ஆங்கிலம் தெரியாது, காரோட்டவும் தெரியாது. ஸால் குற்றவுணர்வினால் மச்சானை சனிக்கிழமை

பின்மதியங்களில் காரில் கூட்டி வருவார். மனைவிக்கு இதனால் சிறு ஓய்வு கிடைக்கும். என்னுடைய அப்பா மச்சானை மஸாஜ் பண்ணுவார். ஸால்

தடுப்புக்கு அப்பால் உட்கார்ந்து ரீடர்ஸ் டைஜஸ்ட்டை வாசித்தபடி இருப்பார்.

ஜோ, ஸால் போன்றவர்கள் நல்லெண்ணம் கொண்டவர்கள்- என் அப்பாவை அவர்களுக்கு பிடிக்கும்- ஆனால் சில தடவை வந்தபிறகு ன்றுவிட்டார்கள்.

சனசமூக மையத்தில் சூட்டுக் குளியலும் இன்னும் பல கவர்ச்சிகளும் இருந்ததுதான் காரணம். அப்பா வேலை செய்த இடத்தில் இப்போது இன்னொரு

ரஸ்யர் வேலை செய்தார். எல்லோரும் அவர் என் அப்பா அளவு திறமையானவர் அல்ல என்று பேசிக்கொண்டார்கள். இருந்தாலும் என் அப்பாவின்

லமைக்கு அது உதவவில்லை. சில நாட்களுக்கு பிறகு என் அப்பா சுவர்களைப் பார்த்துக் கொள்ள தொடங்கினார்.

இப்படி நடக்கும் என்ற பயத்தில் அப்பா சொக்கலட் தொழிற்சாலை வேலையை முற்றிலும் கைவிடவில்லை. இது அவரைப் பைத்தியமாக்கியது.

ஆனாலும் வேறு என்ன செய்வது. அந்த வேலையை விட்டுவிட்டு இன்னொன்று தேடுவதிலும் அர்த்தமில்லை. அத்தோடு திரும்பவும் சமூக நலன் உதவி

பெறுவது என்ற கேள்விக்கே இடமில்லை. சொந்தக்காலில் ற்கும் தகுதியை எட்டிப் பிடிக்க என் பெற்றோருக்கு இரண்டு வருடம் பிடித்தது. அதிலிருந்து

கீழே இறங்க அவர்கள் தயாராயில்லை. அப்பா சொக்கலட் தொழிற்சாலையில் ஐந்து நாளும், வார இறுதியில் இரண்டு நாள் மஸாஜ் வேலை செய்யவும்

முடிவெடுத்தார். மஸாஜ் வேலை ஒரு யாயமான வருமானத்தை தரத்தொடங்கியதும் சொக்கலட் வேலையை விட்டுவிட்டு முழு நேர மஸாஜ் வேலையில்

ஈடுபடுவார். அவருக்கு வந்த நோயாளிகள் மறையத் தொடங்கியதும் அப்பா சொக்கலட் தொழிற்சாலையை விடலாம் என்ற நம்பிக்கையை இழக்கத்

தொடங்கினார். இந்த முடிவுகள், விவாதங்கள் எல்லாம் என்னிடம் இருந்து மறைக்கப் படவில்லை. எனக்கு ஒன்பது வயது. நான் அவர்களிடமிருந்து பல

விஷயங்களை மறைத்திருந்தேன். ஆனால் அவர்கள் எனக்கு முன்னால் வெளிப்படையாக விவாதிக்காத விஷயங்களே இல்லை. சில வேளைகளில் என்

அபிப்பிராயத்தைக்கூட கேட்டார்கள். இந்த நாட்டிற்கு அவர்கள் அந்யர்கள். ஆனால் நான் ஒரு பையனாக மட்டும் இருந்தாலும் என்னுடைய

அந்யத்தன்மை குறைவானது என்று அவர்கள் கருதினார்கள்.

என்னுடைய அப்பாவின் மஸாஜ் தொழில் மெதுவாக ஓய்வுக்கு வந்து ன்றபோது, நண்பர்கள் சிலரின் புத்திமதிப்படி அப்பா ஒரு ராபியின் உதவியை

நாடிச் சென்றார். இதற்கு முன்னும் பலர் அவர் உதவியை வேண்டியிருக்கிறார்கள். ஒரு வேலை தேடிய பீலிக்ஸ், ஒரு பழைய காரை விற்பதற்கு ஒலேக்,

ரோபிக்கும் ஏடாவும் கடன் உத்திரவாதக் கையொப்பம் பெறுவதற்கு. ரஸ்ய யூதர்களுக்கு இந்த ராபி விசேஷமாக கருணை காட்டுபவர். உதவி பெறும்

வாய்ப்பை அதிகமாக்க அப்பா என்னையும் அழைத்துச் சென்றார்.

ராபியின் முன்னிலையில் பளிச்சென்று தோன்றுவதற்காக அம்மா என் கால்சட்டையை இஸ்திரி செய்து, வெளுத்த கொல்ஃப் சேர்ட்டையும் எனக்கு

அவித்திருந்தார். நானும் அப்பாவும் யாமுக்கி தரித்து, கைகளைப் பிடித்துக்கொண்டு அப்பாவின் அலுவலகத்திலிருந்து சமீபமாக உள்ள யூதக்

கோயிலுக்கு நடந்தோம். இப்படி என்னுடைய அப்பாவின் அருகாமையில் இருக்கும் நேரம் எனக்கு அரிது - வழக்கமாக அப்பா ஏதாவது வேலை செய்து

கொண்டிருப்பார் அல்லது வேலை இல்லையென்று வருத்தப்பட்டுக் கொண்டிருப்பார். நான் நடக்கும்போது அந்த மௌனத்தை கடகடவென்று என்

பேச்சால் ரப்பினேன். என்னுடைய மூன்றாவது வகுப்பு திட்டங்களை, கோடை காலத்து உதை பந்தாட்டக் குழுவில் எடுபடுவதுபோன்ற விபரங்களை

கூறினேன். ஜூன் மாதத்து வெப்பமான ஞாயிறு அது. போகும் வழியில் தென்பட்ட பலருக்கும் - வீட்டு தோட்டத்தில் காணப்பட்ட ஆண்கள், கடைச்

சாமான்களை காவிச் செல்லும் பெண்கள், பியூக் கார்களில் மிதந்து செல்லும் இளைப்பாறியவர்கள், இவர்கள் எல்லோருக்கும் நாங்கள் ஒரு நல்ல

சோடியாகத் தென்பட்டிருக்கும். ஞாயிறு மாலை உலாத்தப் போகும் தகப்பனும், மகனும்.

ராபியின் மேசையின் முன் உட்கார்ந்து என்னுடைய அப்பா தன்னுடைய தேவைகளை விவரிக்க மொழியோடும், தன்மானத்தோடும் அவஸ்தைப்பட்டார்.

அவருக்கு பக்கத்தில் நான் பேசாமல் இருந்து சந்தர்ப்பத்துக்கு தகுந்த முகபாவத்தை வெளியிட்டுக் கொண்டிருந்தேன். எங்களுடைய இக்கட்டான

லமை எனக்கு நல்லாகவே தெரிந்திருந்தது. என் அப்பாவின் அவமானம், என்னுடைய அவமானம், அத்துடன் ராபியின் அவமானத்தையும் யோசிக்க

வேண்டியிருந்தது. என்னுடைய அப்பாவிலும் அவர் குறைந்த வயதுடையவராக இருந்தார். அதைச் சரிக்கட்டுவதுபோல கடுமையான தெய்வீகத்

தன்மையுடன் உட்கார்ந்திருந்தார்.

என்னுடைய அப்பா தன்னுடைய படிப்பு தகைமைகளை ராபியிடம் கூறினார். ஒலிம்பிக்ஸ்'ல் பங்குகொண்ட பாரம் தூக்கும் வீரர்களை தான் கணக்கு

பண்ணமுடியாத அளவு எடையை தூக்குவதற்கு பயிற்சியளித்தது பற்றி கூறினார். பால்டிக் கடல் ஓரத்தில் மிகச் சிறந்த சனட்டோரியத்தில் மஸாஜாளராக

வேலை பார்த்ததை சொன்னார். பல மாதங்கள் செலவழித்து தான் படித்த படிப்பு, பெற்ற மஸாஜ் சான்றிதழ், சொக்கலட் தொழிற்சாலை வேலை, ஒரு

அறை அலுவலகம் அத்துடன் மிகக் கடினமான உழைப்புக்கு தான் தயாராக இருப்பதை சொன்னார். ?“ப்ரு பள்ளிக்கூடத்தில் நான் நல்ல மாணவனாகப்

படிப்பதை சொன்னார். ராபியை என்னுடன் பேசவைப்பதில் உற்சாகம் காட்டினார். நான் எவ்வளவு நல்லாக மொழியில் தேர்ச்சி அடைந்திருக்கிறேன்

என்பதை சோதிப்பதற்காக ராபி சிறிது அசௌகரியத்துடன் என்னுடன் எளிய ?“ப்ருவில் பேசினார்.

'உனக்கு பள்ளிக்கூடம் பிடிக்கிறதா ? '

'ஆம், எனக்கு பள்ளிக்கூடம் பிடிக்கிறது. '

'உனக்கு கனடா பிடிக்கிறதா ? '

'ஆம், எனக்கு கனடா பிடிக்கிறது. '

எங்கள் சம்பாசணையை ஒரு சொட்டும் விளங்க முடியாத அப்பா இடைமறித்து நான் ?“ப்ரு பாடல்கள் அழகாகப் பாடுவேன் என்று சொல்லிவைத்தார்.

ராபி அதில் அவ்வளவாக சிரத்தை காட்டவில்லை. ஆனால் என் அப்பா என்னை நாற்காலியில் இருந்து இறக்குவதில் ஆர்வம் காட்டினார்.

ராபியின் அலுவலக அறையின் நட்டநடுவில் ன்று நான் 'தங்க ஜெரூஸலம் ' பாடலை பாடினேன். அரைவாசியில் ராபியின் கவனம் அலைந்ததைக் கண்டு

என் பாடலை குறைபட்ட முடிவுக்கு கொண்டுவந்தேன். ராபி விடுதலையான உணர்வில் தன் கைகளை ஒன்று சேர்த்து ஒரு தட்டு தட்டியிருக்கமாட்டார்,

அப்பா முந்திக்கொண்டு நான் இன்னும் பாடுவேன் என்றார்.

அந்தப் பிரகடனத்தை உண்மையாக்க என் விலா எலும்பில் ஒரு சின்ன இடி கொடுத்தார். நானோ மகிழ்ச்சியுடன் அனாதையாக விட்ட பாடலை மீண்டும்

விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தேன். ராபி இன்னும் கூடிய கவனத்துடன் முன்னால் சாய்ந்தபடி கேட்டார். நான் பாடி முடித்ததும் ராபி ஐந்து டொலர்

தாளை என்னிடம் தந்தார். என் அப்பாவின் தொழில் பற்றி தான் வாய்மூலம் தொழுகையாளர்களிடம் செய்தி பரப்புவதாக அப்பாவுக்கு வாக்களித்தார்.

இன்னொன்றும் சொன்னார். விளம்பரம்.

பதினைந்து மிடம் கழித்து நாங்கள் மறுபடியும் ரோட்டுக்கு வந்தோம். கைகளை பிடித்தபடி வீடு நோக்கி நடந்த எங்களுடைய முயற்சிக்கு ஐந்து

டொலர் கிடைத்தது. விளம்பரத்தாள்களை மலிவு விலைக்கு அடித்து தருபவரின் விலாசமும் எங்களிடம் இருந்தது.

அடுத்து வந்த வாரம் நான், அம்மா, அப்பா எல்லோரும் எங்கள் சமையலறை மேசையை சுற்றியிருந்து ரோமன் பேர்மனுடைய நோய்தீர்க்கும்

விளம்பரத்தை தயாரித்தோம். என்னிடம் பேனா தரப்பட்டது. என்னுடைய பெற்றோரின் எண்ணங்களை அப்படியே விளம்பர வாசகங்களாக

மொழிபெயர்ப்பது என் பொறுப்பு. என்னுடைய அப்பா தான் ஒலிம்பிக் விளையாட்டு வீரர்களைத் தயாரித்த பக்கு முதலிடம் தரவேண்டும் என்றார்.

ஏனென்றால் அது மனித தேகத்தைப் பற்றிய ஆழமான அறிவையும், நல்ல மதிப்பையும் எடுத்துச் சொல்லும். மறுபுறத்தில், என் அம்மா சோவியத் அகதி

என்ற தகவலுக்கு முன்னுரிமை தருவது அவசியம் என்றார். இது மக்களுடைய குற்றவுணர்வினால் கரிசனையை ஏற்படுத்தும். அவர்களை வாசல்வரை

இழுக்கும். வாசலில் வந்த பிறகு அப்பா தன்னுடைய தொழில் வித்தைமூலம் அவர்களை மயக்கலாம். இறுதியில் இரண்டையும் கலந்து செய்வது என்று

முடிவானது. என்னுடைய பங்குக்கு விளம்பர அடைமொழிகள் பலவற்றை நான் சேகரித்து உதவினேன்.

மிகச்சிறந்த நோய்தீர்க்கும் புதிய மஸாஜ் றுவனம்

ரோமன் பேர்மன், சோவியத் நாட்டு ஒலிம்பிக் பயிற்றுநர், கம்யூனிஸ்ட் நாட்டு அகதி, உன்னதமான நோய்தீர்க்கும் மஸாஜ் சேவையை வழங்குகிறார்.

பல வருட அநுபவங்கள், விசேஷமான ஐரோப்பிய நுண்முறைகளில். எல்லாவிதமான தசைநார், மூட்டு வலிகள், கார் விபத்துக்கள், வேலைத்தள விபத்துக்கள்.

கர்ப்பம், இன்னும் தேக ஆரோக்கிய வழிகள்.

பதிவுபெற்ற நோய்தீர்க்கும் மஸாஜ் புணர். வசதியான இடத்தில் அமைந்த றுவனம். வீடுகளுக்கும் வருகை தரமுடியும். திருப்தி ச்சயம்.

விளம்பரத்தாள்கள் அச்சடித்து வந்த பிறகு நானும், அப்பாவும் அவற்றை எங்கள் பொண்டியாக் காரில் ஏற்றி றுவனத்தின் அருகாமையில் இருந்த

வீடுகளை குறிவைக்க முடிவெடுத்தோம். தெருவின் ஒரு கரையை நானும், மறுகரையை அப்பாவும் என்று பங்குபோட்டுக் கொண்டோம். என்னுடைய

வெட்கத்தை மறைப்பதற்காக நான் இதை ஒரு போட்டியாக்கினேன். யார் முதலில் முடிப்பது. நான்தான் முதலில் முடிக்கவேண்டும். வீட்டுக்கு வீடு நான்

ஓடினேன், அவர்களுடைய கடிதப் பெட்டிகளை விளம்பரத்தாள்களால் அடைத்தபடி. அல்லது கண்களைப் பார்க்காமல் வீட்டுக்காரர்களிடம் தித்தேன்.

இடைக்கிடை எதிர்த்திசையில் என் அப்பாவின் முன்னேற்றத்தையும் கண்காத்தேன். அவருக்கு அவசரம் இல்லை. ஒவ்வொரு வீடாக அவர் திரிந்தார்,

புல்தரையை மிதிக்காமல் நடைவழிகளில் நடந்தார்.

நான் ஆட்களை தவிர்த்தபோது அவர் மட்டும் ன்று ன்று நடந்தார். வேண்டுமென்றே சன்னல்களின் முன் நடமாடினார். அம்மாவின் கட்டளைப்படி

வீடுகளின் முன்னால் யாருடைய கண்லோ படவேண்டும் என்பதுபோல நடந்துகொண்டார். மெஸசூஸா மடல் பதித்த வீட்டுக் கதவுகளுக்கு முன்னால்

இன்னும் முனைப்பாக அலைந்தார். பலருக்கு ஆர்வமில்லை. ஒரேயொருவர் பெயரளவில் மட்டும் தன் மகனுக்கு விளம்பரத்தாள் வியோகிக்கும் வேலை

எங்கே கிடைக்கும் என்று விசாரித்தார்.

விளம்பரத்தாள்கள் கொடுத்து முடிந்தபின் காத்திருக்கும் புதிய படலம் தொடங்கியது. ஒவ்வொரு முறை டெலிபோன் அடித்தபோதும் இதோ விடிவு

காலம் வந்துவிட்டது என்று தோன்றியது. தொலைபேசி புதிதாக கிடைத்ததுபோல பட்டது. வீடு வந்த மிடத்திலிருந்து எங்களுக்கு அதே னைப்பு. அது

எங்களுக்கு அனுசரணையாக இருந்தது அல்லது எதிராக இருந்தது. என்னுடைய அப்பா அதனுடன் பேசினார். ஒற்றுமையைக் காட்ட நானும் அதனுடன்

பேசினேன். அது ஒலிக்காமல் இருக்கும்போது அப்பா அதனிடம் மன்றாடுவார்; திட்டுவார்; வெருட்டுவார் - ஆனால் அது அடித்ததும் பாய்வார். சாப்பாட்டு

மேசையில் இருந்து, சொகுசு நாற்காலியில் இருந்து, கழிவறையில் இருந்து பறந்துவருவார். போன் அடித்ததும் அம்மாவும் அவர் பின்னால் பாய்வார்.

அவரின் காது அப்பாவின் காதுடன் ஒட்டிக்கொண்டிருக்கும், ஏதோ அப்பாவின் தலைதான் டெலிபோன் என்பதுபோல. நண்பர்கள், அவர்களின்

சிநேகிதர்கள், மாமி எல்லோரும் அழைத்தார்கள். அழைத்தார்கள். வேறு யாராவது அழைத்தார்களா என்று கேட்பதற்கு அழைத்தார்கள்.

டொக்ரர் கோர்ன்ப்ளம் அழைத்தபோது முடிவில்லாத ஒரு வாரம் கடந்துவிட்டது. நான் வீட்டில் தனியாக இருந்த முன்மதியம். என்னுடைய அம்மா வர

ஒரு ம நேரமாகும்; அப்பா இன்னும் பின்னால் வருவார். போன் அடித்தபோது நான் டாவி முன் தரையில் உட்கார்ந்திருந்தேன். என்னுடைய மடியில்

?ங்கேரியன் ஸலாமி சாண்ட்விச்சும், அரை டஸன் உரித்த சொக்கலட் பூசிய ப்ரூன் உறைகளும் இருந்தன.

கோர்ன்ப்ளம் தன்னை ?ார்வே என்று கூப்பிடும்படி எனக்கு சொன்னார். அவர் ஒரு டொக்ரர். என்னுடைய அப்பாவின் விளம்பரத்தாள் அவருக்கு

கிடைத்தது. அதனால் என் அப்பாவை அவர் சந்திக்க விரும்புகிறார். உண்மையில் முழுக் குடும்பத்தையும் சந்திக்க விரும்புகிறார். நாங்கள் எத்தனை பேர்

இருந்தாலும் பரவாயில்லை. எல்லோரையும் வெள்ளிக்கிழமை இரவு விருந்துக்கு அழைத்திருக்கிறார். என்னுடைய பெற்றோரின் சம்மதத்தை அவர்

வற்புறுத்துகிறார். தன்னுடைய பெயரின் சரியான உச்சரிப்பை அவர் சொல்கிறார். எனக்கு எல்லாம் புரிகிறதா என்று கேட்டார். தன்னுடைய போன்

நம்பரை தந்து என் அப்பாவை கட்டாயம் அழைக்க கூறினார்.

அம்மா வீட்டுக்கு வந்தபோது நான் வெடித்துவிடுவேன் போல இருந்தது. அந்த நல்ல சேதியை நான் சொன்னபோது அரை டஸன் சொக்கலட் பூசிய

ப்ரூன்களை நான் சாப்பிட்ட குற்றத்தை அம்மா சட்டை செய்யவில்லை. கோர்ன்பிளம்மின் டெலிபோன் நம்பர் குறித்த பேப்பரை நான் கொடுத்தவுடன்

அம்மா டயல் பண்ணத் தொடங்கினார். என்னுடைய மாமி தான் இந்தப் பெயரை ச்சயம் முந்தி கேட்டிருப்பதாக கூறினார். விக்டர் தகப்பன் பனியில்

சறுக்கி விழுந்தவுடன் கோர்ன்ப்ளம் அல்லவா அறுவை சிகிச்சை செய்தது. அந்த கோர்ன்ப்ளம் நல்ல மனிதர். பணக்காரரும். அவராகத்தான்

இருக்கவேண்டும் - இன்னும் பலரை அம்மா தொலைபேசியில் அழைத்தார். கோபச்சா மருத்துவம் படித்தாள் ஆனபடியால் அவளுக்கு பல டொக்ரர்மாரைத்

தெரிந்திருந்தது. அவளுக்கு கோர்ன்ப்ளம்மைத் தெரியுமா. யார் ? குடும்பவைத்தியரா அல்லது எலும்பு முறிவு வைத்தியரா ? அதிலே பெரிய வித்தியாசம்

இல்லை. இருவருமே வெற்றிகண்ட மருத்துவர்கள். இருவரில் ஒருவர் தங்களுக்கு வரும் நோயாளிகளில் ஒரு சின்ன விகிதத்தை அனுப்பினாலும் எங்கள்

தொல்லை ஒழிந்தது.

கைகளைக் கழுவி, வேலை உடையைக் களைந்த பிறகு, அப்பா அறையைக் கடந்து டெலிபோனை அணுகினார். அந்த அறையை கடக்கும்போதே

அப்பாவின் தொழில் கம்பீரம் அவரை தொற்றிக்கொண்டது. அளவில்லாத பவ்வியத்துடன் கோர்ன்ப்ளம்மின் நம்பரை டயல் செய்தார். நானும், அம்மாவும்

சோபாவில் அமர்ந்து பார்த்தோம். அம்மா என்ன பேசவேண்டும் என்பதை முன்கூட்டியே படிப்பித்திருந்தார். தயாரித்த குறிப்புகளில் இருந்து கனதூரம்

அலையக்கூடாது. பேச்சை சுருக்கமாகவும், மரியாதையாகவும் வைத்திருக்கவேண்டும். நாங்கள் கடவுளே என்று தவறாக ஏதாவது பேசிவிட்டால் பிறகு

எங்கள் கதி என்ன ?

அப்பா டயல் செய்ததும் அங்கே மச்சத்தம் அடிப்பது கேட்டது. யாரோ எடுத்ததும் அப்பா கோர்ன்ப்ளம்முடன் பேசவேண்டும் என்றார். கோர்ன்ப்ளம்

வருவதற்காக காத்து ன்றார். அந்த இடைவெளியில் அம்மா மீண்டும் வாயசைப்பின் மூலம் எப்படி பேசவேண்டும் என்பதை அப்பாவுக்கு ஞாபகமூட்டினார்.

அதற்கு பதிலாக அப்பா சுவரைப் பார்த்து, தன் முதுகை அம்மாவுக்கு காட்டி ன்றார். சில கணங்கள் போனபின் அப்பா தான் ரோமன் பேர்மன், மஸாஜ்

மருத்துவர் என்றும் அவர் கூப்பிட்டபடியால் தான் திருப்பி அழைப்பதாகவும் கூறினார். அதற்கு பிறகு 'ஆம், ஓகே ?ார்வே ' என்றார்.

ஸ்டாலினுடைய ஆட்சிக்கு முன்பு என்னுடைய பாட்டிக்கு அம்மா ஒவ்வொரு வெள்ளிக்கிழமை இரவும் மெழுகுவர்த்தி கொழுத்தி, அப்பிள் கேக்

செய்வார். என்னுடைய தாத்தாவின் ஞாபகத்தில் போருக்கு முந்திய லற்வியா யூதர்களிடம் மெழுகுவர்த்தியும், அப்பிள்கேக்கும் பிரபலம். என் அம்மா

சிறுபெண்ணாக இருந்த சமயம் ஸ்டாலின் பதவியில் இருந்தார். அப்பொழுது அப்பிள்கேக் இருந்தாலும், மெழுகுவர்த்தி இல்லை. நான் பிறந்தபோது

இரண்டும் மறைந்துவிட்டது, ஆனாலும் அம்மாவின் மனதில் அப்பிள்கேக் யூதர்களுக்கு சொந்தமானது என்ற எண்ணம் இருந்தது. இதை மனதில்

வைத்துக்கொண்டு அப்பிள்கேக் செய்முறை சமையல் குறிப்பை தேடி எடுத்துக்கொண்டு, விலைகூடிய சுப்பர்மார்க்கட்டுக்கு அதற்கான பொருள்களை

வாங்கச் சென்றார். அந்த வெள்ளிக்கிழமை பின்மதியம் தனக்கு சுகயீனம் என்று வேலையிலிருந்து முன்கூட்டியே வந்து அப்பிள்கேக்கை செய்து

வேகவைத்தார் - அப்படி என்றால்தான் அது கோர்ன்ப்ளம்முக்கு சூடாக இருக்கும். என்னுடைய அப்பாவும் வேலையில் இருந்து žக்கிரம் புறப்பட்டு

என்னைப் பள்ளியில் வந்து எடுத்தார். நாங்கள் வீட்டுக்கு வந்தபோது எங்கள் குடியிருப்பு அப்பிள்கேக் மணத்தில் மிதந்தது. நேரத்தை மிச்சம் பிடிப்பதற்காக

என்னையும், அப்பாவையும் ஒன்றாகக் குளிப்பதற்கு அம்மா ஏவினார். அப்பாவுடன் நான் ஒன்றாகக் குளித்து பல வருடங்கள் ஆகவே கண்களை எங்கே

வைப்பது என்பது எனக்கு தெரியவில்லை. ஆனால் அப்பாவுக்கு அவருடைய ர்வாணமோ என்னுடையதோ பெரிய பொருட்டாக இல்லை. அவர் எனக்கு

சோப் போட்டு, தண்-ரால் கழுவி ஒரு டவலால் என்னை சுற்றிவிட்டார். நான் குளியலறை வாசலில் ன்று கண்ணாடிக் கதவு வழியாக அப்பா அவசரமாக

வழுக்கை தலையில் சோப் போட்டதையும், அக்குளைக் கழுவியதையும் பார்த்தேன். வெளியே வந்ததும் நான் இன்னும் அங்கே ன்றதை அதிசயமாகப்

பார்த்தார்.

கோர்ன்ப்ளமின் வீடு எங்கள் அப்பாவின் அலுவலகத்திலிருந்து சில வீதிகளே தள்ளியிருந்தது. அவருடைய வீடு இடது பக்கத்தில் இருந்தது ஆகவே

விளம்பரத்தாளை நான்தான் போட்டிருக்கவேண்டும். ஆனால் அது எனக்கு ஞாபகம் இல்லை. அம்மா உடனேயே வீட்டின் பெருப்பத்தை மனதிலே பதித்துக்

கொண்டார். மூன்றாயிரம் சதுர அடியிருக்கலாம், அத்துடன் ஒரு தோட்டமும். அது முற்றிலும் தனியாக ன்ற வீடு - எங்கள் தகுதிக்கு இரண்டு படி

மேலானது. எங்கள் வீட்டுக்கும் தனிவீட்டுக்கும் இடையில் டவுன் வீடும், அரை தனி வீடும் இருந்தன. ஒரு தனி வீடு என்பது ஒருவரின் ஆகக்கூடிய

அந்தஸ்தை காட்டுவது. எங்களுக்கு தெரிந்த ஒருவர்கூட டவுன் வீட்டு லெவலை இன்னும் அடையவில்லை. ஆனால் சமீபத்தில் அதுபற்றிய பேச்சுக்களும்,

திட்டங்களும் றைய இருந்தன.

பக்கத்து பக்கத்தில் மூன்றுபேருமாக கோர்ன்ப்ளமின் வீட்டு வாசல் நடையில் நடந்தோம். என்னுடைய அப்பா நீல ?ங்கேரியன் சூட் அந்திருந்தார்.

அது தாலின் - சொச்சி சர்வதேச எடை தூக்கும் போட்டியில் பங்குபற்றியது. எனக்கு ஒரு சாம்பல் கலர் கால்சட்டையையும், மடிப்பு குலையாத வெள்ளை

சேர்ட்டையும் அவித்திருந்தார்கள். அந்த சேர்ட்டுக்கு மேலே, உள்ளே அல்ல, வெள்ளியில் செய்த டேவிட் நட்சத்திர பதக்கத்தை நான்

அந்திருந்தேன். என்னுடைய அம்மா பச்சை கம்பளி ஆடை உடுத்தியிருந்தாள், அதற்கு பொருத்தமான அம்பர் நெக்லஸ், பிரேஸ்லெட், காதகளுடன்.

நாங்கள் ஒரு மேட்டிமையான தொழில்துறை குடும்பம் - அவர்களுடன் வகுப்பில் தொடர்ந்து A எடுக்கும் அவர்கள் மகன், எதிர்கால டொக்ரர் அல்லது

சட்டத்தர. போலியான தைரியத்துடன் மிக நல்லாக நுனிவெட்டப்பட்ட புற்கள் அமைந்த பாதையில் நடந்தோம். மூன்று அகதிகள், அவர்களுடன் சூடு

ஆறாத அப்பிள்கேக்.

அப்பா மயை அடித்தார். உள்ளே காலடிகள். மஞ்சள் சுவெற்றரும், கால்சட்டையும் அந்த ஓர் ஆண் கதவை திறந்தார். அந்த சுவற்றெரில் ஒரு

சின்ன முதலை வேலைப்பாடு ஒட்டிக்கொண்டிருந்தது. இவர்தான் கோர்ன்ப்ளம், மிக அகலமாக சிரித்துக்கொண்டிருந்தார். எங்கள் அப்பாவின் தோள்களில்

கைவைத்து நாங்கள் யார் என்பதை சொன்னார். என்னுடைய அப்பாதான் ரோமன் பேர்மன், அம்மா பெல்லா, நான் மார்க். வீட்டுக்கு உள்ளே வரச்

சொன்னார். முன்பகுதியை தாண்டி வீட்டின் உள்ளறைக்கு சென்றோம். அங்கே மேசை அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஏற்கனவே ஆறுபேர் மேசையை சுற்றி

அமர்ந்திருந்தார்கள். அதில் மூன்றுபேர் கோர்ன்ப்ளம் போல சிரித்தார்கள். அப்படி சிரித்த ஒரு பெண் அம்மாவை அணுகினார். கோர்ன்ப்ளம், அதுதான் தன்

மனைவி ரொஃண்டா என்றார். ரொஃண்டா நாங்கள் வந்ததில் மகிழ்ச்சி என்றபடி அம்மாவிடமிருந்த அப்பிள்கேக்கை வாங்கிக்கொண்டார். அதைக்

கொண்டுவந்திருக்கக் கூடாது என்று சொல்லியபடி அதை சமையலறைக்கு எடுத்துச் சென்றார்.

கோர்ன்ப்ளம் தன்னுடைய நண்பர்களுக்கு எங்களை அறிமுகம் செய்து வைத்தார். மற்ற இரண்டு சிரித்த நண்பர்கள் ஜெர்ரியும், ஷேர்லியும். அவர்கள்

எங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி என்றார்கள். என்னுடைய அம்மா எங்களுக்கும் அப்படியே என்றார். என்னுடைய அப்பா தலையை தாழ்த்தி,

புன்னகைத்து நன்றி என்றார். இதைச் செய்தபோது சிரிக்காத மற்ற மூவரையும் பார்த்தார். ஓர் ஆண், ஒரு பெண், பையன். எங்களைபோல அவர்களும்

அளவுக்கு மிஞ்சிய அலங்காரத்துடன் ஆடை அந்திருந்தார்கள்.

ரொஃண்டா சமையலறையில் இருந்து வந்ததும் கோர்ன்ப்ளம் எங்களை மற்ற குடும்பத்துக்கு அறிமுகம் செய்து வைத்தார் - கார்கோவிலிருந்து வந்த

கெனாடி, ப்ரெடா, žமோன், அப்படித்தானே ? அப்படித்தான் என்றார் கெனாடி. அவருடைய ஆங்கிலம் என்னுடைய அப்பாவின் ஆங்கிலத்திலும் கொஞ்சம்

மேலானதாக இருந்தது. ஆனால் அவருக்கு அப்பாவிலும் பார்க்க அதிகம் தங்கப் பல். ஆங்கிலத்தில் அம்மா தனக்கு அவர்களை சந்திப்பதில் சந்தோசம்

என்று தெரிவித்தார். ஆங்கிலத்தில் ப்ரெடா நன்றி கூறினார். நாங்கள் அவர்களுக்கு எதிராக உட்கார்ந்திருந்தோம். ஜெர்ரி சொன்னார் தன் மனைவி

ரஸ்யாவில் ஒரு பல்வைத்தியர் என்று. தான் ஒரு கண் வைத்தியர் என்றார். அந்த மேசையை சுற்றி உடம்பின் பல பாகங்களை பாதுகாப்பவர்கள்

இருந்தார்கள். கண்கள், பற்கள். எலும்புகளுக்கு ?ார்வே, தசைநார்களுக்கு ரோமன். மிச்சம் என்ன இருக்கிறது ? கோர்ன்ப்ளம் ஒன்றிரண்டு ஊகிக்கலாம்

என்றார். ஜெர்ரி சிரித்தார், ரொஃண்டா சிரித்தபடி இது மிக அதிகம் என்றார். கெனாடியும், ப்ரெடாவும் தேவைக்கு அதிகமாகச் சிரித்தார்கள். அப்படியே

என் பெற்றோரும், ஆனால் கொஞ்சம் குறைவாக இருக்கலாம். ரொஃண்டா ஒரு பிரார்த்தனை சொல்லியபடி மெழுகுவர்த்தியை ஏற்றினார்.

நெருப்பில் வாட்டிய கோழியை பரிமாறியபடி கோர்ன்ப்ளம் என் பெற்றோருக்கும், இன்னும் கெனாடி, ப்ரெடா மற்றவர்களுக்கும் தன் வீட்டுக்கு அவர்கள்

விருந்துக்கு வந்தது தனக்கு பெருமை என்றார். அவர்கள் என்ன கஷ்டங்களை கடந்திருக்கிறார்கள் என்பதை தன்னால் நல்லாக கற்பனை செய்யமுடியும்

என்றார். பல வருடங்களாக தானும், ரொஃண்டாவும் ரஸ்ய யூதர்களுக்கு உதவும் பயில் இருப்பதாக கூறினார். அவர்களுடைய இன்னல்கள் எந்த

அளவில் இருக்கின்றன என்று வினவினார். என்னுடைய அம்மா மோசம், யூத எதிர்ப்பு மோசம் என்றார். கெனாடியும், ப்ரெடாவும் குடிப்பெயர்வு

மறுக்கப்படவர்கள் என்றார் ஜெர்ரி. நாங்களும் அப்படியா என்றார். அம்மா சிறிது தயங்கினார், பின்பு அப்படி இல்லை என்றார். அவருக்கு சில

மறுக்கப்பட்டவர்களை தெரியும். நாங்களும் கிட்டதட்ட மறுக்கப்பட்டவர்கள்தான், ஆனால் முற்றிலும் இல்லை. எல்லோருக்கும் இது சம்மதமாக

இருந்தது. பின்பு ப்ரெடாவும், கெனாடியும் தங்களுக்கு குடிப்பெயர்வு மறுக்கப்பட்ட கதையை கூறினார்கள். கதை பாதி தூரம் போன பிறகு, அதாவது

அவர்கள் குடியிருப்பில் இருந்து அகற்றப்பட்டு, ஒரு அறையில் இன்னும் மூன்று குடும்பங்களோடு வசித்த பகுதி வரும்போது, தன்னுடைய சேர்ட்டை அகற்றி

தன் சக வேலையாட்கள் தன்னை குத்தி காயப்படுத்தியதைக் காண்பித்தார். விலா எலும்புக்கு கீழே பெரிய தழும்பு இருந்தது. ஒருநாள் இரவு வீதியில்

நடந்து கொண்டிருக்கும்போது தொழிற்சாலையில் வேலை செய்யும் சில குடிகாரர்கள் இடை மறித்தார்கள். அவர்கள் அவரை கேடுகெட்ட யூத துரோகி

என்றார்கள். அவர்களுடைய தலைவன் கத்தியை தூக்கியபடி அவர் மேல் விழுந்தான்.

கொனாடி கதையை முடித்த பிறகு மறுபடியும் தன் சேர்ட்டை உள்ளுக்கு தள்ளினார். ஜெர்ரியும், ரொஃண்டாவும் தங்கள் கண்-ரைத்

துடைத்துக்கொண்டார்கள். எவ்வளவு கொடுமை என்பதை அவர்களால் நம்பமுடியவில்லை. எங்கள் பெற்றோரும் அது கொடுமையே என்பதை

ஒப்புக்கொண்டார்கள். கோர்ன்ப்ளம் அந்த தகப்பன் பேர்தெரியாத பயல்கள் என்று தொடங்கி என்னையும் žமோனையும் லவறையில் போய் விளையாட

சம்மதமா என்று கேட்டார். கோர்ன்ப்ளம்மின் பிள்ளைகள் இரவு காம்புக்கு சென்றிருந்தார்கள். அது துரதிர்ஷ்டம், அவர்கள் எங்களை சந்திப்பதில் மிகவும்

மகிழ்ச்சி காட்டியிருப்பார்கள். கீழே பிங்பொங் மேசை, பில்லியர்ட் மேசை, ெ ?ாக்கி வலை, இன்னும் பல விளையாட்டு சாமான்கள் இருந்தன. நாங்கள்

கீழே போனபோது ப்ரெடா தன் தாயார் தனியாக கார்க்கோவில் மாட்டுப்பட்டு தவிக்கும் கதையை கூறிக்கொண்டிருந்தார். என்னுடைய பெற்றோர்

ஒன்றுமே சொல்லவில்லை.

இவை தவிர பெரிய திரை டாவியும், சுவற்றில் பதித்த தட்டு புத்தகங்கள், போர்ட் விளையாட்டுகள் என்று இருந்தன. இன்னொரு மூலையில் அவருடைய

பிள்ளைகள் யாரோ பூர்த்திசெய்த ஸ்டார் வார்ஸ் அடுக்குகள் இருந்தன. ஈவோக்ஸ்கூட இருந்தது. பிங்பொங் மேசைக்கு கிட்டப் போய் அதன் மட்டையை

கையிலே எடுத்தபடி žமோனைப் பார்த்தேன். அவனுக்கு அதில் அவ்வளவு சுவாரஸ்யம் இல்லை. அவன் டெத் ஸ்டாரை உற்றுப் பார்த்தான். அவன் அப்பா

சொன்னது உண்மையிலேயே ரஸ்யாவில் நடந்ததா என்று கேட்டேன். நீ என்னுடைய அப்பா ஒரு பொய்யர் என்று சொல்கிறாயா என்றான். ஒரு R2D2

பாவையை எடுத்தான். இன்னொரு விளையாட்டுச் சாமானையும் எடுத்து இரண்டையும் தன் பொக்கற்றுக்குள் அடைத்தான். இந்த பணக்கார

வேசிமகனிடம் என்னதான் இல்லை என்றான்.

நான் மேசைக்கு திரும்பியபோது என் அப்பாவையும், ரொஃண்டாவையும் தவிர மீதி எல்லோரும் இருந்தார்கள். ஷேர்லி அம்மாவுக்கு பக்கத்தில் இருந்து

அம்மாவின் அம்பர் நெக்லஸை ரசித்துக் கொண்டிருந்தாள். கோர்ன்ப்ளம் தன்னுடைய புகைப்பட அல்பத்தை திறந்து தன்னுடைய போலந்து தாத்தாவை

காட்டினார். ஜெர்ரியிடமும் ஒரு குவியல் குடும்ப புகைப்படங்கள் இருந்தன. அவருடைய குடும்ப பூர்வீகம் மின்ஸ்க். இரவு உணவு பிளேட்களை

அகற்றியபிறகு சில சிற்றுண்டி வகையும், கோப்பியும் எஞ்சியது. எனக்கு பாத்ரூமுக்கு போகவேண்டி வந்தது. கோர்ன்ப்ளம் கீழே ஒன்றும், மேலே மூன்றும்

இருப்பதாக கூறினார். எனக்கு விரும்பியதை நான் பாவிக்கலாம். பிறகு அவர் புகைப்பட அல்பத்தில் நாசிப்படையினரால் சுடப்பட்டு இறந்துபோன

ஒவ்வொருவரையும் சுட்டிக் காட்டினார்.

நான் பாத்ரூமை தேடிப் புறப்பட்டேன். இரண்டாம் மாடிக்கு செல்லும் படிகள் தென்பட்டன. அதில் ஏறினேன். கூடத்தில் ஒன்று இருந்தது ஆனால் ஒரு

கதவுக்கு பின்னால் சத்தங்கள் கேட்டன. அந்தக் கதவு பிரதானமான படுக்கை அறையின் கதவு. குரல்கள் பாத்ரூமின் கதவுக்கு பின்னிருந்து வந்தன. அந்தக்

கதவு அரைவாசி திறந்திருந்தது. உள்ளே ரொஃண்டா ஒரு ஸ்டூலில் கண்ணாடி முன் உட்கார்ந்திருந்தார். அவருடைய பிளவுஸ் திறக்கப்பட்டு நாரியிலே

சுருக்கி இருந்தது. பிரா மட்டும் அந்து பாத்ரூம் மேடையில் தலையை சாய்த்து இருக்க, அப்பா அவருடைய கழுத்தை மஸாஜ் செய்தார். நான்

பின்னடித்தபோது ரொஃண்டா என்னை அழைத்து கதவை தன் கால்களால் திறந்துவிட்டார். என்ன அருமை. என்னுடைய அப்பா ஒரு

மந்திரவித்தைக்காரர். அவருடைய கைகளை போத்தலில் அடைத்து விற்கலாம் என்றார் அவர். நான் பாத்ரூமை தேடியதாக முணுமுணுத்தேன். அவர்

தாங்கள் முடித்துவிட்டதாக கூறினார். அவர் என் பக்கம் திரும்பி தன் பிளவுஸ் கொக்கிகளை மாட்டத் தொடங்கினார். அவருடைய பாரமான மார்புகள்

பிராவின்மேல் வழிந்தன. கவலைப்படாமல் நான் வந்த வேலையை முடிக்கச் சொன்னார். கீழே ?ார்வே கோப்பி போடுவதற்காக அவருக்கு

காத்துக்கொண்டிருக்கலாம்.

கையிலே ஒட்டிய வாஸ்லைனை அப்பா கழுவியபோது பாத்ரூமில் நான் என் கால்சட்டையை அவிழ்த்து விட்டுக்கொண்டு ன்றேன். அப்பா தன்

கையை வண்ணவேலை டவலால் துடைத்துவிட்டு நான் முடிப்பதற்காக காத்து ன்றார். சிறிது நேரம் கழித்து தான் வெளியே ற்கவேண்டுமா என்றார்.

இன்னும் கொஞ்சம் கழித்து அவர் வெளியே போய் படுக்கை அறையில் ன்றார். நான் வெளியே வந்தபோது அப்பா கோர்ன்ப்ளமின் படுக்கையில்

உட்கார்ந்திருந்தார். மேலே ஒரு குடும்பப்படம், கோர்ன்ப்ளமின் மகளுடைய பாற்மிட்ஸாவின்போது எடுத்தது, மாட்டப்பட்டிருந்தது. விழா உடுப்புகள்

அந்தபடி கோர்ன்ப்ளம், பெரிய மரத்தின் கீழ் புல் தரையில் அமர்ந்திருந்தார். என்னுடைய அப்பா அந்தப் படத்தை பார்க்கவில்லை. நான் என்ன

செய்வது, நீ சொல் என்றார். பின்பு எழுந்து, என் கையை அவர் பிடித்துக்கொள்ள, நாங்கள் கீழே இறங்கினோம்.

மேசையில் எல்லோரும் சிற்றுண்டி அருந்தினார்கள். ஷேர்லி இன்னும் அம்மா பக்கத்திலேயே அமர்ந்திருந்தார். அம்மாவின் அம்பர் கைச்சங்கிலியைப்

போட்டு அழகு பார்த்தார். அப்பா வந்ததும் அவர்கள் சிறிது அசைந்து எங்களுக்கு இடம் ஏற்படுத்தினார்கள். ரொஃண்டா என் அப்பா அற்புதம் புரிபவர்

என்று அறிவித்தார். அவருடைய கழுத்து முந்தி எப்போதும் இல்லாதமாதிரி தேறியிருக்கிறது. கோர்ன்ப்ளத்திடம், என் அப்பாவுக்கு போதிய நோயாளிகளை

அனுப்பவேண்டும் என்று வாக்கு பெற்றுக்கொண்டார். கோர்ன்ப்ளம் தான் அதற்கு பெருமைப்படவேண்டும் என்றார். கோர்ன்ப்ளம் திங்கள் காலை போன்

வரும் என்றார். வெகு žக்கிரத்தில் அப்பா சொக்கலட் தொழிற்சாலை வேலையை உதறிவிடுவார் என்றார். கோர்ன்ப்ளம் இந்தச் செய்தியை பலருக்கும்

பரப்புவார். என் அப்பா போன்ற ஒருவருக்கு தொழிற்சாலை ஏற்ற இடம் இல்லை என்றார். ஜெர்ரியும் தன் உதவியை ச்சயமாக எதிர்பார்க்கலாம்

என்றார்.

நாங்கள் கிளம்பியபோது கோர்ன்ப்ளம் அப்பாவுக்கு கைகொடுத்தார். எனக்கும் கொடுத்தார். அம்மாவின் கன்னத்தில் முத்தமிட்டார். இந்த மாலை

அவருக்கும், ரொஃண்டாவுக்கும் மிக விசேஷமானது என்றார். ரொஃண்டா சமையலறையில் இருந்து அம்மாவின் அப்பிள்கேக்கை காவிக்கொண்டு வந்தார்.

அது வீணாகிப்போவதை அவர் விரும்பவில்லை. தங்கள் பிள்ளைகளை சிலவேளைகளில் மக்டொனால்டுக்கு கூட்டிப் போனாலும் வீட்டிலே அவர்கள்

கோஷர் விரதம் அனுட்டித்தார்கள். அந்தக் கேக் அருமையான வாசனை கொடுத்தாலும் அதை அவர்கள் வீட்டிலே வைக்கமுடியாது.

நாங்கள் பொண்டியாக்கை நோக்கி புறப்பட்டபோது எல்லாம் மாறிவிட்டதா அல்லது ஒன்றுமே மாறவில்லையா என்பது புரியவில்லை. நாங்கள் வந்த

மாதிரியே திரும்பினோம். நேரம் போனதற்கு சாட்சி குளிராகிப் போன அப்பிள்கேக் மட்டுமே. எங்களுக்கு முன்னால் பொண்டியாக் ன்றது

எப்போதும்போல, பச்சையாகவும், அசிங்கமாகவும். எங்களுக்கு பின்னால் கோர்ன்ப்ளமுடைய முற்றிலும் தனித்து ற்கும் வீடு. நாங்கள் மெதுவாக

நடந்தோம், போய்ச் சேரவேண்டிய இடத்தை அடைவதற்கு எந்தவித அவசரமும் காட்டாமல். எங்கள் பொண்டியாக்குக்கும், கோர்ன்ப்ளத்தின் வீட்டிற்கும்

இடையில் எங்கள் எதிர்காலம் இருந்தது. அது எங்களுக்கு மேலே தெளிவற்றதாக ஆனால் உணரக்கூடியதாக மிதந்தது.

அப்பா நடப்பதை றுத்தினார். அம்மாவையும் அப்பிள்கேக்கையும் யோசனையுடன் பார்த்தார்.

'அதை ஏன் இன்னும் காவுகிறீர் ? '

'நான் என்ன செய்வது ? '

'எறிந்துவிடும். '

'எறிவதா ? இதை வீணாக்குவது மெத்த அயாயம். '

'எறிந்துவிடும். இது கூடாத சகுனம். '

என் அம்மா தயங்குவதிலிருந்து எனக்கு சந்தேகம் உண்டானது. எண்ணக் குறையாத மூட நம்பிக்கைகள் இருந்தன - இன்னும் பல விதங்களில்

பேரிழப்புகளை அழைக்கும் வழிகள். ஆனால் வேண்டாத கேக்கை எறிவது பற்றிய மூடநம்பிக்கையை நான் கேள்விப்பட்டதில்லை. என்னுடைய அம்மா

அந்தக் கேக்குக்காக நல்லாய் பாடுபட்டார். அதில் சேர்த்த பொருள்கள் விலையானவை. அதிலும் உணவை வீணாக்குவது அவரால் தாங்கமுடியாத ஒன்று.

இருந்தாலும் அம்மா விவாதத்தில் இறங்கவில்லை. ஒன்றுமே ச்சயமில்லை. எங்களுக்கு அதிர்ஷ்டம் தேவை. ஒரு சிறு தவறுகூட மோசமான விளைவுகளை

உண்டாக்கிவிடும். பிழையோ, சரியோ அந்தக் கேக் அசுத்தமாகிவிட்டது. என்னுடைய அம்மா கேக்கை என்னிடம் கொடுத்து ரோட்டின் கீழ்ப்பகுதியில்

இருக்கும் குப்பை தொட்டி ஒன்றை சுட்டிக் காட்டினார். அவர் ஓடு என்று எனக்கு சொல்வதற்கு எந்தவித அவசியமும் இருக்கவில்லை.

முற்றும்

ஆசிரியரைப் பற்றிய குறிப்பு

டேவிட் பெஸ்மொஸ்கிஸ் என்பவருடைய பெயர் சமீப காலங்களில் திடாரென உலக பிரபல்யம் அடைந்தது. டைம் வார இதழ் இவரைப் பற்றி எழுதியது.

கனடாவின் பத்திரிகைகள் இவருடைய பேட்டியை வெளியிட்டன. இன்னும் பல பத்திரிகைகள் இவரை மொய்த்தன. ஒரு கட்டத்தில் இவர் பேட்டி

கொடுப்பதையே றுத்திவிட்டார்.

லற்வியாவில் பிறந்த இவர் குடும்பத்துடன் ரொறொன்ரோவுக்கு 1980 ல் குடிபெயர்ந்தபோது இவருக்கு வயது ஏழு. அப்பொழுது இவருக்கோ,

பெற்றோருக்கோ ரஸ்ய மொழிதவிர வேறு ஒரு பாஷையும் தெரியாது. ஆனாலும் சிறுவன் டேவிட் விடாமுயற்சியுடன் ஆங்கிலத்தைக் கற்றான். மக்கில்

பல்கலைக் கழகத்தில் ஆங்கில இலக்கியம் பாடமாக எடுத்து தன்னுடைய முப்பதாவது வயதில் நடாஷா என்ற சிறுகதைத் தொகுப்பை வெளியிடுகிறார்.

அது புயல்போல வட அமெரிக்காவை உலுக்கி எடுக்கிறது. விமர்சகர்கள் புகழ்ந்தார்கள். நாற்பது வருடங்களாக எழுதி வரும் மூத்த கனடிய எழுத்தாளர்

அலிஸ் மன்றோவுடன் இவரை ஒப்பிட்டார்கள். இன்னும் சிலர் அன்ரன் செக்கோவ் என்று சொல்கிறார்கள்.

இவருடைய கதைகள் எல்லாமே ஒரு சுயசரிதை தன்மையுடன் இருக்கின்றன. ரஸ்யாவில் இருந்து அகதிகளாக குடிபெயர்ந்து கனடாவில் காலூன்ற

முயன்ற யூதக் குடும்பங்கள் சந்தித்த அவமானங்கள், சிறுமைகள், சாவுகள், காதல்கள் என்று எல்லாவிதமான உணர்வுகளையும் தொடுகிறார். ஒவ்வொரு

கதையும் ஏதோ ஒரு வகையில் உங்கள் வாழ்க்கை அனுபவத்தை மீட்டு தருகிறது.

ஒரு நல்ல படைப்பாளிக்கு தேவையான வž்கரமான நடை, கூர்மையான பார்வை, அனுபவச் செறிவு என்று எல்லாம் இவரிடம் இருக்கிறது. சுவையான

வாசிப்பு, மறக்கமுடியாத அனுபவம். துயர இசை பாதியில் ன்றுபோனதுபோல மனம் மீதி இசையை தேடுகிறது.

# அறிவியல் புனைகதை - ஜீன் திருடனின் விநோத வழக்கு (மூலம் நான்ஸி க்ரெஸ்)

(இன்றைய விஞ்ஞானக் கதை எழுத்தாளர்களில் முக்கியமானவர் நான்ஸி க்ரெஸ். சிக்கலான மரபணு விஞ்ஞானக் கதைகளுக்குப் பெயர் போனவர். அமெரிக்கர். நெபுலா, ஹ்யூகோ போன்ற விருதுகள் பெற்றவர். Asimov 's இதழில் 2002-ஆம் வருடம் வெளிவந்த Patent Infringement என்ற கதையின் தமிழாக்கம் இது. இவர் எழுதிய 'ட்ரினிட்டி ' போன்ற மிகச் சிறந்த விஞ்ஞானக் கதைகள் அளவில் பெரியவை. தமிழில் மொழிபெயர்க்கக் கடினமானவை. இது சாதாரணமான கதையே என்றாலும் அளவில் சிறியது. பத்திரிகை செய்தி, கடிதங்கள், அலுவலக மெமோக்கள் மூலம் சொல்லப்பட்டிருப்பது இதன் சிறப்பம்சம். நான்ஸி க்ரெஸ்ஸின் இணைய தளம்: www.nancykress.com)

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

நியூயார்க் போஸ்ட்

விஷக் காய்ச்சலுக்குப் புதிய மருந்து கண்டுபிடிப்பு !

கெகல்மான்-பால்ஸ்டன் கம்பெனியினர் ஹாலிடெக்ஸ் என்ற புதிய மரபணு மருந்தை மார்க்கெட்டில் அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். அல்பர்ட்டன் விஷக் காய்ச்சலுக்குப் பத்து மாத்திரைகளில் முற்றிலும் குணம் தெரியும் என்று கம்பெனி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதுவரை அமெரிக்கா முழுவதும் மூன்று கோடி பேருக்கு மேல் இந்தக் கடுமையான தொற்று நோய்க்கு ஆளாகியிருக்கிறார்கள். மிக வேகமாகப் பரவி வரும் இந்த வைரஸ் பாதித்தவர்களுக்கு இருமல், உடல் வலி, களைப்புடன் காய்ச்சல் ஏற்படும். நோய் அறிகுறிகள் மறைந்த பிறகும் வைரஸ் உடலுக்குள்ளேயே தங்கியிருப்பதால் எப்போது வேண்டுமானாலும் மறுபடி காய்ச்சல் வர வாய்ப்புள்ளது. இந்த வைரஸை முதன் முதலில் அடையாளம் கண்டுபிடித்தவர் ப்ரொபஸர் அல்பர்ட்டன்.

அல்பர்ட்டன் வைரஸின் பாதிப்பால் அமெரிக்காவில் இந்த வருடத்தில் மட்டும் 4 பில்லியன் டாலர்கள் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக முதன்மைக் கணக்காயர் அலுவலகக் குறிப்பொன்று தெரிவிக்கிறது. ஹாலிடெக்ஸ் மருந்து நோயாளிகளின் உடலில் இந்த வைரஸுக்கு மாற்று மரபு அணுக்களைச் செலுத்தி நோய் எதிர்ப்பு சக்தியைக் கூட்டுகிறது. மறுபடி காய்ச்சல் வராமலும் பாதுகாக்கிறது. கெகல்மான்-பால்ஸ்டன் கம்பெனி இரண்டு வருட ஆராய்ச்சியின் பயனாக இந்த மருந்தைக் கண்டுபிடித்திருக்கிறது. நாடு முழுவதும் ஹாலிடெக்ஸ் பரவலான வரவேற்பு பெறும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

ஜோனதன் மீஸ்

538, ப்ளெஸன்ட் தெரு

ஆஸ்பன் ஹில், மேரிலாண்ட் 20906

அன்புள்ள திரு.கெகல்மான்- திரு. பால்ஸ்டன் அவர்களுக்கு,

உங்கள் கம்பெனி அல்பர்ட்டன் விஷக் காய்ச்சலுக்கு ஹாலிடெக்ஸ் என்ற ஜீன் சிகிச்சை மருந்தை அறிமுகப் படுத்தியிருப்பதாக செய்தித்தாள்கள் மூலம் அறிந்தேன். இந்த மருந்தில் நீங்கள் உபயோகித்திருக்கும் ஜீன்கள் என்னுடையவை என்று நம்புகிறேன்.

இரண்டு வருடம் முன்பு - மே 5ம் தேதி - என்னுடைய குடும்ப டாக்டரிடம் பேசிக்கொண்டிருந்த போது என்னைச் சுற்றியிருக்கும் எல்லாருக்கும் அல்பர்ட்டன் காய்ச்சல் பரவியிருக்கிறது என்று தெரிவித்தேன். (எங்கள் அலுவலகத்தின் அக்கவுண்ட்ஸ் டிபார்ட்மெண்ட் முழுவதற்கும் காய்ச்சல். என் மனைவி, குழந்தைகள், மாமியார் எல்லோருக்கும் படுத்து விட்டார்கள். எங்கள் வீட்டு நாய்க்குக் கூட இந்த வைரஸ் தாக்கியிருப்பதாக சந்தேகம்- ஆனால் வெட்னரி டாக்டர்தான் ஒத்துக் கொள்ளவில்லை.)

இத்தனைக்கு நடுவிலும் எனக்கு மட்டும் ஜுரம் வரவில்லை. என்னுடைய ஜீன்களில் ஏதோ தனிப்பட்ட நோய் எதிர்ப்பு சக்தி இருப்பதாக என் டாக்டர் சந்தேகித்து உடனே உங்கள் ஆராய்ச்சிசாலைக்கு அனுப்பி அங்கே என் ரத்தம், திசு சாம்பிள்கள் எடுக்கப்பட்டன. உங்கள் விஞ்ஞானிகள் என்னுடைய ஜீன்களை எதற்காவது பயன்படுத்தினால் தகவல் சொல்வதாகச் சொல்லி அனுப்பி வைத்தார்கள். ஆனால் இன்றுவரை ஒரு தகவலும் வரவில்லை. இதற்கிடையில் இந்தப் பத்திரிகை செய்தியைப் பார்த்தேன்.

ஆகவே உங்கள் புதிய மருந்தில் என்னுடைய ஜீன்கள் எப்படிப் பயன் பட்டிருக்கின்றன என்பதையும், லாபத்தில் எனக்கு நியாயமாகச் சேர வேண்டிய பங்கு எவ்வளவு என்பதையும் தயவு செய்து தெரிவிக்கவும். மிக்க நன்றி.

தங்கள் உண்மையுள்ள,

ஜோனதன் மீஸ்

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -
- -

கெகல்மான்-பால்ஸ்டன் கம்பெனி

அனுப்புநர்: ராபர்ட் பால்ஸ்டன்

பெறுநர் : மார்ட்டின், சட்டத் துறை

பொருள் : கடிதம் (இணைப்பு)

மார்ட்டி,

யார் இவன், கிறுக்கனா ? இதில் ஏதும் பிரச்சினை வருமா ?

- பாப்

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

கெகல்மான்-பால்ஸ்டன் கம்பெனி

அனுப்புநர்: மார்ட்டின்

பெறுநர் : ராபர்ட் பால்ஸ்டன்

பொருள் : மரபணு உரிமை - ஜோனதன் மீஸ் கடிதம்

பாப்,

ஆராய்ச்சிப் பிரிவில் விசாரித்து விட்டேன்; துரதிர்ஷ்டவசமாக, இந்த ஜோனதன் மீஸ் என்கிற ஆளின் மரபணுக்களை வைத்துத்தான் நாம் ஹாலிடெக்ஸையே தயாரித்திருக்கிறோம். அதற்கு எல்லா ரெக்கார்டும் இருக்கிறது. அதைவிட சங்கடம் என்னவென்றால், ஜீன் சாம்பிள் தருபவர்களின் உரிமைகளை ரத்து செய்ய நாம் சட்டம் கொண்டுவரச் செய்தோமே, அதற்குச் சற்று முன்புதான் அவன் வந்துபோயிருக்கிறான்.

எப்படியிருந்தாலும், இந்த ஆசாமிக்கு சட்டப்படி எந்த உரிமையும் கிடையாது என்பதுதான் என் கருத்து. மருந்துப் பொருள்கள் தயாரிக்கப் பயன்படும் ஜீன்களின் பேடண்ட் எல்லாம் கம்பெனிக்கே சொந்தம் என்பதற்குப் பல கோர்ட் தீர்ப்புகள் வந்திருக்கின்றன. இந்தக் கடிதத்தை வைத்துப் பார்த்தால் மீஸ் அப்படி ஒன்றும் விவரமான ஆளாகவும் தெரியவில்லை. (நாய்க்காவது, வைரஸாவது!) திரு. கெகல்மான் செத்துப் பத்து வருஷம் ஆகிவிட்டது என்பது கூட இவனுக்குத் தெரியவில்லையே....அவன் இன்னும் வக்கீல் யாரையும் பார்க்கவில்லை என்பது நிச்சயம்.

ஏதோ போனால் போகிறதென்று கொஞ்சம் சில்லறையை வீசியெறிந்து அவனை வாயை மூடிக் கொண்டிருக்கச் சொல்லலாம். ஆனால் இந்த மாதிரி பேராசைக்காரர்களுக்கெல்லாம் காசு தருவதே தப்பு. என்னைக் கேட்டால் இவனைக் கடுமையாக மிரட்டி ஒரு லெட்டர் அனுப்பினால் போதும். பயத்தில் பாண்ட்டிலேயே கொஞ்சம் பாத்ரூம் போய்விட்டு, அத்துடன் அடங்கிவிடுவான்.

என்ன சொல்கிறீர்கள் ?

- மார்ட்டி

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

கெகல்மான்-பால்ஸ்டன் கம்பெனி

அனுப்புநர்: ராபர்ட் பால்ஸ்டன்

பெறுநர் : மார்ட்டின், சட்டத் துறை

பொருள் : J. மீஸ்

அதைச் செய்!

- பாப்

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

மார்ட்டின் ப்ளேக்

தலைமை சட்ட ஆலோசகர்

கெகல்மான்-பால்ஸ்டன் கம்பெனி

அன்புள்ள திரு மீஸ்,

எங்கள் கம்பெனியால் காப்புரிமை பெறப்பட்டுள்ள ஹாலிடெக்ஸ் மருந்தைப் பற்றிய உங்கள் கடிதம், என் பார்வைக்குக் கொண்டுவரப் பட்டது. ஹாலிடெக்ஸின்மீது உங்களுக்குச் சட்டபூர்வமான எந்த உரிமையும் இல்லை என்பதை இதன்மூலம் அறியவும். (தங்கள் தகவலுக்காக, சில சட்ட முன்னுதாரணங்களை இத்துடன் இணைத்துள்ளேன்.) இக்கடிதம் பெற்ற பிறகும் தங்கள் தாவாக்களை உடனே விலக்கிக் கொள்ளவில்லையென்றால், தாங்கள் என் கட்சிக்காரருக்கு மன உளைச்சல் தருவதற்காக சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியவும்.

உண்மையுள்ள,

மார்ட்டின் ப்ளேக்

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

ஜோனதன் மீஸ்

538, ப்ளெஸன்ட் தெரு

மேரிலாண்ட் 20906

அன்புள்ள திரு ப்ளேக்,

இது கொஞ்சம் கூட நியாயமல்ல. அத்தனையும் என்னுடைய ஜீன்கள்!! நான் ஒரு வக்கீலிடம் போகப் போகிறேன். விரைவில் அவர் உங்களிடம் பேசுவார்.

- ஜோனதன் மீஸ்

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

கேத்ரின் ஓவன்

அட்வகேட்

அன்புள்ள திரு ப்ளேக்,

என் கட்சிக்காரர் திரு. ஜோனதன் மீஸ் அவர்களின் சார்பில் நான் இதை எழுதுகிறேன். அவருடைய மரபணுக்களை அடிப்படையாக வைத்து நீங்கள் ஹாலிடெக்ஸ் என்ற மருந்தைத் தயாரித்திருக்கிறீர்கள் என்று அறிகிறேன். உங்கள் கம்பெனிக்கு லட்சக் கணக்கான - அல்லது கோடிக்கணக்கான - டாலர்களைப் பெற்றுத் தரக்கூடிய இந்த மருந்தில் என் கட்சிக்காரரின் கணிசமான பங்களிப்பை ஒப்புக் கொண்டு, அவருக்குச் சேரவேண்டிய பொருளாதார ஈட்டையும் செய்வதே முறையாக இருக்கும் என்று நம்புகிறோம். இதைப் பற்றி விரிவாக நேரில் பேசுவதற்கு விரைவில் ஒரு நேரம் ஒதுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

உண்மையுள்ள,

கேத்ரின்

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

அனுப்புநர்: ராபர்ட் பால்ஸ்டன்

பெறுநர் : மார்ட்டின், சட்டத் துறை

பொருள் : J. மீஸ்

மார்ட்டி,

நாசமாய்ப் போச்சு! இந்த மாதிரி ஐந்தாம் படை வேலை செய்யும் மட்டிப் பயல்களைக் கண்டாலே எனக்கு அடிமடியில் எரிகிறது. ஞாயிற்றுக் கிழமையன்று கோல்ப் விளையாடும் போது ஸாம் ஒரு விஷயம் சொன்னான். (ஸாமைத் தெரியுமல்லவா உனக்கு ? நம் போட்டிக் கம்பெனிகளைப் பற்றித் தகவல் கசியவிடுவானே, அவன்தான்). இர்வின்-லாஸி கம்பெனிக்காரர்கள்தான் நம்மை ஒழித்துக் கட்டுவதற்காக இந்த வக்கீல் நோட்டாஸ் அயோக்கியனைத் தூண்டிவிடுவதாக ஸாம் நினைக்கிறான்.

அந்த அப்பன் பேர் தெரியாத ராஸ்கல் - இர்வினும் இதே வைரஸுக்கு மருந்து தயாரிக்கப் படாத பாடு பட்டுக் கொண்டிருந்தான். நாம் முந்திக்கொண்டுவிட்டோமே என்று அவனுக்கு வயிற்றெரிச்சல்! நிச்சயம் அவன்தான் இதெல்லாம் செய்கிறான்.

இதில் சமாதானம் என்ற பேச்சுக்கே இடமில்லை. அவன் தாராளமாகக் கேஸ் போடட்டும். கோர்ட்டுக்கு வரட்டும். பார்த்துவிடலாம் ஒரு கை!

- பாப்

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

அனுப்புநர்: மார்ட்டின்

பெறுநர் : ராபர்ட் பால்ஸ்டன்

பொருள் : மரபணு உரிமை - ஜோனதன் மீஸ்

பாப்,

அதை விட நல்ல ஐடியா : நாமே முந்திக்கொண்டு மீஸ் மீது கேஸ் போட்டால் என்ன ?.. வைரஸ் தடுப்பு ஜீன்களுக்கான பேடண்ட் நம்மிடம் இருக்கும்போது அவன் எப்படி அந்த ஜீன்களைச் சுமந்துகொண்டு திரியலாம் ? ஹாலிடெக்ஸை வாங்கிச் சாப்பிட்ட நம் வாடிக்கையாளர்களுக்கு மட்டும்தான் இந்த ஜீன்கள் இருக்கலாம். எனவே அவன் நம்முடைய மருந்தைப் போலவே வேறு எதையோ கள்ளச்சந்தையில் வாங்கித் தின்றிருக்கிறான் என்று வாதாட முடியும்.

இதனால் பல விதத்தில் லாபம் : மீஸின் வக்கீல் நோட்டாசுக்குப் பதிலடி தருகிற மாதிரியும் இருக்கும்; போட்டிக் கம்பெனிகளின் காற்றைப் பிடுங்கிவிட்ட மாதிரியும் இருக்கும். நம் ஹாலிடெக்ஸுக்கு இன்னும் கொஞ்சம் விளம்பரம் கிடைக்கும் (பூக்கடைக்கு விளம்பரம் தேவையில்லை என்றாலும்). நம்மைப் பார்த்துக் காப்பியடித்துத் திருட்டு மருந்து தயாரிக்க நினைப்பவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாகவும் அமையும்.

அப்புறம் இன்னொரு விஷயம் : நம் ஆராய்ச்சிப் பிரிவில் மறுபடியும் நன்றாக விசாரித்தேன். ஜோனதன் மீஸ் என்று யாரும் நம்மிடம் வந்ததாகவோ, மரபணு சாம்பிள் கொடுத்ததாகவோ எந்த ரெக்கார்டும் கிடையாது.

- மார்ட்டி

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

அனுப்புநர்: ராபர்ட் பால்ஸ்டன்

பெறுநர் : மார்ட்டின், சட்டத் துறை

பொருள் : J. மீஸ்

மார்ட்டி,

என்ன மூளைய்யா உனக்கு!.. செய், ராஜா!.

ஆமாம், கேஸை விசாரிக்க யாராவது நல்ல ஜட்ஜ் வருகிறமாதிரி ஏற்பாடு பண்ண முடியுமா ? திரு. பர்மிங்ஹாம் போல பிஸினஸ்காரர்களின் கஷ்டத்தைப் புரிந்துகொண்ட ஒரு நீதிபதி கிடைத்தால் நன்றாக இருக்கும்.

- பாப்

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

நியூயார்க் டைம்ஸ்

ஹாலிடெக்ஸ் கள்ளச் சந்தை வழக்கு இன்று ஆரம்பம்

சட்ட விரோதமாக மரபணு மருந்துகள் சாப்பிட்டதாகக் கூறி ஜோனதன் மீஸ் மீது தொடுக்கப் பட்ட வழக்கு இன்று மன்ஹாட்டன் கோர்ட்டில் விசாரணைக்கு வருகிறது. பிரபல மருந்து தயாரிப்பாளர்களான கெகல்மான்-பால்ஸ்டன் கம்பெனியினர் தொடுத்துள்ள இந்த வழக்கு சில மாதங்களாகவே பரபரப்பாகப் பேசப்பட்டு வருகிறது. குற்றம் சாட்டப் பட்ட ஜோனதன் மீஸ், தனியார் கம்பெனி ஒன்றில் அக்கவுண்டண்ட் ஆகப் பணியாற்றி வருகிறார்.

இது மரபணு காப்புரிமை, உயிரியல் பொருள்களின் மீதான உரிமை போன்றவற்றின் சட்ட நுணுக்கங்களைப் பற்றிய மிக முக்கியமான தீர்ப்பாக அமையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. மரபணு பேடண்ட்டுகளை ரத்து செய்யக் கோரும் சில தன்னார்வ அமைப்புகள் நேற்று இரவிலிருந்தே கோர்ட் வாசலில் தங்கி ஆர்ப்பாட்டம் நடத்தத் தயாராக உள்ளன.

இந்த வழக்கை விசாரிக்கும் நீதியரசர் பர்மிங்ஹாம், கடந்த காலத்தில் பெரிய மருந்துக் கம்பெனிகளுக்கு சாதகமான பல தீர்ப்புக்களை வழங்கியவர் என்பது குறிப்பிடத் தக்கது.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

கேத்ரின் ஓவன்

அட்வகேட்

அன்புள்ள திரு ப்ளேக்,

என் கட்சிக்காரர் திரு. ஜோனதன் மீஸ் இப்போதும் தங்கள் கம்பெனியுடன் சமாதான உடன்படிக்கை காணத் தயாராக உள்ளார் என்பதை நினைவு படுத்த விரும்புகிறேன்.

உண்மையுள்ள,

கேத்ரின்

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

மார்ட்டின் ப்ளேக்

தலைமை சட்ட ஆலோசகர்

கெகல்மான்-பால்ஸ்டன் கம்பெனி

மகளே கேத்ரின்,

நீ எந்தக் காலேஜில் சட்டம் படித்தாய் ?... பாவம், ஏதோ தேங்காய் மூடி வக்கீல் போலிருக்கிறது. எப்படியும் நாங்கள்தான் ஜெயிக்கப் போகிறோம். எனவே, தோற்கிற கட்சியிடம் பேச்சுவார்த்தைக்கு என்ன இருக்கிறது ?

உன்னுடைய அடுத்த கேஸாவது உருப்படியாக அமைய வாழ்த்துக்கள்.

வாஞ்சையுடன்,

மார்ட்டின் ப்ளேக்

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

நியூயார்க் டைம்ஸ்

ஜோனதன் மீஸுக்கு சிறை!

ஜீன் திருட்டு வழக்கில் தீர்ப்பு!

கெகல்மான்-பால்ஸ்டன் கம்பெனி உரிமம் பெற்றுள்ள மரபு அணுக்களைத் திருடியதாகத் தொடுக்கப்பட்ட வழக்கில் ஜோனதன் மீஸ் குற்றவாளிதான் என்று நீதிபதி பர்மிங்ஹாம் இன்று தீர்ப்பளித்தார்.கம்பெனியிடம் அனுமதி பெறாமல் நோய் எதிர்ப்பு ஜீன்களை உடலில் சுமந்துகொண்டு அலைந்த குற்றத்திற்காக மீஸுக்கு ஆறு மாத சிறைத்தண்டனை விதித்த நீதியரசர்....

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

அனுப்புநர்: ராபர்ட் பால்ஸ்டன்

பெறுநர் : மார்ட்டின், சட்டத் துறை

மார்ட்டி,

நான்தான் அப்போதே சொன்னேனே, உனக்கு உடம்பெல்லாம் மூளை! என்ன மாதிரி விளம்பரம் கிடைத்திருக்கிறது நமக்கு, பைசா செலவில்லாமல்... ஜீனியஸ் !

உனக்காகவே ஒரு சின்ன வெற்றி விழா ஏற்பாடு செய்திருக்கிறேன் : பெண்டாட்டியை அழைத்துக் கொண்டு ஜாலியாக ஒரு ட்ரிப் அரூபா தீவுக்குப் போய்விட்டு வாயேன்; கம்பெனி செலவில்.

- பாப்

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

அனுப்புநர்: ராபர்ட் பால்ஸ்டன்

பெறுநர் : மார்ட்டின், சட்டத் துறை

மார்ட்டி,

அந்தப் பயல் ஜெயிலுக்குப் போனதுடன் நமக்கு எல்லா பப்ளிஸிடியும் அடங்கிவிட்டது. மறுபடியும் என் தோள் தினவெடுக்கிறது - இந்தப் புது ஐடியா சரிவருமா பார் : என் பெண்தான் சொல்லிக் கொண்டிருந்தாள் - ஏதோ விஞ்ஞானப் பத்திரிகையில் படித்தாளாம், அந்த புரொபசர் அல்பர்ட்டன் இருக்கிறார் இல்லையா ? அவர் சில ஜீன்களை வைத்துக் கொண்டு ஆராய்ச்சி செய்து கடைசியில் வைரஸைக் கண்டுபிடித்தார். அதே வைரஸ் ஜீன்களைத்தான் நாம் மீஸிடமிருந்து எடுத்த ஜீன்களுடன் சேர்த்து மருந்து தயாரித்தோம்.

எனக்கு இந்த விஞ்ஞான இழவெல்லாம் ஒன்றும் விளங்கவில்லை - ஆனால் ஒன்றுமட்டும் புரிகிறது - நாம் பேடண்ட் வாங்கியிருக்கிற ஜீன்களை வைத்துத்தான் அந்த மனிதர் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதி உலகமெல்லாம் பிரசுரித்துப் பெயர் வாங்கிவிட்டார். ஆகவே நாம் புரொபசர் அல்பர்ட்டன் மீதே ஒரு கேஸ் போட்டால் என்ன ? . . .

## ஜப்பானிய பூகம்பம் - எர்னெஸ்ட் ஹெமிங்வே

**தமிழில் - எஸ். ஷங்கரநாராயணன்**

கதையில் பெயர்கள் எதுவுங் கிடையாது.

கதாபாத்திரங்கள் என்றால், பத்திரிகையாளர், ஒரு பத்திரிகையாளினி, ஒரு ரொம்ப அழகான சின்னப்பெண்குட்டி - அவள் ஜப்பானிய உடை அணிந்திருந்தாள், அப்புறம் ஒரு அம்மா.

பக்கத்து அறையில் சின்ன வாலிபக் கூட்டணி, என்னவோ வார்த்தையாடியபடி இருக்கிறார்கள். பத்திரிகைக்காரரும், காரியும் அந்த அறைவழியே போகிற வருகிற சந்தர்ப்பங்களில் எல்லாம் அந்த சிநேகித வட்டம் எழுந்து கொள்கிறது.

மாலை நான்கு மணியளவில் அந்தப் பத்திரிகைக்காரரும், பத்திரிகைக்காரியும் அந்த வீட்டின் முன்வளாகத்தில் நிற்கிறார்கள். அழைப்பு மணி அழுத்தப் பட்டிருக்கிறது.

' 'அவங்க நம்மை உள்ள விடப்போவதில்லை ' ' என்றாள் பத்திரிகையாளினி.

உள்ளறையில் யாரோ நடமாடுகிறார்கள். ஒரு குரல். ' 'கீழ போயி யார்னு பாக்கறேம்மா. ' '

கதவு மெல்லிசாய் விரிசல் விட்டாப் போலத் திறந்து கொள்கிறது. நெட்டுக்குத்தான விரிசல். பாதி உயரத்துக்கு மேலே கருஞ்சாந்தான வெகு அழகான முகம் ஒன்று. மென்மையான கேசம். நடுவகிடு.

'என்னமாய் இருக்கா ' என நினைத்துக் கொண்டார் பத்திரிகைக்காரர். நிறையப் பேட்டிகளுக்கு அவர் போயிருக்கிறார். நிறைய அழகான பெண்கள் தட்டுப்பட்டும் இருக்கிறார்கள். இவளைப் போல கடைசிவரை அழகாகவே மனசில் பதிந்த சிறுமி எவருங் கிடையாது.

'என்ன வேணும் ? ' கதவில் இருந்து அந்தப்பெண் கேட்டாள்.

'நட்சத்திரம், பத்திரிகைலயிருந்து வரோம். இவங்க குமாரி .... '

'உங்ககிட்ட எங்களுக்குப் பேச ஒண்ணில்ல. நீங்க போகலாம் ' அந்தக் குட்டிப்பெண் சொன்னாள்.

'ஆனா... ' நிருபர் விடாமல் பேசினார். பேச்சை நிறுத்தி விட்டால் கதவு படார்னு சாத்தப்படும். சந்தேகமேயில்லை. அவர் தொடர்ந்து பேசிக்கொண்டே போனார். பிறகு அந்தச் சிறுமி கதவை விரியத் திறந்தாள். 'சரி வாங்க. நான் மாடிக்குப் போயி அம்மாகிட்டச் சொல்றேன். '

அவள் விரைந்து வளைவு நெளிவாய் மாடியேறிப் போனாள். கிமோனோ அணிந்திருந்தாள். அதற்கு வேறெதாவது பெயரும் இருக்கலாம். கிமோனோவுக்குள் நடைசரசரப்பு இப்படி இராது. விடியலின் மென்மை அதற்கு உண்டு. கிமோனோ அம்சங்கள் அதில் இல்லையென்றே படுகிறது. அழுத்தமான வண்ணங்கள் இதில். தனித்தனியாய், கலக்காத வண்ண அடுக்குகள். ஊடாடிய தையல் அடையாளம். இடுப்பு பட்டியில் இரண்டு வாட்கள் மாட்டிக் கொண்டிருக்கிறாப் போல இறுக்கம்.

உள்ளறையில் சோபா ஒன்றில் பெண் நிருபரும் அவரும் அமர்ந்தார்கள். 'ச், வளவளன்னிட்டிருந்தேன் இல்லியா ? ' என்றார் அவர்.

'சேச்சே. நீங்க பேசுங்க. நாம உள்ள நுழைய முடியுமான்னே நம்பிக்கை வரல்ல எனக்கு ' என்றாள் அவள். 'குட்டி பாக்க லட்சணமா இருக்கா. இல்லியா ? ' ஆமாம் என்று நினைத்துக் கொண்டார் அவர். /அந்த கிமோனோவை எடுத்துப் போட்டுக்கிட்டப்போ அவ என்ன (தற்காப்பு நடவடிக்கை) பண்ணிக்கிட்டான்னு இவளுக்குத் தெரியுமா ?/

அவங்க கீழ வர்றாங்கப்பா.

ஜப்பானிய கிமோனோ உடையுடன் அந்தப் பெண் மாடியிறங்கி வந்தாள். கூடவே அவளது தாயார். இறுக்கமான முகம்.

'அந்தப் படம்லாம் எங்க எடுத்தீங்க தெரியணும் எனக்கு ' என்றாள் தாயார்.

'அழகான படங்கள். இல்லே ? ' என்றாள் பெண் நிருபர்.

எந்தப் படம் என்ன விஷயம் எதுவும் அவர்கள் ரெண்டு பேருக்குமே தெரியாது. சத்தியமாத் தெரியாது. ஆனா தெரிஞ்சாப்ல நம்ப வைக்க முடிந்ததே அதைச் சொல்.

'நாங்க எதுவும் சொல்றதுக்கு இல்ல. பத்திரிகைல எங்களைப் பத்தி எதுவும் வரணுன்னிட்டில்ல. நிறைய வந்திட்டது. எங்களைவிட நிறையப் பேர் எங்களைவிட மோசமா இந்த பூகம்பத்துல பாதிக்கப் பட்டிருக்காங்க. இனியும் அதைப் பத்தி நாங்க பேச ஒண்ணில்ல. '

'அவங்களை உள்ள வரச் சொல்லிட்டேனேம்மா ' என்றாள் சிறுமி. திரும்பி அவரைப் பார்த்தாள். 'உங்களுக்கு எங்ககிட்ட என்ன தெரிஞ்சுக்கணும் சொல்லுங்க... '

'என்ன நடந்ததோ, அதுல என்னென்னவெல்லாம் உங்க நினைவுக்கு வருதோ சொல்லலாம் ' என்றார் அவர்.

'நாங்க சொன்னா அதை எங்க பேர் போடாம வெளியிடணும். அதற்கு சத்தியம் பண்ணுவீங்களா ? ' என்று கேட்டாள் சிறுமி.

'அட பேர்ல என்ன ஆயிறப் போகுது ' என்றார் அவர்.

'போடறதில்லைன்னு சத்தியம் பண்ணாத வரை நாங்க எதுவும் சொல்லப் போறதில்லை ' என்றாள் சிறுமி.

'உனக்குத் தெரியாதுடி. இந்தப் பத்திரிகைக்காரங்க... போட மாட்டேன்னு கற்பூரம் அடிப்பாங்க. அப்றம் போட்டு விட்ருவாங்க ' என்றாள் தாயார்க்காரி. அவள் ஒத்துழைப்பாளா விஷயம் தேறுமா என்றே குழப்பமாய் இருந்தது. அவள் பேசிய தோரணையில் நிருபருக்கு ஆத்திரம் கிளம்பியது. இது ஒரேயொரு கேவலமான விஷயம். பத்திரிகையாளர்களால் நிறைய நல்ல விஷயங்கள் நடக்கல்லியா ?

'திருமதி ... ' என்று அவர் பேசினார். 'அமெரிக்க ஜனாதிபதியேகூட ஆபத்தான ரகசியங்களை, வெளிய தெரிஞ்சா தன் பதவியே பந்தாடப்படும்ன்றா மாதிரியான விஷயங்களையே எங்ககிட்டச் சொல்லியிருக்கார். வாராவாரம் பாரிஸ்ல பிரான்சின் பிரதமர் அரசாங்கத்தையே கவுத்தறா மாதிரி ரகசியங்களை ஒரு பதினஞ்சு பத்திரிகையாளர்களோட பரிமாறிக்கறாரு... நான் பத்திரிகை நிருபர்கள் பத்திச் சொல்றேன். சேதி சொல்லிகள் உள்ளூர் ஆசாமிகளைப் பத்தி நான் பேசல்ல. '

'சரி சரி ' என்றாள் தாயார். 'நிருபர்கள் பத்தி நீங்க சொல்றது உண்மையா இருக்கலாம் '.

பிறகு அந்தச் சிறுமி கதையை ஆரம்பிக்க, அம்மா சேர்ந்து கொண்டாள் -

'(கனடாவின் பசிபிக் கடலில் புறப்படுகிற பயணிக்கப்பல் - ஆஸ்திரேலியப் பேரரசி) எங்க கப்பல் கிளம்பத் தயாராய் நின்னிட்டிருந்தது... ' என்றாள் சிறுமி. 'அப்பாவும் அம்மாவும் கீழ. சரக்கேத்தற பக்கம் வெளிய வந்திட்டிருக்காவிட்டால் அவரிகளால் தப்பிச்சிருக்க முடியுமான்னே சந்தேகந்தான்... '

'சனிக்கிழமைல மதியந்தான் அந்தக் கப்பல் கிளம்பும் ' என்றாள் அம்மா.

'பன்னிரண்டு மணிக்குக் கொஞ்சம் முன்னால, சரசரன்னு பெரிய சத்தம். சகலமும் பூண்டோட இப்பிடியும் அப்பிடியும் அசைய ஆரம்பிச்சிட்டது. சரக்குக் கூடமே உருளுது புரளுது. தம்பியும் நானும் கப்பல்லேர்ந்து குனிஞ்சி எட்டிப் பார்த்தோம். கரைல எல்லாரும் கையை உசத்தி கொடியசைச்சி வழியனுப்பும் உற்சாகத்தில் இருந்தார்கள். எல்லாம் முப்பது விநாடிதான்... ' என்றாள் பெண்.

'தளவாடத்துல தடார்னு நாங்க கீழ விழுந்தோம் ' என்றாள் அம்மா. 'பெரிய காங்கிரீட் மேடை அது. மேடை மொத்தமுமே முன்னயும் பின்னயும் ஆடுது. எங்க அவரும் நானும் ஒருத்தரை ஒருத்தர் கட்டிக்கிட்டோம். இப்பிடியும் அப்பிடியுமா உருள்றோம். நிறையப் பேர் தூக்கியே வீசப் பட்டார்கள். ஒரு ரிக்ஷாக்காரன் தண்ணிக்குள்ளேர்ந்து எழுந்து வந்ததை நான் பார்த்தேன். கார்களும் சகல சாமான்களும் உள்ள போயிட்டது. எங்க காரைத் தவிர... எங்க கார் பிரஞ்சு தூதரக கார், /பேர்ன் அரசர்/ முத்திரை பொறிக்கப் பட்ட காரின் அருகில் நின்றிருந்தது. தீ பற்றிக் கொள்ளும் வரை... '

'பூமியதிர்ச்சி நின்னதும் நீங்க என்ன பண்ணினீங்க ? ' என்று கேட்டார் நிருபர்.

'நாங்கள் கடற்கரைப் பக்கம் வந்து விட்டோம். தாவி ஏறி வர்றாப்ல ஆயிட்டது. மேடையே நொறுங்கிப் போச்சு. அங்கங்க விரிசல். பாளம் பாளமாப் போச்சு. கரையோரமா படகுப்பாலம் பார்க்க நடந்தோம். வழியெல்லாம் பெரிய சரக்கு குடோனும், பட்டறைகளும், கொட்டடிகளும், குழிபாறிச்சிக் கிடந்தது. பிரிட்டிஷ் தூதரகம் இருக்கில்ல, அதுவரை எல்லாமே பொக்கைவாயா குழிஞ்சு கெடக்கு. மேல பொளந்து அப்பிடியே உள்ளாறவே விழுந்திட்டது, புனல் (funnel) மாதிரி. பாட்டில்ல மண்ணெண்ணெய் ஊத்த மாட்டமா, அந்தப் புனல் மாதிரி. சும்மா பொளிஞ்சு போய்க் கிடக்கு. நெடுஞ்சுவர் பூரா இடிஞ்சி போச்சு. நேர்ப்பார்வைக்கே கட்டடம் அதைத் தாண்டி பின் வெளி எல்லாம் தெரியுது.

அப்பதான் அடுத்த ஆட்டம்.

உடனே நாங்க முடிவு பண்ணினோம். இப்பிடியே போயிட்டிருக்கப்டாது. எழுந்து நேரா வீட்டைப் பார்க்கப் போயி பிரயோஜனம் இல்லை. எங்க இவரு விசாரிச்சாரு. ஆபீஸ்காரங்க சட்னு வெளிய வந்துட்டாங்க போல. ஆனா சரக்கு எடுக்கிற ஏத்துற இடத்து மனுஷங்களைப் பத்தி ஒண்ணுஞ் சொல்றதுக்கில்ல. அங்கங்க சரிஞ்சி விழுந்து கிடந்த கட்டடங்களால எல்லா இடத்துலயும் ஏராளமா புழுதி யெழும்பி கண்ணை மறைச்சி நிக்குது. எதையுமே பாக்க முடியவில்லை. அத்தோட எங்க பார்த்தாலும் குபீர்னு தீ. பத்தி எரிய ஆரம்பிச்சிட்டது... '

'ஜனங்க என்ன செஞ்சிட்டிருந்தாங்க ? அவங்க என்ன மாதிரி நடந்துக்கிட்டாங்க ? ' என்று கேட்டார் நிருபர்.

'யாருமே திகைச்சுப் போகவில்லை. அதான் விநோதம். பேதலிச்சாப்ல ஒருத்தரும் அலறி நான் பார்க்கவேயில்லை. ஆனா... ரஷ்யத் தூதரகத்தில் ஒரு பெண். பிரிட்டிஷ் தூதரகத்துக்குத் தொட்டடுத்து ரஷ்யத் தூதரகம். அது இடிஞ்சி சிதையவில்லை. ஆனாலும் செம குலுக்கல். அவள் வாசல் கதவண்டை அலறிக்கிட்டே வந்தாள். கூலிக்காரப் பட்டாளம் நிறையப்பேர் இரும்பு சுற்றுவேலிக்கு அப்பால் உக்கார்ந்திருந்தார்கள். அவள் தன்னுடைய மகளை வெளியே கொண்டுவந்து தரும்படி கெஞ்சிக் கொண்டிருந்தாள். 'ரொம்பச் சின்னது அது... ' என்றாள் அவள் ஜப்பானிய மொழியில். ஆனால் எல்லாரும் அங்கங்க அப்பிடியப்பிடியே உட்கார்ந்திருந்தார்கள். யாரும் இம்மியும் நகர்கிறாப் போல இல்லை. அவர்களால் நகரவே முடியவில்லை போல இருந்தது. ஆமா, அப்போது யாரும் பிறத்தியார் யாருக்குமே உதவுகிறாற் போல இல்லைதான். ஒவ்வொருத்தருக்கும் தங்களைப் பார்த்துக்கறதே பிரதானமாய் இருந்தது. '

'நீங்க படகுக்கு எப்பிடித் திரும்பி வந்தீங்க ? ' என்று கேட்டாள் பத்திரிகைக்காரி.

'சில சாம்பன்கள், அதான் தோணிகள் இருந்தன. தேடித் திரிஞ்சி ஒரு சாம்பனை இவர் எட்டினார். நாங்க பழையபடி கிளம்ப ஆயத்தமானோம். ஆனா எங்கேயும் சும்மா திகுதிகுன்னு தீ பத்தி எரியுது. கடல்காத்து கூடவே நல்லா கிளம்பிட்டது. செமக்காத்து கொஞ்ச நேரம். நாங்க திரும்ப சரக்கேத்தற கூடம் எப்பிடியோ வந்தோம். மரப்பாலம் கட்டையெல்லாம் கிடையாது. ஆனா ஒரு கயிற்றை வீசிப்போட்டார்கள். பிடிச்சி ஏறி வந்தோம். '

அந்த அம்மாவுக்கு இனியும் அடியெடுத்துக் கொடுக்கவோ கேள்வி கேட்கவோ தேவை இருக்கவில்லை. யோகோஹாமா கடற்கரையில் அந்த நாளும், அதற்கடுத்த நாட்களும் இரவுகளும் அவள் நினைவுகளில் முட்டி மோதின. அவள் ஏன் பேட்டிகிகு மறுத்தாள் என்றும், அவளை அப்படி நிர்ப்பந்திக்க எவருக்கும் ஏன் உரிமை இல்லை என்பதும் நிருபருக்கு இப்போது புரிந்தது. மீண்டும் ஒருதரம் அவள் மனசைக் கலக்கிச் சேறாக்கி சேதாரப் படுதத வேண்டியிருக்கிறது. அவள் கரங்கள் மெல்ல அதிர்கின்றன.

பிரஞ்சுத் தூதரின் பையன் எங்கள் வீட்டில்தான் வந்து தங்கிக் கொண்டான். உடம்பு சரியில்லை அவனுக்கு. தூதர் யாரையோ வழியனுப்ப வந்திருந்தார். எங்கள் தெருக்களைப் பார்க்க வெளிநாட்டுக்காரர்களின் அடுக்குக் குடியிருப்புப் பகுதி கொஞ்சம் மேடுதான். ஆனா அந்தப் பகுதியே சரிந்திறங்கி ஊர்ப்பக்கமா வந்திருந்தது. தூதர் கடற்கரைப் பக்கம் நடந்து வீட்டுப்பக்கம் வந்தார். பையனை வெளியே மீட்டாச்சி. ஆனா முதுகுப் பக்கம் காயம் பட்டுக் கொண்டிருந்தான். மணிக்கணக்கில் போராடிதான் பையனை அவர்கள் மீட்டிருந்தார்கள். ஆனா அந்த வீட்டு பிரஞ்சு சமையல்காரன்... அவனை வெளியே கொண்டுவர முடியாமல் போச்சு. சமையல்காரனை அம்போவென்று விட்டுவிட வேண்டியிருந்தது. ஏன்னா ரொம்ப சுத்தி வளைச்சிட்டது தீ. '

'நெருப்பு எரிய எரிய அவனை உயிரோட உள்ளேயே விட்டுட்டு வந்திட்டாங்களா ? ' என்று கேட்டாள் பெண் நிருபர்.

'ஆமாம் ' என்றாள் அம்மா. 'அவன் மனைவி எடுபிடி. வீட்டுவேலைகள் செய்கிறவள். அவளிடம் அவனை வெளியே கூட்டிட்டு வந்துவிட்டாற் போலச் சொன்னார்கள். '

அந்த அம்மாள் அலுத்துக் களைத்து தொடர்ந்து பேசினாள். 'ஜெஃபர்சன் படகில் எங்களுடன் ஒரு பெண் வந்தாள். அவள் முகம்கூட நினைவில் இல்லை. கணவனை இழந்திருந்தாள்

அவள். ஒரு இளஞ்ஜோடி. அப்பதான் வெளியே வந்திருந்தார்கள். புதுக் கல்யாணம். கடைத்தெருப் பக்கம் அவள் போயிருந்தாள். அப்பதான் எல்லாம் நடந்தது. அவளை அவனால் நெருங்க முடியவில்லை. அந்தளவு நெருப்பு எரிகிறது. அமெரிக்கன் ஆஸ்பத்திரி பெரிய டாக்டரை வெளியே எடுத்து விட்டார்கள், ஆனாலும் உதவி டாக்டர்... அவர் மனைவி தப்பிக்க வழியில்லாமல் போச்சு. அத்தனை விரைவா எல்லாம் தீ பத்திக்கிட்டது. மொத்த ஊரே தீக்காடா எரியுது.

'நாங்க ஆனால், படகில் இருந்தோம். இருந்த புகையில் பாதிநேரம் கரையே கூட மறைஞ்சிட்டது. எப்ப நிலைமை ரொம்ப ரொம்ப மோசமாச்சின்னா, நீர்மூழ்கி எண்ணெய்க் கப்பல் பத்திக்கிட்டது பாருங்க... ஒவ்வொரு எண்ணெய்த் தொட்டியும் வெடிக்குது. எண்ணெய் பத்திக்குது. தீ தாவித் தாவி கடற்கரையை எட்டி சரக்குக் கூடத்துக்கு நகர்ந்தது. சரக்குக் கூடத்தை தீ எட்டி எல்லாம் எரிய ஆரம்பித்த போது நாங்கள் ஆச்சரியப் பட்டோம். அந்த நிலைமையில் நாங்கள் எங்கள் 'பே ர ர சி ' கப்பலுக்கு வந்திருக்கத்தான் முடியுமா ? தீ கப்பலையே எட்டியிருக்குமே ? தீ எரிகிற எல்லைக்குத் தள்ளி எல்லாப் படகையுமே எங்கள் காப்டன் நகர்த்தி யிருந்தார். எங்களையும் ஏற்றிக் கொள்கிற ஏற்பாடெல்லாம் அருமையாச் செய்திருந்தார். நெருப்புக் கிட்டத்தில் போகவே முடியாது. என்ன ஒரு வெக்கை. பெருங் குழாய்கள் வழியா தண்ணீர் பீய்ச்சி அடிக்கிறார்கள். தீ எரிஞ்சிட்டுதான் இருக்கு.

'நங்கூரத்தின் சங்கிலி எசகுபிசகா காத்தாடில மாட்டிக் கிட்டிருந்தது. அதை வெட்டியெறிய ஆட்கள் பெரும்பாடு பட்டுக் கொண்டிருந்தார்கள். ஒருவழியா சரக்கு வளாகத்தில் இருந்து துண்டித்துக் கொண்டு புறப்பட்டோம். எத்தனை பரவசமாய் இருந்தது அப்போது. யோகோஹாமா கடற்கரையில் அப்பிடி வெட்டிக்கொண்டு ஓடுவதைப் பார்க்க முடியுமா ? நம்பவே முடியாத அற்புத அனுபவம்... '

'பகலென்ன ராவென்ன நிறைய காயம்பட்ட ஆட்களையும் அகதிகளையும் கொண்டு வந்துக்கிட்டே இருந்தாங்க. சாம்பன்களிலோ எதுலயோ வந்து சேர்ந்தார்கள் அவர்கள். எல்லாரையும் எங்க படகுல கூட்டிக்கிட்டாங்க. நாங்க படகு மேல்த்தளத்தில்தான் படுத்துக் கொண்டோம்.

'கடலோர எல்லை தாண்டியபோதுதான் எங்க இவருக்கு மன சமாதானம் ஆனது, ' அம்மையார் சொன்னார். 'கடற்கரைப் பக்கமே பழைய எரிமலை வாய்கள் ரெண்டு இருந்தன. அது எந்நேரமும் திரும்பக் வெடித்துக் கிளம்பும் என்று அவருக்குக் கவலை. '

'அலைக் கொந்தளிப்பு எதுவும் இல்லையா ? ' என்று கேட்டார் நிருபர்.

'இல்லை. அந்த மாதிரி எதும் நடக்கவேயில்லை. கோப் நகரம் நோக்கி நாங்கள் போயிட்டிருந்தோம். ஒருவழியா யோகோஹாமா விட்டுக் கிளம்பியிருந்தோம். படகில் போகிறபோதே மூணு நாலு தரம் பூமி நடுக்கத்தை அசக்கலை உணர்ந்தோம். ஆனால் அலைஆவேசம் மாதிரி எதுவும் தெரியவில்லை. '

அவள் மனம் திரும்ப யோகோஹாமா கரைக்குப் போனது. 'ராத்திரி முழுக்க கடல் தண்ணியில் நின்றே சிலர் ரொம்ப களைத்துப் போனார்கள்... ' என்று அவளே ஆரம்பித்தாள்.

'ராப்பூராவுமா... தண்ணியிலேயேயா ? ' மெதுவாக நிருபர் அடியெடுத்துக் கொடுத்தார்.

'ஆமா. நெருப்புகிட்டே யிருந்து தப்பிக்கலாம் அல்லவா ? அவர்களில் ஒருத்தி கிழவி. வயது எழுபத்தியாறு இருக்கணும். அவ ராப்பூரா கடல்த் தண்ணியில் நின்னுட்டிருந்தாள். அங்கங்கே வாய்க்கால்களிலும் நிறையப் பேர் நின்றிருக்கிறார்கள். யோகோஹாமா ஊர்முழுக்க குறுக்கிலும் நெடுக்கிலும் நிறையக் கால்வாய்கள் தெரியுமா ? '

'பூமி யதிர்ச்சியினால் அது எதும் குழப்படி பண்ணவில்லையா ? ' என்று கேட்டாள் பெண் நிருபர்.

'ச், அதெல்லாம் இல்லை. நெருப்பு பிடிச்சி எரிஞ்சிட்டிருக்கிற சமயத்தில் அவை ரொம்ப நல்ல விஷயமா இருந்தது ' என்றாள் அம்மாள் ஈர்ப்புடன்.

'எல்லாம் ஆரம்பிச்சபோது நீங்க என்ன மனநிலையில் இருந்தீர்கள் ? ' என்று கேட்டார் நிருபர்.

'ம், இது பூமியதிர்ச்சிதான் என்று எங்களுக்குத் தெரிந்து விட்டது ' என்றாள் அம்மையார். 'ஆனால், அது இத்தனை மோசமாய் இருக்கும் என்று தெரியவில்லை. அங்க நிறைய நில அதிர்ச்சிகள் ஏற்பட்டிருக்கு. ஒரு தடவை, ஒன்பது வருஷங்கள் முன்னால், ஒரே நாளில் அஞ்சு முறை குலுக்கல் இருந்தது. அதேபோல இப்பவும், நாங்க ஊர் உள்ளே போய் எல்லாம் சரியா இருக்கான்னு பார்த்து வரலாம்னு நினைச்சோம். நிலைமை இத்தனை மோசம்னு தெரிஞ்சதும், சாமான்கள் ஊர் இதெல்லாம் முக்கியம் இல்லைன்னு ஆகிவிட்டது. திரும்ப வீட்டுக்குப் போக நான் யோசிக்கவேயில்லை. என் பெண்ணும் பையனும்தான் ஊருக்குப் போறதா இருந்தது. இவங்க அப்பா இன்னும் கோப் நகரத்தில்தான் இருக்கிறார். நிலைமையைச் சீரமைக்கிறதில் அவருக்கு அங்கே நிறைய வேலை இருக்கிறது. '

தொலைபேசி மணி ஒலித்தது அப்போது. அடுத்த அறையில் அந்தச் சிறுமி சிநேகித வட்டத்தில் 'அம்மா நிருபர்களுடன் பேசிக் கொண்டிருக்கிறார்கள் ' என்று பேசுவது உள்ளே வந்தது. தொலைபேசி உரையாடல் இசையைப் பற்றி. நிருபர் காதைத் தீட்டிக்கொண்டு பூமியதிர்ச்சி பற்றி எதுவும் பேச்சு கிடைக்குமா என்று எதிர்பார்த்தார். ம்ஹூம்.

அம்மையார் அயர்ந்து போயிருந்தார். பெண் நிருபர் எழுந்து கொண்டாள். பத்திரிகையாளரும் கிளம்பலானார்.

'பெயர் வரக்கூடாது. புரிஞ்சதா ? ' என்றாள் அம்மையார்.

'அதுனால ஒரு பிரச்னையும் வராது உங்களுக்கு. கவலைப் படாதீங்க. '

'நீங்க பெயர் போடவில்லைன்னு ஒத்துக்கிட்டாங்க ' என்றாள் அம்மையார் அலுப்புடன். நிருபர்கள் வெளியேறினார்கள். சிநேகித வட்டம் எழுந்து நின்றது.

கதவு சாத்தப்படுமுன் அந்த ஜப்பானிய கிமோனோவை ஒரு பார்வை பார்த்துக் கொண்டார் நிருபர்.

'கதை யார் எழுதப்போறாப்ல ? நீங்களா நானா ? ' பெண் நிருபர் கேட்டார்.

'தெர்ல ' என்றார் நிருபர்.

# அறிவியல் கதை - விளையாட்டுப் பிள்ளை (மூலம் : மைக்கேல் ஸ்வான்விக்)

எதிரி விண்கலங்கள் பூமியை நெருங்கிவிட்டன. கரிய வானத்தில் நட்சத்திரப் பின்னணியில் அவை ஜொலித்தன. ஒவ்வொன்றும் நூறு மைல் நீளமுள்ள ராட்சச விண்கப்பல்கள். பூமியின் போர்க் கலங்கள் குட்டி பொம்மைகள் மாதிரி அவற்றின் இடையில் புகுந்து புறப்பட்டு வீரமாகச் சண்டை போட்டன. எதிரி வீசும் ப்ரோட்டான் கதிர்களில் சிக்காமல் அவை நாலாபுறமும் குட்டிக் கரணம் போட்டுத் தப்பித்தன. நடுநடுவே ஒன்றிரண்டு அடிபட்டு நெருப்புப் பந்தாக எரிந்து தூசிக் குவியலில் காணாமல் போயின.

வீடியோ விளையாட்டு கன்ஸோலைக் கீழே எறிந்துவிட்டு ஒரு சாக்லெட்டை உரித்து வாயில் போட்டுக் கொண்டான் நிக்கு. பத்து வயதுதான் ஆகிறது. பயல், படு சுட்டி. விண்வெளி பற்றியும் நட்சத்திரங்கள் பற்றியும் அவன் கேள்விகளுக்கு பதில் சொல்ல பள்ளிக்கூடத்திலேயே ஆசிரியர்கள் இல்லை. 'இளம் விண்வெளி விஞ்ஞானி ' தேர்வில் முதலாவதாக வந்து நாஸாவிலிருந்து தங்கப் பதக்கம் வாங்கியிருக்கிறான். விடுமுறை விட்டாயிற்றென்றால் தினம் பத்து மணி நேரம் வீடியோ கேம்!

அதனால்தான் இப்போது உலகத்தைக் காப்பாற்ற அவனைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

'நிக்கு நிக்கு, ப்ளீஸ். விளையாட்டை நிறுத்தாதே. அதோ பார் எதிரிகள் லேசர் பீரங்கியை எடுத்து விட்டார்கள். நாமும் பதிலடி கொடுக்க வேண்டாமா ? ' என்று கெஞ்சினார் ஜெனரல். அவர் நெற்றியில் முத்து முத்தாக வியர்வைத் துளிகள்.

'அவ்வளவுதானே ? இப்போ பாருங்க அங்கிள். ' நிக்குவின் சின்ன விரல்கள் திறமையாக ஜாய் ஸ்டிக்கை இயக்க, திரையில் போர் விமானம் செங்குத்தாக மேலே போய் ஒரு வட்டமடித்துத் திரும்பியது. வேகம், தூரம், நேரம் போன்ற ஏழு பரிமாணங்களை அவன் ஒரே சமயத்தில் கணக்கிட்டு சரியான கணத்தில் ப்ளாஸ்மா டார்பிடோவை விடுவித்தான்.

வீடியோ திரை கொள்ளாமல் ஒரு மகா வெடிப்பு. சிதறல். நெருப்புத்தீற்றல். எந்த சூப்பர் கம்ப்யூட்டராலும் முடியாத அதிவேகக் கணக்கை அவன் மூளை எப்படித்தான் போட்டதோ....எதிரி விமானங்களில் நாலில் ஒரு பங்கு காலி! ஜெனரல் கண்ணீருடன் சிரித்து வானத்தை நோக்கி முஷ்டியை உயர்த்தினார்.

'அங்கிள், பாத்ரூம் போயிட்டு வந்து விளையாடறேன். '

'சீக்கிரம் வா. சுவாரசியமான கட்டம். '

ஜெனரலுக்கு மட்டும்தான் தெரியும், இது விளையாட்டில்லை, நிஜம். திடாரென்று ஒரு நாள் ஆண்ட்ரோமீடாவிலிருந்து புற்றீசல் போல் புறப்பட்டு வந்துவிட்டார்கள் வேற்று கிரகவாசிகள். அவர்களின் மூளைக்கும் திறமைக்கும் போர்த் தந்திரங்களுக்கும் ஈடுகொடுக்க யாராலும் முடியாமல், தோல்வி மேல் தோல்வி. வழக்கமான போர் முறைகளில் பழகிப் போய்விட்ட ராணுவ அதிகாரிகளால் வித்தியாசமாகச் சிந்திக்கவோ, விரைவில் செயல்படவோ முடியாது

என்பது தெளிவாகத் தெரிந்து விட்டது. இனி பூமியைக் காப்பாற்ற ஒரு கடைசி முயற்சி செய்து பார்க்க வேண்டியதுதான் என்று ஜெனரல் முடிவெடுத்தார். மொத்த விண்வெளிப் படையின் கட்டுப்பாட்டையும் ஒரு புத்திசாலியான சின்னப் பையனின் கைகளில் கொடுப்பதற்கு உலக அரசாங்கத்திடம் மன்றாடி அனுமதி வாங்கிவிட்டார். பொடியன் கைகளில் ஆணை போனதும் அவன் அடித்து தூள் பறத்துகிறான்! முதல் தடவையாக எதிரிப் படைகள் திணறுகிறார்கள். சிறுவனாகையால் அவன் பயந்துவிடக் கூடாது என்பதற்காக எல்லாம் விளையாட்டு என்று சொல்லி வைத்திருக்கிறார் ஜெனரல்.

அரை டிராயர் பொத்தானைப் போட்டபடியே வந்தான் நிக்கு. 'இந்த விளையாட்டில் ஒரு தப்பு இருக்கிறது அங்கிள். '

'என்னது ? '

'விண்வெளியில்தான் காற்றே கிடையாதே...பின்னே எப்படி எதிரி விமானமெல்லாம் எரிந்து சாம்பலாகிறது ? '

'அவர்களுடைய விமானத்தின் வெளிப்புறமெல்லாம் மக்னீஷியத்தினால் செய்தது. அவர்களோ கார்பன்-டை-ஆக்ஸைடை சுவாசித்து ஆக்ஸிஜனை வெளியிடுபவர்கள். லேசாக ஒரு ஓட்டை போட்டால் போதும்; ஆக்ஸிஜன் வெளியே கசிந்து மக்னீஷியத்தின் மீது பட்டாலே புஸ்வாணம்தான்! '

'அப்படியா,.. சரி நாம் பம்பரம் விடலாம் '.

'அய்யய்யோ! முதலில் இந்த விளையாட்டை முடிக்கவேண்டும். அப்புறம் பம்பரம். '

'ஊகூம். போரடிக்கிறது. '

அவன் தாடையைப் பிடித்துக் கொண்டு 'நிக்கு, என் கண்ணில்லை ? நீ மட்டும் எதிரிப் படையை அழித்து விட்டால் ராட்சச கோன் ஐஸ் க்ரீம் வாங்கித் தருகிறேன். '

நிக்கு யோசித்தான். 'ஸ்ட்ராபெர்ரி ஐஸ் க்ரீம். எனக்கு வனில்லா பிடிக்காது. என் வகுப்பிலேயே ராகுல் மட்டும்தான் வனில்லா சாப்பிடுவான். '

'சரி, சரி. ஸ்ட்ராபெர்ரி. ' இந்த விளையாட்டில் மட்டும் ஜெயித்தால் ஐஸ் க்ரீம் பாக்டரியே உன்னுடையதுதானே பையா!

'திரும்பி வருகிறார்கள் பார். படு கோபத்தில் இருக்கிறார்கள். ஜாக்கிரதை. '

'பூ! அந்தப் பசங்களை இதோ கலக்குகிறேன் பாருங்க. ' நிக்குவின் விரல்கள் புயலால் செய்த வண்ணத்துப் பூச்சி போல் கம்ப்யூட்டரை இயக்க, மொத்த விண்வெளிப் படையும் ஒரு முகமாகச் சுழன்று திரும்பி ஒரு புள்ளியை நோக்கிப் புறப்பட்டது.

'டேய் டேய், என்ன செய்கிறாய் ? '

'இதே திசையில் நம் விமானங்கள் சென்றால் சூரியனின் கரோனா என்கிற வெளிப்புற நெருப்புப் பிழம்பின் வழியாகப் புகுந்து போகும். '

'போனால் ?... '

'எதிரிப்படை இப்போது பழிவாங்கும் கோபத்தில் இருப்பதால் துரத்திக் கொண்டு பின்னால் போவார்கள். '

'அவர்களுடைய மக்னீஷியம் விமானங்கள் எரிந்து போய்விடும் ?.. '

'கரெக்ட்! நம்முடைய விமானங்களெல்லாம் அந்த சூட்டைத் தாங்கக் கூடிய பாலிமரால் செய்யப் பட்டது. கவலையில்லை. '

'சூரியன் வரை போய்த் திரும்பி வருகிற அளவுக்கு நம்மிடம் எரிபொருள் கிடையாது ' என்றார் ஜெனரல் இறுக்கமான முகத்துடன்.

'எரிபொருளே தேவையில்லை. சூரியனின் ஈர்ப்பு விசையால் இழுக்கப் பட்டு பூமராங் மாதிரி போய்த் தானே திரும்பிவரும். கவண் கல் எஃபெக்ட்! '

ஜெனரலுக்கு மறுபடி அடக்க முடியாமல் கண்ணீர் வந்தது.

அடுத்த அரை மணி நேரம் நகத்தைக் கடிக்கும் மௌனத்தில் கழிந்தது. நிக்கு காதில் வாக்மேன் பொருத்திக் கொண்டு மெல்ல நடனமாடிக் கொண்டு கேக் தின்றுகொண்டு பூனைக் குட்டியைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு க்ரேயானால் சுவரில் படம் வரைந்து கொண்டு உற்சாக மூட்டையாக இருந்தான். ஜெனரல் போலவே மீசைக்காரப் படம்!

விமானங்கள் வேகமாக சூரியனின் நெருப்பு நாக்குகளின் நடுவே புகுந்தன.

'பார் பார். அவர்கள் வந்த வேகத்தில் திசை திருப்புவதற்கு நேரமில்லை. டூ லேட்! ஜோதியாக எரிகிறார்கள் பார், ஒன்று, இரண்டு, மூன்று! '

எதிரி விமானங்கள் கொசு மாதிரி பொசுங்கிப் போவதைக் கண்டு ஜெனரல் கூத்தாடினார்.

'நம்முடைய விமானங்கள் எங்கே ? '

'சூரியனைச் சுற்றிக் கொண்டு திரும்பி வருகின்றன. நேராக பூமியை நோக்கி வரும்படி பாதையை அமைத்திருக்கிறேன். '

'திருப்பு, திருப்பு! பூமியின் மேல் மோதிவிடப் போகிறது. '

'மோதினால் என்ன ஆகும் ? '

'பூமியே இருக்காது. அணு குண்டுகள் பொருத்திய டஜன் கணக்கான விமானங்கள் அந்த வேகத்தில் வந்து மோதினால்... ? உடனே திருப்பு எல்லாவற்றையும்! '

'திருப்பும் அளவுக்கு எரிபொருள் இல்லை. சூரியன் இழுத்து விட்டதில் பத்து ஜி அளவுக்கு ஆக்ஸிலரேஷன் எகிறிவிட்டது. '

ஜெனரல் முகத்தில் கலவரத்தைப் பார்த்து சிரித்தான் நிக்கு. 'கமான் அங்கிள். வெறும் விளையாட்டுத்தானே ? ' என்று ஒரு பாப் கார்ன் பாக்கெட்டைப் பிரித்துக் கொண்டே சொன்னான்.

(மைக்கேல் ஸ்வான்விக் எழுதிய Under 's Game என்ற சிறுகதையின் இளகிய தமிழ் வடிவம். இவர் எழுதியுள்ள தனிம வரிசை அட்டவணை அறிவியல் கதைகள்தொடரில் மக்னீஷியத்தை மையமாகக் கொண்டு எழுதிய கதை இது.)

# ச மு த் தி ர ஆ ண் ட வ ர் ( பிரஞ்சுக் கதை - ஆங்கிலத்தில் அனடோல் பிரான்ஸ் )

---

அந்த வருஷம் புனித வாலரி கிராமத்தின் அநேக மீனவர்கள் கடலில் மூழ்கி இறந்து போனார்கள். அவர்கள் தோணிகளின் சிதர்துண்டுகளுடன் அவர்களின் உடல்களும் கரையில் ஒதுங்கின. அதற்கடுத்த ஒன்பது நாளும், தேவாலயத்தை நோக்கி மேடேறும் தெரு நெடுகிலும், கையால் செய்த சவப்பெட்டிகளின் வரிசை. முழுக்க மூடிய கருப்பு அங்கிகளுடன் விதவைகள், வேதாகமத்தில் வரும் பெண்களைப் போல அழுதபடி பின்னே போனார்கள்.

இப்படித்தான் மாலுமி ஜீன் லினோலும், அவனது மகன் ஆசையும் ஆலய வெளி முற்றத்தில் நல்லடக்கம் செய்யப் பட்டார்கள். ஒரு காலத்தில் அதே முற்றத்தில்தான் அவர்கள் கப்பல் புனித அன்னைக்குக் காணிக்கை செய்யப் பட்டது.

அப்பனும் மகனும் ரொம்ப பயபக்தியான மதப்பிடிப்பு உள்ள ஆட்கள். பெருமகனார் குல்லாம் ட்ருபிம் - புனித வாலரியின் சாமியார் அவர் - பொது மன்னிப்பு தினத்தில் துக்கம் தொண்டையைக் கவ்வச் சொன்னார் - ஆண்டவரின் நீதிக்காய் இப்புனித பூமியில் நல்லடக்கம் செய்யப் பட்டவர்களிலே, லினோலும் ஆசையும் போல அருமையானவர்களை, அருமையான கிறித்தவர்களை நான் பார்த்தது இல்லை.

தோணிகளும் அவற்றின் மாலுமிகளும் கரைப் பக்கமாகவே இறந்து மிதக்கையில். நடுக்கடலில் பெரும் பெரும் கப்பல்களே மூழ்கிப் போயின. அந்தப் பக்கம் சிதிலங்கள் கரையொதுங்காத நாளே இல்லை. அன்றொருநாள் காலை வேளையில் சில சின்னப் பிள்ளைகள் துடுப்பு மீட்டிப் போகையில் கடலில் ஓர் உருவம் மிதப்பதைப் பார்த்தார்கள். அது இயேசுபிரானின் உருவம். மரத்தில் செதுக்கி இயற்கை வண்ணம் பூசிய ஆளுயர உருவம். பையன்கள் அந்த உருவைக் கரைக்குக் கொண்டுவந்து சேர்த்தார்கள். அந்தச் சிற்பத்தின் சிரம் முள் கிரீடத்தால் சுற்றப் பட்டிருந்தது. கால்களும் கரங்களும் துளையிடப் பட்டிருந்தன, என்றாலும் அங்கே ஆணிகளோ சிலுவையோ இல்லை. தியாக பாவமும் கருணை வெளிப்பாடுமாய் அந்தக் கரங்கள் விரிந்திருந்தன. தேவனை நல்லடக்கம் செய்கையில் அரிமதியானின் ஜோசப்புக்கும், இதரப் புனிதப் பெண்மணிகளுக்கும் எப்படி தேவன் காட்சி யளித்தாரோ அதே போல...

பிள்ளைகள் அதைச் சாமியாரிடம் அளித்தார்கள். அவர் சொன்னார் -

' 'மீட்பரின் இந்தத் திருவுரு நமது முன்னோரின் கலைப் படைப்பு. இதை வடித்தவன் எப்போதோ இறந்திருப்பான். ஆமியனிலும் பாரிசிலும் நூறு ஃபிராங்குகளுக்கோ அதிலும் கொஞ்சம் அதிகமாகவோ இவை கிடைக்கலாம். ஆனாலும் அந்தக் காலச் சிற்பிகளைக் குறைத்துச் சொல்ல முடியாது... ஆண்டவர் இப்படி விரிந்த கரங்களுடன் நம்ம கிராமத்துக்கு வந்தாரே, நம்மிடையே இருந்து இறந்து போன நல்லாத்மாக்களை ஆசிர்வதிக்கத்தான், என்பதுதான் எனக்கு சந்தோஷம். எத்தகைய கொடூர மரணத்தை இவர்கள் சந்தித்திருக்கிறார்கள். ஏழ்மைப் பட்டவர்கள் பக்கம், மீனுக்காய் உயிரைப் பணயம் வைப்பவர் பக்கம் தான் பரிவு காட்டுவதைச் சொல்லத்தான் அவர் வந்திருக்கிறார். கடலில் நடந்து, செபாஸ் வலையினை ஆசிர்வதித்தவர் அல்லவா அவர் ? ' '

சர்ச் பீடத்தின் துகிலில் ஆண்டவரைக் கிடத்தி விட்டு, சாமியார் ஆசாரி லாமரைப் பார்க்கப் போனார். ஓக் மரத்தின் நயமான பகுதியில் அழகான சிலுவை ஒன்றை அவர் தயார் செய்ய வேண்டியிருந்தது.

சிலுவை தயாரானதும், மீட்பர் புத்தம் புதிய ஆணிகளால் அதனுடன் பிணைக்கப் பட்டு, வராந்தாவில் சர்ச் வார்டனின் இருக்கைக்கு நேர் மேலே நிறுவப் பட்டார்.

அப்போது ஆண்டவரின் கண்கள் கருணையைப் பொழிவதையும், பேரிரக்கம் நிரம்பி கண்ணீர் அதில் பளபளப்பதையும் எல்லாரும் பார்த்தார்கள்.

சிலுவையை நிறுத்தும் போது அந்தப் புனித முகத்தில் இருந்து கண்ணீர் பெருக்கெடுத்ததைத் தான் பார்த்தாகச் சொன்னார் ஒருவர். அடுத்த நாள் காலை சாமியார் தமது வேலையாள் ஒருவனுடன் பிரார்த்தனைக் கூட்டத்துக்கு வந்தபோது பிரமித்துப் போனார். சர்ச் வார்டனின் இருக்கைக்கு மேலான சிலுவை வெறுமையாய் இருந்தது. இயேசுபிரான் பீடத்தில் சயனித்திருந்தார்.

திருத் தியாக நியதிகளை முடித்த சூட்டோடு சாமியார் ஆசாரியைக் கூப்பிட்டு அனுப்பினார். சிலுவையில் இருந்து ஆண்டவரை கீழிறக்கக் காரணம் என்ன, என்று அவனிடம் கேட்டார். தான் அதைத் தொடவே இல்லை, என்றான் அவன். பிறகு அழைப்பர்களையும், பிற ஊழியக்காரர்களையும் விசாரித்தார். அந்தத் திருவுருவம் நிறுவப்பட்ட பின் யாருமே அந்த வளாகத்துக்கு வரவே யில்லை என ஊர்ஜிதம் செய்து கொண்டார்.

இப்படியாய், இது அற்புதமே என அவர் உணர்ந்து, ஆழ்ந்த தியானத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். அடுத்த ஞாயிறு அன்று அவர் ஜனங்களிடையே தமது பிரசங்கத்தில் நடந்தது எல்லாம் விவரித்தார். ஆண்டவரை முன்னிலும் அழகான சிலுவையில் நிறுவும் படியாய் எல்லாரும் கொடையளிக்கும்படி அவர் வேண்டிக் கொண்டார்.

புனிய வாலரியின் எளிய மீனவர்கள் தங்களால் இயன்ற பண உதவி செய்தார்கள். விதவைகள் தங்கள் கல்யாண மோதிரத்தைக் கொண்டு வந்தார்கள். ஆகவே சாமியார் உடனே ஆபிவிலி வரை சென்று INRI என்ற எழுத்துக்கள் பொன்னிறமாய்ப் பதிந்த மெருகூட்டிய தகடுகள் வேய்ந்த சிலுவைக்குச் சொல்லி விட்டு வந்தார். இரண்டு மாதத்தில் சிலுவை தயார் ஆனது. முதல் சிலுவை அகற்றப் பட்டு, இது, கடற்பஞ்சு ஊடே வைத்து, சுத்தியல் கொண்டு ஆண்டவரை ஏற்றுக் கொண்டது.

ஆனால், முன்போலவே ஆண்டவர் சிலுவையை விட்டு வெளியேறி விட்டார். இரவானதும் அவர் சிலுவையில் இருந்து இறங்கி, பீடத்தில் உடலைக் கிடத்திக் கொண்டார்.

சாமியார் காலையில் வந்து பார்த்து விட்டு முழந்தாளிட்டு நெடுநேரம் பிரார்த்தனை செய்தார். இந்த அற்புதம் சுற்றுப்புறம் எங்கும் பரவி, ஆமியனின் பெண்கள் எல்லாரும், புனித வாலரியின் இயேசுபிரானுக்காய் நிதி திரட்டத் துவங்கினார்கள். பாரிசில் இருந்து பணமும் நகைகளும் வரப் பெற்றார் சாமியார். அமைச்சர் மரீனின் மனைவியிடமிருந்தும், சீமாட்டி ஹைத் டி நூவிலிடம் இருந்தும் வேலைப்பாடு மிக்க வைரங்களும் வந்தன. இந்த செல்வங்களை யெல்லாம் வைத்துக் கொண்டு, இரண்டு வருடங்களில் லா ரூ புனித சல்பிஸ்சின் பொற்கொல்லன் ஒருவன், பொன்னாலும் விலை உயர்ந்த கற்களாலும் நவீன மோஸ்தரில் சிலுவை ஒன்றைச் செய்தளித்தான். 18...ம் ஆண்டு ஈஸ்டர் கழிந்த இரண்டாம் ஞாயிறு அன்று பெருந் திரளான ஜனங்களின் முன்னிலையில் அது நிறுவப் பட்டது. ஆனால்... துக்கத்தின் பிம்பமான பழைய சிலுவைகளை அதற்காகப் புறக்கணிக்காதவர் அவர். ஆவே அவர் தங்கச் சிலுவையையும் நிராகரித்தவராய் வெண் துகில் மீது படுத்துக் கொண்டார்.

அவரைக் காயப் படுத்தி விடுகிற பயத்தில் ஆகவே பிறகு ஆண்டவரை அப்படியே விட்டு விட்டார்கள் எல்லாரும். சுமார் இரண்டு வருஷம் அவர் அப்படியே இருந்தார். பியரி கைல்லுவின் பிள்ளை பியரி ஒருநாள் சாமியாரிடம் வந்து, ஆண்டவரின் உண்மையான சிலுவையைக் கடல்கரையில் தான் கண்டதாகச் சொன்னான்.

பியரி அப்பிராணி. தன் சாப்பாட்டைப் பார்த்துக் கொள்ளக் கூட வழி வகை தெரியாதவன். யாருக்கும் அவனால் எந்தத் தொந்தரவும் இல்லை. எல்லாரும் அவனை நேசித்தார்கள். அவன்மீது பாவப் பட்டு எதாவது அவனுக்குச் சாப்பிடத் தருவார்கள். ஆனா ஒண்ணு என்னன்னா, இந்தப் பியரி, ஆள் ஒரே வளவளா. அவன் பேச்சை யாரும் சட்டை பண்ணுவதில்லை.

இதுநாள் வரை சாமியார் அந்த சமுத்திர ஆண்டவரிடமான தம் பிரார்த்தனையை நிறுத்தவே இல்லை. இந்தப் பயல் சொன்னது அவரை அசத்தி விட்டது. தமது ஊழியக்காரர்களுடன் அவர் அவன் சொன்ன இடத்துக்கு வந்து பார்த்தார். காலகாலமாய்க் கடலில் மிதந்து நடுவில் ஆணியடிக்கப் பட்ட சிலுவை அமைப்பு கொண்ட இரு சட்டங்களை அவர் பார்த்தார்.

ஏதோ பழைய கப்பலின் சிதர் துண்டுகள் அவை. ஒரு சட்டத்தில் கருப்பாய் J எனவும் L எனவும் எழுத்துக்கள் இருந்தன. ஆக ஐந்து வருடம் முன்னால் கடலில் மூழ்கி இறந்து போன ஜீன் லினோலின் தோணிச் சிதர்களே அவை என்பதில் சந்தேகம் இல்லை.

அதைப் பார்த்து விட்டு ஊழியர்கள் பியரியைக் கிண்டல் செய்தார்கள். ஒடைஞ்ச தோணியின் மரத்தைப் பார்த்து சிலுவை என்கிறான்... ஆனால் சாமியார் உற்று கவனித்தார். கடுமையான ஜெபத்தில் தம்மை அவர் ஆழ்த்திக் கொண்டார்... இறுதியில் இறந்துபட்ட மீனவர்களுடன் ஆண்டவரும் அவர் கண்ணுக்குள் தட்டுப் பட்டார். ஆண்டவரின் பரந்த கருணையும் பேரிரக்கமும் தம்மேல் வெளிச்சமாய்க் கவிகிறாப் போல சாமியார் உணர்ந்தார். அப்படியே மணலில் அவர் மண்டியிட்டு மடிந்துபட்ட விசுவாசிகளுக்காய் அவர் ஜெபம் பண்ணினார். பிறகு தமது ஊழியக்காரர்களிடம் அந்தச் சட்டத்தைத் தோளில் சுமந்து சர்ச்சுக்கு எடுத்து வரும்படி பணித்தார். அது வந்து சேர்ந்ததும், தாமே இயேசுநாதரை அந்த பீடத்தில் இருந்து கையில் எடுத்து தோணிச் சட்டங்களில் வைத்து, சமுத்திரம் அரித்த ஆணிகளால் ஆண்டவரைத் தாமே நிறுத்தினார்.

சாமியாரின் உத்தரவின் பேரில் மறுநாளே பொன்னும் மணியும் இழைத்த சிலுவையின் இடத்தில், வார்டனின் இருக்கைக்கு நேர் மேலே இந்தச் சிலுவை இடப்பட்டது. சமுத்திர இயேசு இந்தச் சிலுவையைப் பிரியவே இல்லை. தம்மையும் தமது புனித அன்னையையும் பிரார்த்தனை செய்தபடி - மடிந்துபோன தமது விசுவாசிகளின் தோணிச் சிதிலத்தில் இருக்க அவர் ஒப்பினார். உறுதியும் துக்கமுமான உருவத்துடன் அங்கே, ஆண்டவர் இப்படிப் பேசுவதுபோல் தோன்றியது -

' 'என்னுடைய சிலுவை எல்லாருடைய துக்கங்களையும் சுமந்தது. ஏனென்றால் நான் பாவப்பட்ட ஜீவன்களின் ஆண்டவன்... ' '

# பிசாசும் இராட்சதக் குடைக்காளானும் ( பிரெஞ்சு மூலம்: Michel Tremblay : ஆங்கில மூலம்: Michae Bullock )

**அம்ரிதா ஏயெம்**

(ஆங்கிலவழி தமிழ்)

அவன் பிசாசுக்கெல்லாம் பெரிய பிசாசாக இருந்தான். எல்லாப் பிசாசுகளுக்கும் இருப்பதுபோல அவனுக்கு ஒரு வாலும் இருந்தது. அம்புக்கூர் நுனியுள்ள பிசாசுடைய அந்த நீண்ட வால் தரையில் இழுபட்டுக் கொண்டேயிருக்கும். சுருக்கமாகச் சொல்லப்போனால் வாலுள்ள பிசாசுகளிலெல்லாம் அவன் பெரிய பிசாசு.

வீதியால் போகும்போது அவனைக் கண்;ட பெண்கள் எல்லாம் பாவாடையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு ஒட்டமெடுத்தனர். அவர்கள் வீட்டுக்குச் சென்று “நான் பிசாசக் கண்டுட்டன். அங்கே பிசாசு போகுது. நான் அந்த பிசாசக் கண்டுட்டன். சத்தியமா, கடவுளறிய நான் பிசாசக் கண்டது உண்மை.” என்று வீட்டை அடைந்தவுடன் அழுதழுது சொன்னார்கள்.

என்றாலும் பிசாசு தனது பாதையில் அலட்டிக் கொள்ளாமல் தொடர்ந்து போனான். தன்னைக் கண்டு விலகி ஓடுபவர்களைப் பார்த்து புன்முறுவலும் செய்தான்.

அவன் ஒரு மதுக்கடைக்குப் போனான். “குடிப்பதற்கு ஏதாவது கொண்டு வா” என்று கத்தினான். ஏதோவொன்று அவனுக்கு குடிப்பதற்கு கொடுக்கப்பட்டது. மதுக்கடைக்காரன் பயத்தால் கலவரமடைந்தவனாகக் காணப்பட்டான்.

“நீ பிசாசப் பார்த்து பயப்படுறாயா ?@ என்று பிசாசு கேட்டான். கோழையாக “ஓம்” என்றான் மதுக்கடைக்காரன். பின்னர் பிசாசு ஹோவென்று சிரித்தான்.

“மதுக்கடைக்காரனே உன்ர வைன் நன்றா இருக்கிது. நான் மீண்டும் ஒருக்கா பிறகு வாறன்” என்றான்.

“மதுக்கடைக்காரன் தனது தலையைத் தாழ்த்தி, மதுக்கடைக்காரன் அழுக்காகாமல் முன்னால் கட்டும் துணியில் பிசாசு தனது கைகளைத் துடைத்தபோது, அந்த வெள்ளை நிறமான துணி மேலும் அழுக்காக மாறியது. அந்தத் துணியில் இறைக்சிக் கறிகளினதும், மரக்கறிகளினதும் கறைபடிந்த தடங்கள் காணப்பட்டன. அதில் நிலக்கரியின் கறுப்புத் தழும்புகளும் இருந்தன. ஒவ்வொரு காலைப் பொழுதிலும் பற்றவைக்கும்போது அடுப்பு இட்ட தழும்புகள் அவை.

“இதுதான் அது. நான் கொஞ்சம் நல்ல வைனை குடிக்க யோசிச்சிருக்க வேணும்.” என்று மதுக்கடைக்காரன் யோசித்தான். ஆனால், பிசாசோ, எல்லாப் பிசாசுகளும் மற்றவர்கள் யோசிப்பதை அனமானித்துக் கண்டுபிடிப்பதுபோல, மதுக்கடைக்காரன் யோசித்ததையும் கண்டுபிடித்து சத்தம்போட்டுச் சிரித்தான். சில நேரம் தனது தொடைகளில் அடித்துக் கொண்டும் சிரித்தான்.

சிலர் மதுக்கடைக்குள் புதிதாக நுழைந்தபோது பிசாசு அமைதியில் மூழ்கினான். அங்கே அழகிய சுந்தரவதன இளைஞன் இருந்தான். முகத்திலே தண்ணொளி போன்ற எழில் பொழிகிற பையன் அவன்.

“நான் கேட்கிற முரசுச் சத்தம், எங்கேயிருந்து வருகுது” என்று கேட்டான் பிசாசு.

“எனக்குத் தெரியாது. நான் பிறந்ததிலிருந்து இந்த முரசுச் சத்தம் நான் எங்கு போனாலும் அதுவம் என்னோடயே வருகுது. ஆனா அது எங்கேயிருந்து வருகுது எண்டு எனக்குத் தெரியாது. அது எப்பயும் ஒரே மாதிரியாத்தா;ன இருக்குது. அது என்கூடவேதான் வந்துகொண்டு இருக்குது” என்றான் பையன்.

பிசாசு எழுந்து போய் பையனுக்கருகில் அமர்ந்தான். “நீ போர் வீரனா ?” என்று பிசாசு கேட்டான். அந்த நேரத்தில் முரசு முழங்கும் சத்தம் நின்று போனது.

“போர் வீரனா.. ?, அப்படியென்றால் என்ன.. ? “ என்று மீண்டும் பையன் கேட்டான்.

“என்ன..! அப்ப.. உனக்கு போர் வீரனெண்டால் என்னெண்டு உண்மையிலேயே தெரியலையா ? “ என்று பிசாசு கோபத்துடன் கத்தினான்.

குசினிப் பக்கம் போய்க்கொண்டிருந்த மதுக்கடைக்காரன் திரும்பி வந்து “போர்வீரனெண்டா எனக்கும் ஒண்டும் தெரியாது என்று சொன்னான்.

“ம்ஸம்ஸ நல்லம், எல்லோரும் வாங்கடா. போர் வீரனெண்டா போரை உருவாக்குபவன்..” என்று பிசாசு கத்தினான.

“போர்..! போர்..! அப்படியெண்டா என்ன ? என்று சுந்தரவதன பையன் கேட்டான்.

“ஏய்ஸ, உனக்கும் போரெண்டா என்னவெண்டு தெரியலையா, அடப் பாவமே..” என்று பிசாசு நக்கலாகக் கொக்கரித்தான்.

“இல்ல.. இல்ல.. அந்தச் சொல்லே எனக்குத் தெரியாது” என்று அப்பாவித்தனமாக பையன் சொன்னான்.

அப்போது, மிகுந்த கோபத்துடன் தனது தலையை தனது கைகளால் பிடித்தவாறு "நான் போரக் கண்டுபிடிக்க மறந்திட்டனா ? போர உருவாக்கிற வழிகள கண்டுபிடிக்க மறந்திட்டனா ?." என்று கூவலுடன் கத்தினான்.

மதுக்கடைக்கு வெளியே வீதியோரத்தில் ஒரு சின்னப் பெண் பாடிக்கொண்டிருந்தாள்.

மாது ஒருத்தி படலையைத் திறந்தாள்.

மரணம் என்று பிசாசு கத்தினான்.

அந்த மாதொருத்தியோ மரணமாகிப் போனாள்.

அவளது ஆன்மா நரகத்திற்கு பறந்தது.

"எனக்கு ஒரு நிலக்கரித் துண்டு தா" என்று பிசாசு கத்தினான. அவனுக்கு ஒரு துண்டை மதுக்கடைக்காரன் கொடுத்தான். "இது பெரிசில்ல. எனக்கு அதவிடப் பெரிய துண்டு வேணும்" என்றான் பிசாசு. அப்போது மதுக்கடைக்காரன் தன்னிடமிருந்த மிகப் பெரிய துண்டைக் கொண்டு கொடுத்தான்.

"இதவிடப் பெரிசா வேணும்"

"இதவிடப் பெரிசு, எனக்கிட்ட இனி இல்ல. இதுதான் இருந்திச்சி. எனக்கிட்ட இருந்த பெரிய துண்டுகளிலெல்லாம் பெரியது இதுதான்."

"இதுதான் உன்னிடமிருந்த பெரிய துண்டென்றா பரவாயில்ல. .. பாப்பம்.." என்று பிசாசு கூப்பாடு போட்டான். புின் மேசையில் ஏறி பின்வருவமாறு உரையாற்றத் தொடங்கினான்.

"உங்களில யாருக்கு போரெண்டா என்னெண்டு தெரியாதோ, அவங்கெல்லாம் காத கூர்மையாக்கிக் கொள்ளுங்க"

மதுக்கடைக்குள் முணுமுணுப்புக்களும் ஆரவாரங்களும் கேட்கத் தொடங்கின. குழப்பம் உருவாகும்போல் இருந்தது. மதுக்கடைக்காரன் கொஞ்சம் கஸ்டப்பட்டு ஆரவாரம் செய்தவர்களை இருக்கையில் இருக்கச் செய்தான்.

"இந்த சுவரப் பாருங்க.." என்று தொடர்ந்தான் பிசாசு. "இந்த ஒண்டுக்குமே உதவாத நிலக்கரித் துண்டால போரெண்டா நான் என்னெண்டு காட்டப் போறன். பின்னர் சுவரை நோக்கி சுழன்று மிகுந்த கோபம் கொண்டவனாக பிசாசு சுவரில் வரையத் தொடங்கினான். அவன் ஒரு இராட்சத குடைக்காளானை வரைந்தான். மதுக்கடையின் சுவர் பூராக அந்த இராட்சத குடைக்காளான் முளைத்திருந்தது. வுரைந்து முடித்து, முளைக்கச் செய்த பின்னர், பிசாசு நின்ற மேசையிலிருந்து இன்னொரு மேசைக்கு பாய்ந்து பின்வருமாறு பிரகடனப்படுத்தினான்.

"இப்ப.. நீங்க எல்லாம் இருக்கீங்க. நான் உங்க எல்லோருக்கும் உங்கட போரெண்டா என்னெண்டு வரைஞ்சு காட்டிட்டன். இது சின்னப் போர். எனக்கு அவன் தந்த

நிலக்கரித்துண்டு, உண்மையான பெரிய போர வரைஞ்சி காட்ட முடியாதளவிற்கு சின்னது எண்டபடியால, நான் உங்களுக்கு வரைஞ்சு காட்டினது சின்னப்போர்தான்" என்றான் பிசாசு.

எல்லோரும், கைதட்டி ஆரவாரம் செய்து பிசாசைப் புகழ்ந்து விட்டுச் சென்றார்கள். அங்கே பிசாசையும், மதுக்கடைக்காரனையும், எழில்பொழிகிற சுந்தரவதனப் பாலப் பையனையும் தவிர வேறு எவரும் இல்லை.

"என்னெண்டாலும் இது சின்னக் குடைக்காளான்தான். இது சும்மா சாதாரண அளவுதானே இருக்கும்" என்றான் அப்பாவித்தனமாக பையன்.

"போர்வீரனென்டா, இந்தமாதிரி குடைக்காளான்கள வளர்க்கிற ஆக்கள் எண்டு உனக்கு இப்பவாவது விளங்குதா ?.. உனக்கு இப்பஸ எதயுமே விளங்கிக் கொள்ள ஏலாது." என்று பிசாசு தனது வாலைச் சுருட்டியவாறு கூறினான்.

"அதெல்லாத்தையும் விடு.. அந்த குடைக்காளான் சாதாரண காளான்மாதிரி இல்ல எண்டாவது உனக்குத் தெரியுமா ?... ம்..ம்.. அதெல்லாம் கிடக்கட்டும்ஸ ஆகக் குறைஞ்சது துப்பாக்கியெண்டாலாவது உனக்கு என்னெண்டு தெரியுமா ?"

"ஓம்"

"ம்.., அதுவும் ஒரு சாமான்தான். ஆகக் குறைஞ்சது அந்த ஒரு சாமானையாவது நான் கண்டுபிடிக்க மறந்துபோடல. உனக்கிட்ட துப்பாக்கி இருக்கிதா ?..

"ஓம்@

"ஓடுரா..!, ஓடு.!... உடனே போய் அதனை எடுத்துவாடா. போர் உனக்காக காத்துக்கிருக்க ஏலாதுரா. இவ்வளவு நேரம் அது காத்திருந்தது போதும்டா ? ஓடுராஸ ஓடு.."

வாலிபன் போய் தனது துப்பாக்கியை எடுத்துக்கொண்டு வந்தான். அதற்கு இடைப்பட்ட நேரத்தில் மொடாக் குடிகாரனாகிய பிசாசு இன்னுமொரு போத்தல் வைனை குடித்தது முடித்துவிட்டிருந்தான்.

மதுக்கடைக்காரன் சுவரிலிருந்த குடைக்காளானைப் பார்த்தான். தலையைச் சொறிந்தவாறே "என்ர அம்மாடியோவ்.. என்ன பெரிய குடைக்காளான்!. என்ன மாதிரி, இந்தக் கரித்துண்டால எப்பிடிக் கீறியிருக்கான்" என்று கூறிவிட்டு குசினிப் பக்கம் சென்றுவிட்டான்.

பிசாசு மகிழ்ச்சி இழந்தவனாக காணப்பட்டான். "என்ன மொக்கன். மடையன், தல கழண்டவன் நான். என்ர மண்டக்குள்ள என்ன இருக்குதோ. நான் செய்ய வேண்டிய வேல எவ்வளவோ கெடக்குது. தேவையில்லாம வேற வேலயெல்லாம் செய்யறன். நூன் போர, சண்டைய எப்ப உருவாக்கப் போறனோ ? எனக்கே தெரியாது. ம்.. பரவாயில்ல ம்.. அதுக்கு கொஞ்சம் காத்திருந்தா ஒண்டும் கொறஞ்சு பொயிடப்பொறதில்ல. நெசமான போர் எண்ட தேனை, அந்தத் தேனின்ர சுவைய அறிய, இந்த தேனை கூட்டிலிருந்து வடிச்சிச அவங்களுக்கு கொடுக்க வேணும். நான் முதன் முதலா செய்ய வேண்டிய வேல அதுதான். அவங்களுக்கு போர் எண்டா என்னெண்டு தெரியாதாம். பிசாசு மதிக்கும், பிசாசின் கௌரவப் பிரஜைகளே, போரெண்டா என்னெண்டு தெரிய அவங்களுக்கு ரொம்ப காலம் பிடிக்காது.

அவங்கட எல்லோரின் முகங்களிலயும் நான் ரொம்ப நேசிக்கிற என்ர அன்பான போர் ஆரவாரப்படத் தொடங்குது”

பையன் தனது துப்பாக்கியுடன் ஏற்கனவே வந்திருந்தா;ன. பையனின் துப்பாக்கியை பிசாசு கண்டவுடன், பிசாசின் கோபம் இரட்டிப்பாக மாறியது. அதைத்தான் அவர்கள் துப்பாக்கி என்கிறார்களா ? அவர்கள் அறிவீனத்துக்காகவன்றி வேறு எதற்காக பயன்படுத்த வெளியே எடுக்கிறார்கள். எல்லோரும் கறைபடிந்தவர்கள். களங்கமானவர்கள். வெறுக்கத்ததக்கவர்கள். அவர்கள் ஊனமான ஈனப் பிறவிகள். பிசாசு துப்பாக்கியைப் பிடித்திழுத்து அதனை முறுக்கினான். பையன் ஆச்சரியத்தால் கண்களைத் திறந்து சத்தம் போட்டான்.

பிசாசு நெருப்புக்கு அருகில் போனான். குழலெடுத்து ஊதினான். உடனே அருமந்தமான ஒருவருமே கண்டிருக்காத துப்பாக்கியாக அதனை மாற்றினான்.

“நான் அத தொட்டுப் பார்க்கட்டா ?.” என்று பிசாசு கேட்டான்.

“ம்.. நல்லம்.. இது உன்ரதான்ஸ நான் உனக்கு இதனைதத தாறன்” என்று பிசாசு பதிலிறுத்தான். இதற்கு பையன் நன்றி கூறினான்.

“எனக்கிட்ட நன்றி மட்டும் சொல்லாத.. அதெல்லாம் என்ன எப்போதும் ஏமாத்தற வேல மாதிரி”.

அந்தச் சுந்தரவதன எழில் பொங்கும் வாலிபப் பையன் துப்பாக்கியை கட்டியணைத்து முத்தமிட்டான். அதனை ஒரு பெண்ணாக நினைத்து கட்டிப் பிடித்து நடனமாடத் தொடங்கினான்.

“நீ உன்ர துப்பாக்கியத்தான் காதலிக்க வேணும். ம்.. என்ன நான் சொல்றது விளங்குதா ?..” என்;றான் பிசாசு. “ஓம்.. உண்மைதான்..” என்றான் பையன் நடனமாடிக்கொண்டே. சைகை மூலம் பிசாசு அவன் நடனமாடுவதை நிறுத்தி, மேசைக்குப் பின்னாவல் போகச் செய்தான்.

“அயல் நாட்டை, ஆக்கள் எப்பிடிக் கூப்பிடுறாங்க எண்டு தெரியுமா ?. அந்த அயல் நாடும் உன்ரதான் தெரியமா ?” என்று பையனிடம் பிசாசு கேட்டான். பையன் அதிர்ச்சியடைந்தவனாகக் காணப்பட்டான்.

“என்ன!.. பக்கத்துநாடா ?.. பக்கத்து நாடெண்டு ஒண்டு இல்லையே இஞ்ச. இஞ்சயிருக்கதெல்லாம் ஒரே ஒரு நாடு. அதுதானெ உலகம் என்ற ஒரே நாடு. உலகம் என்கிறது ஒரே ஒரு நாடுதானே!” என்றான் பையன். பையனின் எழில் பொழிகிற சுந்தரவதன முகத்தில் ஓங்கி பலமாக ஒருஅறைவிட்டான். ஆந்த ஒரு அறை அவனை இரு முறை கிறுக வைத்தது.

“யாராவது, எப்போதாவது இதமாதிரி அப்பாவித்தனமான மக்கள பார்த்திருக்கீங்களா ?..” என்று பிசாசு உறுமினான்.

“உலகம் என்பது ஒரு நாடாம்,.. மடையன்கள்.., மொக்கன்கள்.., பைத்தியக்காரன்கள். இவனுகள்ள தலைக்குள்ள என்ன களிமண்ணா இருக்கிது. எல்லோரும் கேளுங்க. நான் சொல்றன். போர் மூழுறதுக்கு குறைஞ்சது ரெண்டு நாடுகளாவது தேவை தெரியுமா ?

மூடச்சனங்களே. ஆற்றுக்கு அக்கரையிலுள்ள அடுத்த ஊரை எல்லோரும் பக்கத்து நாடு எண்டு எடுத்துக்குங்க. அதுதான் எங்கட எதிரியின் நாடு. பைத்தியக்கார மொக்கன்களே! ஏங்களுக்கு எதிரி எண்டா என்னெண்டு தெரியாதெண்டு யாராவது சொல்லுங்கடா பார்ப்பம். ஒருத்தனும் சொல்லக் கூடாது. அப்படிச் சொன்னா பளார், பளார் எண்டு ரெண்டு தருவன். கவனம். நீங்க எல்லோரும் இப்போதிருந்தே அடுத்த ஊர் மக்கள வெறுக்கவேணும்;. அவங்க எல்லோரயும் மனப்பூர்வமா வெறுக்கோணும். ஏன்ன நான் சொல்றதெல்லாம் விளங்கிச்சா ?"

"ஆனா நான் கட்டப்போற பெண்ணைஸ" என்று பையன் இழுத்தான்.

"நீ கட்டப்போற பெண்ணைக்கூட.. அவள நீ மற்ற ஆக்கள விட கடுமையா வெறுக்கோணும். நீ அவங்க எல்லோரையும் வெறுத்தொதுக்கி, எல்லோரையும் சாகவை".

பையன் குதித்துக் கொண்டே "என்ர இந்தத் துவக்காலயா ?" என்று கத்தினான்.

"அதுக்கு எனக்கு ஏலாது. நாங்க துப்பாக்கி வச்சிருக்கிறது பறவைகள, மிருகங்கள கொல்றதுக்குத்தான்.."

"நீ உன்ர துவக்காலதான் அவங்கள கொல்ல வேணும். ஏனென்டா முதலாவது போர் அப்படித்தான் துவங்க வேண்டியிருக்குது. நீதான் முதலாவது போர் வீரனாகவும் இருக்கப் போகிறாய்".

"அப்ப நீ என்ன சொல்லுறாயெண்டா, போரை உருவாக்கோணும் எண்டா மக்கள கொல்லோணும் எண்டு ?." என்று இராட்சதக் குடைக்காளானைப் பார்த்தவாறு பையன் கேட்டான்.

"அதெல்லாம் சரி, போரை உருவாக்கோணும் எண்டா மக்கள கொல்ல வேணும் எண்டுதானே அர்த்தம். அதுவும் ஆயிரக்கணக்கான மக்களக் கொல்ல வேணும். என்ன வேடிக்ககை இது! எண்டு பாரன நீ;!"

"அப்ப இராட்சத குடைக்காளான்" என்று வினவினான் பையன்.

"இராட்சத குடைக்காளான்தானே ?.. அது பிந்தி வந்து சேர்ந்திடும். மிகவும் பிந்தித்தான் அது வந்து சேரும். நீ அப்போ இருக்க மாட்டாய். செத்துப் போயிருப்பாய்."

"என்ன!. என்னக் கொன்றுபோடுவாங்களா ?"

"ம்.. அப்படியும் இருக்கலாம்."

"இந்தப் போரிலதானே.."

"ஓம்.."

"அப்படியெண்டா எனக்கு போர் வீரனாயிருக்க விருப்பமில்லை. எனக்கு போரை உருவாக்க ஏலாது."

பிசாசு மேசை மேலல ஏறிநின்று கொண்டு பயங்கரமாக எருமைமாடுபோல உறுமினான். “நான் உனக்கு என்ன செய்யச் சொன்னேனோ, அதத்தான் நீ செய்ய வேணும்” என்று பையனைப் பார்த்து அதட்டினான்.

மதுக்கடைக்காரன் குசினிப்பக்கமிருந்து திரும்பி எண்ணெய்ச் சட்டியை இழுத்துக்கொண்டு கடைக்குள் வந்தான். “நான் இந்தச் சுவரிலுள்ள அளவுக்கு இராட்சதக் குடைக் காளானை எங்கே காணலாம் எண்டு எனக்குச் சொல்ல வேணும்” என்று காளானைக் காட்டிக் கேட்டான்.

“திரும்பிப் போடா குசினிக்கு.. மொக்கா.. அந்தக் காளானை சாப்பிடுவது நீ இல்லடா மாடா. அந்தக் காளான்தாண்டா உன்ன சாப்பிட்டுடும்” என்று பிசாசு கத்தினான்.

பிசாசு மேசையிலிருந்து இறங்கினான். பையனை தோளைப் பிடித்திழுத்து அவனை இருக்கச் செய்து அவனிடம் “போரை விரும்புகிற அந்த மனிதன் நீயாத்தான் இருக்கோணும் எண்டு நான் நினைக்கிறன். இ;ல்லையெண்டு மட்டும் சொல்லாத. உன்னப்பத்தி எனக்கு நல்லா பூியுது. நீ ஒருபோதும் யாரோடயெண்டாலும் சண்டை பிடிச்சதை நான் கண்டதில்லதான். எண்டாலும்.. சரியே ?, ஏற்கனவே நான் உனக்கு வசைமாரி பொழிஞ்சிருப்பேன், நான் சொல்றத நல்லாக்கேளு. நீ யாரை அதிகம் விரும்பல்லயோ அவங்கள மத்த ஆக்கள் உணர்த்திப் பேசுறத நீ விரும்பமாட்டாய். நீ தனிப்பட்ட ரீதியில் வெறுக்கிற ஆட்டகளும், வெளிப்படையாக நீ வெறுக்கிற ஆட்களும் நிச்சயமா அங்க இருக்கோணும். அவங்களோடதான் நீ சண்டை பிடிக்க வேணும். அவங்கள நீ வெறுக்கோணும். ஏனெண்டா அவங்களோட நீ சண்டை பிடிச்சுத்தான் ஆகவேணும். சூாலம்பூரா அவங்கள வெறுத்துக்கொண்டே இருக்கோணும். சண்டை பிடிப்பதற்கான தேவை ஏதாவது இருக்கிது எண்டு நீ நினைக்கிறாயா ?.

பையன் தாழ்ந்த குரலில் பின்வருமாறு பதிலிறுத்தான். “ஓம்.. அந்த தேவைய நான் இப்ப உணர்ந்திட்டன். ஆனா நான் சண்டை பிடிக்க விரும்பினது.. விரும்பினதுஸ”

“யாரோட.. யாரோட..” என்று முகம் பிரகாசித்தவனாக பிசாசு ஆனந்தக் கூத்தாடிக் கத்தினான்.

“நான் சண்ட பிடிக்க விரும்பினது என்ர கல்யாணத்துக்கு தடையா நிற்கிற, நான் கட்டப்போற பெண்ணின்ர சகோதரனோட..”

அப்போது உடனடியாக மதுச்சாலையின் கதவினைத் திறந்துகொண்டு தனது எதிர்கால மனைவியின்; சகோதரன் தோன்றினான்.

“போ.. உடனே போஸ” என்று பையன் காதில் கிசுகிசுத்தான்.

“சந்தா;ப்பத்தை தவறவிடாமல் பாவித்துக் கொள்ளு. ஒருத்தரும் உன்னப் பார்க்கவும் மாட்டாங்க. கேட்கவும் மாட்டாங்க. முதல்ல போய் அவனைக் கோப்படுத்து. அவனுக்கு விருப்பமில்லாத எல்லாத்தையும் கதை. கோபம் வாறமாதிரியெல்லாம் கதை. உடனே சண்டை தானாகவே வந்துவிடும்.

பையன் எழுந்து தான் திருமணம் முடிக்கப்போகும் பெண்ணின் சகோதரனிடம் போய் அவனின் காதிற்குள் என்னவோ கதைத்தான். அதற்கு அவன் கேள்வி;க் கணைகள் கொண்ட

துழாவும் பார்வையை பையன்மேல் வீச ஆரம்பித்தான். அப்போது பையன் அவன் முகத்தில் காறித் துப்பினான். இருவரும் மதுக்கடையைவிட்டு வெளியேறினார்கள். அப்போது பிசாசு ஜன்னலடியிலிருந்து இளைப்பாறத் தொடங்கினான்.

நிசப்தமான இரு நிமிடங்களுக்குப் பிறகு, பையன் மதுக்கடைக்கு மீண்டும் திரும்பினான். அவனின் உடம்ப பூராக புழுதிகள் படிந்திருந்தன. அவனது உடுப்பில் இரத்தத் துளிகள் அங்குமிங்கும் சிதறிக்கிடந்தன. அவனின் கண்களில் ஆழமான ஒரு ஒளி தென்பட, அவன் புன்முறுவல் செய்து கொண்டிருந்தான்.

“நான் அவனைக் கொன்றுபோட்டன். நான் அவனைக் கொன்றுபோட்டன்ஸ அவன் சாகிறதப் பார்க்கிறது எவ்வளவு ஆனந்தமாக இருந்திச்சு..” என்று ஆரவாரித்தான்.

மதுக்கடை முற்றத்திற்குள் வெண்கல வாத்தியக்குழு நழைந்தது. பிசாசின் வெண்கல வாத்தியக்குழு போர் வீரா;கள் போல மெட்டுக்களுடன் வாத்தியங்களை இசைத்துக் கொண்டு நுழைந்தது. அவர்கள் இசைத்தும் பாடிக் கொண்டும் இருந்தார்கள்.

“நாங்க வாத்தியக் குழுவத் தொடருவம்.. நாங்க அடுத்த கிரமத்திற்குப் போய், அந்தக் கிராமத்தாக்களிடம், நீ அவங்கட மகனைக் கொன்றுபோட்டாயென்று சொல்லுவம். அவங்க அவங்களின்ர துப்பாக்கிகள வெளியே எடுத்து உன்னத் தாக்க முயற்சிப்பாங்க. ஆனா உன்ர ஆக்கள் பார்த்துக் கொண்டிருப்பாங்களா ? இ;ல்ல.. இல்ல..இல்ல. உன்ர ஆக்கள் வந்து உன்னைப் பாதுகாப்பாங்க. வா! சுந்தரவதனமுடைய எழில் பொங்கும் போர்வீரனே! எங்கட போர் உனக்காக காத்துக்கொண்டு நிற்கிறது “ என்று பையனிடம் பிசாசு கூறினான்.

வெண்கல வாத்தியக்குழுவும், பிசாசும், போர் வீரரா;கள் எல்லோரும் அயற் கிராமம் இருந்த திசைநோக்கி போனார்கள். வூத்தியங்கள் மென்மையான மெட்டுக்களில் இசைக்க பிசாசு நடனமாடினான். பையன் சிரித்தான்.

அப்போது போர் வீரா;கள் பெருகினார்கள். இரு போர் வீரா;கள் நான்கு போர் வீரா;களாகவம், பின்னர் எட்டு, பின்னர் பதினாறு, பின்னர் முப்பத்தியிரண்டு, பின்னர் அறுபத்தி நான்கு, பின்னர் நூற்றிஇருபத்தெட்டு, பின்னர் இருநூற்றி ஐம்பத்தாறு, பின்னர் ஐநூற்றி பன்னிரண்டு, பின்னர் ஆயிரத்து இருபத்தி நாலு, பின்னர் இரண்டாயிரத்து நாற்பத்தெட்டு, பின்னர் நாலாயிரத்து தொண்ணூற்றாறுஸ..

அங்கே வசைகளும், அவமதிப்புகளும், பின்னர் அடித்தல்களும், பின்னர் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் இருந்தன. மக்கள் ஓடினார்கள். மறைந்தார்கள். தாக்கினார்கள். சுயபாதுகாப்பில் ஈடுபட்டுக்கொண்டார்கள். கொன்றார்கள். கீழே விழுந்தார்கள். எழும்பினார்கள். மீண்டும் விழுந்தார்கள்ஸ

துப்பாக்கிகள் வந்து சேர்ந்தன. எல்லா வகையான துப்பாக்கிகளும், சிறியவைகள், நடுத்தர அளவுடையவைகள், பெரியவைகள், மிகவும் சிறியவைகள், மிகப் பெரியவைகள், பின்னர் பீரங்கிகள், இயந்திரத் துப்பாக்கிகள், ஆயுதங்கள் பொருத்தப்பட்டட விமானங்கள், ஆயுதங்கள் பொருத்தப்பட்டட கப்பல்கள், கார்கள், புகையிரத வண்டிகள், சைக்களிகள், மோட்டடார் சைக்கிள்கள், குழந்தைகளைச் சுமக்கும் ஆயுதம் பொருத்தப்பட்ட வண்டிகள்ஸ

என்றம் நிறுத்த முடியாதவாறு வெறித்தனமாகவும், வேகமாகவும் போராட்டம் வளர்ந்தது. போராட்டம் தொடர்ந்து கொண்டே இருந்ததுஸருந்தது...ந்ததுஸததுஸது.

அப்போது ஒரு நாள், வானம் தெளிவாக இருந்தபோது பிசாசு தனது கையினால் சிறிய ஒரு அடையாளத்தை ஆக்கினான். அப்போது இராட்சத குடைக்காளான் தோன்றியது.

# ஃபிரெஞ்ச் மொழிக்கதை - அசப்பில் நீயொரு நடிகை

**எரிக் ஓல்தெர்**

( பிரெஞ்சிலிருந்து தமிழில் -நாகரத்தினம் கிருஷ்ணா )

இங்கே எவருக்காகிலும் 'பகத் 'தோ- குச்சுமாதிரியான நீண்ட ரொட்டி- 'ஷொக்கோலத்தீனோ ' -சாக்லேட் கொண்ட சிறிய ரொட்டி - வேண்டுமெனில் அங்கேதான் போகணும் அதாவது லுக்லோன்* திசைநோக்கி. சுற்றிலும் வீட்டுத் தோட்டத்தைப் பராமரிக்கச் செல்லும் பெண் அணிகிற தொப்பியின் தோற்றத்துடன், ஏதோ மேலும் மேலும் ஒட்டிக்கொள்ள முயலுகின்றதோ என நம்பும்படியான பாஸ்(1) ரக வீடுகள்.

எப்போதாகிலும் சாலை ஓரத்தில் அந்தப்பகுதிக்குச் சம்பந்தமிலாத ஒன்றிரண்டு கார்கள் நிற்கக்கூடும். அவை மிமிஸான்** போகிற கார்களாக இருக்கவேண்டும். அவ்வாறில்லையெனில் அப்பகுதியில் பிரசித்தமான இயற்கை பூங்காவைப் பார்ப்பதற்கென்று வந்தவர்களாக இருக்கலாம், ஏனெனில் பேரூரில் இருக்கிற துக்கடா இரயில்வே ஸ்டேஷனை விட்டால் அவர்களுக்கு வேறு கதியில்லை. கடைக்குள் நுழைந்ததும் ஆண்கள் செய்கிற காரியம், தங்கள் குளிர் கண்ணாடியைக் கழட்டிக்கொள்வது. 'கடைக்குள்ளே வெளிச்சம் போதாதா ' என்கிற கேள்வி உங்களுக்கு எழலாம். நீங்கள் நினைப்பது சரிதான் ஆனால் அதனைவிட ' அவள் ' அழகாய் இருப்பதே முக்கிய காரணம்.

அடர்த்தியான அளகாபாரம், முகத்தில் ஒரு பகுதியை கபளீகரம் செய்திருக்கும் பெரிய கண்கள், மெல்லிய ஆனால் செழுமையான அதரங்கள்:அழகென்றால் ஏதோ ஏனோதானோ அல்ல, கொள்ளை அழகு. அவர்களது வியப்பின் அர்த்தமென்ன என்பதைச் சுலபமாக விளங்கிக்கொள்வாள். கதவினைத் தள்ளிக்கொண்டு நுழைந்தார்களோ இல்லையோ அவர்கள் மனதிலெழும்: 'இப்படியான தேவதைக்கு இங்கென்ன வேலை ? ' என்கிற கேள்வி இவளுக்கும் புரியாமலில்லை ஆனால் இன்றுவரை அதனை சமாளிக்க இயலாமல் மீதிச் சில்லறையை அவர்களிடம் திருப்பித் தருகின்றபோதெல்லாம் அவளது கால்களில் ஒருவித நடுக்கம் இருப்பதும் உண்மை. வாடிக்கையாளர்களை நேரிட்டுப்ப்பார்ப்பதில்லை. தவிர அவர்களின் வாகனங்களையும், அவை கடற்கரை திசைக்காய் விரைவதையும் அல்லது அவர்கள் தங்கியுள்ள நீச்சல்குளங்கள்கொண்ட ஹோட்டல்களுக்குத் திரும்புவதையும் அவள் தவிர்க்க நினைக்கிறாள்.

ஒருமுறை கொஞ்சம் துணிச்சலான இளைஞன்- சந்தேகமில்லாமல் நிச்சயமா பாரீஸ் நகரத்தைச் சேர்ந்தவனாகத்தான் இருக்கவேண்டும்- அன்றைக்குக் கடைக்கு வந்தவன் சட்டென அவளது கைகளைப் பற்றினான்: 'நாமிருவரும் இதற்கு முன்னால ஏதோவொரு இடத்திலே

சந்திச்சிருக்கணுமே ', என்கிறான். ' 'இருக்கமுடியாது ', என்பதாக அவளது தோளினை மெல்ல உயர்த்தியவள், அவனை விலக்கினாள். 'இந்த ரொட்டிக் கடையைவிட்டா அவளுக்கு நாதி ஏது ? வேறெங்கே போவாள் ?. அவளையாவது வேறு இடங்களில் பார்த்திருப்பதாவது ? '.

தூரத்தில் வீடுகள்: அப்பகுதிமக்களிடையே பழக்கத்திலிருக்கிற உறவுகளின் இடைவெளியைக் குறைக்க நினைத்ததுபோல தனிமையிற் செயல்படுகின்றன. வேலிகள், ஒழுங்குபடுத்திய தோட்டங்கள், மறுபடியும் பெயிண்ட் அடிக்கப்பட்ட வெளிக்கதவுகள் உதவியால், மனிதவாழ்க்கையின் செயல்பாட்டை அவற்றுள் சில சொல்ல முயலுகின்றன. பெரியதொரு நிலப்பரப்பு, இடைக்கிடை ஜெனே செடிகள் முளைத்திருக்க - வாள்பட்டறையில் அறுபடவென்று காத்திருக்கும்- பைன்மரங்களின் அணிவகுப்பு, பாலைவெளியில் மூழ்குவதற்கு முன்னால், இழுத்து மூச்சுவிடுவதன் அவசியங்கருதி நமக்காக வளர்ந்திருப்பதைப்போல. சிலசமயங்களில் கிடைத்த இடைவெளியின் தயவில் பண்ணைவரை உலர்ந்து நீண்டிருக்கும் மண்பாதையையும், அதில் நாய்களையும் காணமுடிகிறது..

'அசப்பிலே நீயொரு நடிகைதான் '. என்பது அவளது தந்தையின் பிரமிப்பு வார்த்தைகள். அவளுக்கு பதின்மூன்று பதினான்கு வயதிருக்கலாம். பின்னேரம் முடிவுக்கு வந்திருந்தது. மாடியில், அவர் அப்போதுதான் தூங்கி எழுந்து, தம்மகளின் வீட்டுப்பாடங்கள் செய்துக்கொண்டிருக்கிற மேசையில் காப்பிகுடித்துக்கொண்டிருக்கிறார். நிசப்தம் குடிகொண்டிருக்க, சற்றே வேலையை நிறுத்திவிட்டு ஓய்வெடுக்கும் நேரம் -கூரைக்குமேலே சூரியன் ஆரஞ்சுவண்ணத்தில் தன்னைமாற்றிக்கொண்டு கடைசியாய் ஒருமுறை இவர்களுக்காக காத்திருக்கும் நேரம். ரொட்டிக்கடையின் சூட்டடுப்பைப் பற்றியோ, ஞாயிற்றுக்கிழமைக்கான தமது ரொட்டிக்கடையின் பிரத்தியேக தயாரிப்புகளைப் பற்றியோ, வாடிக்கையாளர்கள் கேட்டுக்கொண்டவைகளை செய்யவேண்டிய நிர்ப்பந்தம் பற்றிய கவலைகளோ அவருக்கு இல்லாத நேரம். தமது மகள்மீது கவனம் மீண்டும் திரும்புகிறது. அருவியாய் சரிந்திருக்கும் கூந்தலும், பெரிய கண்களும், இவரைப்போலவே ஷெரீஸ்பழ வண்ணத்திலிருக்கிற அவளது அதரங்களையும் வரிசைப்படுத்திப் பார்த்தார். 'அசப்பில் ஒரு நடிகைதான் ' வாய்விட்டுச் சொன்னார். வாக்கியம் இருவருக்கும் இடையில் அந்தரத்தில் நிற்கிறது-அப்படியே பரவுகிறது- அமைதியைக் கிழித்துக்கொண்டு சட்டென இவளை வந்தடைகிறது. இவள் தலை நிமிர்ந்தாள். தந்தையின் மகோன்னத வாக்கியம் - இவளைப் பிடித்து உலுக்கியது வாஸ்த்துவம்.

அதற்குபிறகு - அப்பாவை நினைக்கும்போதெல்லாம் சட்டென்று அவரது வியப்புக்குரல் காதில்விழுகிறது- இரவில், ரொட்டி சுடும் அடுப்பினருகே - கூடவே அன்றைக்கு மாடியில் காப்பிக் குவளைக்குபின்னால் அமர்ந்திருந்தக் காட்சியும். அவரைக்காணும்போது-தூக்கங் கலையாத அவர் முகத்தில், அதியசமான கலவைகளாலான ஒருவிதபயம் படிந்திருப்பதையும் வாசிக்க முடிகிறது.

பிறகொருநாள், வீட்டுப்பரணில் அம்மா விட்டுபோன சினிமா இதழ்களைக் கண்டாள். பழைய 'சினிமா உலகம் ' பொத்தகத்தின் பிரதிகள் சில, 'கருப்பு வெள்ளை ' பொத்தகங்களில் சில, 'அந்தரங்கம் ' பத்திரிகை... அவற்றைப் புரட்ட சட்டென்று ஊரிலுள்ள மற்ற பெண்களிலும் தான் வேறுபட்டவள் என்பது புரிந்தது. ஒருவேளை இந்தப் பொத்தகங்களில் உள்ள நடிகைகள்: 'லா ஃபாம் ஆ லொர்ஷிதே ' பட நாயகி 'டில்டா தமர் ', 'பிராங்க்கோ 'வை முத்தமிட்டுக்கொண்டிருக்கும் 'அந்த்தோனெல்லா ', 'ஹாரி விடாலி 'ன் அடுத்தப் படத்தில் ஜோடி சேரவிருக்கும் 'பார்பரா லாழ் ' ஆக இவர்களில் ஒருத்தியாக இருக்கலாம்.

சினிமா இதழ்களைத் தனது அறைக்கு வாரிவந்தாள். கட்டிலுக்குக் கீழே அவை குவிந்து கிடக்கின்றன. இவைகளைக்காட்டிலும், அவளுக்கு பெட்ரோல் பங்க்கில் கிடைக்கிற 'பிரமியர் ', ஸ்டுடியோ '.. மாதிரியான இதழ்கள் தேவலாம் என்கிற எண்ணம். அவை கொட்டை எழுத்துக்களில், சுவாரஸ்யமான செய்திகளைத் தாங்கிவரும்: ' 'தப்பான மனைவி ' படத்தில், நிர்வாணமாக கட்டழகி 'கிட்டி '. படத்தில் அவர் வருகின்ற காட்சிகளில் ஏகக் கிளுகிளுப்பு... ' என்பது மாதிரியான செய்திகள்.

சினிமாவுக்குப் போவதென்பதும் அவளுக்கு மிக அரிதாகத்தான் நேர்ந்தது. ஊரிலிருந்த ஒரே சினிமா கொட்டகையும் நகராட்சித்திடல், பள்ளி, நகராட்சிக்கூடம் இவைகளுக்கிடையே சிக்குண்டு கிடந்தது. தவிர அங்கிச் சுற்றித் திரியும் தென் அமெரிக்காவினை நினைவுபடுத்துகிற சொறிநாய்களின் கூட்டத்தைக் கடந்தாக வேண்டும். பெரும்பாலான சமயங்களில் படத்திற்கான சுவரொட்டிகள் உரிய நேரத்தில் வராமற்போக திரைபடங்களின் தலைப்புகள் பச்சைவண்ண மார்க்கரால் எழுதபட்டிருக்கும். இப்படியான சிரமங்களுக்கிடையிலும் ஓரிருமுறை சினிமாவுக்குப் போனதுண்டு, எனினும் மிஞ்சியதென்னவோ ஏமாற்றமே. குதூகலமும் கொண்டாட்டமும் நிறைந்த காட்சிகளையும், அதற்கான ஆடைகளில் வலம் வரும் மாந்தர்களையும் படத்தில் இவள் எதிர்பார்த்திருக்க, மாறாக பிரச்சினைகளைப் பேசுகிற படமாக அது இருக்கும். ஒருவர் தவறாமல் அழுதுவடிந்துகொண்டிருப்பார்கள். அவளைச் சுற்றிலும் உள்ள இருக்கைகள் ஆட்களின்றி வெறுமனே பார்ப்பதற்கு சிலுவையாய்க் கண்ணிற்படும். அவளுக்கு முன்னே, மூன்றுவரிசைகள் தள்ளி, வாலிபப்பையன்கள் கூட்டமொன்று அடிக்கடி இவளைப் பார்ப்பதும், சட்டென்று திரும்பிக்கொள்வதுமுண்டு.

இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒருமுறை, குளோது அவைளைப் பார்ப்பதற்கென்று வருகிறான். நகராட்சி கூடத்தில் அவர்களுக்குள் பழக்கம் ஏற்பட்டிருந்தது. ஆள் கொஞ்சம் வாட்டசாட்டமாயிருப்பான், கூடவே ருக்பீ ஆடிக்கொண்டிருந்தவன், லுக்லூனிலிருந்து வந்திருந்தான். மதுவொன்றின் விற்பனை பிரதிநிதி. ஆனால் அவன் குடிப்பதில்லை.

கூட்டமில்லாத நேரங்களில், பிறந்ததிலிருந்து இவள் பார்த்துக்கொண்டிருக்கிற எதிர்வீட்டிலிருந்து அலுத்துப்போய் அவளது கவனம் திரும்பி இருக்கிற நேரமாகப்பார்த்து கடைக்குள் நுழைகிறான். இவளை வியப்பில் ஆழ்த்தவென்றே அவனிடம் நிறைய கதைகள் இருக்கின்றன. இடைக்கிடை அவன் அடிக்கடி தொழில் நிமித்தமாகப் போய் வருகிற பொர்தோ(3) நகரைப் பற்றிய செய்திகள், தகவல்களையும் ஆர்வமாய்ச் சேர்த்துக்கொள்கிறான். சிலவேளைகளில் சொல்வதற்கேதும் இல்லாதவன்போல, கடை சன்னல் கண்ணாடிக்கு மறுபுறம் இவளோடுசேர்ந்துகொண்டு அவனும் பார்க்கிறான். அவன் இன்னும் திருமணம் முடிக்கவில்லை. காத்திருக்கிறான்.

அன்று திங்கட்கிழமை, ரம்மியமான காலம். சின்ன ரயிலைப் பிடித்து மர்க்கேஸ்வரை அவள் வரவேண்டியிருந்தது. அங்குள்ள 'இயற்கை பூங்காவில் ' அந்தக்கால குடியிருப்பை - ஓகோவென்றிருந்த அந்தக்காலத்து 'லாந்து '*** பிரதேச பண்ணையொன்றுடன் காட்சிக்காக வைத்திருக்கிறார்கள். அவளுடலை கவுனொன்று அலங்கரித்திருந்தது கூடுதலாகக், கண்களில் குளிர் கண்ணாடி, கால்களில் மாடல் பெண்களின் உயரத்தை இவளிடம் கொண்டுவந்திருந்த குதி உயர்ந்த செருப்புகள்.

இரயிலைவிட்டு இறங்கியபின்னரும் இனிமையான அனுபவக் கலவையிலிருந்து அவளால் மீளமுடிவதில்லை: பரந்துகிடக்கும் புல்வெளிகள், அவற்றில் மேய்ந்துகொண்டிருக்கும் ஆடுகள். மில்லெட், ரைட் போன்ற தானிய நிலங்கள். பண்ணை முதலாளியின் வீடு, குடியானவனுடைய

வீடு, இடையனுடைய வீடு...இவ்விடத்திற்கு, என்றைக்காவது ஒரு நாளைக்கு இவைகளை நினைவுபடுத்திக்கொண்டு மீண்டும் வரத்தான் வேண்டும், அவளது மனம் சொல்கிறது. துணைக்கு கேமராவுடன் ஒருவன். இவ் வண்ணக்காட்சியை பதிவு செய்வதற்கான உரிய இடத்தினை அவன் தேடிமுடிக்கட்டுமென்று இவள் காத்திருப்பாள். 'மத்மசல்- அப்படியே ஒரு போட்டோ எடுத்திடட்டுமா. தொந்தரவு ஏதுமில்லையே- - அங்கேதான்-அப்படித்தான் -மெர்சி ' என அவன் அவளைச் சுற்றி சுற்றி வருவான்.

அங்கே பாரீஸில்:மச்சி! தப்பு பண்ணிட்டியேடா. நீ வேண்டியவன் மாத்திரமல்ல. அதற்கும் மேலே. என்னடா சொல்ற அவள் இங்கேதான் இருக்கிறாளா. இப்படிக்கூட நடக்குமா என்ன ? சரி..சரி இப்பவும் ஒண்ணும் குடி முழுகிப்போகலை. நீ என்ன பண்றன்னா, வண்டியை எடுத்துக்கிற. அங்கே திரும்பப் போறே. அவளை மீண்டும் கண்டுபிடிக்கிறவரை ஒரு புதர் விடாம அலசற.

அவள் அக்கறையோடு கேட்பதைப் புரிந்துகொண்ட வழிகாட்டி, அவளுக்காக மேலும் மேலும் சின்ன சின்ன விஷயத்தைக்கூட தவிர்க்காமல் விவரித்துச் சொல்லிக்கொண்டு போகிறான். கிராந்து -லாந்து($)வைப்பற்றி சமீபத்தில்தான் அறிந்திருந்த வழிகாட்டிக்கு, இம்மாதிரியான விபரங்கள் அதன் வரலாற்றினை மெருகூட்ட உதவுமென்கிற நம்பிக்கை. தவிர இப்பகுதியில் இவளைப்போல இப்படி ஆர்வங்காட்டுகிற மனிதர்களையும் இதற்குமுன் அவன் கண்டதில்லை.

அவன் மனது அவளுக்கும் புரிந்திருந்தது. அவனது விவரிப்பைப் விளங்கிக்கொண்டதற்கு அடையாளமாகத் தலையாட்டியவள், உடன்வந்திருந்த பார்வையாளர்களில் எவரேனும் ஒருவர், என்றேனும் ஒருநாள் கொஞ்சநேரமாகிலும் அவளைத் தவிர்த்து மற்றவற்றில் கவனம் செலுத்துவார்களா என்கிற நினைப்பில் தேடுகிறாள்.

எப்போதாகிலும் சில நேரங்களில் அடர்ந்த மரங்களுக்கிடையில் காணநேரும் ஒரு திறந்தவெளி-இரண்டு ஹெக்டாரோ அல்லது அதற்கும் கூடுதல் பரப்புகொண்டதாக -உழவு எந்திரங்களைக் கண்டறியாத-அப்பிரதேசத்தின் கையிருப்பு என்கிற ஒரே தகுதிகொண்ட நிலப்பகுதி. மறக்கப்பட்ட கழுவெளி, மனித வாழ்க்கை அலட்சியம் காட்டும் பூமி. இருபுறமும் நீர்நிலைகள் வெள்ளிப்பாளங்களாகக் கிடக்க, நடைபழகச் சாத்தியமுண்டு. அவற்றுள் சில தானியவிளைச்சலுடன் தலை நிமிர்ந்து நிற்கின்றன, இடைக்கிடை பட்டமரங்கள் மேலும் மேலும் வெளுத்துக்கொண்டிருக்கின்றன, ஆங்காங்கே பிரப்பஞ்செடிகள். - தலையை உயர்த்த கண்களிற் படுகிற பைன்மரங்களை மாத்திரம் தவிர்த்தோமெனில் சட்டென்று 'காமார்கு '(2) பிரதேசத்தில் இருக்கிற நினைப்பு. பிறகு கண்ணுக்கெட்டியவரை பரந்துகிடக்கும் வானில், ஏகாந்தத் தனிமையில், புரிதல் மறுக்கும் சூரியன்: கைகள் விறைத்துபோனால் உறையவைக்கும் பனிக்கால சூரியன் அல்லாது போனால் அனல் கக்கும் கோடைகால சூரியன். பார்ப்பதற்கு ஏதோ பயமுறுத்தும் தோற்றமென்றாலும் உண்மையில் எவருக்கும் தீங்கிழைக்காத பரமசாதுவான பூமி.

இப்பொழுதெல்லாம் அவள் பொர்தோ(3) நகரத்திற்குப் போய்வருகிறாள். தங்கள் ஊரோடு கலாச்சார பரிவர்த்தனைகள் செய்துகொள்ளும் ஊரிலிரிருந்து வரும் விருந்தினர்களை வரவேற்கும் குழுவில் ஆர்வத்தோடுபங்கேற்று வருபவர்களுக்குத் தமது ஊரிலிலுள்ள பழமைச் சின்னங்களை அறிமுகப்படுத்துகிறாள். ஞாயிற்றுக்கிழமைகளில், இவள் புருஷன் குளோது மூத்தவனை விளையாட்டுத் திடலுக்கு அழைத்துச் செல்கிறான். ஐந்து வயதாகிற சின்னப் பெண் 'அவளது அம்மாவை அப்படியே உரித்து வைத்திருப்பதாக ' வேறு அடிக்கடி

சொல்லிக்கொள்கிறான். இவளைப்போலவே இந்த வயதிலேயே கருகருவென்று அடர்த்தியாய் தலைமுடி, கடவுளால் அக்கறையோடு படைக்கப்பட்டவை என அராபியக் கவிஞனொருவனால் வருணிக்கக்கூடியக் கண்கள். அவளைக் கையில் பிடித்திருக்கும் தருணம், அவளால் அவனுக்குக் கிடைப்பது மனநிறைவா அசெளகரியமா என்பதில் குழப்பம் இருக்கிறது. ஆனாலும் அடிக்கடி அவளை 'என் மகள் ' 'என் மகள் ' எனச் சொல்லிக்கொள்கிறான், 'என் ' என்கிற சொல்லை அவன் சற்றே அழுந்தவும் உச்சரிக்கிறான். ரொட்டிக்கடையில் இப்போதெல்லாம் மளிகைக் கடைப்பொருள்களும் கிடைக்கின்றன. சின்னதாய் 'பார் ' திறக்கவும் எண்ணமிருக்கிறதாம். இதெல்லாம் இங்கே கொஞ்சம் அவசியந்தான்.

****

# கல்லறைக்குச் செல்லும் வழி (மூலம் : தாமஸ் மன் (ஜெர்மனி) )

நெடுஞ்சாலையை ஒட்டி பிரிந்து விலகிய கிளைப்பாதை அது. அதில் இறங்கி கல்லறை வளாகத்தை அடைய வேண்டும். சாலையின் மறுபுறம் வீடுகள். புதிதாய் முளைத்தவை. சில இன்னும் முடிவடையாதவை. தாண்டி வயல்கள். சாலையின் இருமருங்கும் மரங்கள். மூப்பாகிப்போன, தாழத் தொங்கும் அதன் கிளைகள். சாலையில் சில இடங்களில் தார் மிச்சமிருந்தது. இடையிடையே மொண்ணையாயும் இருந்தது சாலை. கிளைப்பாதையில் சரளைக்கல் எடுப்பு. நடைபாதை போல அழகாய்க் கிடக்கிறது. சாலை, மற்றும் கூடச் சரிந்திறங்கும் கிளைப்பாதை, இரண்டன் நடுவே சிறு புல்லும் காட்டு மலர்களுமாய்ப் பள்ளம்.

வசந்தம் விடைபெற்ற கோடையின் துவக்க காலம். உலகம் அற்புதமாய்க் காட்சியளித்தது. ஆண்டவரின் நீல வானிலி சிறிய உருண்டு திரண்ட பனிபூத்த வெளிளை மேகத் துணுக்குகள் மிதந்தபடி. கிளைகளில் பறவையொலிகள். பிரதேசமெங்கும் சிறு காற்றின் ஊடுருவல்.

அருகாமை கிராமத்தில் இருந்து பட்டணம் நோக்கி ஒரு வாகனம், சாலையில் தடக் புடக்கென்று போனது. டிரைவர் காலைத் தளர வைத்துக்கொண்டபடி எதோ விசிலில் பாடியபடி போனான். வாகனத்தின் பின்பக்கம், டிரைவருக்கு முதுகு காட்டியபடி ஒரு மஞ்சள் நாய். உட்கார்ந்து கூரிய நாசியால் அது ஆழ்ந்த மூச்சை இழுத்துக் கொண்டே செல்கிறது. அருமையான நாய். யாருக்குமே அதைப் பிடிக்கும். ஆனால் நாம் சொல்லப் போகிற விஷயம் இதைப்பற்றி யெல்லாம் இல்லை. விட்டு விடலாம் -

ராணுவ ஆட்கள் கொத்தாய் வந்து கொண்டிருக்கிறார்கள். தரையில் அடித்த அணிவகுப்பு நடை. புழுதி கிளப்பி அதோடு பாடலாயினர். பட்டணத்தில் இருந்து மற்றொரு வாகனம் இப்போது அடுத்த கிராமம் நோக்கிக் கடந்து போனது. டிரைவர் தூங்கி வழிந்தான். நாய் எதுவும் இல்லை. சுவாரஸ்யமாயும் இல்லை அந்தக் காட்சி. இரு யாத்ரீகர்கள் அடுத்து போகிறார்கள். ஒருவன் பேருருவக்காரன். மற்றவன் கூனன். செருப்புகளை முதுகுப் பக்கம் தொங்க விட்டுக் கொண்டு வெறுங்காலுடன் நடந்து வந்தார்கள். 'வணக்கோம் டிரைவர் அண்ணே ' என்று தூக்கக் கலக்கத்துடன் போய்க்கொண்டிருந்த டிரைவருக்குச் சத்தங்

கொடுத்தபடி தங்கள் வழி போனார்கள். போக்குவரத்து என்று அதிகம் இல்லைதான். போகிற வருகிற வாகனங்கள் இடைஞ்சல் இல்லாமல் போய்க் கொண்டிருந்தன.

வளாகம் நோக்கிப் போகிற பாதையில் ஓராள். தளர்ந்த நடை. தலையைச் சரித்து கருப்பு கைத்தடியை அழுத்தி அழுத்தி ஒரு நடை. அவன் பெயர் பியப்சாம். யேசுமகிமை பியப்சாம். வேறு பெயர் கிடையாது. அதை வலியுறுத்திய காரணம் அவனது குணாதிசயம்தான்.

கருப்பு உடை அணிந்திருந்தான். தனது பிரியமான உறவினர்களின் கல்லறை நோக்கி அவன் போய்க் கொண்டிருந்தான். புசுபுசு ரோமத் தொப்பி அகலமான பெருவட்ட விளிம்புகளுடன் அணிந்திருந்தான். ஒருநொந்த பளபளப்பில் நீண்ட அங்கி மேலாடை, எந்தக் காலத்தியதோ. இறுக்கமான குட்டை ட்ரௌசர் சம்பந்தம் இல்லாதபடி. குழந்தைகள் மாட்டிக்கொள்ளும் கையுறைகள் பளபளப்பு இழந்து சொரசொரவென்றிருந்தன. நெட்டைக் கழுத்து. தொண்டையெலும்பு துறுத்தித் தெரிகிறது. சட்டைக் காலர் பிதுங்கி உறுத்துவதாய் இருந்தது. கல்லறைத் தேவாலயத்துக்கு இன்னும் எவ்வளவு தூரம் என்று அடிக்கடி பார்த்துக் கொண்டான். மறக்க முடியாதபடி ஏதோ ஒன்று அந்த முகத்தில் இருந்தது.

வெளுறிய, மழுமழுவென சவரம் செய்த முகம். உள்ளொடுங்கிய கன்னம், உறுத்தலான மூக்கு சிவந்து புள்ளியிட்டுக் கிடந்தது. எப்படியெப்படியோ நெளுந்து கிடந்தது அது. முகம் வெளுறிக் கிடந்ததற்கும் அதற்கும் மூக்கின் பளபளப்பு, தனியே திருவிழாவுக்கு ஒட்ட வெச்சிக்கிட்டாப்போல, இறுதிச்சடங்கில் கேளிக்கை போலக் கிடந்தது. பெரிய வாய் - ஓரங்கள் சரிந்திருந்தன. வாயை அழுத்தி மூடிக் கொண்டிருந்தான் கிழவன். கரிய புருவங்களில் சிறிய நரைகள் ஆனால் தலைதூக்கிப் பார்க்கையில் தொப்பியடியே காணாமல் போயின. சிவந்த அந்தக் கண்களில் சோகம். பாவப்பட்ட மனுசன்.

யேசுமகிமை பியப்சாம் அந்த மந்தார சூழலுக்குள் ஒட்டவில்லை. உறவினர் கல்லறை நோக்கிப் போகிற வேறு எவரையும் விட அலாதி துக்கம் அவனிடமிருந்தது. உள்ளும் புறமும் நொறுங்கிக் கிடந்தான். எதுவும் திடுதிப்பென்று விபரீதமாய் நடந்து விடவில்லைதான் அவனுக்கு, என்றாலும் முழு வாழ்க்கையுமே அவனை ஏறியமுக்கி விழுத்தாட்டியிருந்தது.

முதல் விஷயம், அவன் குடிகாரன். அதைப் பிறகு பார்க்கலாம். மனைவி இறந்து போனாள். அவனை நேசிக்க இப்பரந்த லோகத்தில் ஒரு குஞ்சும் கிடையாது. சம்சாரம் ஆறுமாசம் முன்னால் ஒரு குழந்தையைப் பிரசவித்துச் செத்தாள். குழந்தையும் இறந்தே பிறந்தது. அது மூன்றாம் குழந்தை. மற்ற ரெண்டுங்கூட இறந்து விட்டன. டிப்தீரியாவில் ஒண்ணு. அடுத்தது தெம்பு பற்றாமல் செத்தது. பத்தும் பத்தாததற்கு அவனுக்கு வேலை போய்விட்டது. திமிர்த்தனமும் கௌரவமும் அடங்கி விட்டது. அகங்காரத்தை விடவும் பசி பிரதான விஷயமாய் ஆகிப்போன காலம்.

தாக்கு பிடிக்க முயல்கிறான். பெருமளவில் குப்புறவிழவே நேர்ந்து விடுகிறது. மெல்ல மனம் பலவீனமாகிக் கொண்டே வந்தது. ஒரு நலச்சங்கத்தில் குமாஸ்தாவாய் இருந்தவன். கெத்தான தட்டச்சுக்காரன். தொண்ணூறு மார்க் அவன் மாதச் சம்பளம். குடிப்பழக்கத்தாலும் யாமார்க்கும் குடியல்லேம், தான்தோணிப் போக்காலும், பலமுறை எச்சரிக்கப் பட்டு, பிறகு தூக்கி யெறியப் பட்டான்.

தன் தோல்வியை அவன் ஒத்துக் கொள்ள மறுத்தான். அலட்சியப் போக்கு நாளடைவில் ஒரு ஆளின் சுயமரியாதையையும் கௌரவத்தையும் சீரழித்து விடுகிறது. அவன் புரிந்து

கொண்டிருக்க வேண்டும். தான்தோணித்தனம், சித்தம் போக்கு சிவம் போக்கு எனத் திரிவதில் ஒரு தெனாவெட்டும் எடுபடப்போவதில்லை. எம்மேல என்னா தப்பு இருக்குது என்று சும்மாங் காட்டியும் வீம்பு காட்டி என்ன செய்வது ? தானே வருத்திக்கிட்ட வம்புதானே இது. மனுஷாளிடையே ஒட்ட விடாமல் செய்து விடுகிறது பிடிவாதம். அப்பிடித்தான் நம்மாளுக்கும் ஆகிப் போனது. சுயமரியாதை இழந்தான். அதனால் குடிப்பழக்கம் தொற்றிக் கொண்டது. தொடர்ச்சியான சரிவுகள். அவனது வீட்டு பீரோவில் விஷம் போன்ற திரவம், பேர் தேவையில்லை, எப்போதும் இருந்தது. போதைக்கு எத்தனை கேவலமாய் அடிமையாகிப் போனான் இந்நாட்களில்!

இப்போது கருப்புக் கைத்தடியைத் தட்டிக் கொண்டே அவன் கல்லறை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். சிலுசிலுவென்ற காற்று அவன் மூக்கருகிலும் வீசியது என்றாலும் அவன் அதை உணர்ந்தானில்லை. பாவப்பட்ட, தன்னையே தொலைத்துவிட்ட மனுஷாத்மா, நேர்ப்பார்வை புருவம் தூக்கிப் பார்த்தான். திடாரென முதுகுப் பக்கமிருந்து என்னவோ சத்தம். கவனித்தான். தூரத்தில் இருந்து பரபரவென்று சத்தம். திரும்பி அப்படியே நின்றான். செமத்தியான வேகத்தில் ஒரு சைக்கிள் சரளையில் உருண்டபடி. வண்டி வேகம் மட்டுப்பட்டது. நடுவழியில் சாம் நின்றிருந்தான்.

வாலிபன். சைக்கிள் சீட்டில் கெத்தாய் உட்கார்ந்திருந்தான். அவன் ஒண்ணும் உலகத்தின் மகாபுருஷனாகவெல்லாம் உதார் காட்டவில்லை. ஒரு சாதா சைக்கிளை ஓட்டிவருகிறான். அவ்வளவே. மலிவு சைக்கிள் அது. விலை இருநூறு மார்க் இருக்கலாம். நகரத்தில் இருந்து வருகிறவன். உற்சாகத்துக்குக் குறைவில்லை. சைக்கிள் கால்பட்டை சூரியனில் மினுமினுக்க கடவுளின் பிரம்மாண்ட வெளு வளாகத்துக்கு அவன் சவாரி போய்க் கொண்டிருந்தான். வண்ணச் சட்டை. பழுப்பு மேல்சட்டை வேறு. விநோதமான தொப்பி. வரிகளிட்டு உயரத்தில் பித்தான் வைத்த தொப்பி. அதைமீறி முன்நெற்றியில் விழும் மயிர்க்கற்றை. நீல மின்னல் கண்கள். அந்தப் பிரதேசத்தின் உயிர்போல அவன் மணியை ஒலித்துக் கொண்டே வந்தான். ஆனால் பியப்சாம் வழி ஒதுங்குவதாய் இல்லை. வாழ்க்கையின் உயிர்ப்புக்கு மசிந்து கொடுக்கிறாப்போல இல்லை.

ஜீவன் ஒரு கோபப்பார்வை விட்டபடி சிறிது நெருங்கினான். பியப்சாமும் ஓரடி முன்னால் வந்தான். ஜீவனின் குறுக்கே நின்று அவன் அழுத்தமாய்ச் சொன்னான். 'ஒன்பதாயிரத்து எழுநூத்தி ஏழு... ' தரைப்பக்கம் தாழ்ந்து பார்த்தபடி பேசினான். ஜீவனின் கண்களின் கனலை அவனால் உணர முடிந்தது.

ஜீவன் ஒரு சுத்துவட்டம் அடித்தான் சைக்கிள் சீட்டைப் பின்பக்கம் பிடித்தபடி. 'என்ன சொல்றீங்க நீங்க ? ' என்று கேட்டான்.

'ஒன்பதாயிரத்து எழுநூத்தி ஏழுல்ல ? ' என்றான் சாம் திரும்பவும். 'அது வேற ஒண்ணில்ல, உன்னைப் பத்தி ஒரு பிராது குடுக்கலாம்னுதான். '

'கம்ப்ளெயின்டா ? என்னைப் பத்தியா ? ' இன்னும் பெரிய வட்டமாய் எடுத்தபடி மேலும் மெதுவாகச் சுற்றி வந்தான் ஜீவன். ஹேன்ட்பாரை ஒடிக்க கொள்ள சௌகரியமாய் இருந்தது இப்போது.

'கண்டிப்பா! ' என்றான் சாம்.

'எதுக்கு ? ' என்றபடி வண்டியில் முன்னிறங்கிக் கொண்டான். வண்டி கிழவன் பக்கமாய்ச் சரிந்து நின்றிருந்தது, பதிலுக்கான எதிர்பார்ப்புடன்.

'காரணம் உனக்கே தெரியும். '

'இல்ல. தெரியல. '

'உனக்குத் தெரிஞ்சிருக்கணும்ல ?... '

'தெரியல எனக்கு ' என்றான் ஜீவன். 'அதப்பத்தி என்ன இப்ப. ' மீண்டும் சைக்கிளில் ஏறப் போனான். அவனை அலட்சியப் படுத்தியதைச் சொல்லாமல் சொன்னது அது.

'இந்த வழியில் சைக்கிளில் ஏறி மிதிச்சி வர்றே நீ. ரோட்டுப் பாதையில் ஓட்டி வந்திருக்க வேணாமா நீ ? '

'ஆனா ஐயா... ' என்னும்போதே சிரிப்பு முந்திக் கொண்டது அவனை. திரும்ப ஒரு சுத்து வலம் வந்தான். 'வழிபூராவும் சைக்கிள் தடம் பாருங்க. எல்லாரும் இதேவழிதான் வர்றாங்க. '

'அந்தக் கதைல்லா வேணாம். நான் உன்னைப் பத்தி பிராது குடுக்கப் போறேன்... '

'அது உம்ம இஷ்டம். ' ஜீவன் திரும்ப வண்டியில் ஏறி, ஒற்றை மிதி. முன் குவிந்து முடிந்த வேகமெடுக்க முன்வந்தான்.

'சர்த்தான். நீ இப்பிடி இறங்காமப் போயிட்டே இருந்தா பிராது குடுத்துற வேண்டிதான். ' அவன் குரல் உயர்ந்து கோபத்தில் சிறிது கிரீச்சிட்டது. ஆனா ஜீவன் அவனை மதிக்கிறாப்போல இல்லை. வேகமெடுத்து அவன் பாட்டுக்குக் கிளம்பினான்.

அப்பமட்டும் யேசுமகிமை பியப்சாமைப் பார்த்தவர் பயந்து போவார்கள். பல்லையும் உதட்டையும் நெளுத்து மூக்கை விகாரமாக்கி கன்னம் மேலும் டொக்கு விழுந்து... வேகமெடுத்த சைக்கிளை ஒரு வைரிப்பார்வை பார்த்தான் அவன். சிறிது முன்விரைந்து அவனுக்கும் ஜீவனுக்குமான இடைவெளுயைக் குறைத்துக் கொண்டு சைக்கிள் பின்பக்கத்து தோல்மூடியைப் பிடித்து முடிந்தமட்டுக்கு பலமாய் இழுத்து நிறுத்தினான். முகத்தில் விகார வரிகள் நெளுந்தன. ஓடிப்போய் அவன் சைக்கிளை எட்டிப் பற்றியது அதை நிறுத்தவா, அல்லது அதில் அவனும் சவாரி விடவா என்றிருந்தது! ஆண்டவரின் பெரிய விஸ்தீரணக் களம் அல்லவா அது. கிழவனின் அந்தத் துரித நடவடிக்கையில் தடுமாறி சைக்கிள் சரிந்து, பின் வீழ்ந்தது கீழே.

ஆனால் ஜீவனுக்கு இப்ப ஆத்திரம் வந்திருந்தது. ஒரு காலை ஊன்றிய வாக்கில் அவன் நின்றிருந்தான். ஐயா பியப்சாமை நெஞ்சில் கைவைத்து ஒரு தள்ளு தள்ளினான் அவன். பியப்சாம் தள்ளாடி ரெண்டடி பின்வாங்க நேர்ந்தது. எச்சரித்தான் ஜீவன் -

'குடிச்சிருக்கீராக்கும். ஆனா மறுபடியும் தொந்தரவு கிந்தரவு குடுத்தீருன்னா, துண்டு துண்டா உம்ம வகுந்திருவேன்! புரியுதா. கையக் காலை பேத்துருவேன். மூளைல உறைக்குதா ? ' பிறகு சைக்கிளைத் திருப்பிக் கொண்டு தொப்பியைச் சரிசெய்து இறக்கிக் கொண்டு வண்டியைக் கிளப்பினான். வாழ்க்கை ஆமாம், கிழவனை விட்டு விலகிச் செல்ல ஆயத்தம்

காட்டியது. எல்லாம் பழைய சகஜ நிலைக்கு மீண்டது. அதன் போக்கில் வேகம் எடுத்துப் போவதை, தன்னை விட்டு விலகி விலகிப் போவதை சாம் பார்த்துக் கொண்டிருந்தான்.

நெஞ்சு ஏறியேறி இறங்க வெறித்த பார்வையில் சாம் பார்த்தவாறிருந்தான். ஆனால் வாழ்க்கையோ ஒரு சேதாரம் இல்லாமல் தடுமாறாமல் கீழே விழாமல் போனது. போய்க் கொண்டிருந்தது.

பியப்சாமுக்கு ஆவேசம், ஆக்ரோஷம் வந்தது. கிட்டத்தட்ட அவன் கர்ஜனை செய்தான். 'நீ போகக்கூடாது. நீ போக முடியாது. ரஸ்தாவில் போ. இது கல்லறை வழி. கேக்குதா ? இறங்கு. இப்பவே இறங்கு. உன்னைப் பத்தி பிராது எழுதிப்பிடறேன் பார். அட கடவுளே. அருமை ஆண்டவரே. ஏய் நீ கீழ விழ! அட ராஸ்கோல் உன்னை மிதிப்பேன். சரியா உன்னை செருப்புக் காலால மூஞ்சில மிதிப்பேன். ரௌடித்தனமா பண்றே இங்க... '

அப்பிடியொரு காட்சியை யாரும் அதுவரை அங்கே கண்டதில்லை. கல்லறைப் பாதையில் ஒரு கிறுக்குத்தனமான காட்டுக் கத்தல். மூஞ்சி கீஞ்சில்லாம் சிவுசிவுக்க ஆளைத் தள்ளாட்டிய கோபத்துடன் உடம்பே பதறி வெடவெடக்க... சைக்கிள் எப்பவோ போயிட்டது. ஆனால் இன்னும் பியப்சாம் அங்கேயே. அதே கோபாக்னி கொதிக்க.

'அட அவனை நிறுத்துங்க. நிப்பாட்டுங்க. கல்லறை வழில வண்டிய சவாரி விடறதா ? அவன் விட்ருவானா ? நான் விட்ருவேனா ? அட பிசாசே. அட எடுபட்ட நாயே. கேடுகெட்ட குரங்கே. உன்னைத் தோலை உரிச்சி உப்பு கண்டம் போடணும். யார்ட்ட காட்ற உன் வேலையை. பிச்சிப் பிடுவேன் பிச்சி. இறங்கு நீ. மொதல்ல இறங்கிப்போ. இப்பவே. ஏய் யாராவது அவனைப் பிடிச்சி புழுதில தள்ளுங்கடா. சவாரி கேக்குதா உனக்கு... ம்ஹூம். மவனே நீ மட்டும் என் கையில கெடச்சா உன் கண்ணைப் பிடுங்கி அடுப்புல போட. தடித் தாண்டவராயன். தடித் தாண்டவராயன்... '

இப்படி மேலும் மேலுமாய், எழுதத் தகாத, முடியாத அளவுக்கு அவன் வார்த்தையாடிக்கொண்டே போனான். வாயெல்லாம் நுரை தள்ள நாக்கூசும் வார்த்தைகளை அள்ளி வீசினான். தொண்டை உடைந்து வார்த்தை குழறித் தடுமாறியது. தெருவில் போய்க்கொண்டிருந்த சின்னப் பசங்கள் சிலர். அவர்கள் கூட நாட்டு நாய் ஒன்று... பள்ளத்தில் இறங்கிக் கடந்து வந்து கைக்கூடைகள் சகிதம் அவனைச் சுற்றிக் கொண்டார்கள். ஒரே கேலிக்கூத்தாய் இருந்தது அவர்களுக்கு. தினக்கூலிகள் வீடு கட்டிக்கொண்டிருந்த மேஸ்திரிகள் - மதிய உணவு உண்டபின்னான ஓய்வு நேரம் அவர்களுக்கு - எல்லாரும் வந்தார்கள். என்னவோ ஏதோ என்று பார்க்க வந்தார்கள் அவர்கள். ஆண்கள் பெண்கள் எல்லாரும் வந்தார்கள். ஆனால் பியப்சாம் நிறுத்துகிறாப் போல இல்லை. அவன் நிலைமை மோசமாய் இன்னும் மோசமாய் ஆகிக் கொண்டிருந்தது. கண்மண் தெரியாத கோபம். கையை நாலாபக்கமும் வீசி வீசிப் பேசிக் கொண்டேயிருந்தான். முன்னைவிடவும் பெருங்குரல் எடுக்க அவன் முயன்று கொண்டிருந்தான். மூச்சுவிடக் கூட நிறுத்தவில்லை. எங்கிருந்து எப்படி அவனில் இருந்து இத்தனை வார்த்தைகள் வந்தன, அதிசயம். முகத்தின் அஷ்டகோணல். தொப்பி பின் சரிந்திருந்தது. சட்டை அவிழ்ந்து இடுப்புவரை நெகிழ்ந்திருந்தது. இப்ப எதற்காக ஆத்திரப் பட்டானோ அது விடுபட்டிருந்தது. சூழலுக்கு சம்பந்தமே யில்லாதபடி பிதற்ற ஆரம்பித்திருந்தான். தன் வாழ்க்கைக் குறிக்கோள் பற்றி எடுத்து விட ஆரம்பித்திருந்தான். மத சம்பிரதாயங்கள். அவை அப்போதைய அவனது குரலில் விசித்திரமாய் ஒலித்தன. ஊடே ஊடே வசைகளும் இருந்தன அவற்றில்.

'வாங்க வாங்க, எல்லாரும் வாங்க ' என அவன் கூவினான். 'ஏய் நீ... அப்பறம் நீ, எல்லாப் பயல்களும் வாங்க. நீலமின்னல் கண்ணா, பட்டன் வெச்ச தொப்பிக்காரா. எல்லாம் எடுத்துச் சொல்றேன். காதாரக் கேளுங்க. எடேய் சிரிக்கவா செய்யறீங்க. தோளைக் குலுக்கறீங்களா ? நான் குடிகாரன்தான். ஆமா, நான் இப்ப குடிச்சிருக்கேன். என்னான்றே ? உலகம் அழிய இன்னுங் காலம் கெடக்கு. அந்த நாள் வரும், உருப்படாதவர்களே. கடவுள் நம்ம பாவ புண்ணியங்களைக் கணக்குப் பார்ப்பார். ஆமடா, மேகங்கள் வழியா மனித வடிவத்தில் தேவபுருஷன் வருவாரு. பேமானிகளா. அவரது தீர்ப்பில் இந்த உலகம் இராது. பேரிருள்தான் நரகந்தான் அனுபவிக்கணும் நீங்க, பாவிகளே.... '

இப்ப கணிசமாய்க் கூட்டம் சேர்ந்து விட்டது அங்கே. சிரிப்பும் கும்மாளமுமாய் சுற்றிவர ஜனங்கள். மேலும் ஆட்கள் சேர ஆரம்பித்திருந்தார்கள். ஆண்கள். பெண்கள். மேஸ்திரிகள். பெரியாட்கள். சித்தாட்கள். ஒரு டிரைவர் தெருவில் இருந்து பள்ளத்தில் இறங்கி அவர்களைப் பார்க்க வந்தான். கையில் சவுக்கு எடுத்து வந்திருந்தான். ஒருத்தன் சாமைக் கையமர்த்தப் பார்த்தான். சாம் அடங்குவதாய் இல்லை. அணிவகுத்துச் சென்ற சில சிப்பாய்கள் அவனைப் பார்த்தபடி சிரித்துச் சென்றார்கள். அந்தத் தெருநாய் அவன் முகத்தைப் பார்க்க வாலை ஆட்டியபடி ஊளையிட்டது.

யேசுமகிமை பியப்சாம் இன்னொரு தரம் அலறி 'நகரு நகரு கேடுகெட்ட சனியனே ' என்று கையசைத்தபடி கீழே விழுந்தான். குரல் பாதியில் உள்வாங்கி அமைதி சூழ்ந்தது. பெருவிளிம்புத் தொப்பி சற்று த ள் ளி ப் ப ற ந் து தரையில் சிறு துள்ளலுடன் வி ழு ந் து ஓய்ந்தது.

அசைவின்றிக் கிடந்த பியப்சாமை இரண்டு மேஸ்திரிகள் சோதித்தார்கள். முகத்தில் தண்ணீர் அடித்தார்கள். பிராந்தியால் அவன் நெற்றிப் பொட்டில் கதகதப்பூட்டிப் பார்த்தார்கள். ஒரு பிரயோஜனமும் இல்லை.

ஆம்புலன்ஸ் சிறிது நேரத்தில் வந்து பியப்சாமை அள்ளிக்கொண்டு போனது. எல்லாம் நாடகக் காட்சிபோலவே இருந்தது இறுதிவரை.

---

The way to the churchyard/Thomas Mann

நிறைய நிறைய வர்ணிக்கிறார் இல்லையா ? இந்தக் கதை 1901ல் எழுதியது. அது இலக்கிய உலகில் வர்ணனைக் காலம். ஒரு நாடகக்காட்சி போல வர்ணிக்கப் பிரியம் கொண்டிருக்கிறார் மன். மதத்தில் பிடிப்பு கொண்டவராய்த் தெரிகிறார். வறுமை சார்ந்த கருப்பொருட்கள் அவரைக் கவர்ந்திழுக்கின்றன. கொஞ்சம் குறியீட்டு வகைமை எழுத்து. தத்துவ போதை. வார்த்தைகளை வாரியிறைத்து விஸ்தாரம் காட்டுகிறார். வாழ்வின் சிறு காட்சியையும் தத்துவக் குறுக்குவெட்டுப் பார்வையில் அளவெடுக்கிற பயிற்சியை வாசகனுக்கு அளிக்க வல்ல எழுத்து அல்லவா ? மன் பிற்காலத்தில், 1929ல் நோபல் பரிசு பெற்றார்.

# ப்ளூஸ்(1) பாடல்களுக்கான நேரம்.* (மூலம் : தொனினோ பெனக்கிஸ்ட்டா (Tonino BENACQUISTA))

சூப்பில் கிடக்கும் ரொட்டிபோல(2) நனைந்திருந்தேன். சடிதியான மழையென்றால் நனைந்துதானே ஆகணும் ?இல்லையா. திடுதிப்பென்று அடித்து ஓயும் வெப்பமண்டல பிரதேசத்து மழை. சுழன்று அடிக்கும் காற்றும் மழையும் பாதசாரிகளைப் பிடுங்கி எறிகிறது, சாலையோற குறடுகளை நீரில் மூழ்கச் செய்கிறது. என்னைக்குறிவைத்து பெய்கிற மழை. என்னை ஓயாமல் துரத்தும் பொல்லாத நேரம் இன்றைக்குத் தன் புத்தியை மழையாகக் காட்டியிருக்கிறது. சுற்றியிருந்தவர்களில் சிலர் குடைகளை விரிக்கிறார்கள், சிலர் காப்பி பாரின் முன் வாசல் வளைவுகளையும், கூடங்களையும் கண்டு அவசரமாய் ஒதுங்குகிறார்கள். சாலையின் எதிர்ப்புறம் பெயர்ப்பலகையின் மின்விளக்கு அணைக்கப்பட்ட நிலையில் திறந்திருந்த 'பார் ' எனக்கு அதிசயமாகப் பட்டது. இவ்வீதி எனக்குப் புதியதல்ல நன்கு பழக்கப்பட்டதென்கிற எண்ணம். தமது தடத்தை மாற்றிக்கொள்வதென்பது மழைக்கு வேண்டுமானால் சாத்தியம். என்னைச் சுற்றியுள்ள உலகம் மறுபடியும் தமது இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கு முன்பாக, எனக்கே எனக்கென்று ஒரு கால்மணி நேரத்தை செலவிடப்போகிறேன்.

உத்திரங்களும் தூண்களும் ஆகப் பழையவை. பழுப்பேறிய போத்தல்கள், எங்கும் அமைதி. நுழைவு வாயிலில் எனது மேலங்கியினால் நேர்ந்த நீர்த்தாரைகள். மதுவிற்கபடுகிற நீண்ட மேசையை ஒட்டிப் போடப்பட்டிருந்த தவிசு ஒன்றில் தனி ஆளாக சென்றமர்கிறேன். சற்றுத் தள்ளி, ஆணும் பெண்ணுமாய் ஜோடியொன்று மெல்ல பேசிக்கொண்டே பீர் குடித்துக்கொண்டிருக்கிறது. பார் அட்டெண்டர் எதற்கும் அலட்டிக்கொள்ளாதவன்போல மிக நிதானத்துடன் செயல்பட்டுக்கொண்டிருக்கிறான்.

-- ச்சே.. காலநிலை ஆகமோசம், இல்லையா ?

-- ஐஸ்போடாம எனக்கு ஒரு பூர்போன்(3) கொடு

மூலையில் ஒரு ஜூக்-பாக்ஸ். இத்தனை காலத்திற்கும் பிறகும் உபயோகத்தில் இருக்கிறதா என்ன ? நாணயத்தைப் போட்டால்தான் பாடுமோ ? ஒருவேளை நாணயத்தினைப் போட பாட்டோடு பாடகர் உருவமும் தெரியவருகிற Scopitones(4) ரகமா ? பார்த்தால் அப்படி தெரியவில்லை. தற்செயலாகவோ அல்லது வேண்டுமென்றோ ஒருபாடலை தேர்வுசெய்துமுடித்த பார் அட்டெண்டர் என்னை எதற்காகத் அப்படிப் பார்க்கிறான் ? கையிலிருந்த 'பூர்போன் '(3)விஸ்கியில் ஒரு மிடறு உள்ளே இறங்க ஜிவ்வென்று ஏறிய உஷ்ணம் சோர்ந்திருந்த உடலுக்கு இதமாக இருக்கிறது.

Preghero...! Per te...che hai la notte nel curore...

செலாந்த்தானோவுடைய (Celentano) 'Stand by me ' பாட்டு. அப்பாட்டு என்னோட இளமையைத் திரும்பக் கொண்டுவரப்போவதில்லை, எனினும் இப்போதைக்கு எனக்குத் தேவை. செலாந்த்தனோ பாட்டெனில் எனக்கு ரொம்பவும் பிடிக்கும் இத்தனைக்கும் அவன் அமெரிக்கர்களின் சாயலில் பாட ஆரம்பித்துவிடுவானோ என்கிற சந்தேகம் அப்போது பலருக்கும் இருந்தது. இனிமையான அப்பாடல், எனது இளமையின் அந்திமக் காலங்களை நினைவூட்டுகிறது.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. எதை, யாரைச் சந்திக்கவேண்டுமோ அதற்காகப் பலரும் ஓடிக்கொண்டிருந்தார்கள், நினைத்ததை சாதிப்பதென்றால் சும்மாவா ? அவர்களில் நானொருவன் மாத்திரம் வித்தியாசமானவன். எனது எதிர்பார்ப்பு என்னவென்று எனக்குத் தெரிந்திருந்தது. அதனை ஒரு சிலருக்கு விளங்கப்படுத்தியும் வந்தேன். என் கடன் அதற்காகக் காத்திருப்பது, காத்திருந்தேன். Stand by me... Ohoo Stand by me...காத்திருப்பது அலுக்கும் விஷயம், மற்றவர்களின் நகைப்புக்குப் பொருளாகக் கூடியது, எனினும் சிலவேளைகளில் காத்திருப்பதிலும் ஒருவகையான சந்தோஷமிருக்கிறது அப்படியான தருணங்களில் அதனை விரும்பிச் செய்கிறோம். வாழ்க்கையின் மிகப்பெரியத் தருணத்திற்காகக் காத்திருக்கையில், பாடவும் செய்கிறோம். எந்த நேரமும் அத்தருணங்கள் வாய்க்கலாம் என்கிறநிலையில், பொறுமையாகக் காத்திருக்கிறோம். நேற்றுவரை அதற்காகக் கடும் முயற்சிகள் மேற்கொண்டு ஈடேறும்தறுவாயில் சந்தேகிக்கிற மனிதன் பரிதாபத்திற்குரியவன்! வெட்கப்படவேண்டியவன்! நேற்றுவரை எஜமான விசுவாசத்தோடு அதன் வரவிற்காக காத்திருந்துவிட்டு, தருணம் அமையும்போது அதனைச் சந்தேகிக்கிறவன். அத்தகைய மனிதர்களுக்குச் 'சனிதிசை துவங்கிவிட்டதென ' மற்றவர்கள் பேசுவதிலும் நியாயமுண்டு. வாலிபப்பிராயத்தில் ஓரளவு இலட்சணமாக இருப்பேன், நான் பேசுவதைக் கேட்பதற்கென்றே சுற்றிவரும் பெண்கள் கூட்டம், பிறகென்ன கடற்கரை, புதுமைகளில் நாட்டம், பெண்களின் மார்புகச்சு...Stand by me... வாழ்க்கையின் முக்கியமான தருணம், எனக்கு எப்போதுவேண்டுமானாலும் வாய்க்கலாம் என்கிற நேரத்தில், சுற்றிலும் என்ன நடக்கிறதென்பதைக் கவனத்திற் கொள்ளாமலேயே, அசட்டையாக எல்லாவற்றிற்கும் தலையாட்டிக்கொண்டிருந்திருக்கிறேன்.

சற்றுதூரத்தில் அமர்ந்திருந்த ஜோடி தங்கள் உரையாடலை நிறுத்தியிட்டு ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். காதலர்களாக இருக்கவேண்டும். 'செலாந்த்தனோ ' இத் துர்பாக்கியசாலிகளையும் ஈர்த்திருக்கவேண்டும்.

எல்லாவற்றிற்கும் தலையாட்டினேனென்று சொன்னேனில்லையா ? அதில் என்னை கடந்து செல்லும் காலமும் அடக்கம். முடிவில் 'தாம் எவ்வளவு சுலபமாகக் கடக்க முடிந்ததென்பதை ' அக்காலமும் ஒரு நாள் புரியவைக்கிறது. அது என்ன சொல்லவருகிறது என்பதைக் காதில்வாங்காமலேயே தலையாட்டுவேன். சின்னச் சின்ன தலையாட்டுதல்கள், வரிசையாய் நீண்டு இன்றைக்கு இந்த அபத்தமான மதுச்சாலையிடம் என்னைச் சேர்த்திருக்கிறது. எனது பிரியத்துக்கு உகந்தவைகளை பலிபீடத்தில் நிறுத்தியதை எப்படி மறப்பது ? Stand by me...Ohooo Stand by me...எனக்குரியதை மற்றவர்கள் சொந்தங் கொண்டாட எதற்காகத் தலையாட்டினேன் ? என்னைபோலவே என்பிள்ளைகளும் இருக்கவேண்டுமென நினைப்பது எந்தவிதத்தில் நியாயம் ? இன்றையதினம் அவர்கள் யாரை ஒத்திருக்கிறார்கள் என்பதைக்கூட என்னாற் சொல்லமுடியாது. அவர்கள் என்னைப் பார்க்க வருவதில்லை. அவர்களுக்குள்ள தைரியம் எனக்கு அந்த வயதில் இருந்ததில்லை. உடன் பணியாற்றுகிறவர்கள் அன்பாக இருக்கவேண்டுமென்று நானெதற்காக வருத்திக்கொள்ளவேண்டும் ? எதற்காக இப்பாழும் நோயை எனது வயிற்றிற்குள்ளாக அனுமதிக்கவேண்டும் ? Stand by me... 'கிட்டத்தட்ட ஜெரெமியாட்(5) ' புலம்பல் பாடலைப்போல. இத்தாலிய மொழி, ஆங்கிலத்தைக்காட்டிலும் ஆக மோசம். 'Preghero per te... ' ஒருவனும் எனக்காக பிரார்த்தனை செய்யப்போவதில்லை. ஒருவனும் அடுத்தவனுக்காக பிரார்த்தனை செய்யமாட்டான், எதற்காக பாடல்கள் தேவையில்லாமல் பொய்சொல்கின்றன ?

வெளியே மழை தற்காலிகமாக நின்றிருந்தது. இதுதான் காலநிலை. இம் மதுச்சாலையைக்காட்டிலும் என்னுடைய நிலை ஆகப் பரிதாபம். இன்னொரு கண்ணாடி தம்ளர் மதுவினை, கேட்டு வாங்குகிறேன். இன்னும் ஐந்து நிமிடங்களில் எனக்கதில்

விருப்பமிருக்கிறதோ இல்லையோ வெளியே போய்விடவேண்டும். எனக்கான உரிமை கால்மணி நேரம், கூடுதலாக ஒரு விநாடிகூட எனக்கு அனுமதியில்லை. பார் அட்டெண்டர் ராஸ்கல் அதில் பாதி நேரத்தை இந்தப் பாழாய்போன 'ஜூக்-பாக்ஸால் ' பறித்துவிட்டான். மறுபடியும் போடுகிறான். என்னை துரத்துவதென்று தீர்மானித்திருக்கிறான், அவனுக்கும் என்னிடம் பழிதீர்த்துகொள்ள ஏதோ காரணமிருப்பதைப்போல. துரத்தும் அளவிற்கு என்னிடம் அவன் கண்ட குறையென்ன ? தெரிந்துகொள்ளவேண்டும். இதயமற்று ஏனோதானோவென்று ஒரு பாடல் ? ப்ராம்ஸ்(6)ஸோட இசை நிகழ்ச்சியா ? யதார்த்தவாதப் பாடல் வகையா ? இங்கே எதுவும் நடக்கலாம்.

I woke up this morning...

ப்ளூஸா ? அப்படித்தான் தோணுது. கிட்டார் நரம்புகளின் சிடுசிடுப்பு, காதை செவிடாக்கும் இறைச்சல். கண்விழித்தபிறகு ஒரு மனிதனுக்கு நேர்ந்த அத்தனைப் பிரச்சினைகளையும் புலம்புகிற இன்னுமொரு பாட்டு. எதற்காகக் கட்டிலைவிட்டு எழுந்திருக்கணும், நீங்க நான் உட்பட அத்தனைபேரும் ? இப்போதைக்கு இந்தக் கேள்வி எனக்குத் தேவையா ? ஹும்... கேட்டு என்ன ஆகப்போகுது ? பிரச்சினைகள் தீர்ந்திடுமா ? ஒவ்வொரு நாளும் முந்தையதினத்தைக் காட்டிலும் நரகமென்பது எனக்குத் தெரியும், அதனை உணரவும் முடியுது. பாடலின் முன்பாதி அலுப்புத் தட்டுகிறது, பின்பாதியைக் கேட்க ஆகப்பொறுமை வேண்டுமென நினைக்கிறேன், எனினும் குரலில் உள்ள செறிவு கேட்பவர்களை உசுப்பக்கூடும். பாடலைக் கேட்க சென்ற தலைமுறையைச் சேந்த இந்தியச் சாது ஒருவர் என்னை நன்னெறிபடுத்துகிற நினைப்பு.. பூர்போன் விஸ்கி நாடோடிகளுக்கான வோட்கா, ஜோராக இருக்கிறது, தரத்திற்குக் காரணம் விளைந்த நிலம் மற்றும் தயாரிப்பிற்கு பிறகு கையாண்ட பாதுகாப்பு முறைகளாக இருக்கலாம். I woke up this morning...காலையில் கண் விழித்தபோது, இன்றைக்கு இப்படி மழைகொட்டுமென நினைக்கவில்லை.

நான் 'நில் ' என்றால் மழை நின்ற காலங்களும் உண்டு, சியூ(7)சூன்யக்காரனைபோல ஆனால் என்னிடத்தில் எல்லாம் தலைகீழ். ஆரம்பத்தில் ஒருவனும் என்னை நம்பியதில்லை, கடைசியில் என்னோட தந்திரத்தை மெச்ச வேண்டிய நிலைமை. சொல்லப்போனால் இந்த விடயத்தில் பந்தயம் கட்டி செயித்திருக்கிறேன். பெரும்பாலும் அநேகர் நம்பமாட்டார்கள். கொஞ்ச நேரம் என்மனதை ஒரு முகப்படுத்தினாப்போதும், மழை சட்டென்று நின்றுபோகும். இச்சாமர்த்தியத்தினால் மாத்திரம் எத்தனைப் பெண்களை வீழ்த்தியிருப்பேனென்று நினைக்கிறீர்கள். மழையை நிறுத்துவதற்கு அப்படியெல்லாங்கூட உத்திகள் இருந்திருக்குமா ? தெரியவில்லை. ஆனால் என்னால் முடியுமென்று திடமாக நம்பினேன், முடிந்தது அதுதான் உண்மை. அப்படித்தால் ஒரு கிராமத்திற்கு சூரியனை அழைத்துவந்தேன், அவர்கள் நம்பவில்லை என்பது தனிகதை. இப்போது அப்படியான சாமர்த்தியம் என்னிடத்தில் இல்லை.

என்னைக்கேட்காமலேயே பார் அட்டெண்டர் இன்னொரு கோப்பை மதுவை நீட்டுகிறான்.

-- எடுத்துக்குங்க, இது எங்கோளோட அன்பளிப்பு.

ஒரு புன்னகைமூலம் எனது நன்றியைத் தெரிவிக்கிறேன். பாடலின் அடுத்துவரும் வரிகள் மனதை வேதனைப் படுத்தலாம். ஏன் அதனையுந்தான் முயற்சித்தாலென்ன ? எதற்காக தவிர்க்கவேண்டும் ? நாளைக்கு என்ன நேருமென்று சொல்லமுடியும் ? இப்போதெல்லாம் இசையில எனக்கும் கொஞ்சம் ஞானம் இருக்கிறது. நான் ஒருபோதும் பெரிய நட்சத்திர பாடகனாக மாறப்போவதில்லை ஆனால் எனது சந்தோஷத்திற்கென்று சில பாடல்களை

ஒற்றை ஆளாக பாடமுடியும். இங்கேயும் ஒன்றைத் தெளிவாகப் புரிந்துகொள்ளுதல் அவசியம். என்றைக்கவாதொரு நாள் என்பாடல் மேடையேற வேண்டுமெனில் அதற்கான ஏற்பாடுகளை இப்போதே இந்தஷணமே ஆரம்பித்தாகணும். சரளிவரிசையை முறைப்படி கற்பது மாத்திரமல்ல, பொறுமையோடு, நீண்டநாட்களுக்கு இடைவிடாமற் பயிற்சிசெய்யவேண்டும். 'பூர்போன்(3) ' என்னை வேறொரு உலகத்திற்கு அதாவது பாடகனால் அன்றைய தினத்து சங்கடங்கள் என வருணிக்கபடும் உலகத்திற்கு, அழைத்து செல்கிறது. I woke up this morning...காலையில் அவன் விழிக்காமலிருந்தால் இப்படியொரு இனிமையானபாடலை எழுதியும் பாடியும் இருக்கமுடியுமா ? அர்ப்பணிப்பு மனிதர்களுக்கு மாத்திரந்தான் இவ்வுலகம் சொந்தமா என்ன ? என்னைப்போல உழைப்புக்குப் பலனின்றி ஜீவிக்கிற கூட்டமும் இருக்கத்தானே செய்கிறது. எங்களால் எதையும் சாதிக்க முடியாதென்பது உண்மை ஆனால் மறக்கக்கூடாதவையென நிறையவே எங்களிடம் இருக்கின்றன. சிலநொடிகள் கண்களை இறுகமூடி மனதை ஒருமுகபடுத்தினால் ஒருவேளை...

--என்ன சொல்ற ஒரு கோப்பை பூர்போன் விஸ்கி பந்தயம், இரண்டொரு நிமிடத்தில மழையை நிறுத்திக் காட்டுகிறேன்.

பார் அட்டெண்டர் என்னை நேராக பார்க்கிறான், அவனது அதரங்களில் ஓர் அலட்சிய புன்னகை.

--என்ன விளையாடறியா ? மழைத்துளிகள் உடைந்த விஸ்கி கிளாஸ் துண்டுகள்போல மொத்துமொத்தென்று அதிகமா விழுது.

-- எதற்கு வீண்பேச்சு, இப்போ பந்தயம் வச்சுக்கலாமா ? வேண்டாமா ?

'உடனே கிளம்பு ' என்பதன் அடையாளமாக அவனிடமிருந்து சைகை. ஜூக்-பாக்ஸ் பாடுவதை நிறுத்திக்கொண்டது. கண்களை இறுக மூடிக்கொண்டேன். மறுபடியும் கண்திறந்தபோது பிரமை பிடித்தவன்போல பார் அட்டெண்டர் திரைத்துணியோடு நின்றுகொண்டிருக்கிறான்.

நாளைகாலை மறுபடியும் கண் விழித்தாகணும்.

----

* Un temps de blues

1. அமெரிக்க கறுப்பின மக்களின் வெகுசனப் பாடல்கள், பெரும்பாலும் விரக்தியை வெளிபடுத்துபவை.

2. Trempe comme une soupe - அல்லது தமிழ் வழக்கில் மழையில் நனைந்த கோழிபோல

3. Bourbon - அமெரிக்கன் விஸ்கி

4. அறுபதுகளில் காப்பி பார்களில் 16மி.மி.ல் எடுக்கபட்ட பாடல்காட்சிகளை திரையிடும் எந்திரம்.

5. பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த ஜெரெமியாஸ் என்கிற தீர்க்கதரிசியின் பாடல்

6. BRAHMS Johannes -(1833-1897) ஜெர்மானிய இசைக்கலைஞர்.

7. வட அமெரிக்க செவ்விந்திய இனம்.

**

# சொ ல் லி ன் செ ல் வ ன் ( அன்டன் செகாவ்/ருஷ்யா)

*

கிரில் இவனோவிச் பாபிலோனவ் என்கிற கல்லூரி உதவிப் பேராசிரியர் நல்லதோர் காலையில் நல்லடக்கம் செய்யப் பட்டார். நமது தேசத்தில் பரவலாக அறியப் பட்டபடி இரு துன்பங்களில் - மோசமான மனைவி மற்றும் போதைப் பழக்கம் - அவர் இறந்து போனார். அவரது இறுதி ஊர்வலம் தேவாலயத்தில் இருந்து கல்லறை நோக்கிக் கிளம்பவும், அவருடன் பணியாற்றும் நண்பரான போப்லாவ்ஸ்கி நண்பன் ஒருவனைத் தேடி வாடகைக் கார் ஒன்றில் தாவியேறிப் போனார். கிரிகோரி பெட்ரோவிச் ஜபோய்க்கின் என்கிற அந்த நண்பன் இளைஞனேயானாலும் புகழ் மிக்கவன். மூர்த்தி சிறிது, கீர்த்தி பெரிது - என்னுடைய வாசகர்கள் அவனை அறிவார்கள் - ஜபோய்க்கின் முன்தாயரிப்பே இல்லாமல் கல்யாணங்களிலும், பெருவிழாமேடைகளிலும், இழவு நிகழ்ச்சிகளிலும் உரையாற்ற வல்லவன். தூக்கமா, காலி வயிறா, மொடாக்குடியா, அட, கடும் காய்ச்சலா... எந்த நிலையிலும் நினைச்சால் அவனால் பேச முடியும். சீராகவும் மென்மையாகவும் வார்த்தைகள், ஏராளமான வார்த்தைகள் அவனிடம் இருந்து வழியும், குழாயில் இருந்து தண்ணீர் போல. அவனது பேச்சகராதியில் நெகிழ்ச்சிகரமாய் எராளமான, உணவு விடுதி ஈக்களைக் காட்டிலும் அதிகப்படியான, வார்த்தைகள் இருந்தன. உணர்வுபூர்வமாக நீண்ட உரையாகவே எப்போதும் பேசினான். அதனால் என்ன ஆகிப் போகுமென்றால், சில சந்தர்ப்பங்களில், குறிப்பாக சில வியாபாரிகளின் கல்யாணங்களில், அவன் பேச்சை நிறுத்த போலிசை வரவழைக்க வேண்டியதாகிவிடும்.

'உம்மைத் தேடித்தான் வந்தேன் பெரிய மனுஷா... ' போப்லாவ்ஸ்கி அவனது வீட்டில் நுழைந்தார். 'கோட்டும் தொப்பியும் போட்டுக்கோ. உடனே கிளம்பு. நம்மாள் ஒருத்தர் இறந்துட்டார். அந்தாளை மேலுலகத்துக்கு அனுப்பிட்டிருக்கோம். அவரை வழியனுப்ப நீயும் உன்னாலான உபசாரம் செய்யணும்... கூட்டத்தில் எங்க நம்பிக்கை நட்சத்திரமே நீதான். ஆள் ஏப்ப சாப்பையா இருந்தா உன்னைக் கூப்பிடற அளவுக்குப் பெரிய விஷயமா இராது. ஆனா பாரு... நம்ம செயலாளர் சாமி. ஒருவகையில் எங்க அலுவலகத்துத் தூண் மாதிரி. அத்தாம் பெரியாளை ஒரு நாலுவார்த்தை இல்லாம அடக்கம் செய்தா அசிங்கம் இல்லியா ? '

'ஓ செயலாளரா... ' என வாயைப் பிளந்தான் ஜபோய்க்கின். 'விடாக் குடியன்... அவரா ? '

'ஆமாம். நொறுக்குத் தீனி, மதியச் சாப்பாடு எல்லாம் உனக்குக் கிடைக்கும்.... வாடகைக்கார் செலவும் பாத்துக்குவோம். கிளம்பு அருமைப் பையா. வழக்கமான கல்லறை உரைபோல வந்து அடிச்சி நொறுக்கு.... ஊரே மூக்குல வெரல் வைக்கப் போறாங்க. '

ஜபோய்க்கின் உடனே ஒத்துக் கொண்டான். தலையைச் சரி செய்தான். முகத்தில் சிறிது பவுடர் பூச்சு. போப்லாவ்ஸ்கியுடன் தெருவில் இறங்கி நடந்தான்.

'உங்க செயலாளர்... எனக்குத் தெரியும் அவரை... ' காரில் ஏறியபடி அவன் சொன்னான். 'உள்ளொண்ணு வெச்சி வெளியே வேற மாதிரிப் பேசுவான். ரௌடிப்பயல். மிருகஜாதி... சொர்க்கவாசல் திறக்கட்டும் அவனுக்கு - அவனை மாதிரியாளுங்களை சாதாரணமா பாக்கவே முடியாது. '

'பாருப்பா, செத்தவர்களைத் திட்டுறது சரியில்லை... '

'ஆமாமா. செத்தவங்களை முடிஞ்சா பாராட்டு, இல்லியா விட்ரு...ன்னு வசனம். ஆனாக்கூட.... அவன் அயோக்கியனய்யா. '

இறுதி ஊர்வலத்தை எட்டிக் கடந்து அத்தோடு இணைந்து கொண்டார்கள். சவப்பெட்டி மெதுவாக வந்து கொண்டிருந்தது. பெட்டி கல்லறைக்கு வந்து சேர்வதற்குள் மூன்று முறை அவர்கள் - இறந்தவனின் ஆரோக்கியத்துக்காக என்றபடி - 'தாகசாந்தி ' செய்து கொண்டார்கள்.

ஊர்வலம் கல்லறை அருகே வந்தது. மாமியாரும், சம்சாரமும், மைத்துனி ஒருத்தியும் சம்பிரதாயப்படி கதறி அழுதார்கள். சவப்பெட்டி குழிக்குள் இறக்கப்பட்டபோது சம்சாரம், 'நானும் போயிர்றேன்... ' என கீச்சிட்டாள். ஆனால் போகவில்லை. ஓய்வூதியப் பணம் நினைவு வந்திருக்கக் கூடும். ஜபோய்க்கின் எல்லா சமாச்சாரமும் அடங்கட்டும் எனக் காத்திருந்துவிட்டு, முன்னால் வந்து நின்று, வந்திருந்த எல்லாரையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு, ஆரம்பித்தான்.

'என் கண்களையே, காதுகளையே நம்புவதா வேணாமா ? இந்தக் கல்லறை, இந்த அழுதுசிவந்த முகங்கள், இந்த முனகல்கள், இந்தத் துயரங்கள்... எல்லாம் கொடூரமான கனவுதானே ? ஆ - இது கனவு அல்ல. நம் கண்கள் நம்மை ஏமாற்றவும் இல்லை... சற்று முன்வரைகூட நாம் பார்த்தவர், மகா துணிச்சல்கார மனிதர், இளமைப் புத்துயிர்ப்பும் தூய்மையுமானவர், ஒரு தேனிபோல அபார சுறுசுறுப்புடன் நமது சமுதாயம் என்னும் தேன்கூட்டுக்காகப் பாடுபட்டவர்... மேலும்... ஆ அவர் இப்போது மண்ணோடு தூசியாகிப் போய்விட்டார். மாயக் கானல்நீராகிப் போனார். மீளமுடியாத மரணத்தின் கொடூரக் கரம் அவர் மேல் விழுந்து விட்டது. தொண்டுகிழ வயோதிகத்திலும் அவர் உற்சாகமும் பலமும் கொண்டிருந்தார். சாவு பற்றி நினைக்கவே இல்லை. ஈடு செய்யவே முடியாத இழப்பு இது! அவர் விட்டுச் சென்ற இடத்தை நிரப்ப வல்லார் யார் ? அரசுப் பணியாளர்களில் நல்லவர்கள் நிறைய இருக்கிறார்கள். ஆனால் புரோகோஃபி ஒசிபிச் தனித்தன்மைக்காரர். சுத்த சுயம்பு. தன் நேர்மையான பணியில் அவர் அடிமனதின் ஆழத்தில் இருந்து செயல்பட்டார். இரவு வெகுநேரம்வரை கூட அவர் அயராமல் பணிபுரிந்தார். ஆனாலும் ஆரோக்கியம் கெடாமல் இருந்தார். லஞ்ச லாவண்யங்களை அவர் சட்டை செய்ததும் இல்லை. ஆர்வப் பட்டதும் இல்லை.

லஞ்சம் வாங்க அவரைத் தூண்டியவர்களை அவர் எத்தனை வெறுத்தார். சிறு சிறு லௌகிகக் கையூட்டுகளால் தமது கடமைக்கு துரோகம் செய்ய அவரை இழுத்த நபர்களை அவர் ஒதுக்கினார். ஆமாமாம், நம்ம கண்ணு முன்னாடியே புரோகோஃபி ஒசிபிச் தமது சிறு மாத ஊதியத்தை, தம்மிலும் ஏழைபாழையான தம் அலுவலகப் பணியாளர்களோடு பகிர்ந்து கொண்டார். அவருடைய உதவி உபகாரத்தில் வாழ்ந்த அனாதைகளின், விதவைகளின் ஆழ்ந்த துக்கக் குரல்களை இப்போது நீங்களே கேட்டார்கள். தமது அலுவலகக் கடமையிலும் வேலையின் சிரத்தை மிகுதியிலும் அவர் தன் வாழ்வின் இன்பங்களையே ரெண்டாம் பட்சமாக்கினார். இல்வாழ்க்கையையே அவர் துறந்தார். உங்க எல்லாருக்குமே தெரியும்- தன் கடைசி நாள்வரை அவர் பிரம்மச்சாரி. ஆ தொழிற்சங்கத் தோழராக அவரை நிரப்ப யார் இருக்கிறார்கள் ? சவரம் செய்த அன்பான அவரது முகம்... அதன் மெல்லிய முறுவல்... இப்போதும் மனசால் நான் பார்க்க முடிகிறது. மிருதுவான சிநேகபூர்வமான அவரது குரல்... என்னால் கேட்க முடிகிறது. உங்க ஆத்மா சாந்தியடைக, புரோகோஃபி ஒசிபிச்... நேர்மையாளரே... புனிதமானவரே... உழைப்பாளரே... '

ஐபோய்க்கின் தொடர்ந்து பேசினான். ஆனால் கூட்டத்தில் ஜனங்கள் தங்களுக்குள் குசுகுசுக்க ஆரம்பித்து விட்டார்கள். எல்லாரையும் அவனது உரை திருப்திப் படுத்தவே செய்தது. சிலர் கொஞ்சம்போல அழக்கூட செய்தார்கள். ஆனால் அந்த உரை பலவிதங்களில் விசித்திரமாய் இருந்தது அவர்களுக்கு. முதல் விஷயம், இறந்து போனவரை பேச்சாளர் ஏன் புரோகோஃபி ஒசிபிச் என்று குறிப்பிட வேண்டும் ? மரித்தவர் கிரில் இவனோவிச் அல்லவா ? ரெண்டாவது, தொட்டுத் தாலி கட்டிய சம்சாரத்தோடு அவர் காலம்பூராவும் காள்பூளென்று கத்திக் கொண்டிருந்தார்... அவரை பிரம்மச்சாரி என்று எப்படிச் சொல்வ முடியும் ? மூணாவது, அவருக்கு செமத்தியான சிவப்பில் தாடி உண்டு. அதை அவர் எடுத்ததாக சரித்திரமே கிடையாது. ஆக ஒருத்தருக்கும் பேச்சாளர் சொன்ன, சவரம் எடுத்த முகம்... என்ற அடையாளம் விளங்கவில்லை. எல்லாரும் மண்டையைப் பிய்ச்சிக் கிட்டார்கள். ஒருத்தரை ஒருத்தர் பாத்துக் கிட்டு, தோளைக் குலுக்கிக் கொண்டார்கள்.

'புரோகோஃபி ஒசிபிச்... ' பேச்சாளன் தொடர்ந்தான். கல்லறையைப் பார்த்துக்கொண்டே அழுத்தமான பாதிப்புடன் பேசினான். 'துப்புரவான, எதையும் வெளிக்காட்டாத முகம். நீங்கள் பிடிவாதமான கண்டிப்புடன் செயல்பட்டார்கள். ஆனால் எங்க எல்லாருக்குமே தெரியும்... வெளிப் பார்வைக்கு எப்பிடி இருந்தாலும், உங்களுக்குள்ள இருந்தது நேர்மை தவறாத, சிநேகபூர்வமான அந்த இதயம். '

கொஞ்ச நேரத்தில் அந்தப் பேச்சில் மாத்திரம் அல்ல, பேச்சாளனிடத்திலேயே ஏதோ கோளாறு என ஜனங்கள் உணர்ந்தார்கள். ஓர் இடத்தில் அவன் குறிப்பாய்ப் பார்த்... லேசா அதிர்ந்து... அவனும் தோளைக் குலுக்கிக் கொண்டான். அந்தமேனிக்குப் பேச்சையே நிறுத்தி விட்டான். திக்குமுக்கிக்கிட்டு திரும்பி போப்லோவ்ஸ்கியைப் பார்த்தான்.

'அட அந்தாளு இருக்காருய்யா... ' என்றான் திகிலடிச்சிப்போய்.

'யாரு இருக்காருன்றே ? '

'ஏன் ? புரோகோஃபி ஒசிபிச்... அந்தா நிக்கிறாரு. அந்த கல்வெட்டு பக்கத்தில்... '

'அவரு சாகவே இல்ல. கிரில் இவானோவிச்தான் செத்திட்டாரு... '

'கிரில் இவானோவிச்தான் எங்க செயலாளர். நீ போட்டுக் கலக்கிட்டியே எல்லாத்தையும் பேமானி. புரோகோஃபி ஒசிபிச்சும் முன்ன எங்க செயலாளரா இருந்தவரு. அது நிஜம்தான். ஆனா ரெண்டு வருஷம் முன்ன அவர் தலைமை குமாஸ்தாவா செகண்ட் டிவிஷனுக்குப் போயிட்டாரு. '

'ஐய சாத்தானே நான் இப்ப என்ன பேச ? '

'நீ ஏன் நிறுத்தறே ? நீ பேசு. விவகாரம் அசிங்கமாயிரும்ல... '

ஐபோய்க்கின் கல்லறைப் பக்கம் திரும்பிக் கொண்டான். தொடர்ந்து அவன் விட்ட இடத்தில் இருந்து பேச்சை எடுத்தான். புரோகோஃபி ஒசிபிச் என்ற, மழுங்க சவரம் எடுத்த முகத்தார், அந்தப் பழைய குமாஸ்தா வாஸ்தவத்தில் அந்த இடத்தில் ஒரு நினைவுக் கல்வெட்டின் அருகில் நின்றிருந்தார். பேச்சாளனை அவர் பார்த்தபடி ஆத்திரத்துடன் உருமினார்.

அவரது சக ஊழியர்கள் 'வசம்மா மாட்டிக்கினியாக்கும் ' என்கிற தினுசில் அவரைப் பார்த்துச் சிரித்தார்கள். எல்லாரும் ஐபோய்க்கின்னுடன் சடங்குகள் முடிந்து திரும்பிக் கொண்டிருந்தார்கள். 'ஒராள உயிரோட புதைச்சாச்சி! '

'கடுப்படிச்சிட்டியே தம்பி ' என்று முணுமுணுத்தார் புரோகோஃபி ஒசிபிச். 'செத்தவனைப் பத்தி நீ அப்பிடிச் சொல்றது சரிதான். ஆனா உசிரோட இருக்கிறவன் அப்பிடி இருக்கறதாச் சொன்னா குசும்புக்கார கிண்டல்தான் அது. என்னத்தை நீ சொல்லிட்டிருந்தே ? லஞ்சம் வாங்க மாட்டார். அவருகிட்ட லஞ்சத்தை நீட்ட முடியாது. லஞ்சம் வாங்க இஷ்டப்படாதவர்... எவனையாவது போட்டுத் தாளிக்கணும்னா, அப்பிடிச் சொல்றதுதான். யாராவது உன்ட்ட என் முகத்தை விவரிக்கச் சொன்னாங்களா ? துப்புரவான, உணர்ச்சி தெறிக்காத... அட இருந்துட்டுப் போட்டும்யா. நான் பொறுமைசாலின்னு எல்லார் முன்னாடியும் சொல்லி அவமானப் படுத்திட்டியே... '

---

# மோகினிப் பிசாசு ( பிரெஞ்ச் மூலம் : தனியெல் புலான்ழே )

**பிரெஞ்சிலிருந்து தமிழில் நாகரத்தினம் கிருஷ்ணா**

(தனியெல் புலான்ழே: (Daniel Boulanger):1922ம் ஆண்டு பிறந்த இவருக்கு இசைக்கலைஞர், எழுத்தாளர், நாடக ஆசிரியர், திரைப்பட வசனகர்த்தா, நடிகரென பலமுகங்கள் உண்டு. இதுவரை வெளிவந்துள்ள18 சிறுகதைத் தொகுப்புகளும், 20க்கும் மேற்பட்ட நாவல்களும், சில இலக்கிய சொல்லுகைகளும்(Litt. Narative) இவரது படைபாற்றலை வெளிப்படுத்துகின்றன. 1957ல் 'Temps Moderne 'க்காக எழுதிய இவரது சிறைவாழ்க்கையைப் பற்றிய சொல்லுகையை, சார்த்துரு (Jean-Paul Sartre)நிராகரித்திருக்கிறார். 1959ல் வெளிவந்த இவரது L 'Ombre, நாவல், ழான் ரூஸ்லோவால் பின் நவீனத்துவ படைப்புகளில் மகோன்னதமானது எனப் பாராட்டப்பட்டிருக்கிறது. 1964ல் வெளிவந்த Les Noces du Merle சிறுகதைத் தொகுப்பு, சிறந்த சிறுகதைகளுக்கான பரிசினை வென்றிருக்கிறது. 1971ம் ஆண்டு பிரெஞ்சு

மொழி அகாதமி பரிசினையும், 1979ல் மொனாக்கோ இளவரசர் பரிசினையும் வென்றிருக்கிறார். 1983ம் ஆண்டிலிருந்து பிரெஞ்சு இலக்கிய பீடங்களில் மிகவும் முக்கியம் வாய்ந்த கொன்கூர் அகாதமியில் தேர்வுக்குழு நீதிபதியாக இருந்துவருகிறார். தீவிர இலக்கிய விமர்சகர்களால் ஆராதிக்கப்படுபவர். இலக்கிய பீடங்களின் தேர்வுகளில் நீதிபதி பொறுப்பேற்க விரும்பி அழைக்கபடுபவர். சமகால பிரெஞ்சு படைப்பாளிகளில் சிறுகதை சாம்ராச்சியத்தில் இவரளவிற்கு கோலோச்சுகிறவர்கள் குறைவு. 1970ல் வெளிவந்த நகரத்து நினைவுகள்(Memoire de la Ville) சிறுகதைத் தொகுப்பு, மிகச் சிறந்த சிறுகதைகளைத் தன்னுள் அடக்கியது, அவற்றில் ஒன்றான மோகினிப் பிசாசு (L 'Attaque). மொழியில், நடையில் மாப்பசான் தாக்கத்துடன் சொல்லபட்டச் சிறுகதை. )

சுற்றிலும் பரந்து கிடக்கும் காடு கரம்பைகள். நானூறு ஆண்டுகளைக் கடந்து, ரொட்டிக்கடையின் மாவுபிசையும் மேடைக்கான உயரத்தில், ஏறக்குறைய சரிபாதி உள்ளீடற்று, பட்டைகளும் முண்டுகளுமாய் நிற்கும் ஷேன் மரம். அம்மரத்தினைச் துறடுபோலச் சுற்றிக்கொண்டு செல்லும் சாலை. கோடையில், தொக்தர்* ஃப்பகேர், தமது பணி நிமித்தமாக சுற்றித் திரியும் நேரங்களில், அவ்விடத்தில் வாகனத்தை நிறுத்துவதுண்டு. அவரது பாதையில், வேறெங்கும் எளிதிற் கிடைக்காத நிழல். சுங்கானில் புகையிலையைத் திணித்து, நின்று-சுகமாகப் புகைப்பார். தோலினால் ஆன தமது காலணிகளைத் தளர்த்திக்கொண்டு கற்பனை உலகில் மிதப்பார். அத்தருணம், தொக்தர்* தனக்கு வாய்த்த தனிமைப் பேற்றினைச் சுகிப்பதற்கான நேரம். கண்ணெதிரே இவரைச் சூழ்ந்துகொண்டுள்ள கோடிக்கணக்கான கோதுமைக் கதிர்கள் கூட தனிமையில்தான் இருக்கின்றன. இவரும் ஒரு வகையில் கதிர்தான், ஆனால் தாங்கி நிற்க இயலாமல் தலைசாய்ந்துள்ள கதிர், கோதுமைக்கதிர். 'அட! எங்கிருந்து இப்பறவை வெளிப்பட்டிருக்கிறது ? அச்சுறுத்தும் வானத்தில் பதற்றதுடன் பறக்க நேர்ந்த பறவை '! வீசுகின்ற காற்று, பூமியின் மூச்சுக்காற்று. அக்காற்றில் முத்தமிட நெருங்கும் மங்கையின் அதரங்களுக்குரிய மென்மையும், மிருதுத்தன்மையும். அதனைத் தன்னுள் உணரும் தருணத்திலே தனது உயிர் பிரியுமெனில் அவருக்குச் சம்மதமே. அனல் காற்றைத் தவிர நோயுற்ற உடல்களோ, வீங்கிய வயிறுகளோ, சீழோ, இரத்தமோ இவ்விடத்தில் இல்லை, அறிவின் மயக்கத்தின்போதே அழகியல் தெரியவரும்போலும்.

நோயாளிகளைப் பார்ப்பதற்கெனச் செல்லும்போதோ, அல்லது பார்த்துத் திரும்பும்போதோ, கண்ணயர நேர்ந்தால் தொக்தர்* ஃப்பகெர், தனது காரை சாலையோரம், புல்வெளிகளை ஒட்டித் தவறாமல் நிறுத்திக்கொள்வார். அநேகமாகக் கால் மணிநேரத்திற்குக் குறையாமலொரு குட்டித் தூக்கம், கைவசமிருக்கும் சுங்கானைத் தேடி எடுத்து மறுபடியும் புகைத்தல், மீண்டும் காரில் பயணம், நோயாளிகள் விசாரிப்பு, எனத் தொடரும் வாழ்க்கை. இச்சந்தோஷ தருணம் - தலையில் ஒளிவட்டமாக, பிரசவம் பார்ப்பதற்கென்று ஒரு பண்ணை வீட்டிற்கோ அல்லது அடிபட்ட ஒருவனுக்கு சிகிச்சை செய்யவேண்டி ஒரு குக்கிராமத்திற்குப் போகும்வரையிலோ அல்லது நோயாளிகளின் அழைப்பின்றி வீட்டில் அடைந்து கிடக்கும் நாட்கள் வரையிலோ நீடிக்கும். மறுபடியும் ஷேன் மரத்தின் நினைப்பு வந்துவிடும், அவ்வாறான சமயங்களில் நோயாளிகளைக்கூட- நிலைக்குத்திய பார்வையும், தொங்கிய கைகளுமாய் -அம்போவென்று, சோதனையின்போதே இடையில் விட்டுவிட்டு வந்த நாட்களும் உண்டு.

ஆனால் பிற்பகல் இன்றைக்கு என்னவோ வெக்கையாக இருக்கிறது. ஷேன் மரத்தில் தலை சாய்த்தவுடன் கண்ணயர்ந்தவர், அறைந்து சாத்தப்படும் கதவின் ஓசைகேட்டுக் கண்விழித்தார், ஒரு பெண்மணி. நளினமாகக் கைகளை உயர்த்தியவள், புன்னகைத்தவாறு தன் கூந்தலை ஒதுக்கியவண்ணம் இவரது காரிலிருந்து வெளிப்பட்டாள்.

'வணக்கம்! ' என்ற குரலில் வருடும் குணம். 'என்ன ஓய்வெடுத்தீர்களா ? உங்கள் வாகனத்தில் தலையணை ஒன்றை வைத்திருக்கலாம், குறைகிறது. அதனாலென்ன, எப்படியோ சமாளித்து சிறிது நேரம் உறங்கிப்போனேன், என்றவள்-- 'ஒருவேளை, டிக்கியில் தலையணை வைத்திருக்கும் பழக்கம் உங்களுக்கு உண்டா ? உண்டென்றால், அடுத்தமுறை சாவிகொண்டு காரை பூட்டும் வழக்கம் வேண்டாம் ', - என்கிறாள்.

-- 'வாகனத்தில் நச்சுப் பொருட்கள் இருப்பதால் வாகனத்தினைப் பூட்டத்தான் வேண்டும். தவிர மருத்துவ குறியீடுள்ள வாகனங்களில் திருடுவற்கென ஒரு கூட்டமுண்டு, என்பதை நீ மறுக்கமாட்டாய். போதை மருந்திற்காக என்றில்லை, இதுபோன்ற வாகனங்களில் மருந்துச் சீட்டுக்கைளைக் களவாடி, அதில் வேண்டியதை நிரப்பி மருந்துக் கடைகளிற் கொடுத்து தேவையான போதைமாத்திரைகளையும் வாங்கிவிடுகிறார்கள் ', ஃபகெர் பதில் கம்மி ஒலித்தது.

-- 'உங்களைச் சீண்டிப்பார்க்கணுங்கிறதுக்காகவோ அல்லது காரில் தலையணை வைத்தில்லாதது மகாப் பெரியக்குற்றமென்றோ இதைச் சொல்லலை, உங்க சகாவான 'மர்த்ரெய் ' பகுதி தொக்தரை*ப்போல வாகனத்தின் டிக்கியில் திண்டோ, தலையணையோ, போர்வையோ வைத்திருக்கிறீர்களா ? என்பதைத் தெரிந்துகொள்ளும் ஆர்வத்திலேயே வினவினேன் '

-- 'மர்த்ரெய் ' பகுதி தொக்தரென்றால், போஃபிலேவைக் சொல்றண்ணு நினைக்கிறேன். உனக்கு அவரிடம் பழக்கமுண்டா ? '

-- 'கடந்த வருடத்தில் மலைப்பாதைகளில் அவருடன் உலாத்தியதுண்டு. அப்படியான நேரங்களில் அவர் வெகுசீக்கிரம், களைத்து போவார் என்பது உங்களுக்குத் தெரியுமா ? '

-- 'சீக்கிரமாவது பொறுத்தாவது நாம் அனைவருமே ஒரு நாள் களைத்து போகிறோம். '

-- 'நீங்க என்ன சொல்ல நினைக்கிறீங்கண்ணு எனக்குப் புரியுது.. ஆனால் நான் சொல்வது உண்மை. '

-- 'போஃபிலே ? '...கனவுலக பிதற்றல்போல தொக்தரிடமிருந்து வார்த்தைகள்: அவர் என்னைப்போல பிரம்மச்சாரி கிடையாது. அவருக்கு மனைவி, பிள்ளைகள்-ஏழுபிள்ளைகள்- எல்லாமுண்டு. எங்கள் தொழிலில் இதொன்றும் அதிசயமும் அல்ல. பரதேவதைகளைத் தேடி அலையவோ அல்லது கூத்தி வாழ்க்கையை நினைத்துப்பார்க்கவோ எங்களுக்குத் தைரியமும் காணாது, அதற்கான நேரமுமில்லை. ஒருவேளை, அப்படி மறந்துபோன பெண்களுக்காகத்தான் தனது வாகனத்தில் போர்வைகள், தலையணைகள் எனத் திணித்துக்கொண்டு அவர் வலம் வருகிறாரோ என்னவோ. அம்மணி! என்னை எடுத்துக்கொண்டால் நான் தனிக்கட்டை. பிள்ளை குட்டிண்ணு பிரச்சினைகள் கிடையாதுங்கிற கர்வம் எனக்குண்டு. இத்தகுதியை வாழ்க்கையின் அபத்தத்தை கண்டுணரும் ஒரு மனிதனுக்குத் தரப்பட்ட மிகப்பெரிய பாராட்டுப்பத்திரமாகவே நான் பார்க்கிறேன். என்ன ?.. நான் சொல்வது உனக்கு வேடிக்கையாக இருக்கிறதா ? '

உண்மையில் அவள் சிரித்தாள். அவளது சிரிப்பின் சௌந்தர்யம், மருத்துவரின் வார்த்தைகளை இதமாய் புறம்தள்ளி வானத்தின் வண்ணங்களையும், வயல்வெளிகளையும் மென்மையாய் சிவக்க வைத்தது.

-- 'என் தாயார்மாத்திரம் உன்னைப் பார்த்திருந்தா, இப்படியான அப்ஸரஸை வேறெங்கும் கண்டதில்லை என்றிருப்பாள். '

-- 'அப்படிச் சொன்னால் அதற்கு பொருள்வேறு. வேறொருத்தியைப்போல நான் இருக்க முடியாதென்பதே உன்மை. நான் நானாத்தான் இருக்கிறேன், இதில் பெருமைபட ஒன்றுமில்லை. ஏதோ என்னிடத்தில் இப்போதாவது அன்பாய் நடந்துகொள்ள உங்களுக்குத் தோன்றியதே, அதற்காக நன்றி ', அவள் வார்த்தைகள் இனிமையாக வெளிப்பட்டன.

-- 'அதென்ன, 'இப்போதாவது ' ' ?

சொல்லவந்ததைப் பாதியில் நிறுத்தக்கூடாதென்பதுபோல இவரருகில் வந்தமர்ந்தாள்.

-- 'எனக்காக வெகு நாட்களாகக் காத்திருக்கிறீர்கள், அடிக்கடி இருட்டில் என்னிடத்தில் பேசவும் செய்கிறீர்கள். ஏன் உங்கள் மருத்துவகூடத்திற் தடுப்புப் பலகைக்குப் பின்புறத்தில் நின்று, கலங்கிய மனநிலையில் நீங்கள் பிதற்ற நான் கேட்டுக்கொண்டிருப்பேன், சட்டென்று நெருப்பினைத் தொட்டவர்போல பதற்றப்படுவீர்கள். அதென்னவோ, உங்கள் முன்னால் நான் தோன்றவேண்டும் என எண்ணும்போதுதானா, மிருகக் குணம் வரவேண்டும், எனவே விலகிக் கொள்கிறேன். அப்படி விலகி நிற்பதால், என்னைக் காப்பாற்றிக்கொள்கிறேன், உங்களையும் தண்டிக்கிறேன். ஆனால் சில தினங்களாக, நீங்கள் எதையோ பறிகொடுத்தவர்போல இருக்கிறீர்கள். '

-- 'ஆக என்மீது பரிதாபப்பட்டு வந்திருக்கிறாய் என்று சொல்லு. '

-- 'இல்லை, அப்படி இல்லை. அதற்கான காரணம் ரொம்பச் சுலபம். உங்கள் மீதுள்ள ஆர்வத்தால் வந்திருக்கிறேன் என வேண்டுமானால் சொல்லலாம், பரிதாபத்தினால் அல்ல. எனக்கு நீங்கள் வேண்டும், அதுதான் உண்மை. '

அவளது மூச்சுக்காற்றினால் மருத்துவரின் காது விரைத்து நின்றது. என்ன மாயமோ ? இவரிடம் இதுவரைக் அறியாத அசுரபலம்: ச்க்ஷணத்தில் கனமான இப்பெரிய ஷேன் மரத்தை தனது கரங்களால் கட்டி அணைக்க முடியும், வயல்வெளிகைளைச் சுருட்டி கூடையில் வைத்து சுமக்க முடியும், வானத்தை இழுத்துப் பட்டுப் போர்வையாக வரச்செய்யமுடியும். 'அடி பரதேவதை! அப்படி உன்கிட்ட என்ன வாசம்! எனது விருப்பத்திற்குரிய எலுமிச்சை மணம் கொண்ட சோப்பினைப் போல! ', அழகியின் அதரங்களுக்கிடையில் தனது நாசி பட மெல்ல முகத்தைக் கொண்டுபோனார்.

-- 'ஆனால் நெருக்கத்தில் உனக்குள்ள வாடை, எனக்குப் பிடித்த திம், காரட் பிஞ்சு, கிரெஸ்ஸோன் கீரை, கூடுதலாக மணக்கமணக்க லிவேஷ்** கலந்த மரக்கறி சூப்பின் வாடை. அம்மணி! இந்த வாடைக்காகவே, உன்னை லிவேஷ் என்று அழைக்கவும் விருப்பம். '

- 'அப்படியா ? எனது பெயரெல்லாங்கூட தெரிந்து வைத்திருக்கிறீர்களா ? உங்களை நான் எப்படி அறிந்திருக்கிறேன் தெரியுமா ? ரொம்ப சிக்கலான ஆள், மகா முரடன், கூச்ச சுபாவம் உள்ளவர், இப்படி. ஆனால் எனக்கென்னவோ நீங்களொரு ஒரு சரியான புலம்பல் ஆசாமியாகப் படுகிறது. '

அவர்மீது மெல்ல சரிந்தவள், தலையைத் மருத்துவரின் வலது தொடையில் கிடத்திக்கொண்டாள். விரிந்துக் கிடந்த கோதுமை வயல்களில் வெக்கையின் சீழ்க்கை. தியாபோலோவின்*** ஒலியைக்கூட மழுங்கச் செய்யும் சில்வண்டின் இரைச்சல். வந்திருந்த பெண்மணியின் குரல், விட்டுப்போன ராகத்தை முனுமுனுப்பதுபோல தொடர்கிறது.

-- 'கோடை எனக்கு விருப்பமான காலம். அது மிருககொம்பினால் ஆன நீண்ட சீப்போன்றை நினைவுபடுத்துகிறது இல்லையா ? பூமிக்குங்கூட எகிப்திய புனித மரியைப்(2)போலவே அதிகப்படியான நீண்ட தலைமயிர், அதிலொரு பொன்னிற இழை இன்றைக்கும் வானத்தில் மினுக்கிக்கொண்டு, அங்கே பார்த்தீர்களா! '

- 'உண்மை '

-- 'தலைவாருதலை நிறுத்திக்கொள்ளாதபெண். இதைத்தானே முன்பும் செய்தாள், ஒருவேளை சம்போகிக்கும் வேளை நெருங்கிவிட்டதா ? '

-- 'அப்படித்தான் இருக்கவேண்டும் ', இளஞ்செருமலோடு தொக்தர்.

-- 'கைக்கெட்டும் தூரத்தில் எப்போதும் ஒரு பழமிருப்பதைக்கூட நீங்கள் கவனித்திருப்பீர்கள் ? சமைத்தச் சூட்டோடு பரிமார இருக்கிற தக்காளிகளில் ஒன்றினைப்போல இருக்கும் அப்பழம் யாருக்கென்று நினைக்கிறீர்கள் ? நமக்காக. நம்மை மறுபடியும் மகிழ்ச்சிக் களைப்பில் நிறுத்துவதற்காக. '

-- 'ஆம், மறுக்கவில்லை. ஆனால் அதன்பாட்டுக்கு சர்வ சாதாரணமாய் நமது பிரக்ஞைக்கு இடங்கொடாமல் நடத்துகிறது. அம்மணீ! என் வசம் நானில்லை. பொழுதெல்லாம் சுற்றி சுற்றி வருவது உன் நினைப்பு மாத்திரந்தான். இன்பத்திலும் துன்பத்திலும் உற்றத் துணையாக இருப்பேனென சத்தியம் செய்யட்டுமா ? '

கூறியவரிடத்தில், மறுபடியும் புன்னகை. அவளது தலையை மெல்ல விலக்கினார். எழுந்து நின்றவர், அம்மாயப் பெண்மணியிடம் தனது கரத்தைக் கொண்டுபோக, அதனைப் பற்றியவண்ணம் எழுந்து நின்றாள்.

'தவிர ', ஃபகெர் தொடர்ந்தார், 'ஆண் பெண் உறவினை, ஒருவரை ஒருவர் நலன் விசாரிக்கவும் தேவைப்படுகிறபோது கட்டிலைப் பகிர்ந்துகொள்வதுமான காதல் கண்ணாமூச்சிகள் கொண்ட பாசாங்குக் காதலாகப் பார்ப்பவனல்ல நான். என் வரையில் காதல் என்பது ஆயிரக்கணக்கான பக்கங்களுடன் எழுதபப்படுகிற காவியம், தந்திக்காக எழுதுகின்ற தகவல் சுருக்கமல்ல, அதன் இறுதிவார்த்தை கடவுளுக்கு மாத்திரமே சொந்தம். '

-- 'கடவுளா ? '

-- 'ஏன் ? உனக்கு நம்பிக்கை இல்லையா ? '

-- 'ஒரு சிலர், என்னையே அப்படித்தான் அழைக்கிறார்கள், வெடித்துக்கொண்டு சிரித்தாள். அதைப் பற்றி பெரிதாக நான் அபிப்ராயம் சொல்வதற்கில்லை. எனக்கு ஆப்பிள் வரையப்பட்டச் சித்திரமும் கடவுள்தான், அதிலுள்ள ஆப்பிளும் கடவுள்தான். '

-- 'சரி, பக்கத்து ஆசனத்தில் வந்து அமருகிறாயா ? '

-- ஆர்வத்தோடு 'சம்மதம் ' தெரிவித்தவள், காரின் பின் இருக்கையில் என்னை ஒளித்துக்கொண்டு அழைத்துச் செல்லப்படுவதை நான் விரும்பமாட்டேன். தவிர, இனி உங்களிடமிருந்து பிரிந்திருக்கவும் எனக்கு உத்தேசமுமில்லை, மிஸியே ஃபகெர்!-என்றாள்

-- 'உண்மையில் ஃபகெர் எனது இரண்டாவதுப்பெயர், லூயி என்பதே எனது ஞானஸ்நானப் பெயர். '

-- அதற்கென்ன ? அப்படியே அழைக்கிறேன். அன்பிற்குரிய லூயி, சமீபக் காலங்களாக உங்களுக்குப் பணிகள் அதிகமோ ? '

-- 'ம்.. முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு. நாளைக்கும் பார்க்க இன்றைக்குக் குறைவென்று வேண்டுமானால் சொல்லிக்கொள்ளலாம். நாளுக்கு நாள் கூடிக்கொண்டே போகிறது. ஒரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு, ஓய்வின்றி, கூட்டமாய்ப் பறந்து, மொய்த்து, மீண்டும் பூமிக்குத் திரும்பும் தேனீக்களைபோல. பத்து மடிந்ததென்றால், நூறாக உயிர்க்கும் சாமர்த்தியம். '

-- 'என்ன பிதற்ற ஆரம்பித்துவிட்டார்களா ? '

-- 'என்னை மன்னித்துவிடு, லிவேஷ். '

மருத்துவரின் தோளில் தனது கரத்தினைப்போட்டாள், நுனிவிரல்களால் அவர் கழுத்தினை மெல்ல வருடினாள்.

-- 'இன்றைக்கு யாரைப் பார்க்கப் போகணும் ? '-அவள்

--ஓர் ஏழைப் மூதாட்டியைப் பார்க்கணும்னு புறப்பட்டுவந்தேன். அவளுக்கென்ன பிரச்சினைகள்ணு என்னால் தீர்மானிக்க முடியலை. நாளுக்கு நாள் மெலிந்துக்கொண்டுபோகிறாள். இனி அவள்படவேண்டியது ஒன்றுமில்லை. வலிகளினால் அவள் மிகவும் துன்பப்படுகிறாள்.

-- 'எதனால் ? எவ்விடத்தில ? '

-- 'எங்கேயென்று சொல்வது. அவளுக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடத்தில். காரணம் தெரியலை. எனினும் வேதனைகளையெல்லாம் மறைத்துக்கொண்டு சிரித்தபடிதான் என்னை வரவேற்கிறாள். '

இருவருமாக மூதாட்டி வீட்டுக்குவந்தார்கள். சுற்றிலும் முள் வேலி, தாழ்ந்த கூரை. உள்ளே இருட்டுக்குக் பழகிக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம்.

நுழைந்த வேகத்திலேயே நோயாளியின் கைப் பிடித்துப் பார்த்தார். 'இன்றைக்கு என்னிடம் சொல்வதற்கு ஏதேனும் புதினங்கள் இருக்கிறதா ? என்று ஆரம்பித்தவர், இவள் பேரு லிவேஷ், எனது உதவிக்கென்று அமர்த்திக்கொண்டிருக்கிறேன். தவிர விரைவில் ( தலையைத் தாழ்த்தி, சன்னமான குரலில்) என்னுடைய மனைவியாகப் போகிறவள் ', என்றார்.

மூடமறந்த கதவின்வழி வந்த வெளிச்சம் இருட்டை இரண்டாகப்பிரித்திருக்க இடையில் மருத்துவர் தனி ஆளாகக் கண்ணில் பட்டார். 'இவர் யாரைப்பற்றி பேசினார் ? இவர் குறிப்பிட்டப் பெண்மணி எங்கே போயிருப்பாள் ? '-நோயாளிக் கிழவிக்குச் சந்தேகம்.

-- 'கிழவியின் கைகளைப் பிடித்து, கட்டிலில் மெல்ல நிமிர்த்தி உட்கார வைத்தவர், 'லிவேஷ்!.. நீ ஏதாவது சொல்லணும்னு நினைக்கிறாயா ? ஏதாவது உனக்கு கேட்கின்றதா ? எனக்கெதுவும் இல்லை. இதயம் முறையாகத் துடிக்கிறது, சுவாசப்பையில் அசைவில்லை. நல்ல நிலையில் உள்ள எந்திரம்னு சொல்லலாம்.அப்புறம்.... '

-ம்மா! கிழவி செருமுகிறாள், தொக்தர் என்னை நீங்க ரொம்ப வதைக்கிறீங்க, விட்டுடுங்க எனக்கு முடியலை! ஆ! '

கிழவியின் குரல் தேய்ந்து, வேதனைக் துகள்களாகச் சிதறியது.

-- 'அவள் இறந்துகொண்டிருக்கிறாள் ', சொன்னவள் லிவேஷ். 'நம்மால் ஆவதொன்றுமில்லை. ஒருவேளை உங்கள் ஆரம்பக் கணிப்பில் தவறு நேர்ந்திருக்கலாம். சொல்தைக்கேள் லூயி! நான் உங்களைக் காதலிக்கிறவள். ஆனால் என் காதலருக்கு உதவ முடியலை என்கிறபோது, இனியும் இங்கு எதற்காக இருக்கணும், கொஞ்ச நாட்களுக்கு உங்களை விட்டுப் பிரிந்திருக்கணும்னு தீர்மானித்திருக்கிறேன். இங்கே துர்நாற்றம் வேற, நிற்கப்பிடிக்கலை. '

-- 'நில்..நில்.. போகாதே!- மருத்துவர், கூச்சலிட்டார்.

இறக்கும் தருவாயிருந்த நோயாளி கிழவிக்கு ஏகத்துக்குக் குழப்பங்கள். திறந்திருந்த கதவின் செவ்வகப் பொன்னொளியில் ஏதனும் நிழல் ஆடுகிறதா எனத் தேடினாள்.

-- 'தொக்தர்! சித்தெ முன்ன நீங்கள் யாரிடம் பேசினீர்கள் ? ' ஈனஸ்வரக் குரலில் நோயாளிக் கிழவி.

-- 'நீயே சொல்லு கிழவி. வெறுப்புக்கு ஆளாகிறமாதிரி நான் அப்படி என்ன தப்பு செஞ்சுட்டேன். எதற்காக என்னைவிட்டு விலகிப்போகணும் ? ' ஃபகெர், கிழவியைப் படுக்கையில் கிடத்திவிட்டுக் கேட்டார். என்னால் முடிந்ததை நான் செய்வேனில்லையா ?

-- 'எங்கே போயிட்ட ? இருக்கிறாயா ? ' ' - அவர்.

-- இருக்கேன்.. இருக்கேன். உங்கள் பக்கத்தில்தான் இருக்கிறேன் . இன்றைக்கு உலகில் தனித்த ஆளென்று எவருமில்லை, என்னத்தவிர. ' -அவள்.

அவ்வமயம், விவசாயி ஒருவன் தனது கோரைத் தொப்பியை தலையிலிருந்து எடுத்தவண்ணம் உள்ளே நுழைகிறான்.

-- 'உனது தாயார் சற்று முன்புதான் மரித்தாள் ', -ஃபகெர் அவனிடத்திற் துக்க செய்தியைத் தெரிவித்தார்.

-- கைகுலுக்கலென்று சம்பிரதாயத்திற்கு விரல் நுனியைத் தொக்தரிடம் நீட்டி, 'எதிர்பார்த்ததுதான் ', என்றான். 'இனி எந்த உலகிலிருந்தாலும், வேதனைகளில்லாமல் இருப்பாள். எண்ணெயில்லாமல் அவள் விளக்கு எததனை காலந்தான் பிரகாசிப்பது. '

கைகளை கழுவிக்கொள்வதற்காக தொக்தர் எழுந்து போனார்.

முதன் முறைக் கண்டதைபோலவே உயர்த்திய கரங்கள், உள்ளே நுழையமுயலும் சூரிய ஒளியை பின்னுக்குத்தள்ளி, அச்சில் வார்தெடுத்ததைப்போல சரீரம், மெல்லிய ஆடையில், மீண்டும் அறைக்குள் வந்தவள்,

-- 'உங்களிடம் கடுமையாக நடந்துகொண்டுவிட்டேன்,- என்றாள்

-- 'நான் உன்னை எதிர்பார்த்துக்கொண்டு இல்லை, நீ போகலாம். '- ஃபகெர்.

தனது தயாரின் முகத்தை, எஞ்சியிருந்த கட்டில் விரிப்பைக்கொண்டு மூடிய விவசாயி, தொக்தர் பக்கம் குழம்பினாப்போலே திரும்பியவன்,

-- 'தெரிந்திருந்தால் முன்னதாக வந்திருப்பேன், இத்தனை தினங்களாக எனது தாய்க்கு அருகிலேயே பழியாகக் கிடந்தேன் என்பது உங்களுக்குத் தெரியுமில்லையா ? வரவேண்டியது வந்துதானே தீரும். உங்களுக்கு என்மீது ஏதோ ஒருவிதத்தில் வருத்தம். உங்களுக்கு எவ்வளவு கொடுக்கணும் ? '

-- 'எதுவும் கொடுக்கவேண்டாம். 'லிவேஷ் 'ஐத் தெரியுமா ? ', தொக்தர் விவசாயிடம் கேட்டார்.

-- 'தெரியாது ', அவனது பதில்.

-- 'நாம் புறப்படுவோம். அவள் எக்கேடாவது கெட்டுப்போகட்டும். '

விளங்கிக் கொள்ள இயலாமல், விவசாயி சுற்றிலும் பார்த்தான், இம்முறையும் குழப்பம். வாசல்வரை வந்தவன், தொக்தர் தனது கார்க் கதவினைத் திறந்ததையும், இன்னொருவர் ஏறட்டுமென காத்திருந்து அக்கதவினை சாத்துவதையும் பிறகு மற்றப்பக்க கதவினைக் திறந்துகொண்டு அமர்ந்தவர், இன்னொரு நபரிடம் உரையாடியபடி வாகனத்தைக் கிளப்புகிறார். அவரது சிரம், உரையாடுகின்ற அந்த உருவமற்ற அந்த இரண்டாவது நபரின் திசைக்காய் திரும்பியிருக்கிறது.

விவசாயியின் மனைவி தனது இரு மகன்களுடன் அவ்விடம் வந்தாள்.

-- 'பிறகு ' ?, என்றவள் தனது கணவன் கதவருகே நிற்பதைக் கண்டு. 'என்ன தொக்தர் புறபட்டாச்சா ? ' எனக் கேட்டாள்.

-- 'இனி அவர் திரும்பி வரணுங்கிற அவசியமில்லை. நான் வீட்டிற்குத் திரும்பும்போதே அம்மா இறந்துட்டாங்க. '

-- 'நாம எதிர்பார்த்ததுதானே. உங்க தாயாரை கடைசியாய் ஒரு முறை முத்தமிடுவோம், உங்களிடத்தில் மிகவும் பிரியமா இருந்தவங்க அவங்க. ஏன் ? உள்ளே வரணும்னு தோணலையா ? அங்கே என்னத்தை அப்படிப் பார்க்கறீங்க ? '

-- 'தொக்தரைப் பார்க்க, எனக்கு ஏதோ விபரீதமா தோணுது. அம்மா சாகறதுக்கு இவர்தான் காரணமோ ? சித்த முன்னே தனக்குதானே பேசிக்கொண்டார். '

-- 'ம்..இதெல்லாம் ஒரு வாழ்க்கையா ? எப்போதும் பிறர் சாகும்போது பக்கத்திருந்து பார்க்க வேண்டிய வாழ்க்கை. ' - விவசாயியின் மனைவி.

ஷப்பெல் குடியிருப்புகளைக் கடந்து, வழக்கம்போல ஷேன் மரத்துச் சாலையைப் பிடித்துத் தொக்தர் தனது கிராமத்தை அடைந்தபோது தலைக்கு மேலே மிக உயரத்தில் பருந்து ஒன்று வட்டமிட்டுக்கொண்டிருந்தது. நாளையும் காலநிலை நன்றாக இருக்குமென்று தோன்றியது. அவர் வாகனத்தை நிறுத்தி இறங்கிக்கொண்டார். இரவு சாப்பாட்டிற்காக தொக்தரை எதிர்பார்த்துக் காத்திருந்த வேலைக்காரி ஆன்மேல், சமயலறை சாளரம் வழியாகப் பார்த்துவிட்டாள். இவர் தோட்டக் கதவின் வழியாக சிரித்துக்கொண்டே உள்ளே நுழைந்தவர், உபகரணப் பை ஏதுமின்றி இருந்த கையை சுழற்றி தனது மகிழ்ச்சியை வெளிபடுத்தினார். அவளும் தன் வசமிருந்த தோலினாலான கருப்பு துவாலையைப் பதிலுக்கு அசைத்தாள். வாசற்படிகளை சந்தோஷமாக தாவிஏறியவர் அடுத்தகணம் இவள் பார்வையிலிருந்து மறைந்துபோனார்.

சமயலறைக்குள் வந்தவரை, 'என்றைக்குமில்லாத திருநாளாக இன்றைக்கு வெகு சந்தோஷத்தில் இருப்பதாகத் தெரிகிறது, என்ன சேதி ? ' என விசாரிக்க நினைத்தவளுக்கு ஏமாற்றம். கொஞ்ச நேரத்திற்கு முன்புவரை மிதமிஞ்சிய சந்தோஷத்தில் திளைத்திருந்த தொக்தரிடம் இப்போது, வழக்கம்போல பணிமுடித்து வருகின்றபோது காணமுடிகிற கவலையும் சோர்வும்.

-- 'என்ன பசிக்கிறதா ? மின்னடுப்பினைத் திறந்தவண்ணம் கேட்டாள். தூர்த்(3) வெந்துகொண்டிருக்கிறது, கொஞ்சம் பொறுக்கணும். ஆனாலும் சித்தெமுன்னே கூடத்துல ரொம்ப சந்தோஷமா நடந்து வந்தீங்க ? '

தலையை உயர்த்தியவள், எதையோ நினைத்து அவர் வருந்துவதைப் பார்த்தாள்.

-- 'எல்லாரிடத்தும் நாம பிரியமா இருக்கணும். நம்மைவிட்டு விலகப்போகிறேன் என்றுசொல்லுகிறவர்களிடம்கூட ', என்று கூறிய தொக்தர், 'அந்தத் ராங்கிக்காரியை உனக்கும் அறிமுகப்படுத்தி, வியப்பில் ஆழ்த்தணும்னு நினைச்சேன், அவளுக்கு அதில் ஆர்வமில்லைங்கிறபோது நான் மாத்திரம் அவசரப்பட்டு என்ன செய்யட்டும். தவிர அப்படி அவசரப்படுவதும் நல்லதற்கல்ல. '

-- 'சரி சரி இப்போ யாரைப்பற்றி பேசுகிறீர்கள் ? '

-- 'அனேகமாக .. (அவரது முகத்தில் பழையபடி சந்தோஷ களை) எனதருமை ஆன்மெல், கூடிய சீக்கிரம் என்னோடு சேர்த்து நீ இன்னொருவருக்கும் உணவு பரிமாற வேண்டியிருக்கும். '

ஆச்சரியத்தில் வேலைகாரியின் புருவம் உயர்ந்தது.

-- 'அதற்குள் வாயடைத்துப்போகாதே. இன்னொரு தகவலிருக்கிறது, நான் மணம்முடிக்க இருக்கிறேன்.

-- 'அருபது வயதிலா ? '

-- 'ஏன் கூடாதா ?அதென்ன எல்லோருக்கும் வாய்க்கக்கூடியதா ? '

-- 'அவளுக்கு என்ன வயது ? இதற்கு முன் இங்கே கண்டிருக்கிறேனா ? '

-- 'அவளுக்கு வயதெல்லாம் சொல்வது கடினம். வேண்டுமானால் முப்பதிலிருந்து நாற்பதுக்குள் சொல்லலாம். அறிவில் முதிர்ச்சியும், ஆரோக்கியமான சரீரமும் கூடுதல் தகுதிகள். நீ பார்த்திருக்க வாய்ப்பில்லை, நமது பிரதேசத்தைச் சேர்ந்தவள் அல்ல. '

-- 'என்னிடத்தில் இன்றைக்குத்தானா சொல்லவேண்டுமென்று தோன்றியது ? எவ்வளவு நாட்களாக அவளை உமக்குத் தெரியும். எங்கே சந்தித்தீர் ? '

-- 'எல்லாவற்றையும் இன்றைக்கே தெரிந்து கொள்ளவேண்டுமா ? பைத்தியக்காரி! தூர்த்(3) தீய்ந்துக்கொண்டிருக்கிறதென நினைக்கிறேன். முதலில் அதைக்கவனி. உடையை மாற்றிக்கொண்டு வருகிறேன். '

தளத்திற்குத் தாவி ஏறினார். மிகவும் துடிப்பாக இருப்பது தெரிந்தது, இதற்குமுன் ஒருபோதும் இப்படி அவரைக் அவள் கண்டதாக நினைவில்லை.

கண்ணாடிகளேதுமின்றி அளவிற் குறுகியிருந்த அறை. சுவர்களில் ஒட்டியிருந்த வால்-பேப்பர்களில் சுருள்சுருளாக வளைந்துசெல்லும் கற்பூரவல்லி ஓவியங்கள். வீட்டிற்கெனவிருந்த பழுப்பு வண்ண வெல்வெட் ஜாக்கெட்டையும், நீர்ப்பச்சையிலிருந்த ஆட்டுத் தோலிலானாலான சப்பாத்தையும் அணிந்துகொண்டார். இரவுமேசையாக அவரது உபயோகத்திலிருந்த நாற்காலியில் சில நொடிகள் அமர்ந்தார். தேர்வுக்குப் படிக்கும் மாணவனின் அறைக்கொப்பச் சிதறிகிடக்கும் பொத்தகங்கள். எதிர்பாராத சந்திப்பு உண்டாக்கிய பரவசம் உலர்ந்து உடலெங்கும் கந்தைக்கூளங்களின் அணிவகுப்பு. சந்தோஷம் கசந்து, கையறுநிலை. தனிமையைத் தேடி அலைவதிலும், வயிற்று இரைச்சலுடன் அபானவாயுவை அனுமதிப்பதிலும், மூக்கிற்குள் விரலிட்டு அழுக்கெடுப்பதிலும், நேசத்துக்குறியவர்கள் முன்னால் தவிர்ப்பவனவற்றை செய்வதிலும் மனதிற்குச் சுகம் கிடைக்க- கூச்சமின்றி செய்தார், அதாவது நாளைமுதல் அவரது இதயத்திற்கு அழகும், பரிசுத்தமும் தேவையென்று விலகிச் செல்ல சம்மதித்த அபத்த சங்கதிகள், இன்றைய தினம்ம தங்களைக் கொண்டாடவேண்டும் என வற்புறுத்தியதைப்போல.

-- 'மிஸியே! மேசையில் உணவு வைத்திருக்கிறேன்! '

இரண்டாவது முறையாக ஆன்ழெல் தன்னை கூப்பிடட்டுமெனக் காத்திருந்து இறங்கினார். இறங்கும்போது, படிகளுக்கிடையே இருந்த அகன்ற படியின்(4) பாதி இடத்தைப் பிடித்திருந்த அலமாரியின் கண்ணாடியில் தன்னைக் கண்டார், திரும்பினார், கைப்பிடியைப் பிடித்துக்கொண்டு நின்றவருக்குத் திடாரெனச் சந்தேகம்: இந்த ஆள் யார் ? முன் தள்ளிய வயிறு, நரைத்த மீசை, துக்கம் கொண்டாடும் கண்கள். இக்கோமாளியின் பின்னே பொன்னிறக் கூந்தலும், அழகிய மார்பகங்களுமாய் நடந்து வரும் பெண்மணியும் இவருக்குத்

பரிச்சயமானவள்தான். ஃபகெர் பாதி மாடிப்படிகள் இறங்கியிருந்த நிலையில் திரும்பவும் மாடிக்குத் வந்தார்.

-- 'லிவேஷ், நீயா ? நீ மீண்டும் வந்திருக்கிறாயா ?

-- 'எனக்கு உங்கள் ஆன்ழெல் பற்றி தெரிஞ்சாகணும் ', சன்னமாய் அவளது குரல்.

-- 'ஆன்ழேல்! ஆன்ழேல்! ஃபகெர் கூவி அழைத்தார், சீக்கிரம் வா! என் வாழ்க்கையின் சரிபாதியை உனக்கு காட்டியாகணும் '

-- 'மிஸியே! கூப்பிட்டார்களா ? '- என்ற வண்ணம் வேலைக்கார பெண்மணி மாடிப்படிகளின் கீழே வந்து நின்றாள்.

-- 'லிவேஷ்! ' மேடை நடிகனைப்போல கைகளை உயர்த்திக்கொண்டு உரத்தக் குரலில் தனக்குப் பின்புறம் திரும்பி அழைத்தார்.

சிரித்தவண்ணம் மாடிக்குத் திரும்பியவர் கண்டதென்னவோ முரட்டு வெண்துணியிட்ட சாளரம், இருட்டை முந்தும் அதன்கருநீலம், சாளரத்தின் கீழே நீண்டு, மேலேறி செல்கிற, மெருகிட்ட மரப்படிகள்.

-- 'ஜாலக்காரி! அதற்குள் எங்கே ஒளிந்து கொண்டாய் ? '

-- 'நான் இங்கே இருக்கேன் '. என்ற வேலைக்காரியின் பதிலில் கலவரமிருந்தது. 'அங்கே யாரை கூப்பிடறீங்க ?, மாடியில் யார் இருக்கிறாங்க ? '

திரும்பவும் மாடி அறைக்குத் திரும்பிய எஜமானனைத் தேடி, வேலைக்காரி சிரமத்துடன் படியேறி வந்தாள்.

-- 'இதென்ன விளையாட்டு ? என்னை இப்படி சிரமப்படுத்துவது உங்களுக்கே சரியாகப்படுகிறதா ? தவிர நானும் உங்கள் பேச்சை உண்மையென்று நம்பப்போனேன். ஏது ? விட்டால் அந்தப் பெண்மணியாகவே என்னை தீர்மானிச்சுடுவீங்கண்ணு நினைக்கிறேன். '

வேலைக்காரப் பெண்மணியின் உத்தரவுக்கிணங்க சாப்பிடுவதற்கு இறங்கிவந்த தொக்தர் அவளிடம், 'பொய்யில்லை என்ன நம்பு, ஆன்ழேல்! எனது வாழ்க்கையின் மற்றொரு ஆரம்பத்திற்கு வந்திருக்கிறேன். அதனால் புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கப்போகும் கற்றுகுட்டிகளின் பயம், என்னிடத்தில். சந்தேகமின்றி அவளுக்கும் அதுதான் நிலைமை. இதுவரை அறிந்திராத இன்னொரு குடும்பத்திற்கு வாழ்க்கைப்படுகிற பெண்மணிக்குறிய கவலைகளையும், உணர்வுகளையும் நாம் புரிந்துகொள்ளவேண்டும். தண்ணிரீலிருந்து குதித்து கிளைகளில் வாழவிருக்கும் மீன்களுக்குறிய கடுமையான சோதனை. கற்றுகுட்டி என்கிற சொல் என்வரையில் அப்லெத் மீனை(5) எடுத்து ஆப்பிள் மரத்தின் கிளைகளில் விடுவதுபோல. '

ஆன்ழேல், நாற்காலியை அவளது எஜமானரின் குண்டிக்கு ஏதுவாகத் தள்ளியவள், அவரிடம் ஒரு சிறிய துவாலையை நீட்டினாள். உறக்கத்தில் சாப்பிடுவதைப்போல, நுணிப்பற்களால் சாப்பிட்டு முடித்து, ராஸ்பெரி ரத்தாஃபியா(6) அவருக்குப் பிரியமான மது என்பதால், கண்ணாடித் தம்ளரில் பலமுறை நிரப்பிக் குடித்தார். அலைச்சலும், வேலையும், வெக்கையும்

அவரது புத்தியை மழுங்கவைத்திருக்கிறது என்றெண்ணிய ஆன்ழேல் அவர் குடித்து முடிக்கட்டுமெனக் காத்திருந்தாள்.

-- 'என்ன, இன்றைக்கும் சுவாரசியமான சங்கதிகள் உண்டா ? '

-- 'இல்லாமலா ? ' வழக்கத்தைபோல அன்றையதின அனுபவங்களைச் சொல்ல ஆரம்பித்தார். ஹெர்த்துவார் கிழவி இறந்துட்டுது. மூலென் குக்கிராமத்துல ஒரு நகச்சுற்று. அப்புறம் உன்னால நம்ப முடியுதாப் பாரு, தியேல் கிராமத்துல பால்காரன் ஒருவனுக்கு குளிர்காலத்துல வருகிற கைகால் வீக்கம்!

--இராத்திரியிலகூட, 35டிகிரிண்ணு சொல்ற இந்த நாட்களிலா ?

-- 'ஆமாம். பிறகு எப்போதும்போல கைகால் வெடிப்பு நோயாளிகள். எல்லாம் தெரியும்ணு நினைக்கிறப்போ, ஒவ்வொரு நாளும் புதிதாக எதையாகிலும் கற்கவேண்டியிருக்கிறது. ஆச்சரியப்படுவதற்கென்றே வாழ்ந்துகொண்டிருக்கிறோம். நரகத்திற்கான அட்டவணைக் கணக்கை பட்டியலிட்டுக் கொண்டிருக்கிறோம். ஆன்ழேல்! இன்னும் கொஞ்சம் ராஸ்ப்பெரி கிடைக்குமா ? '

-- 'சொன்ன தகவல்களுக்கு நன்றி! ' என்றவள், மது போத்தலை மூடியபடி 'இன்றைக்கு இதுபோதும், ஏற்கனவே வேண்டிய அளவிற்குக் குடித்தாயிற்று, என்றாள்.

தொக்தர், தனது கையிலிருந்த துவாலையைக் கவனமாக மடித்து, அருகிலிருந்த வளையத்தில் நாசூக்காய்த் தொங்கவிட்டார். இரவு வணக்கம் தெரிவித்துவிட்டு படுக்கைக்குத் திரும்ப வாசல் மணி ஒலித்தது. ஆன்ழேல் சென்று கதவைத்திறந்தாள். தனது மூத்த சகோதரிக்கு மருத்துவரைத் தேடி கிராமத்தின் மற்றொரு பகுதியிலிருந்து சிறுவன் ஒருவன் வந்திருந்தான்.

-- 'அவளுக்கு நாற்பது வயது '

-- 'என்னபார்க்கிற ? தொக்தர் வருவார். நீ புறப்படு! வீடு திரும்பறதுக்குள்ள உன்னைப் பிடிச்சிடுவார் ', ஆன்ழேல்.

'இரவின் குளிர்ச்சியில் இளந்தளிர்களின் இனிமை, வீதிச் சுவர்களின் கற்களிலோ வெப்பம் இன்னமும் குறையாமலிருக்கிறது.

'இரு..இரு..எத்தனைமுறைதான் அவளுக்கு நாற்பது வயதென்று என்னிடத்திற் சொல்லப்போகிறாய் ', ஃபகெர் சிடுசிடுத்துக் கொண்டிருந்தார்.

விரிப்பில் படுத்திருந்த தனது எஜமானரை ஆன்ழேல் பார்த்தாள். கால்கள் மிகவும் மெலிந்திருப்பதாகத் தோன்றியது. அந்தக் கணத்தில் ஓட்டப்பந்தயத்தின் முடிவில் காணும் களைத்த மனிதனையொத்து அவரிருந்தார். மாதத்தில் இரண்டுநாட்கள் அமைதியாகத் உறங்கி இருப்பாரா என்றால் இல்லை. இப்படித்தான் கடந்த வாரத்தில் குறவர்கள் கூட்டமொன்று இவரைத் தேடி வந்தது. எதற்கென்று நினைக்கிறீர்கள் ? அய்யோ கடவுளே! அவர்களுடைய குரங்கொன்று, வயற்காட்டு ஓரத்தில் அவர்களது வாகனச் சக்கரத்திற் சிக்கி உயிருக்குப் போராடியிருக்கிறது, அதற்காக. ஆன்ழேல் எஜமானரான தொக்தருக்குச் சுருக்கென்று கோபம். மிருக வைத்தியர் ஒருவர் இருக்கும்பொழுது இவரை தொந்தரவுசெய்வதை எப்படிப்

பொறுக்கமுடியும் ? குறக்கூட்டத்திற்குத் விளங்காதா என்ன ? இருந்தபோதிலும் அவர்களுக்கு மனிதர்களுக்கான வைத்தியர்தான் வேண்டுமென நிற்கிறார்கள். பெட்டைக் குரங்கை தனது கையில் பிடித்திருந்த கிழவியோ மிஸியே ஃபகெரைக் ஏகவசனத்தில் பேசப்போக, பாவம் அவர் மிகவும் நொந்து போய்விட்டார்.

-- 'உங்கள் காற் சராய்! '

ஆன்மேல் அதனை அவரிடம் நீட்ட வாங்கி அணிந்து கொண்டார். அவரது ஷூவின் கயிறுகளை இறுக்கியவள் படிகளின் திசைக்காய் அவரைப் பிடித்து தள்ளாத குறை.

-- 'உபகரணங்கள் ஏதும் வேண்டாமா ? ' மருத்துவச் சாதனங்கள் அடங்கிய கைப்பை இன்றி அவர் புறப்படுவதைப்பார்க்க, இக்கேள்வி.

அவரது பார்வையில் கலக்கமிருந்தது.

-- 'அவளுக்குப் பேர் என்ன ? ', வினவினார்.

-- 'அவளா ? ஹாலுக்கு($)ப் பின்புறம் வசிக்கிற கிஸன் குடும்பத்தைச் சேர்ந்தவள் '.

-- 'அந்தப் பெண்மணியா ? நான் போகலை. இப்படித்தான் என்னை பலமுறை ஒன்றுமில்லாததற்கு வரச் சொல்லி நிர்ப்பந்திக்கிறாள். அவசரமென்றுபோனால், அங்கே தேவையில்லாமல் வெட்டிப்பேச்சு. '

-- 'நீங்க இதைப்பத்தி என்னிடத்தில் இதுவரைக்கும் ஒருவார்த்தை சொல்லலை! '

-- 'அவளைப் பற்றி முழுசா சொல்லணும்னா- ஒரு பைத்தியம், போதுமா ? என்னைப்பற்றிய கனவுகளில் மூழ்கினாற்போதும், உடனே ஆள் அனுப்பிவிடுகிறாள். '

--அவள் பைத்தியமில்லை, அவளை அப்படி பயமுறுத்துவது நீங்கதான். என்னைக்கூட அடிக்கடி பயமுறுத்த ஆரம்பிச்சுட்டாங்க. உங்களைக் கவனிச்சாகணும், முடியலை.

சட்டென்று திரும்பிய தொக்தர்,

-- 'என்ன சொல்ற ? நான் உன்னை பயமுறுத்தறேனா ? இப்பத்தான் முதன்முதலாக நீ சொல்ல நான் கேட்கிறேன். அந்த அச்சுறுத்தல் எப்படிப்பட்டதென்று சொல்லேன். '- என்றார்.

-- 'சில சமயங்களில், நீங்கள் தனிநபரா இருக்கிற மாதிரி தெரியலை. கண்ணுக்குத் தெரியாத இன்னொரு நபரோடு நீங்கள் உரையாடக் கேட்டிருக்கிறேன். அப்படி கதைக்கும்போது, உங்கள் முகத்தில் சந்தோஷமும் தெரிகிறது. '

-- 'பொறாமையால் பேசுகிறாய். உன்னைத் தெரியாதா எனக்கு, நீ எப்போதும் இப்படித்தான். ஆன்மேல்! ஏய் ஆன்மேல்! வேலைக்காரப் பெண்மணியின் கரத்தினை பிடித்து உலுக்கியவர், தொடர்ந்தார்.

--என் மனத்தில் இருப்பதைச் சொல்றேன். உங்களால் உபத்திரமென்றில்லை. நம் இருவரிடமும் நம்பிக்கைக்கான உத்தரவாதமும், பரஸ்பர மரியாதையும் வேண்டும். எங்கிட்ட உண்டு அதனை நிரூபிக்கவும் என்னால் முடியும். உங்களிடமும் அதைத்தான் எதிர்பார்க்கிறேன். நீங்கள் தனிமையில் பிதற்றும்போதும், வெற்றிடத்துடன் பேசிக்கொண்டிருக்கும்போதும், இல்லாத நபருக்கு போர்த்திவிடும்போதும், உணவின்போது வாழ்த்துச் சொல்லும்போதும் எத்தனை முறை கண்ண்டிருப்பேன். சரி புறப்படுங்கள். கதவினைப்பூட்டவேண்டாம்.. இன்றைக்கு நான் சாவி கொண்டுவர மறந்துட்டேன் '.

அவர் ஹாலை($) நோக்கி விரைந்தார். மண்டபத்துக் கூரைக்குமேலே சிவப்பு நட்சத்திரமொன்று மின்னிக்கொண்டிருந்தது.

கிசன் குடும்பத்தைச் சேர்ந்த அப்பெண்ணுக்கு நிச்சயம் நாற்பது வயதிருக்கலாம். எழுந்திருக்கச் செய்து, ஓ-டி-கொலோன்* துளிகளைக்கொண்டு அவள் உடலில் அழுந்தத் தேய்த்தார். குளிர்ந்த இரவுக்காக சன்னலைத் திறந்தார்.

ஒரு கண்ணாடி தம்ளரின் நீரீல் முப்பது சொட்டு பிரேத்தான்(Pyrethane) விட்டு,

'இதை இப்போது குடிக்கவேண்டும். நாளைக்காலையும் தவறாம இதே அளவுக்கு எடுத்துக்கணும். பிறகு நாளைக்கு மாலை மறுபடியும் வந்து பார்க்கிறேன். '-என்றார்.

-- 'தொக்தர், ஆலையிலிருந்து சைக்கிளில் திரும்பும்போது, நம்ம பெரிய ஷேன் மரத்துக்கருகே, நீங்கள் அயர்ந்து நித்திரைகொண்டிருந்ததைப் பார்த்தேன். நான் தலைச் சுற்றலால் அவஸ்தைப்பட்டதால், உங்களைக் கூப்பிட்டுப்பார்த்தேன், நீங்கள் எழுந்திருக்கவில்லை, எனவே புறப்பட்டுவிட்டேன். நான் சைக்கிள் இருக்கையில் உட்கார்ந்தேனோ இல்லையோ நீங்கள் எழுந்து உட்கார்ந்தீர்கள். உங்கள் இருகரங்களையும் நீட்டினீர்கள். இருபது மீட்டர்கள் தள்ளி, மரங்களின் பின்னே பதுங்கிக்கொண்டு எல்லாவற்றையும் பார்த்தேன்.

--அதெற்கென்ன இப்போது ?

--உங்களிடத்தில் சந்தோஷமில்லை. சந்தோஷத்தின் உன்னதங்களின்றி உம்மால் இம்மண்ணில் ஜீவிப்பது கடினம். அன்றைக்கு நீங்கள் பேசினீர்கள், பாடவும் செய்தீர்கள், ஆட்டம்போட்டவண்ணம் உங்கள் வாகனத்தருகே வந்தீர்கள், கதவுகளைத் திறந்தீர்கள். நான் அங்குதான் மறைந்திருக்கிறேன் என்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும், கேலிபேசினீர்கள், எனக்கோ வெளிக்காட்டிக்கொள்ள தைரியமில்லை. பிறகு மோட்டார் வாகனச் சக்கரங்களின் டயர்கள் மண்ணை நறநறவென்று அரைக்க, சுற்றிலும் புழுதி மண்டலம் எழுப்பிக்கொண்டு வேகமாய்ப் புறப்பட்டுப் போனீர்கள். '

-- 'இரு இரு, நீ பாட்டுக்கு எதையாவது அளந்துகொண்டுபோகாதே! தொக்தர் கடுகடுத்தார். உன் தந்திரம் புரிகிறது. கண்டதைச் சொல்லி, என் வாயிலிருந்து எதையாவதுப் பிடுங்கவேண்டுமென்று நினைக்கிறாய். ஏற்கனவே பலமுறை சொன்னதுத்தான். உனக்கு நான் பதிற் சொல்லப்போவதில்லை. அந்தப் பெண்மணியிடம் உனக்குப் பொறாமை. '

-- 'எந்தப் பெண்மணியிடம் '

-- 'நான் யாருக்காகக் காத்திருக்கிறேனோ அவள்-லிவேஷ். தண்டோராப்போட்டு ஊர்முழுக்க தெரிவிக்கப்போகிறேன். அவளை பலருக்கும் அறிமுகப்படுத்துவேன். பெரிய ஷேன் மரத்தடியில் நான் காத்திருப்பதெல்லாம் தப்பான ஆள் ஒருவனை சந்திக்கவென்கிற கற்பனையில் உளவுபார்க்கிற வேலைகள் வேண்டாம். தயவு செய்து, உருப்படியான வேறுகாரியங்கள் இருந்தால் அதை முதலிற் செய். '

நோயாளிபெண்மணியின் அறைக்கதவைக் திறந்துகொண்டு வெளியேவர, கிசன் குடும்பம் அவருக்காகக் காத்திருந்தது.

--அவளுக்கு பித்தியாட்டிக்(Pithiatque) ரகக் காய்ச்சல், கதவினைப் பின்புறம் சாத்தியபடி கூறினார். அவளுக்கு அமைதி தேவை. ஒரு கண்ணாடி குடுவையில் கொஞ்சம் நீர்கொண்டுபோய் வையுங்கள்.

வீட்டிற்குத் திரும்புகையில், தொக்தர் ஹால் வழியாகவே வந்தார். வேகமாய் நடக்க, எவரோ தன்னைப் பின் தொடர்வதுபோல எதிரொலி, திரும்பிப் பார்த்தார். நிலவின் ஒளி வெள்ளத்தில் தூண்களைத் தவிர வேறேதும் இல்லை. தொடர்ந்து நடந்தார். அடுத்தகணம் அவரது ஞானஸ்நானப்பெயர் சொல்லி அழைக்கும் குரல். நின்றார். வெகு தொலைவில் ஒலிக்கும் அக்குரலை, கிங்கிணி ஓசையை அவ்வப்போது எழுப்பிக்கொண்டிருக்கிற இரவு சுமந்து வந்திருந்தது.

-- 'லூயி! '

இவரை மெய்மறக்கச் செய்யும் குரல்-சந்தேகமில்லை, அவள்தான்.

ஹால் இருக்கும் திசைக்கு திரும்பவும் வந்தவர்,

-- 'எங்கே இருக்கிறாய் ? ' என்ற இவரது கேள்விக்காகவே காத்திருந்ததைப்போல.

-- 'லூயி ? ' என்று மறுபடியும் அழைத்துத் தனது இருப்பை அடையாளப்படுத்தும் குரல்.

லிவேஷைத் தேடி, ஒவ்வொரு தூணாகச் சென்றார், மரத்தூலங்களுக்குப் பின்னால் ஒருவேலை ஒளிந்திருப்பாளோ ? ஓடிப்பார்த்தார். குரல் ஒருவேளை வீதிகளுக்கு மேலே இருந்தோ அல்லது சமவெளிகளின் திசையிலிருந்து வந்திருக்கலாமோ ? தனது மோட்டார் வாகனம் நிறுத்தியிருந்த கொட்டகைக்காய் ஓடினார். வாகனத்தைக் கிளப்பிக்கொண்டு பெரிய ஷேன் மரத்தருகே கொண்டுபோய் நிறுத்தி இறங்கிக்கொண்டார். இவர் எதிர்பார்த்ததைபோலவே அவள் அங்கிருந்தாள், பிரகாசமான கோதுமை அரிதாள்களுக்கிடையே தெளிவாய்த் தெரிந்தாள். அவளது கூந்தலைப்பார்க்க, சூரியனை ஏறிட்டுப்பார்க்கிற கண்களுக்கு ஏற்படும் கிறுகிறுப்பு அனுபவம்.

-- 'என்னை ஏற்றுக்கொள், நான் உனக்கானவன் ', என்றவராய் அவள் பாதங்களில் வீழ்ந்தார்.

மறுநாள் அவர் உடலைத் கண்டெடுத்த காவற்துறையினர், 'மாரடைப்பினால் இறந்திருக்கலாம் ' என முடிவுக்கு வந்திருந்தார்கள்.

****

*. Docteur -மருத்துவர்

**Thyme, Cress, Liveche

*** இருக்குச்சிகளில் கட்டப்பட்ட கயிற்றின் ஆதாரத்துடன் சுழற்றிக் காற்றில் எறிந்தும், பின்னர் பிடித்தும் விளையாடப்படுகிற மரத்தால் ஆன உடுக்கை வடிவ விளையாட்டுப்பொருள்,

$. கடைகள் நிறைந்த மண்டபம்

1. Coffre arriere - டிக்கி

2. St. Mary of Egypt ( died in 520AD)- -கிறித்துவ மத அகரமுதலிகளின்படி, பரத்தையாக வாழ்ந்து புனிதமடைந்தவர், Abbe Zosimas என்பவரால் காட்டில் காண நேர்ந்த சந்நியாசினி.

3. Pie

4. Palier - Landing

5. ஐரோப்பிய நாடுகளில் நல்ல நீரில் வாழும் ஒருவகை கெண்டைமீன்

6. பழச்சாறு கலந்த ஒருவித மது.

7. Eau-de-Cologne

8. Pithiatic

# ப லா த் கா ர ம் ( வில்லியம் கார்லோஸ் வில்லியம்ஸ் )

**தமிழில் - எஸ். ஷங்கரநாராயணன்**

அவர்களை நான் அறியேன். ஓல்சன் அவர்களின் குடும்பப் பெயர். அது தெரியும். ' 'உடனே புறப்பட்டு வாங்க டாக்டர்.... என் பொண்ணுக்கு ரொம்ப முடியவில்லை. ' '

அந்த அம்மா வாசலில் காத்திருந்தாள். பளிச்சென்ற சுத்தத்துடன் குண்டு அம்மா. அழைத்துவிட்டதற்கு வருந்துகிறாப் போல முகபாவம். ' 'டாக்டர் ? ' ' உள்ளே கூட்டிப்போனாள். பேசியபடி என் பின்னால் வந்தாள். ' 'பின்கட்டுல... ' ' என்றாள் அவள். ' 'சமயத்ல இங்க ஜில்லுனு ஆகிப்போகுதா, அதான். சமையலறைன்னா கொஞ்சம் கதகதப்பா இருக்கும்லியா... ' '

முழுக்கப் பொதித்தாற்போல உடையணிந்திருந்தது குழந்தை. சமையல் மேடைப்பக்கம் அப்பா மடியில் உட்கார்ந்திருந்தது. எழுந்துகொள்ள அவர் - /வேண்டாம்/ என நான்

கையமர்த்தினேன். மேல்கோட்டை அவிழ்த்தவாறே அந்தச் சூழலை நோட்டமிட்டேன்... அவர்கள் எல்லாருமே பதட்டமாய் இருந்தார்கள். இந்தாளு குணப்படுத்தி விடுவானா, என சின்ன அவநம்பிக்கைப் பார்வை. என்னிடம் வரும் பிறர் போலவே இவர்களும். தேவைக்குமேல் எந்த விவரமும் பேசவில்லை. விவரங்களை நான் சொல்லக் காத்திருந்தார்கள். வேறெதற்கு எனக்குச் சம்பளந் தருகிறார்கள் ?

குழந்தை என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருச்தது. அசைவற்ற முகம். சலனமே கிடையாது. சுபாவத்திலேயே அது அமைதியான குழந்தை. பார்த்த ஜோரில் எல்லாருக்குமே அவளைப் பிடிக்கும். பருவம் வந்துவிட்டாப்போல கிண்ணென்று இருந்தாள். முகம் கன்னிச் சிவந்து போயிருந்தது. சரியான ஜுரம். புஸ் புஸ்சென்று மூச்சுத் திணறிக் கொண்டிருந்தாள். அடர்த்தியும் மென்மையுமான நிறைந்த கேசம்... விளம்பர நோட்டிசுகளிலும் ஞாயிறு மலர்களிலும் போடுகிறாப்போல இருந்தாள்.

' 'மூணு நாளா ஜுரம் இவளுக்கு... ' ' அப்பா ஆரம்பித்தார். ' 'எப்பிடின்னு தெரியவில்லை. கைவைத்தியம் என்னென்னவோ இவ குடுத்துப் பார்த்தாள். ஒண்ணும் ஒத்துவரவில்லை. அத்தோடு இப்ப ஊர்முழுக்கக் காய்ச்சலா இருக்கே... அதான் உங்ககிட்ட காட்டிறலாம்னு... ' '

எல்லா வைத்தியரையும் போலவே நானும் முதல் கேள்வியைக் கேட்டேன். ' 'குழந்தைக்குத் தொண்டைல வலி இருக்கா ? ' '

பெற்றவர்கள் இரண்டு பேரும் ஒரே குரலில் ' 'இல்ல ' ' என்றார்கள். ' 'வலிக்கல, என்கிறாள் இவள். ' '

' 'வலி இருக்காடி ? ' ' அம்மா குழந்தைப் பக்கம் திரும்பிக் கேட்டாள். குழந்தை அந்தக் கேள்வியைக் கண்டுகொள்ளவே யில்லை. என்னையே பார்த்தபடி யிருந்தது அது.

' 'உள்ளாற புண் இருக்குதான்னு நீங்க பார்த்திட்டாங்களா ? ' '

' 'முயற்சி பண்ணினேன் ' ' என்றாள் அம்மா. ' 'ஆனால் பார்க்க முடியவில்லை. ' '

இதே மாதத்திலேயே இந்தக் குழந்தை படிக்கிற அதே பள்ளியில் இருந்தே நிறையப் பிள்ளைகள் டிப்தீரியா, டிப்தீரியா என வந்து கொண்டிருந்தார்கள். வைத்தியர்கள் நாங்கள் அனைவருமே அதையேதான் யோசித்தபடி இருக்கிறோம்.

' 'ம்... ' ' என்றேன் நான். ' 'வாயைத் திறந்து மொதல்ல பாத்திறலாம். ' ' வைத்தியர்த்தனமான புன்னகை. குழந்தையின் செல்லப் பெயரைக் கேட்டுத் தெரிந்து கொண்டேன். ' 'மெதில்டா... ஆ- காட்டும்மா. தொண்டை எப்பிடி இருக்கு, பாத்திறலாம்... ' '

கல்லுளி மங்கன்.

' 'அட, அடம் பிடிக்கப்டாது ' ' - நான் தாஜா பண்ணினேன். ' 'லேசா வாயைத் திறப்பியாம்... நான் பாத்துக்கறேன்... இங்க பாத்தியா... ' ' இரண்டு கையும விரித்துக் காட்டினேன். ' 'என் கையில் எதுவுமேயில்லை. கொஞ்சம் வாயைத் திற... ' '

' 'டாக்டர் மாமா எவ்வளவு நல்லவர் பார்த்தியா, ' ' என்றாள் அம்மா. ' 'உன்கிட்ட எத்தனை பிரியமாய்ப் பேசுகிறார் பார். அவர் சொன்னபடி கேட்கணும் ' ' என்றாள். ' 'உனக்கு வலிக்கிற மாதிரி அவர் எதுவும் பண்ண மாட்டார். ' '

ச், என நான் கடுப்பானேன். வலி பற்றி அவள் சொல்லாமல் இருந்திருக்கலாம். அதை அவள் நினைவு படுத்தாமல் இருந்திருந்தால் குழந்தையைக் கிட்டத்தட்ட நான் வழிக்குக் கொண்டு வந்திருப்பேன். ஆனால்... என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டேன். அமைதியாய் நிதானமாய்க் குழந்தையிடம் மீண்டும் முயற்சி செய்ய ஆரம்பித்தேன்.

என் நாற்காலியை அதன் பக்கமா இ ழு க் - எதிர்பாராமல் அந்தக் குழந்தை என்மேல் பாய்ந்து பூனைபோல் பிறாண்டினாள். கிட்டத்தட்ட என் கண்ணை எட்டிவிட்டாள். என் கண்ணாடி, நல்லவேளை உடையவில்லை, நாலைந்தடி தள்ளி துள்ளி தூரப்போய் விழுந்தது.

அப்பா அம்மா ரெண்டு பேருமே திகைத்துப் போனார்கள். என்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள். ' 'அடிப்பாதகத்தி ' ' என்றாள் அம்மா. குழந்தை கையை இறுக்கினாள். ' 'என்ன காரியம் பண்ணினே நீ பார்... டாக்டர் ரொம்ப நல்லவரு... ' '

' 'அம்மா உங்களுக்குப் புண்ணியம்... ' ' நான் இடைமறித்தேன். ' 'நான் நல்லவன்னு அவள்கிட்ட வியாக்கியானம் எல்லாம் வேணாம். நான் அவள் வாயைப் பார்க்கணும். அவளுக்கு டிப்தீரியாவா தெரியவில்லை. கவனிக்காட்டி அவள் உயிருக்கே உலை வெச்சிரும்... ' ' ஆனால் இது எதைப் பத்தியும் அந்தப் பெண் சட்டைபண்ணவே யில்லை. ' 'இங்க பாரும்மா... ' ' நான் குழந்தையிடம் சொன்னேன். ' 'நாங்க உன் வாயைப் பார்க்கணும். பெரிய பெண்தானே நீ ? உனக்குப் புரியுதில்லியா ?... வாயை நீயே திறக்கறியா, இல்ல, நாங்க திறந்துக்கட்டுமா ? ' '

குத்துக்கல். சிறு அசைவும் இல்லை அதனிடம். முன்னைவிட இப்போது மூச்சுவிட அதிகம் சிரமப்பட்டுக் கொண்டிருந்தது.

எங்கள் போராட்டம் ஆரம்பித்தது. அவள் நலனுக்காகவாவது நான் அவள் தொண்டையைச் சோதித்தாக வேண்டும். அம்மா அப்பாவிடம் நான், ' 'நீங்க சொன்னால் பார்க்கிறேன்... ' ' என்றேன். ஆபத்தினை எடுத்துச் சொன்னேன். ' 'ஆனால் இந்த விபரீதத்தை நீங்களா உணராதவரை நான் பார்க்கப் போறதில்லை ' ' என்றேன்.

' 'மாமா சொன்ன பேச்சைக் கேட்கலேன்னா உன்னை ஆஸ்பத்திரிலதாண்டி சேக்க வேண்டி வரும் ' ' என அம்மா அவளைக் கண்டித்தாள்.

ம் என நான் புன்னகைத்தேன். எது எப்படி யிருந்தாலும் எனக்கு அந்தக் குழந்தையைப் பிடித்திருந்தது. மூத்தவர்கள்தான் என்னிடம் சில்லரைத்தனமாக நடந்து கொண்டிருந்தார்கள். இந்தக் களேபரத்தில் அவர்கள் மேலும் அசடுகளாய் பலவீனர்களாய்த் துவண்டு கொண்டிருந்தார்கள். குழந்தையோ தன் ஆத்திரத்தை அதியற்புதமாய்ச் சேகரித்துக் கொண்டிருந்தாள். என் மீதான பயத்தில் எதற்கும் தயார் என கவனமாய் இருந்தாள்.

அப்பாவும் முடிந்தவரை முயற்சிகள் செய்தார். பார்க்க பேருரு என இருந்தாலும் குழந்தையிடம் அவர் இளகினார். அவளை வருத்த அவர் மனம் வாடினார். அந்தப் பெண்ணை கிட்டத்தட்ட நான் வசியப் படுத்திய நேரம்பார்த்து அவர் நிலைமையின்

கட்டுக்களைத் தளர்த்தி விட்டார். மூக்கறுபட்ட ஆத்திரத்தில் எனக்கு அவரைக் கொன்னுட்டா என்ன என்றிருந்தது. குழந்தைக்கு டிப்தீரியா இருக்கலாம் என்று பெரியவருக்கு பயமும் இருந்தது. ஆகவே அவன் என்னை மேலும் அனுமதிக்க வேண்டியிருந்தது. இந்த உணர்ச்சிப் பிரளயத்தில் அவருக்கு மயக்கமே வந்துவிடும் போலிருந்தது. பயம் ஒருபுறம். குழப்பம் வேறு... அம்மாக்காரி மேலும் கீழுமாய் நடந்து கொண்டிருந்தாள்.

' 'மடில, முன்பக்கமாக் குழந்தையை வெச்சிக்கோங்க ' ' நான் அப்பாவை அதட்டினேன். ' 'அவ ரெண்டு கையவும் இறுக்கிக்கிடணும்... ' '

குழந்தை திடாரென்று அலறினாள். ' 'வேணாம்ப்பா. வலிக்குது. அவரைப் போகச் சொல்லிருங்க சொல்ட்டேன்... ' ' ஆவேச ஊளை. ' 'நிறுத்துங்கப்பா. போதும். என்னை சாவடிச்சிறாதீங்க... ' '

' 'அவளால இதைத் தாள முடியுமா டாக்டர் ? ' ' என்றாள் அம்மா.

' 'நீ வேணா வெளில போய் இரு... ' ' பெரியவர் சம்சாரத்திரம் சொன்னார். ' 'என்ன நீ டிப்தீரியால குழந்தை சாவட்டும்ன்றியா ? ' '

' 'சரி சரி. குழந்தையைப் பிடிங்க ' ' என்றேன் நான்.

மரக் கரண்டி ஒன்றை அவள் பல்லில் கொடுக்க வேண்டும். குழந்தையின் தலையை இடது கையால் பற்றிக் கொண்டேன். பல்லை இ-ற்-றுக மூடிக் கொண்டு பிடிவாதமாய் மறுப்புச் சொன்னாள் குழந்தை. நானும் ஆத்திரமாகி யிருந்தேன். அதுவும் ஒரு குழந்தையிடம்! - கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை என்னால். உள்ளே பார்க்கிற தோதுக்கு வாயை விரிக்க முயன்றேன். கடைவாய்ப் பால்லுக்கும் பின்னால், வாயின் குழி ஆரம்பம் வரை மரக் கரண்டியைச் செலுத்தி விட்ட போது, சட்டென்று ஒரே தரம் குழந்தை வாயைத் திறந்து... நான் எதையும் கவனிக்குமுன், மூடிக்கொண்டது. கரண்டியை ஒரே கடி! குச்சி குச்சியாய்த்தான் எடுக்க வேண்டியதாகி விட்டது.

' 'ஏன்டி உனக்கு வெக்கமே கிடையாதா ? ' ' அம்மாக்காரி கத்தினாள். ' 'ஒரு டாக்டர்கிட்ட இப்பிடி நடந்துக்கறியே... ' '

' 'கூர்மை இல்லாமல் இன்னொரு கரண்டி கொண்ட்டு வாங்க ' ' என்றேன் அம்மாவிடம். ' 'நான் பார்த்தே ஆகணும்! ' ' குழந்தை வாயில் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. நாக்கில் காயம் பட்டிருக்கக் கூடும். வெறியான அலறல். அப்போது போய்விட்டு நான் சாவகாசமாக வந்து பார்த்திருக்கலாம். அது நல்ல முடிவுதான். ஆனால் இப்பிடி கவனியாமல் அசட்டையா விட்டு விட்டதினால் குறைந்தது ரெண்டு பசங்களாவது இறந்து போயிருக்கும். அதுதவிர, நானுங்கூட இப்ப பார்க்கிறதானால் பார்ப்பம், இல்லாட்டிப் போனால் விடு கழுதைய... என்கிறாப்போல எரிச்சலாகிப் போனேன். எப்பாடு பட்டானும் அதன் வாயைத் திறந்து பார்ப்பேன்! சிந்திக்கிற கட்டம்லாம் போயிற்று. நான் ஆக்ரோஷமாகி விட்டேன். அதை நார் நாராக் கிழிச்சிற உள்ளில் குமுறியது. அவளைப் பணிய வைப்பதில் திருப்தி. என் முகமே ஆத்திரத்தில் வீங்கி விட்டது.

குழந்தைகள் என்கிற முட்டாச் சென்மங்களை அதுங்களோட அசட்டுத்தனங்கள்லேர்ந்து காப்பாத்தியாகணும். நாம பொதுவா இப்பிடிச் சொல்லிக் கொள்கிறோம். ஆ மத்தவங்களையும்

அதுங்ககிட்டேயிருந்து காப்பாத்தியே தீரணும்! ஆதுகூட ஒரு சமூக சேவைதான்!... குருட்டுத்தனமான கோபம் என்னுள். கொதித்துக் கிடந்தது மூளை. நாடி நரம்பெல்லாம் அதிர்ந்தது. சீண்டப்பட்ட ஆத்திரம். கடைசிவரை ஆடித்தான் அது அடங்கும்...

கட்டக் கடேசியான ஆங்காரப் பாய்ச்சல்! குழந்தையின் கழுத்தையும் தாடைகளையும் அழுத்திக் கொண்டேன். கனமான வெள்ளிக் கரண்டி. பற்களுக்குள் தொண்டைவரை செலுத்தினேன். ஹா அவள் உமிழ்நீர்ப் பைகள் இரண்டும் சதை மூடிக் கிடந்தன. அந்த ரகசியத்தை என்னிடம் இருந்து மறைக்க அவள் தைரியமாய்ப் போராடி யிருக்கிறாள். இந்த மூணு நாளாய், இந்த விபரீதம் சம்பவிக்கும்... நான் அழைக்கப் படுவேன் - அவளுக்குத் தெரியும். ஆனால் தாய் தந்தையிடம் கூட அவள் காட்டிக் கொள்ளவில்லை.

மெதில்டா இப்போது நிஜமாகவே ஆவேசமாகி யிருந்தாள். இதுநேரம் வரை தன்னைக் காத்துக் கொள்கிறவளாய் இருந்தவள், அடித்து நொறுக்க வேகங் கொண்டாள். அப்பாவின் மடியில் இருந்து எகிறி என்னை நோக்கிப் பாய்ந்தாள். தோல்வியைத் தாள முடியவில்லை அவளால். கண்ணீர் பெருகி அவள் பார்வையை மறைத்தது.

# மந்திரவாதி அம்மாவை அடிக்கணுமா?

***அமெரிக்கக் கதை / ஜான் அப்டைக்***

**By தமிழில் - எஸ். ஷங்கரநாராயணன்**

சாயந்தரங்களிலும், இப்போதுபோல சனி மதியத் தூக்கத்துக்காகவும் ஜாக் தனது மகள் ஜோவுக்கு உடான்சாய்க் கதை சொல்வான். அவளது ரெண்டு வயசில் ஆரம்பித்த பழக்கம் இது. இப்போது பழக்கத்துக்கே ரெண்டு வயது ஆகிப்போயிற்று. அவன் கற்பனை வறண்டுபோய், புதுசாய் எதும் கதைசொன்னால் பழைய கதை ஒண்ணை உல்ட்டா பண்ணித்தான் இப்போது சொல்கிறான். ரோஜர் என்று பெயர் ஆரம்பிக்கிற சின்ன மிருகம். ரோஜர் மீன், ரோஜர் அணில் அல்லது ரோஜர் குரங்கு... எதோ ஒண்ணு. அதுக்கு ஒரு கஷ்டம் வரும். அதைத் தீர்த்து வைக்க புத்திசாலி கிழட்டு ஆந்தை ஒண்ணு. ஆந்தை மந்திரவாதியிடம் ரோஜரை அனுப்பி வைக்கும். அவர் என்னமாச்சும் மந்திரம் போட்டு அதன்மூலம் ரோஜரின் சங்கடத்தைப் போக்கினார். அது மாத்திரமில்லை, அதனிடத்தில் இருக்கிற காசை விட அதிகமான கூலி கேட்டார். அந்தப் பணம் எங்கே எப்படி அதற்குக் கிடைக்கும், அதையும் சொல்லித் தந்தார். ரோஜர் இதர விலங்குகளோடு ஆட்டம் போட்டுவிட்டு, பாஸ்டனில் இருந்து அப்பா வரும் ரயிலின் விசிலுக்கு அம்மாகூட வீட்டில் இருந்தது. அவர்களுடைய ராத்திரிச் சாப்பாட்டை விவரிப்பதுடன் முடியும் கதை... இந்தப் பாணி கதைகள் குறிப்பாக சனிக்கிழமைகளில் இப்பவெல்லாம் எடுபடுவதில்லை. மதியம் ஜோ தூங்கினாளில்லை. அவ தூங்க மாட்டான்னு தெரிஞ்ச பின்னால் கதை சொல்லவே அவனுக்கு ஆயாசமாகி விட்டது.

ஜோ வளர்ந்து விட்டாள். உடம்பு சுகமில்லாமல் அவள் மதியங்களில் படுத்துக் கொள்ளும் கட்டிலில் காலை மடக்கிக் கிட்டாலும் பாதி இடத்தை அடைத்துக் கொள்கிறாள்... ஜோ படுத்துக் கொண்டாள். தலையணை உள்ளமுங்கியிருந்தது. நிழலும் சூர்ய வெளிச்சப் பளபளப்புமான குண்டு முகம். எந்த அற்புதத்தையும் நம்புகிற மாதிரியான அப்ராணி முகம்

அல்ல அது. கதை கேட்டமா தூங்கினமான்னு அவள் அடங்குவாள்ன்றதே சந்தேகந்தான். அவளுடைய தம்பி பாபி - ரெண்டு வயசு - வாய்ல பாட்டில்... எப்பவோ தூங்கியாச்சு. ஜாக் கேட்டான் - "இன்னிக்கு எதைப் பத்திக் கதை சொல்லலாம்?..."

"ரோஜர் ... ..." ஜோ கண்மூடி புன்னகைத்தபடி யோசனை செய்தாள். திறந்தாள் கண்ணை - அம்மாவின் நீலக் கண்கள்! - "ரோஜர் ஸ்கங்க்" என்றாள் தீர்மானமாக.

அவள்போய் பள்ளிக்கூடத்தில் இந்த ஸ்கங்க் பத்திச் சொல்லலாம்1 - புது மிருகம். "ம்" என்று அவன் ஆரம்பித்தான். "ரொம்ப நாளைக்கு முன்னால, ஒரு அடர்ந்த காட்டுல, சின்ன மிருகம் ஒண்ணு... பேரு ரோஜர் ஸ்கங்க், இருந்திச்சு... நாத்தமா நாறிச்சு அந்த மிருகம்!"

"ம்" என்றாள் ஜோ.

"அதுங்கூட எந்த மிருகமும் விளையாட வராதளவுக்கு அது நாத்தமா நாறிச்சு..." சமர்த்தாய் அப்பாவைப் பார்த்தாள். கதை இப்பிடி எடுக்கும்னு அவள் எதிர்பார்த்தாளில்லை. "ரோஜர் ஸ்கங்க் எங்க போனாலும்..." அவன் உற்சாகமாய்த் தொடர்ந்தான். தனது சிறுவயதுப் பாடுகளை நினைத்துப் பார்த்துக் கொண்டான். "அது கிட்டத்ல வந்தாலே மத்த மிருகங்கல்லாம் வன்ட்டாண்டா நாத்தம் பிடிச்ச ஸ்கங்க்னு கூவிட்டே ஓடிரும். தனியே ஸ்கங்க் அப்பிடியே நிக்கும். அதுங் கண்ணுலேர்ந்து ரெண்டு சொட் - கண்ணீர், அப்டியே க்கீ... ழ... இறங்கி வரும்." குழந்தையின் மூக்கு வழியாக கண்ணீர் இறங்கும் பாவனையில் கோடு இழுத்துக் கொண்டே வந்தான். ஐயோ வாய்ல போயிருமோ, குழந்தை கீழுதட்டைக் கோணிக் கொண்டது.

"அது போயி ஆந்தையைப் பார்க்குமாப்பா?" கரகரத்திருந்தது குரல்.

மெத்தையில் குழந்தையருகே அவன். போர்வைக்குள் அவள் அசைவில் கால் உள்ளே விறைத்து இறுகியது. நிஜம்போலவே, அவளுக்கு ஆர்வம் கிளர்த்துகிற விதமாகவே கதை சொல்லிக் கொண்டிருக்கிறதாக அவனில் திருப்தி. கதை சொல்ல அவசரப் பட அவன் விரும்பவில்லை - ஆனால் கீழே நாற்காலி இழுபடும் சத்தம். கிளாரா கூடத்தில் மர சாமானுக்கெல்லாம் பெயின்ட் அடித்துக் கொண்டிருக்கிறாள். அவன் போய் உதவி செய்ய வேண்டியிருந்தது.

"ரோஜர் ஸ்கங்க் ரொம்ப வருத்தமா நடந்து போச்சு. பெர்ரிய ஒரு மரம். அதுக்கடியில வந்து சேர்ந்தது. அந்த மரத்தோட உச்சாணிக் கொம்பு. அங்கதான்... பெரிய, புத்திசாலியான, வயசாளி ஆந்தை!"

"ம்"

"ஆந்தை மாமா, ஆந்தைமாமா-ன்னுது ஸ்கங்க். எல்லா மிருகமும் என்னைக் கண்டாலே எட்டிப் போயிருது - ஆமாமா, என்றது ஆந்தை. ஆனாலும் நீ ரொம்பத்தான் நார்றே! - நான் என்ன பண்ணணும்னு கேக்கறச்சயே ஒன்னு அழுதிட்டது ரோஜர் ஸ்கங்க்."

"மந்திரவாதி! மந்திரவாதி!" என்று ஜோ கத்தினாள். படுக்கையில் நெட்டுக்குத்தாய் உட்கார்ந்து விட்டாள். படுக்கையில் கிடந்த சின்ன தங்கவண்ணப் புத்தகம் ஒன்று நழுவிக் கீழே விழுந்தது.

"பாருடி, கதை சொல்றது நான். அப்பா உனக்குக் கதை சொல்லணுமா வேணாமா?"

"இல்லப்பா - நீ சொல்லு."

"அப்பன்னா படு. கண்ணை மூடு!"

அவள் அப்பிடியே தலையணையில் மல்லாக்கக் கவிழ்ந்தாள். "-ம்"

"ஆந்தை யோசிச்சி யோசிச்சிப் பார்த்தது... அப்றமா, மந்திரவாதியைப் போய்ப் பாரேன்னுது..."

"அப்பா?"

"ம்"

"மந்திரம் கிந்திரம்லாம் நிஜமாப்பா?" இந்த ஒரு மாதமாய் இப்படியெல்லாம் கேட்க ஆரம்பித்திருந்தாள். சிலந்தி மூட்டைப்பூச்சி சாப்பிடும், என்று அவன் சொன்னால், திரும்பி அம்மாவிடம் "அப்டியாம்மா?" என்று கேட்டாள். கடவுள் வானத்தில் இருக்கிறார், நம்மைச் சுற்றியுள்ள எல்லாத்திலும் அவர் இருக்கிறார், என்று கிளாரா சொன்னால், அப்பா பக்கமாய்த் திரும்பினாள். நம்பியும் நம்பாமலும், "நிஜந்தானாப்பா?" என்கிறாள்.

"கதையில் அதெல்லாம் நிஜம்!" சட்டென்று ஜாக் சொன்னான். திடுதிப்னு அவள் கேள்வி போட்டதில் சொல்லிட்டிருந்த கதை மறந்திருந்தது. "ஆந்தை சொல்லிச்சு - அடர்த்தியான காட்டுக்குள்ளாற, ஆப்பிள்த் தோப்பு வழியா, தாண்டி சதுப்பு நிலம், அது வழியா சின்ன நதி... அதுந் தாண்டிப் போனா, மந்திரவாதியோட வீடு-ன்னுது ஆந்தை. அதே மாதிரிப் போச்சு ரோஜர். அதோடா - துாரத்தில் வெள்ளையா ஒரு வீடு! ரோஜர் அங்க போயிக் கதவைப் படபடன்னு தட்டிச்சு!" - படுக்கையருகே ஜன்னலைத் தட்டி சப்தம் எழுப்பினான். டக் டக். போர்வைக்குள் அந்தப் பெரிய தேகம், குழந்தைத்தனமான பரபரப்புடன் இறுகியது. "உள்ளேர்ந்து வந்தாரு, குள்ளமா, ஒரு வயசான தாத்தா. நரைச்ச நீ...ளத் தாடி. கூர்மையான நீலத் தொப்பி. யார்ரு... என்...னது... என்னா வோ...ணும் உனக்கு. இன்...னா நாத்...தம்டா இது..." எப்பவுமே மந்திரவாதி மாதிரி அவன் ரசித்துப் பேசுவான். முகம் அஷ்டகோணல். உருளும் கண்கள். குரல்க் கரகரப்பு. கிழவனாட்டம் பேசுவதே தனக்குப் பொருந்துகிறது, என நினைத்துக் கொண்டான்.

"ஆமா தாத்தா. நான் ரொம்ப நார்றேன்... எனக்கே தெரியுது-ன்னுது ரோஜர் ஸ்கங்க். எல்லாக் குட்டீஸும் என்னைக் கண்டாலே ஓட்டமெடுக்குது. அந்த ஆந்தை மாமா, அதுதான் நீங்க நினைச்சா எதும் உதவி செய்வீங்கன்னு சொல்லி யனுப்பிச்சு."

"ஹோ ஹோ அப்-பிடியா... இர்..ருக்...கும். இர்ருக்கும். உள்...ள வா நீயி... ரொம்பக் கிட்டத்ல வரப்டாது!... உள்ள எல்லா மேஜிக் சாமானும் குவியலா குப்பையாப் போட்டு வெச்சிருந்தாரு தாத்தா. அவருக்கு வீட்டுவேலை செய்ய, வேலைக்காரி யாருங் கிடையாது..."

"ஏம்ப்பா?"

"ஏன்னா அவரு மந்திரவாதியாச்சே. அதோட வயசாளி!"

"வயசாளின்னா... அவரு செத்துருவாராப்பா?"

"ம்ஹூம். மந்திரவாதிங்கல்லா சாக மாட்டாங்கடி. சரியா, அவரு அங்க சுத்திச் சுத்தித் தேடினாரு. ஒரு பழைய கம்பு. அது ஒரு மந்திரக் கோல்! அதை எடுத்துக்கிட்டு, இந்தா ரோஜர் ஸ்கங்க், உன்னை என்ன வாசனையா மாத்தலாம்?-னு கேட்டாரு. ரோஜர் ஸ்கங்க் யோசிச்சி யோசிச்சிப் பாத்தது. ரோஜா வாசனை!- அப்டின்னுது."

"நல்லாருக்கும்ப்பா!"

தாத்தாவின் பாவனை. சகிக்கவொண்ணாத மந்திரவாதியின் மூப்பான குரல்.

"ஜீ... பூம்... பா!

ரோஜர் ஸ்கங்க்! ரோஜர் ஸ்கங்க்!

பார் இப்ப -

கண்ணை மூடு சொல்றேன்!

ஜிகிரி ஜிகிரி ஜக்கா...

ரோஜாப்பூ கூஜாப்பூ

உடனே வா உடம்புல!

பயப்படாதே...

ஹா ஹு ஹ்ரூம்!"

அவன் நிறுத்தினான். ஜோவின் மூச்சில் ஒரு லயிப்பு வந்திருந்தது. புருவம் நெறிபட்டது. கீழுதடு சாய்த்து ஒரு முறுவல். எங்காவது வெளியே கூட்டிப் போகிற சந்தர்ப்பங்களில் அவன் பெண்டாட்டி கொண்டாடும் சந்தோஷ முறுவல் அப்படியே குழந்தையிடம் இருந்தது. கிசுகிசுப்பாய் மெ ல் ல ச் சொன்னான் - "அப்ப... திடீர்னு... மந்திரவாதி வீடு பூராவும்... ரோஜா வாசனை! ஆகாகா, ரோஜா - அப்டின்னு அந்த ரோஜர் மீன் கத்திச்சு!... மந்திரவாதி அதுங்கிட்ட, (கரகரப்பான குரலில்) ஏழு ரூவ்வா குடு-ன்னாரு."

"அப்பா?"

"என்ன?"

"'ரோஜர் ஸ்கங்க்-ப்பா. நீ ரோஜர் மீன்-னியே!"

"ஆமாமா, ஸ்கங்க்த்தான்."

"நீ மீன்னுட்டே - அசடுப்பா நீ!"

"ஹாமாமா, உங்க அப்பன் ஒரு அசட்டுக் குப்பன். எங்க விட்டேன்?... ம், உனக்கு துட்டுன்னா என்ன தெரியும்லியா?"

"ஓ. நீ சொல்லிர்க்கியே."

"ரைட். ரோஜர் ஸ்கங்க் சொல்லிச்சு. என்ட்ட ஏழு ரூவ்வா இல்லியே? நாலுதானே இருக்குன்னுது. சொல்லும்போதே ஒன்னு அழ ஆரம்பிச்சது..." ஜோ தானும் அழுகிறாப்போல வைத்துக் கொண்டாள். என்றாலும் இப்போது முன்னத்தனைக்கு இப்போது ஈடுபாடு அவளிடம் இல்லை. அவனுக்கு ஏமாற்றம். கீழே சாமான்கள் மேலும் கீழுமாய் இழுபட்ட வண்ணமிருந்தன. கனமான சாமான்களை அவள் நகர்த்தக் கூடாதே... ஆறு மாத கர்ப்பிணி. மூணாம் குழந்தை.

"உடனே தாத்தா சொன்னாரு - சரி, பரவால்ல. நேர்ரா இந்த சந்தோட முக்கு வரை போ. மர்மக் கிணத்தை மூணே மூணு சுத்து. உள்ள எட்டிப் பாரு - மூணு ரூவ்வா கிடைக்கும், சீக்கிரம்னாரு. உடனே ரோஜர் ஸ்கங்க் தெரு முக்கு வரை ஓடி, மர்மக் கிணத்தை மூணு சுத்து சுத்தி வந்து பார்த்தா... கிணத்துல இருந்தது மூணு ரூவ்வா! அதை எடுத்திட்டு தாத்தா கிட்ட குடு குடுன்னு ஓடிப்போயிக் குடுத்தது. பெறகு காட்டுக்குள்ளாற ஒரே ஓட்டம்! இப்ப என்னடான்னா, எல்ல்-ல்லா மிருகமும் இதுங்கிட்ட ஓடி வருது. நம்மாள்தான் இப்ப வாசனையோ வாசனையா ஆயிட்டுதே!... இப்ப எல்லாமா பாண்டி - செதுக்கு முத்து - கிட்டிப்புல் - தாயக்கட்டம் - கள்ளன் போலிஸ் - விளையாடினாங்க..."

"கள்ளன் போலிசாப்பா?"

"ஆமாண்டி. அது ஒரு விளையாட்டு. ஒரே வேடிக்கை. சிரிப்பு. அவங்க மத்தியானம் பூரா கொட்டமடிச்சாங்க. இருட்ட ஆரம்பிச்சதும்... அவங்கவங்க அவங்கவங்க வீட்டுக்கு, அம்மாட்ட ஒடிட்டாங்க."

ஜோ சொடக்கு முறித்தாள். ஜன்னலுக்கு அப்பால் மாலையின் சாய்வெயில், நிழல்கள் நீண்டு கிளம்பி விட்டிருந்தன. கதை முடிஞ்சிட்டதாய் அவள் நினைத்தாள் - பொம்மனாட்டிகள் தாங்களே முடிவுகள் எடுப்பது அவனுக்குப் பிடிக்காது. அவர்கள் அவனை முகம்பார்த்து தலையாட்ட வேண்டும், என அவன் விரும்புகிறவன்.

"ஜோ - கவனிக்கிறியா?"

"ம்"

"ஏன்னா, இப்ப ரொம்ப சுவாரஸ்யமான விஷயம்! ரோஜர் ஸ்கங்கோட அம்மா ரோஜர் ஸ்கங்க்கிட்ட, என்ன கண்றாவி நாத்தம்டா இது-ன்னுது!"

"அ...ப்பா?"

"உடனே ரோஜர் ஸ்கங்க் சொல்லிச்சு - என்னோடதும்மா. ஹி ஹி நாந்தான் ரோஜாப்பூவாட்டமா மணக்கிறேன் இப்ப... அம்மா அதுக்கு, யாருடா உன்னை இப்பிடி மாத்தித் தொலைஞ்சதுன்னு கேட்டாள். - மந்திரவாதிம்மா! - ஓகோ. டேய் நான் சொல்றதக் கேளு. நீ இப்பவே என்கூட வரே. அந்த படவா மந்திரவாதிட்ட நாம இப்ப போறோம்."

எழுந்து உட்கார்ந்தாள் ஜோ. போர்வையிலிருந்து வெளியே வந்திருந்தன கைகள். நடுங்கின லேசாய். "அம்மா, வேணாம்மா, அப்பறம் எந்தக் குட்டியும் என்னோட விளையாட வராதுன்னு அம்மாட்ட அது சொல்லித்தாப்பா?"

"அப்டியே வெச்சிக்கலாம்" என்றான் அவன். "ஆனா அதுக்கு அம்மா சொல்லிச்சு - அதைப்பத்தி எனக்குக் கவலை இல்லே. எல்லா ஸ்கங்க் குட்டிங்க மாதிரிதான் நீயும் இருந்தே. அதுனால, நாம இப்பவே மந்திரவாதிகிட்ட போணும்... அம்மா கைல குடை ஒண்ணை எடுத்துக் கிட்டது. குட்டியையும் கூட்டிட்டுப் போயி... மந்திரவாதி மண்டைல... குடையால... ஒரு போடு!"

"இல்லப்பா இல்லப்பா" - ஜோ அவன் வாயைப் பொத்த வந்தாள். யதார்த்தம் சார்ந்த பேச்சு அவளுக்கு ருசிப்படவில்லை. அதற்குள்ளே அவளில் இன்னொரு யோசனை. "அப்பறம், அந்த மந்திரவாதி அம்மா மண்டைல போட்டாரு ஒரு போடு! அவரு குட்டி ஸ்கங்கை மாத்தவே இல்லை!..."

"அதெல்லலாமில்லை" என்றான் அவன். "மந்திரவாதி சரின்னு ஒத்துக்கிட்டாரு. குட்டி ஸ்கங்க் திரும்பவும் நாத்தமா நாற ஆரம்பிச்சிட்டது..."

"ஆனா... மத்த மி... மத்த மிருகம்..."

"ஜோ, இது அப்பாவோட கதை. அப்பா இனிமே கதை சொல்லணுமா வேணாமா?" - அகல முகத்தில் நிழல் பரவ திகைப்பாய்ப் பார்த்தாள் அவனை. "அதாண்டி நடந்தது. ரோஜர் ஸ்கங்க்கும் அம்மாவும் வீட்டுக்கு வந்தாங்க. வந்தா, ரயில்ச் சத்தம். கூ - சிக்கு புக்கு சிக்கு புக்கு... பாஸ்டன்லேர்ந்து அப்பா வந்திட்டிருக்கிற சத்தம். அப்றம் அவங்க வெங்காய சாம்பார், மாங்காய்ப் பச்சடி, அப்பளம், வடை, பாயசம்னு ஒரு கட்டு கட்டினாங்க. ரோஜர் ஸ்கங்க் போய்ப் படுத்துக்கிட்டதும் அம்மா வந்து அதைக் கட்டிக்கிட்டது. என் ராஜாக்குட்டி, இப்பதாண்டி நீ வாசனையா இருக்கே. இப்பதான் எனக்கு உன்னை ஒம்ப ஒம்ப பிச்சிருக்கு-ன்னது. அவ்ளதான். கதை முடிஞ்சது."

"ஆனா அப்பா?"

"என்ன?"

"மத்த மிருகம்லாம் அதைப் பார்த்து ஓடிப் போயிருமே..."

"அதா இல்ல. காலப்போக்குல அதோட நாத்தம் அதுங்களுக்குப் பழகிட்டதே. அப்பறம் அதுங்க அதோட நாத்தத்தைக் கண்டுக்கலை..."

"காலப்போக்குல-ன்னா என்னப்பா?"

"நாளாக நாளாக-ன்னு அர்த்தம்."

"அந்த அம்மா ஒரு முட்டாள்ப்பா!"

"சேச்சே, அப்டில்லாம் ஒண்ணில்ல" - என்றான் அவசரமாய். அபூர்வமாய்த் தன் அம்மா ஞாபகம் எப்படியோ வந்திருந்தது அவனில். "இப்ப நீ உன் பப்ளிமாஸ் மூஞ்சியைத் தலாணில அமுக்கிக்கிட்டு தேமேன தூங்கு." வெளிச்சம் புகாவண்ணம் ஜன்னல் திரையைச் சரி செய்தான். அவள் தூங்கி விட்டாப் போலவே பாவித்து, முன்காலில் அடிமேலடி வைத்துக் கதவை நோக்கிப் போனான். திரும்பினான். போர்வைக்குள் நெளிந்தபடி அவனையே அவள் பார்த்தவாறிருந்தாள். "ஏய் போத்திண்டு நிம்மதியாத் தூங்கு. பாபி பார்த்தியா, எப்பவோ தூங்கியாச்சு..."

அவள் படுக்கையில் எழுந்து நின்றாள். ஸ்பிரிங் குலுங்கியது. "அப்பா?"

"ம்"

"நாளைக்கு, மந்திரக்கோலால மந்திரவாதி அம்மாவை அடிச்சதாக் கதை சொல்லணும்ப்பா..." அடிக்கிற சைகையும் செய்தாள். "மண்டைலியே நச்னு போடறாப்ல..."

"ச். அப்டியில்லடி செல்லம். குட்டிக்கு அம்மான்னா ரொம்ப இஷ்டம். அம்மா எது செஞ்சாலும் தனக்கு நல்லதுதான் செய்வான்னு அதுக்குத் தெரியும்."

"இல்லப்பா - நாளைக்கு மந்திரவாதி அம்மாவை அடிக்கறாரு... அப்டிதான் நீ கதை சொல்லணும்..." காலை உதைத்து அப்படியே கட்டிலில் அவள் உட்கார, கட்டில் முனகியது. உற்சாக நிமிஷங்களிலும் அவள் இப்படியே உட்கார்வாள் - இப்போது அந்தக் கலகலப்பு இல்லை.

"சரி - பார்க்கலாம். இப்ப நீ பேசாம ரெஸ்ட் எடு. நல்ல பொண்ணில்ல, படுத்துக்க பேசாம..."

கதவைச் சாத்தினான். கீழிறங்கி வந்தான். செய்தித்தாள்களைத் தரையெங்கும் பரப்பி பெயின்ட் டின்னைத் திறந்திருந்தாள் கிளாரா. தளர்ந்த கர்ப்பிணி உடை - மேலே அவனது பாடாவதிச் சட்டை ஒண்ணை அணிந்திருந்தாள். பிரஷ்ஷை முக்கி நாற்காலிப் பட்டைகளில் தீற்றிக் கொண்டிருந்தாள். முதுகுப்பக்கம் படிகளில் அதிர்வு. "ஏய் நிமிட்டாம் பழம் வேணுமா?" படிகள் தயங்கின.

"பெரிய கதை" என்றாள் கிளாரா.

"குழந்தை... பாவம்!" - மனைவி பாடுபடுவதை அவன் அலுப்புடன் பார்த்தான். அவளைச் சற்றிலும் கூண்டுகள், பலகைகள், பட்டைகள். மங்கிய நிறங்கள். சில சாயம் பூசிப் புதுசாய். தந்த வண்ணம். மத்தியில் தான் அசிங்கமாய், என நினைத்தான். அவளும் அப்படித்தான் இருக்கிறாள், என்று உணர்ந்தாலும் பெண்டாட்டியுடன் பேசவோ, கூட வேலை செய்யவோ, கிட்டே போய் அவளைத் தொடவோ, எதையும் அவன் விரும்பினானில்லை.

# க ண ப் பு

***ஜாக் லண்டன்/இங்கிலாந்து***

>>>

சிலுங்கென உடைகிறது நாள், குளிரான சாம்பல் பூத்த நாள். கடுங் குளிர். வெளிறிய அமுக்கப்பட்ட வெளிச்சம். அந்த மனிதன் பிரதான யூகோன் சதுக்கத்தில் இருந்து ஒதுங்கிய பாதையில் விலகி மேடேறி வந்தான். கீழ்ப்பக்கமாய் அழகுவரிசையிட்ட அதோ மரக்கூட்டம் நோக்கி அந்த மங்கலான, அதிகம் பயன்படுத்தப் படாத பாதை சென்றது. நல்ல செங்குத்து ஏத்தம். மூச்சு வாங்கியது. தன்னை சமாதானப் படுத்திக் கொண்டே கைக்கடிகாரத்தில் மணி பார்த்தான். மணி ஒன்பது. சூரியனே இல்லை. சூரியன் வருகிற அறிகுறியே இல்லை. ஆனால் வானம் நிர்மலமாய் இருந்தது. மேக மூட்டமற்ற நாள்தான் என்றாலும் எப்படியோ ஒரு மந்தாரத்தன்மை. கும்மென்றிருந்தது நாள். அது சூரியனைக் காணாததினால் இருக்கலாம். அதைப் பற்றி என்ன. சூரியன் வாரா நாட்கள் ஒண்ணும் புதிதல்ல. சூரியனையே அவன் பார்த்துப் பல நாட்கள் ஆகிவிட்டன. தென்பகுதிக்கு அந்த சூரிய கிரகம் லேசாய் எட்டிப் பார்க்கவும், உடனே உள்ளமுங்கிக் கொள்ளவும் மேலும் கொஞ்சநாள்கூட ஆகலாம்.

தான் வந்த பாதையை ஒரு நோட்டம் விட்டான். ஒரு மைல் பரப்பளவான சதுக்கம். மூணடி பாறைப்பனி மூடி இந்தப் பாளங்களின் மேலே எத்தனையோ அடியளவு பனிப் பொழிவு. துாய வெண்மை. உறைந்துகிடந்த பனிமேலே மெல்ல அசைந்தன புதிய பனித்துகள்கள். வடக்கிலும் தெற்கிலுமாக பார்வைக்கு எட்டியவரை இடைவெளியற்ற வெண்மை. ஊடே சிறு கருங்குறுகலான பாதை, வளைந்து அது தீவுபோன்ற மரக்கூட்ட வரிசைகளிலிருந்து தெற்கு நோக்கி... மீண்டும் வடக்காக நெளிந்து இன்னொரு தீவுக்குள் மறைகிறது. இந்த அழுத்தமான பதிவுப் பாதையே பிரதான பாதை. தென்திசையாக ஐந்நூறு மைல் ஓடி, சிலிக்கூட்டுக் கணவாய், தையா, தாண்டியதும் தண்ணீர் உப்புக் கரிக்க ஆரம்பித்து விடும்.. வடப்பக்கமோவெனில் எழுபத்தியஞ்சு மைல்... தாஸன் வரைக்கும். அதையும் கடந்தால் ஆயிரம் மைல்க்கல் தொலைவில் நுலாடோ. மேலும், புனித மைக்கேல் ஆலயம் பெரின் கடல்ப்பக்கமாக. ஆயிரம் ஆயிரத்தைந்நூறு மைல்வரை மேலும் விரிந்து பரந்த வளாகம்.

திகைக்கிறாப் போல முடிவேயில்லாமல் நீண்டு போகிற பாதை. சூரியன் இன்றி வெறிச்சிட்ட வானம். கடுங்குளிர். எல்லாம் சேர்ந்த அந்த ஜிலோன்ற வெறுமை. அந்தச் சூழலின் விசித்திரம்... எதையும் அவன் சட்டைபண்ணவில்லை. இதெல்லாம் ரொம்ப காலமாப் பழகிட்டது என்கிறாப் போலவும் இல்லை. அவன் அந்தப் பகுதிக்கே புதியவன். அவன் அங்கே சந்திக்கும் முதல் குளிர்காலம் இது. சிக்கல் என்னென்னா மனுச சென்மம் கோளாறானது கிடையாது. சுதாரிப்புதான், ஆனா சூட்சுமம் பத்தாது. பூஜ்யத்துக்கும் கீழே அம்பது டிகிரின்றது, உறைபனியில் எம்பது டிகிரியாகிறது. எம்மாங் குளிரு, என்னா சங்கடம்டா இது... அப்படித்தான் நினைத்தான் அவன். மனுஷனே வெப்ப ரத்தப் பிராணி. இதமான சூடு, இதமான குளிர்னு ஒரளவுதான் மனுஷனால தாள இயலும். தாக்குப்பிடிக்கிறதும் ஆயுசை நீட்டித்துக் கொள்ளுதலுமான அம்சம்லாம் குறிப்பா மனுஷனுக்குக் கிடையாது. பிரபஞ்சத்தில் மனுஷன் அற்பாயுசுக்காரன்தான் - மைனஸ் அம்பது டிகிரி. ஆளைக் கடிக்கும் குளிர். தோல்க் கையுறைகள், காதுமறைப்புகள், வெதுவெதுப்பூட்டக்கூடிய தோலாடைகள், மற்றும் கனமான காலுறைகள்... அவையில்லாமல் எப்படி நம்மைக் காபந்து பண்ணிக் கொள்வது? மைனஸ் ஐம்பது டிகிரியை வெறும் குளிரின் அளவாக அவன் நினைத்தான். அதற்குமேல் அதைப்பற்றி அவன் பெரிதாக மூளையில் போட்டுக் கொள்ளவே யில்லை.

மேலும் முன்னேறிப் போகுமுன் நிலவரத்தை அறிகிறாப் போல அவன் காற்றில் காறித் துப்பினான். சட்டென அந்த உமிழ்நீர் கெட்டிப்பட்டு உறைகிற விநோதச் சத்தம். வெடி வெடிக்கிறாப்போல... துாக்கிவாரிப் போட்டது.. திரும்பவும் துப்பினான். திரும்பவும் அந்த

எச்சில், பனியில் விழுமுன், அந்த விசித்திரச் சத்தம். மைனஸ் அம்பதில் எச்சில் சத்தமாய் உறையும்... சரிதான். ஆனால் காற்றிலேயே அப்படி இறுகிக் கொண்டது... சந்தேகமே இல்லை - மைனஸ் அம்பதா? அதுக்கும் மேலே குளிர். எந்த அளவு அவனுக்குத் தெரியாது. அது பொருட்டும் இல்லை. பையன்கள் ஹெடர்சன் ஓடையின் இடது கரையில் இருக்கிறார்கள். அங்கிருந்துதான் அவனும் வந்தான். இந்திய நதிதீரத்தின் கிராமாந்தரம் ஊடே அவர்கள் கடந்து வந்திருக்கிறார்கள். இவன் மாத்திரம் கால்போன போக்கில் பிரிந்து வந்து, யூகோன் திடலின் மரக் கூட்டங்களில் விறகு எதுனாச்சும் தேறுமா என்று வந்தான். திரும்பிச் செல்வதற்குள் சற்று இருட்டிவிடும், உண்மைதான். ஆனால் ஆறு மணிவாக்கில் அவன் திரும்ப அவர்களுடன் சேர்ந்துகொள்ளுவான்... அவர்கள் நெருப்பு மூட்டியிருப்பார்கள். தயாராய் இருக்கும் சூடான ராச்சாப்பாடு. இப்பசத்திக்கு, மதியப்பாட்டுக்கு... மேல்ச்சட்டைப் பையின் பொம்மிய பகுதியை அழுத்திப் பார்த்துக் கொண்டான். பொட்டலம் உள்ச்சட்டையில் பத்திரமாய் இருந்தது... ஒரு கைக்குட்டையில் சுத்தி எடுத்து வந்திருந்தான். உடம்பில் உறுத்தியது. ரொட்டி-பிஸ்கெட்டுகள் உறையாமல் இருக்க அதுதான், உள்ள்ளே வைத்துக் கொள்வதுதான், ஒரே வழி. ரொட்டி நினைப்பில் தானாகவே திருப்தியாய்ப் புன்னகை வந்தது... நடுவே அழகாய் வகிர்ந்து உள்ளே வெண்ணெயும் மசாலாவுமான ரொட்டிகள். நன்கு வறுத்த, மசாலா நிறையத் திணித்த துண்டுகள்.

மரக்கூட்ட அழகான வரிசைக்குள்ளே ஊடுபாதை கிட்டத்தட்ட அழிந்திருந்தது. கடைசியாக அந்தவழியே போன ஸ்லெட்ஜ் (நாயிழுக்கும் வண்டி) தடத்தை மூடி, மேலே ஒரு அடி அளவு பனி. தான் வண்டியில் வராததற்கு சந்தோஷப்பட்டுக் கொண்டான். நடராஜா சர்வீஸ். எத்தனை எளிய பயணம் இப்போது. கையில் கூட எதுவும் எடுத்து வரவில்லை. கைக்குட்டைப் பொதிவில் உணவு, அது மாத்திரம். யாத்தாடி, செமத்தியான குளிரப்பா, வாசனை மழுங்கி மந்தமாகிப் போன தன் மூக்கைத் தேய்த்துக் கொண்டான். விலா எலும்புகளையும் தோல்க்கையுறைகளால் தேய்த்து விட்டுக் கொண்டான். பெருந்தாடிக்காரன்தான் என்றாலும் அந்தத் தாடியானது துறுத்தி நிற்கிற கன்ன எலும்புகளுக்கோ பெரிய பெரிய மூச்சுகளை வெளியேற்றும் மூக்குக்கோ எவ்வித காபந்தும் பண்ணவில்லை.

காலில் வந்து உரசியது நாய் ஒன்று. கலப்பினம். கிட்டத்தட்ட ஓநாய் போலவே யிருந்தது அது. குளிரில் திணறிக் கொண்டிருந்தது. அலைந்து கதகதப்பைத் தேடும் நேரம் அல்ல இது. மனிதர்களைப் பொறுத்த மட்டில் இந்தக் குளிர் ஜாஸ்தி என அதற்கே புரிந்தது. உக்ரக் குளிர். மைனஸ் அம்பது, அறுபது, எழுபதாகவும் இருக்கலாம். சரியாச் சொன்னால் மைனஸ் எழுபத்தியஞ்சு. தண்ணீரின் உறைவெப்பம் அல்லது உறைகுளிர் பிளஸ் 32. ஆகவே உறைபனியின் அழுத்தமான 107 டிகிரி... அதெல்லாம் நாய் அறியாது. மனிதனாட்டம் அதற்கு இந்த நோட்டம் எல்லாம் இராது. ஆனா நிலைமை சரியில்லை என உள்ளுணவர்வால் அது அறிந்திருந்தது. மனிதனைப் பார்த்ததும் ஓடிவந்து அவனை உரசியது. அவன் எப்படியும் விறகு தேடிப் போகலாம், கூடாரம் எதுவும் தட்டுப்படுதான்னு தேடலாம், எங்காவது ஒதுங்கிக் கொண்டு, நெருப்பு மூட்ட முயலலாம்... தீ! அது அறிந்த விஷயம். இப்போது தேவை நெருப்பு. அல்லது பனியில் எங்காவது குழிபறித்து உடல்சூட்டை விட்டுவிடாமல் உள்ளே சுருண்டு கிடக்க வேண்டும்.

அது விடும் மூச்சே ஈரப்பதமாகி கெட்டிப்பட்டு வெண் பனிக் கல்லாய் அதன் உரோமங்களில், உடல் உறுப்புகளிலும், கண்ணிமைகளிலுங்கூட ஒட்டிக்கொண்டு தொங்கி மினுமினுத்தன. இவனுடைய செந்தாடி மற்றும் மீசைப்பகுதிகளிலும் பனிக்கொத்துக்கள். அவன் விடும் பெரிய பெரிய அழுத்தமான வெளிமூச்சும் உடனே உடனே அடர்த்தியாய்ப் பொரிந்தது. அவன்

புகையிலை குதப்பிக் கொண்டிருந்தான். மெழுகுபோல் பனி தாடையை விறைக்கச் செய்திருந்தது. புகையிலைச் சாற்றைத் துப்ப அவனால் முடியவில்லை. பனி விழுந்து உறைந்ததில் அவன் தாடியே ஊதிப் பெருத்து விட்டது. அவன் தடுக்கி விழுந்தால் அந்தத் தாடியே சிலுங்கென உடைந்து கண்ணாடித் துண்டுகளாட்டம் மினுமினுப்பாய் நொறுங்கும். ஆனால் அதைப் பத்தி அவன் அலட்டிக்கொள்ளவில்லை. புகையிலை போடுற எல்லாருக்கும் உண்டே இந்த இம்சை. அவனுக்குப் பழகிய இம்சைதான் அது. அதிலும் இந்த அடாவடிக் குளிர்!...

பல மைல் தொலைவுக்கு மரவரிசை. ஊடே கடந்தபடி பயணப்பட்டான். பனியடுக்குகள். ஒரு நதிப்படுகையின் உறைந்த பள்ளத்தாக்கு. ஹெண்டர்சன் ஓடை. பிரதான வழியைவிட்டு பத்து மைல் வந்திருந்தான். கைக்கடிகாரத்தைப் பார்த்தான். மணி பத்து. மணிக்கு நாலு மைல் என நடை. பிரதான வழியை இப்படியே குறுக்காக எட்ட மணி பன்னிரண்டு பனிரெண்டரை. நலல விஷயம்தான். தன்னையே உற்சாகப் படுத்திக் கொண்டான். சாப்பாடு மூட்டையைப் பிரிக்கலாமா...

தள்ளாடியபடி ஓடைப்படுகையில் அவன் நடக்கையில் அந்த நாய் திரும்ப வந்து குனிந்து வாலை அவநம்பிக்கையுடன் ஆட்டியபடி அவனை உரசியது. வண்டியொன்று போன பாதை இங்கே பளிச்சென்று தெரிந்தது. அந்தத் தடத்தின் மேல் நாலடி அளவு பனி விழுந்து கிடந்தது. எப்ப போனாங்களோ. அமைதியான இந்த ஓடைப்பக்கம் மாசக் கணக்கில் நடமாட்டமே இல்லைபோல. மெல்ல முன்னேறிப் போனான். ரொம்பவெல்லாம் யோசனை கிடையாது. அப்பிடி யோசிக்கவும் என்ன இருக்கிறது? திரும்ப அந்த பெரியபாதையை எட்டியதும் உணவை முடிச்சிக்கலாம். ஆறு மணிவாக்கில் பசங்களோட போய்ச் சேர்ந்துறலாம்... அவன் பேச அவனுடன் யாரும் இல்லை. இருந்தானாப்ல பேசிற முடியுமா? அவன் கன்னமே கெட்டிச்சுக் கிடக்கு. அலுப்புடன் வாயை, வாய்ப் புகையிலையைக் குதப்பி மெழுகுத் தாடியை இன்னும் பெரிசாக்கிக் கொண்டான்.

திரும்பத் திரும்ப அந்தக் குளிர் தன் விபரீதத்தை உறுத்தலாய் உணர்த்திக் கொண்டேதான் இருந்தது. செமக் குளிர். நடந்தபடியே தோல்க் கையுறைகளால் புறங்கையால் மூக்கை, தாடையெலும்புகளைத் தடவிக் கொண்டான். முதலில் இந்தக் கை, பிறகு மற்ற கை என தன்னியல்பாகத் தேய்த்தபடியே போனான். ஆனால் உரசல் நின்ற கணமே தாடையெலும்புகளோ, மூக்கோ மந்தித்து விட்டன. மூக்கின் நுனி விறைப்புதட்டி அது மெல்ல எலும்புகளுக்கும் பரவுவதாய் இருந்தது. கலவரமாய் கவலையாய் இருந்தது. மூக்குமறைப்பு என எதுவும் போட்டுக் கொண்டு வந்திருக்கலாம். அந்த மூக்கு மறைப்பு கன்னப் பகுதியையும் சற்று தடுப்புத் தருகிறாப் போல இருக்கும். இப்போ இல்லை, அதைப் பத்தி என்ன, விறைத்துப் போன தாடைகள், ஊமைவலி கொடுக்கும், சரி இருக்கட்டும்.

நினைவோட்டமாய் எதுவுமில்லை. மலைப்பாதையை, அதன் அடையாள மாற்றங்களை, அதன் வளைவு நெளிவு சுழிவுகளை, மரக்கொத்துகளை உற்று கவனித்தான். எடுத்து வைக்கிற ஒவ்வோர் அடியையும் முழு பிரக்ஞையுடன் வைக்கிறவனாய் இருந்தான். சந்து எனத் திரும்ப நேரும் ஒவ்வொரு கணமும் அவன் ஹா- என அலுத்தான். திகைத்த குதிரைபோல, பாதையைத் தவற விட்டுவிட்டாப் போல, பாதையில் இருந்து விலகிப் போகிறாப்போல அவன் உணர்ந்தான். ஓரிரு அடி பின்னால் வந்தான் யோசனையில். பாதைமேல் பனி கடுமையாக உறைந்து கிடந்தது. கீழே தரைவரை பனிதான், முழுக்க உறைந்த கெட்டிப்பனி. அந்த ஆர்டிக் குளிர்காலத்தில் இடையே தண்ணீர் கொளகொளக்க வாய்ப்பே இல்லைதான். குமிழியிட்ட மேல்புறம் காட்டியபடி குன்றுகளிலிருந்து நதியோட்டம், பனிப்பாறைகளின் கீழேயும்,

சிலசமயம் மேல்ப்பக்கமாயும் இருக்கிறதையும் அவன் அறிவான். எந்தக் கடுங்குளிருக்கும் அந்த நதியோட்டத்தை நிறுத்திவிட முடியாததையும் கவனித்திருக்கிறான். ஆனால் அதுதான் அதன் ஆபத்து! நொறுங்கும் அந்தப் பனியின் கிழ் மூணு அங்குலம் முதல் மூணு அடிவரையிலான குழிகள் இருக்கவும் கூடும். மேற்புறம் நெகிழ்ந்த சிறுபாறையாகவும் அடியே நீர்ப்பரப்பும், அல்லது கடினப்பாறை என்றாலுங்கூட, நொறுங்கினால் கீழே கொளகொளத்த தண்ணீர் எனவும், சில இடங்களில் பனியும், நீரும் என மாற்று அடுக்குகளாகவும் கூட அவை அமையக் கூடும். காலடியில் பனி நொறுங்க ஆரம்பித்தால். பொதுபொதுவென்று உள்ளே போய்விட நேரும், சில சமயம் இடுப்பாழம் வரை கூட.

ஆகவேதான் அலுப்பாயும் பயமாயும் அவன் உணர்ந்தான். காலடியில் பனிப்பாளம் சிலுங்கென நொறுங்கவும் அவன் பாதங்கள் சற்று மேல்வரை நனைந்தன. அந்தச் சூழலில் உடம்பில் இந்த சில்லிப்பு பிரச்னையானது. ஆபத்தானதும் கூட. குறைந்தபட்சம் அது போய்ச்சேர்கிற நேரத்தைத் தாமதம் செய்துவிடும். உடனே அங்கே தங்கி, நெருப்பு மூட்டி, சாக்ஸ் மற்றும் மேலுறைகளைக் கழற்றிக் காய வைக்க வேண்டும். நின்று அந்தப் பிரதேசத்தையும், கரைகளையும் நோட்டம் பார்த்தான். வலுதுபக்கமிருந்து புறப்படுகிறது ஆறு. தலையாட்டி அங்கீகரித்துக் கொண்டான். இடப்புறப் பாதைக்கு ஒதுங்கி, தன்னை உற்சாகப் படுத்திக் கொண்டபடி அவன், ஆனால் அடியை கவனமாய் வைத்து நடந்தான். ஆபத்தைக் கடந்துவிட்டதான பாவனை வந்தபின், அதக்கியிருந்த புகையிலையை இன்னொரு தரம் சாறுஉறிஞ்சிக் கொண்டான். தொடர்ந்து நாலுமைல் பாதையில் முன்னேற ஆரம்பித்தான்.

அடுத்த ரெண்டு மணிநேரப் பயணத்தில், இதேபோல பல உட்குழிகளை அவன் தாண்ட வேண்டி வந்தது. நீரடி கொண்ட பனிப்பாளங்களில் பொதுவாக ஒரு கல்கண்டுத்தனம், உம்மென்ற பளபளப்பு காணக்கிடைக்கும். அவையே எங்கப்பன் குதிருக்குள்ள இல்லை, என்கிறாப்போல ஆபத்தை உணர்த்திவிடும். திரும்பவும் அந்த ஆபத்து உணர்வு குபீரென மனசைச் சூழ்ந்ததும், இப்போது அவன் அந்த நாயை முன்னே போக அதட்டினான். போகாமல் சண்டித்தனம் செய்தது அது. பிடித்துத் தள்ள வேண்டியிருந்தது. உடனே அது வெண்மைப்பாடான உடையாத பகுதிகளில் விரைவாகத் தாவிச் சென்றது. திடுதிப்பென்று அது அப்படியே கவிழ்ந்து ஒருபக்கமாகச் சரிந்தது. சுதாரித்து சமாளித்துக் கடினப்பரப்பை எட்டித் தாவிக்கொண்டது. கால்கள் முழங்கால்வரை நனைந்து விட்டன அதற்கு. அதன் உடம்பில் ஒட்டியிருந்த தண்ணீர் சட்டென உறைந்து பனியானது. உடம்பெங்கும் அந்தப் பனியினை நக்கி நக்கி உருவியெடுத்தது நாய். விரல் இடுக்குகளில் உறைந்திருந்த பனியை அப்படியே உட்கார்ந்து கடித்தெடுக்க ஆரம்பித்தது. எல்லாம் தன்னியல்பான அதன் தற்காப்பு. அல்லாவிட்டால் கால் மரத்து நொந்துவிடும். இதெல்லாம் அறிந்து செய்யவில்லை அதை. உள்மனம் விழித்துக்கொண்டு அளித்த மாயக் .கட்டளைகள். மனிதனுக்கு இப்படி விஷயங்களில் பிரக்ஞைபூர்வமான கவனம், தீர்மானம் உண்டு. வலக்கை கையுறையைக் கழற்றி அவன் பனிக்கற்களை உதறிக் கொண்டான். கையால் கீறித் தறித்தெறிந்தான். ஒரு நிமிஷ அளவுக்குக் கூட கைகளை வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. ஸ்மரணைதான் என்னவேகமாக நழுவியது, என அவன் அதிர்ந்தான். யாத்தாடி குளிரா இது!... சடாரென்று உறையை மாட்டிக்கொண்டு நெஞ்சில் அறைந்து கொண்டான்.

மணி பன்னிரண்டு. ஆக வெளிச்சத்தில் இருந்தது நாள். என்றாலும் தொடுவானத்திலிருந்து வெகு தெற்காக இருந்தது சூரியன். ஹெண்டர்சன் ஓடைக்கு நடுவே இடைமறித்த சிறு மேடு. மதிய உச்சிவெயிலில் பிசிரற்ற வானம். அவன் நிழல்களற்று நடந்தான். அரை மணியில் அவன் ஓடையின் மடிப்புகளுக்கு வந்திருந்தா ன். மோசமில்லை, இதே சீராப் போயிட்டால் ஆறு மணிக்குப் பசங்களோடு இருக்கலாம்! - மேற்சட்டைப் பித்தான்களைக் கழற்றி

உள்ளிருந்து மதிய உணவை உருவியெடுத்தான். கால் நிமிஷத்துக்குள்ளார்ந்த துரித செயல்பாடு. கைகளில் ஸ்மரணை அடங்கியது, என்றாலும் உறைகளைத் திரும்ப அணிந்து கொள்ளவில்லை அவன். கால்களில் கைவிரல்களால் படார் படாரென்று பத்துத் பன்னெண்டு தரம் மோதி உரசிக்கொண்டான். பனிமூடிய மரத்துண்டு ஒன்றில் அமர்ந்து கொண்டான். உரசலில் கூட விரல்களுக்குக் கதகதப்பு போதவில்லை, என திகைத்தான். வேறு வழியில்லை. கையை மீண்டும் உரசி அவசரமாக ஒரு கையில் உறை மாட்டிக் கொண்டான், மற்றதைக் கொண்டு பிஸ்கட்டுகளைத் தின்று கொள்ளலாம். ஒருவாய் சாப்பிட... கன்னமே இறுகிப் போய் சவைக்க லாயக்கில்லாமல் கிடந்தது. அவன் மறந்துவிட்டான், ஒரு கணப்பு உண்டாக்கி, கதகதப்பான சூழலை அவன் ஏற்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். அட எழவே, எனத் தலையில் தட்டிக் கொண்ட போதே விரல்கள் கெட்டியாகி, நுனிகளின் அந்தச் சுணக்கம், மெல்ல அவை செயலிழந்து வருகின்றன. காலுறைகளுக்குள்ளே அவைகளை அசைத்துப் பார்த்துக் கொண்டான், மரத்துப் போயிருக்கு அவ்ளதான், அசைக்க முடிகிறது.

உறைகளை அவசரமாய் மூடிவிட்டுக் கொண்டு பதட்டத்துடன் எழுந்து நின்றான். இங்குமங்குமாகக் காலை உதறி அந்தச் சுணக்கமான வலி கால்களுக்குத் திரும்ப ஏற்படச் செய்ய வேண்டியிருந்தது. குளிரோ குளிர். அந்த கந்தகமலை ஆதிகுடி சொன்னது வாஸ்தவந்தான், என நினைத்தான். சிலசமயம் எக்குத் தப்பான குளிரா ஆகிப் போகிறது ஊரு. த்தா-ன்னு அவனைப் பார்த்துச் சிரிச்சேன் நான் அப்ப! எனக்கு எல்லாந் தெரியும்டான்றாப்போல! கையைக் காலை உதறி, ஒரு ஆட்டம் ஆடி கால் கையெல்லாம் கதகதப்பு வர்ற வரைக்கும் எதாவது செய்ய வேண்டியிருந்தது. சரின்னு தீக்குச்சியை வெளிய எடுத்து, நெப்பு மூட்ட வழிதேடினான். முந்தைய காலத்தில் நீரூற்றாய்க் கிடந்த இடத்தில் மானாவாரிச் சிறு செடிகள். கையால் பொத்தி சிறு நெருப்பு மூட்டிக் கொள்ள முடிந்தது. ஒருவித சத்தத்துடன் எரிந்தது நெருப்பு. முகத்தின் பனிக்கட்டிகளை வழித்துப் போட்டு உடனே பிஸ்கெட்டுகளைத் தின்று முடித்தான். அந்தப் பனிவளாகத்தை அவன் மறக்க அந்தச் சிறிது நேரம் உதவியது. நாய்க்கு நெருப்பைக் கண்டதில் திருப்தி. பக்கத்திலேயே உடம்பை நீட்டி விரித்துக் கொண்டது. நெருப்பு தெறித்து சுட்டுவிடாத துாரத்தில் கவனமாய்க் கிடத்தியது உடம்பை.

சாப்பிட்டபின், புகைக்குழாயை எடுத்து புகையிலையை சுகமாகப் பற்ற வைத்துக் கொண்டான். உடலை, கையுறைகளை மேலே இழுத்து விட்டுக் கொண்டபடி திரும்ப சந்தியின் இடதுபாதையில் கிளம்பினான். நாய் ஏமாற்றமாய் உணர்ந்தது. அது கதகதப்பருகிலேயே இருக்கலாமாய் நினைத்தது. இந்த மனுசனுக்குக் குளிர்னா தெரியல. குளிர்னா, அதாவது நிஜக்குளிரை மனுசனோ அதன் எந்த வம்சமோ உணர்தாரில்லை. உறைநிலையின் கிழே நூத்திச் சொச்ச குளிரப்பா. நாய்க்குத் தெரியும். அதன் வம்சாவளிகள் அறியும். காலங்காலமாய் அந்தக் கடுமைக் குளிரை கொடுமைக் குளிரை அதுங்கள் மனசாலேயே அறிந்தவை. இப்ப இப்பிடி வெளிய இறங்கறாதவது, பேசப்டாது! - என அவை அறிந்தவை. இப்ப செய்ய வேண்டியதெல்லாம் எதாச்சும் பொந்தில் பம்மிக் கொள்ளுதல். வானத்தில் கொஞ்சம் மேகத்திரை விலகட்டும். சரி, அதுக்கும் அந்த மனுசனுக்கும் ஒரு உறவுங் கிடையாது. எந்த மனுசனும் அதைத் தடவிக் கொடுத்ததில்லை. யாத்தாடி, சவுக்கால் விளாறுவார்கள், சவுக்கு தடவும் உடம்பை, அதைவிடக் கடுமையான எஜமானர் குரல், உறுமல். ஆக நாய் அவனிடம் தன்னபிப்ராயம் தெரிவிக்க ஏதுமில்லை. நீ எக்கேடுனா கெட்டொழி, நான் இப்டி நெருப்பாண்டை முடங்கிக்குவேன். ஆனால் அந்த மனிதன் ஒரு விசில் கொடுத்தான். அதட்டலான, சவுக்குத்தனமான ஒரு மிரட்டல். நாய் ஒரு துள்ளலில் பணிந்து பின் தொடர்ந்தது.

இன்னொரு புகையிலைக் குதப்பல். தாடிமெழுகு வளர ஆரம்பித்தது. ஈரமூச்சு பொடியாகி மீசையில் கவிகிறது. முடியெங்கிலும் பனித்தோரணம். ஹெண்டர்சன் ஓடையின் இடது பகுதியில் ஊற்றுக்கண்கள் அதிகம் இல்லை. பாதை அரைமணி தூரம்வரை மாற்றமின்றித் தொடர்ந்தது. அப்பறந்தான் அது நடந்தது. பார்த்தால் தெரியவேயில்லை. கீறல் இல்லாக் கெட்டிப்பனி வெளி. சிலுங். மனுசன் கால் உள்ள போயிட்டது. அதிக ஆழமில்லை. முட்டிவரை நனைத்து விட்டது. சட்னு காலைக் கெட்டிப்பாளத்தில் மாற்றிக் கொண்டான்.

தனக்கே கோபம் வந்தது. இன்னா கருமாந்திரம்டா இது, எனக் கத்தினான். ஆறு மணிக்குள்ள பசங்களோட இருக்கலாம்னு பாத்தா, ஒரு ஒருமணிநேரம் பிந்திரும் இப்ப. சப்பாத்துகளைக் காய வைக்கணும். தீ மூட்டணும். படு குளிர், அப்டியே விட்ற முடியாது. மேலேறி வந்த வழியைத் திரும்பிப் பார்த்தான். மெலிந்த கிளைகளுடன் எதோ மரம் நீட்டிக் கிடந்தது மேலே. சற்று உலர்ந்த குச்சிகளும் கொப்புகளுமான மரக்கிளைகள். உருண்டு பெருத்த மரத்தண்டுகள். கூடவே போனபருவத்திலான உலர்ந்த புல்ப்புதர். பனிமேல் பெரும் கிளைகளைப் போட்டு அதன்மேலே நெருப்பு மூட்டினான் அவன். சட்டென பனிஉருகி நெருப்புக் கொழுந்தை அமுக்கிக் கொண்டுவிடக் கூடாது. பையில் தயாராய் வைத்திருந்த பிர்ச் மரக் குச்சியில் தீக்குச்சியை உரசிப் பற்ற வைத்துக் கொண்டான். காகிதத்தைக் காட்டிலும் பிர்ச் மரக்குச்சி தேவலை. பெருமரத்திண்டைப் பனியில் மேலாகப் போட்டு அதன் மேல் சிறு புல்மண்டியைப் போட்டு, மரக்குச்சிகளைச் சின்னச் சின்னதாய்த் கோழித்தீவனமாய்ப் போட்டுத் தீ வளர்த்தான் அவன்.

கப்புனு தீ அமர்ந்து விடும், தெரியும். பொறுமையா நிதானமா எல்லாம் செய்தான். தீ மெல்ல உரு வளர்ந்தது. சற்று தடிமனான குச்சிகளை இப்ப போட்டான். பிறகு சற்று அலைந்து பெரிய கிளைகளையே எடுத்து வந்து போட ஆரம்பித்தான். அஜாக்கிரதை கூடாது. நெருப்பு முக்கியம். மைனஸ் எழுபத்தியஞ்சில் முதல் முயற்சியிலேயே நெருப்பு மூட்ட மனுசன் திண்டாடிறப்டாது. அதும் பனிக்குட்டைக்குள்ள விழுந்த கால் நனைஞ்ச மனுசன். நனையலியா, ஒரு அரைமைல் ஜிகுஜிகுன்னு நடை, கால் இரத்தவோட்டம் சுணங்காமப் பார்த்துக்கலாம். கால் நனைஞ்சி, முடங்கியாச்சின்னா நடக்கவேயேலாது, எங்க ஓட? ஓட முயற்சி பண்ணினாலும் வேகமாக் கால் மரத்துரும்.

எல்லாம் புரிகிறது. அந்த கந்தகமலை மூப்பன்.... அவனும் சொன்னான். நல்லாத்தான்யா சொன்னான். இப்போது அதை அங்கீகரித்துக் கேட்டுக் கொண்டான். கால்ல உணர்ச்சியே இராது போலுக்கேய்யா... குச்சி பொறுக்கணும் என்று கையுறைகளைக் கழட்டியிருந்தான். விரல்கள் நமத்துப் போயிருந்தன. மணிக்கு நாலு மைல் வேகம். அது இதயத்துடிப்பை நல்லா வெச்சிருந்தது. வெளிவட்டாரச் சீர்கேடுகளை மீறி உடம்பெங்கும் அது இரத்தம் செலுத்திக் கொண்டிருந்தது. ஆனா, மனுசன் எப்ப நின்னானோ, இதயத்துடிப்பும் அடங்க ஆரம்பிச்சிட்டது. பூமியின் மேல்த்தள பாதுகாப்பற்ற வழுக்கை வெளி அது. அதில் அவன். அத்தனை பனிக் கொட்டலும் அந்த உச்சிமண்டையில்தான். உடம்பு ரத்தசூடே பம்மியது உள்ளே... நாயைப் போல! அவன் அசைந்து கொண்டிருந்தவரை உடம்பு பூரா அது சுற்றி வந்தது. இப்ப மடங்கிச் சுருண்டது உள்ளேயே. அதனாலேயே நனைந்த காலும், விரல்களும் முன்னிலும் வேகமாய்ச் செயலிழக்க ஆரம்பித்தன. அந்தாக்ல விரைச்சிக்கிடாம இருக்கணும். நாசி கன்னம்லாம் எப்பவோ விரைத்து விட்டது. தோலில் கூட இரத்தம் பரவாத விரைப்பு. சில்லிட்டு வந்தது தேகம்.

ஆனாலும் பாதகம் இல்லை. கன்னமும் மூக்கும் விரல் நுனிகளும் பனியால் தொடப்படும் அவ்வளவுதான். நெருப்பு சுறுசுறுத்து விட்டது. விரல் விரலான குச்சிகளால் அவன் தீயைப்

பெரிசாக்கினான். ஒரே நிமிஷம், கைத்தண்டிக் கட்டைகளைப் போட முடியும். சதுப்புநிலபூட்சுகளைக் கழற்றி விடலாம். அது காயும்போது வெறுங்காலை நெருப்பைப் பார்க்க நீட்டியபடி பரபரவெனத் தேய்த்துக் கொடுக்கலாம். ஜிவுஜிவுவென்று பத்திக்கிட்டது ஜ்வாலை. கந்தகமலை கிழடு... நல்லாத்தான் சொன்னான். சிரித்துக் கொண்டான். "அம்பது டிகிரிக்கும் கீழ போயிட்டதா, மவனே தனியே போற ஜோலியே கூடாது, பாத்துக்க." - ஆ ஐயா நான் வந்தேன், தனியே, ஆமாம், பத்திரமாய் இருக்கேன். ஒரு அசந்தர்ப்பம் வந்தது, வாஸ்தவம். ஆனா தப்பிச்சாச்சு. நாயினாவுக்கு வயசாயிட்டதில்லியா, கொஞ்சம் யோசனையா, பொம்பளையாளுகளாட்டம் பயந்து கையைப் பிடிச்சி மறிக்கறதுதான்... எந்தப் பிரச்னை வந்தாலும் சுதாரிப்பா செயல்படணும், அவ்ளதான் விசயம். மிடுக்கான ஆளுங்கள் தனியே வர்றதுதான்.... ஆனா ஐயோ என்ன வேக வேகமா மூக்கும் கன்னமும் விரைச்சிருது.

ச், அத்த விடு. நெருப்பு இருக்கிறது. என்ன ஜோரா நடனம் ஆடுது பார். கொறுக் மொறுக்னு குச்சி நொறுங்கும் சத்தம். உயிரின் சத்தம். மேலங்கியைக் கழற்ற ஆரம்பித்தான். ஜெர்மானிய கெட்டித்துணி சாக்ஸ், இரும்புப் பட்டையாட்டம் ஒட்டியிருந்தது. அங்கி நாடா ஒண்ணொண்ணும் எஃகுக் கம்பியாட்டம் முறுக்கிக் கிறுக்கி முடிச்சானாப் போலிருந்தது. சுரண்டிப் பார்த்தான். அது வருமாடா மவனே , எட்றா கத்தியை...

ஆனால் நாடாக்களை நறுக்குமுன் அது நடந்தது. அவன் செஞ்ச கோளாறு, அல்லது தப்பு அது. ஒரு மரத்தடியில் அவன் நெருப்பு மூட்டலாமா? அத்துவான வெளியில்தானே மூட்டணும்? அட பக்கத்தில் குச்சி கிச்சி கிடக்கும், அப்டியே எடுத்து எடுத்துப் போட முடிஞ்சது. மரமானால் கிளைகளில் கெட்டி கெட்டியாய்ப் பனிப்பாளம் சுமந்து அசையாதிருந்தது. வாரக் கணக்குல அங்க காத்து கீத்து ஒண்ணுங் கிடையாது. குச்சியெடுக்க அவன் அசையுந்தோறும், மரத்தை லேசா அவன் உலுக்கினான். தானேயறியாத உலுக்கல். அந்த விபரீதத்துக்குப் போதுமான தவறு. உச்சிக்கிளை ஒண்ணு பனிச்சுமையை ஒரு உதறு உதறி கீழ்க்கிளையில் விழுந்தது. கீழ்க்கிளையின் பாரம் அதிகரித்து, இப்படியே மொத்த மரமும் திடுக்னு அவன் மேலயும் அந்த நெருப்பு மேலயும் அந்தாக்ல உட்கார்ந்தது. கப்பென்று அணைந்தது நெருப்பு. அந்த இடத்தில் இப்போது உடைந்த பனிச் சில்லுகள்.

விக்கித்துப் போனான், தானே தனக்கு மரண தண்டனை வழங்கிக்கிட்டாப் போல, ஒரு குபீர். நெருப்பு ஏத்திய இடத்தை ஒருவாட்டி பார்த்தான். மனசைக் கட்டுப் படுத்திக் கொண்டான்... தாத்தா சொன்னது சரிதான். கூட சகா யாராச்சும் இருந்தால் இந்த நிலைமை வந்திருக்காது. அவன் மூட்டியிருப்பான் நெருப்பை. சரி, அத்த விடு. இப்ப திரும்ப நெருப்பு மூட்ட வேண்டும். இந்த ரெண்டாம் முறை தவறு செய்யவே கூடாது. எப்பிடியும் இந்த விவகாரத்தில் சில கால்விரல்கள் செயல் இழந்தது இழந்ததுதான். இன்னும் நெருப்பு ஏத்துமுன் நிலைமை மேலும் மோசமாத்தானே ஆகும்...

ஆனா உட்கார்ந்து இப்படியெல்லாம் நினைக்க முடியவில்லை. வேறு இடம் பார்த்தான் நெருப்பு வைக்க. அத்துவான வெளி! மரங் கிரம் ஒண்ணுங் கிடையாது. உலர்ந்த புல், மெலிந்த குச்சிகள் தூரத்தில் ஊற்றுப் பிரதேசத்தில் இருந்து எடுத்து வந்தான். புல்லை குச்சிகளை உருவியிழுக்கவெல்லாம் முடியாது. கைகையாகக் கொண்டுவர வேண்டியிருந்தது. அழுகிப்போன கிளை, புல்லும் பச்சைப் புல்... பரவாயில்லை. முடிஞ்சதை எடுத்து வந்தான். பெரிய கிளைகளையும் கூட எடுத்து வந்தான், தீ பெருகியதும் பயன்படும். கவனமாய் அந்த நாய் அவனையே பார்த்துக் கொண்டிருந்தது. மனுசனுக்குத்தான் நெருப்பு மூட்டத் தெரியும்.

எல்லாம் தயார் பண்ணிக் கொண்டதும், பிர்ச் குச்சிக்குப் பைக்குள் கைவிட்டான். கையில் சொரணையே இல்லியேடா. ஆ குச்சி உள்ளே புரளும் சத்தம். கையில் அதை எப்படி எடுப்பது? அட அவசரம். காலுங்கூட மரத்துட்டு வருது... ச் பதறாதே. நிதானம் பிரதானம். பல்லால் கையுறையை இழுத்து விரல்களை அசைத்தான். வேகவேகமாக உடம்பில் தட்டிக் கொடுத்தான். உட்கார்நதபடியே உதறியவன், உடனே எழுந்துகொண்டே திரும்ப உதறிக் கொண்டான். நாய் உட்கார்ந்தபடி கால்நகங்களை வாலால் மறைத்துக் கொண்டிருந்தது. காதுகளால் அந்தக் சத்தத்தைக் கூர்ந்தபடி வேடிக்கை பார்த்தது. இந்த மகாப்பனிக்கு அசராமல் தாக்குப் பிடிக்கிற பாதுகாப்புடைய அந்த ஓநாயைப் பார்த்து அவனுக்குப் பொறாமையாய் இருந்தது.

தட்டோ தட்டெனத் தட்டியதில் சிறிது நேரத்தில் உணர்வு ஊர்ந்து வந்தாப் போலிருந்தது. லேசான உள் மதமதப்பு மெல்ல ஊறிப் பெருகி சிறு சுளுக்குபோலும் தெரிய ஆரம்பித்தது... சூப்பர்! வலது கைக் கையுறையை விறுவிறுவென்று கழற்றி பிர்ச் மரக்குச்சியை பைக்குள்ளே அள்ளினான். அட அதற்குள் திறந்திருந்த விரல்கள் சண்டித்தனம் செய்ய ஆரம்பித்துவிட்டன. பிறகு கந்தகத்தலை தீக்குச்சிகளை வெளியே எடுத்தான். விரல்கள் இறந்திருந்தன. கொத்தான தீக்குச்சிகளில் ஒன்றில் இருந்து மற்றதைப் பிரிக்க... ஐய, அத்தனையுமே பனியில் கொட்டி விட்டன. திரும்ப அவற்றை எடுக்க... முடியவில்லை அவனால். தீக்குச்சிகளைத் தொடுவதோ, விரலால் பற்றுவதோ எதுவுமே அவனால் கூடவில்லை. ரொம்ப எச்சரிக்கையாகவே அவன் செயல்பட்டான். கையோ, காலோ, மூக்கோ, எதுவோ விரைந்து எதுவும் உறைந்து கொண்டு வரட்டும்... அவன் மனம் முழுவதையும் அந்தச் தீக்குச்சிகளில் செலுத்தினான். மனசினால் பார்வையினால் அந்தத் தீக்குச்சிகளைத் தொடுவதை கவனித்து விரல்களை இயக்கிப் பார்த், விரல்கள் அசைய மறுத்தன. கையுறையை உருவி, வலதுகை விரல்களை முட்டியில் அடியோ அடியென்று அடித்தான். பின் கையுறைகளை அணிந்துகொண்டு, இரண்டு கைகளையும் தீக்குச்சிகளுக்குக் குவித்தான். அப்படியே பனியுடன் வாரி மடியில் தீக்குச்சிகளைப் போட முயன்றான். வேறு வழி இல்லை.

என்னவெல்லாமோ செய்ததில், கால் மற்றும் கையுறைகளுக்கு நடுவே அந்தத் தீக்குச்சிக் கொத்துகள் சிக்கிக் கொண்டன. அப்படியே வாய்க்குக் கொண்டு வந்தான். வாயைத் திறக்கவுமே பெரிசாய் பனிக்கட்டி மூச்சில் நொறுங்கியது. ஒரேயொரு குச்சியை வாயால் கவ்வி... ஆ, ஒரு குச்சி! மடியில் விழுந்தது அது. பொறுக்க முடியவில்லை. வேறு வழி கிடையாது. திரும்ப வாயில் கவ்வி மடியில் உரசோ உரசென்று உரசிப் பார்த்தான். பத்து தடவை. இருபது தடவை... ஆ வெற்றி! அந்த நெருப்பை அப்படியே பல்லால் கடித்தபடி பிர்ச் குச்சிக்குக் கொண்டுபோனான். ஆனால் கந்தகப்புகையும் நெடியும் மூக்கில், சுவாசத்தில் ஏறிக் கமறி, உடனே இருமல் வந்தது. தீக்குச்சி பனியில் விழுந்து விழுந்தஜோரில் அணைந்துபோனது.

அந்த ஆதிவாசிக் கிழக்கம்னாட்டி, த்தா, சர்ரியாத்தான் சொன்னான்... "மைனஸ் அம்பதுடா, தனியாப் போவாதே." கைகளைத் தட்டிக்கொண்டான். ஒரு உணர்ச்சியும் இல்லை. திடுதிப்பென்று ரெண்டு கையுறையும் பல்லால் உரித்தான். விரல்களைப் பத்தியென்ன, முழங்கைவரை இன்னும் உணர்ச்சி பாக்கியிருக்கிறது. அதில் அந்தத் தீக்குச்சிக் கொத்தை, ஏறத்தாழ எழுவது குச்சிகள்... அப்படியே காலோடு தேய்த்துப் பற்ற வைக்க முயன்றான். வெற்றி! அதை அமர்த்திவிட காற்று கிடையாது. புகையடித்து விடாதபடி முகத்தை விலக்கிக் கொண்டு, பிர்ச் குச்சிக்கு அந்தத் தீயை நீட்டினான். ஆ கையில் அந்த வெதுவெதுப்பு... சதையே பற்றி எரிகிறது. உள்ளாழத்தில் அதை உணர முடிகிறது. மெல்ல வலியாகி வலி

உக்ரமாகியது. என்றாலும் குச்சி பற்றிக் கொள்ளவில்லை. உடம்பே அதிகபட்ச வெப்பத்தை தனக்கு வாங்கிக் கொண்டிருந்தது.

தகிப்பு தாளமுடியாமல் கையை அவன் உதறினான். தீக்கொத்து கீழே விழுந்தபோதிலும், ஆ, பிர்ச் கிளை பற்றிக் கொண்டது! உலர்ந்த புல்கற்றைகளையும் மெலிசான குச்சிகளையும் தீயில் அப்படியே முழங்கையால் தள்ள வேண்டியிருந்தது. அழுகிய பகுதிகளை, பசுமைப் பகுதிகளை வாயால் கடித்துத் துப்ப வேண்டியிருந்தது. காரியங்கள் தனக்கே அதிகப்பிரசங்கித்தனமாக இருந்தன, என்றாலும் வேலை ஆச்சே! வாழ்க்கை! அது அடங்கீறப்டாதப்போவ்! உடம்பில் மேல்மட்டத்தில் இருந்து உள்பதுங்கிக் கொண்டிருந்தது இரத்தவோட்டம். ஆளை நடுக்கியது குளிர்... பெரிய பசுந்தண்டு ஒன்று அந்தச் சிறு நெருப்பில் பொத்தென விழுந்தது. தண்டைத் தள்ளுகிறேன் பேர்வழியென்று அவன் புல்கற்றையையும், சிறு குச்சிகளையும் தனித்தனியே பரசி விட்டான். திருப்பி அவற்றை ஒண்ணு சேர்க்குமுன் குச்சிகள் புகையாகி புஸ்ஸென்று நெருப்பு அமர்ந்து விட்டது. மனுசன் தோற்றுப் போனான். நொந்து தளர்ந்தவனாய் அவன் அந்த ஓநாயைப் பார்த்தான். நாய் நெருப்பு அணைந்த பகுதியில் ஓய்வற்றதாய்ச் சுற்றிச் சுழன்றபடியிருந்தது. ஒருகால் தூக்கி மறுகால் வைத்து இப்படி அசைந்தபடி அந்த நெருப்பின் மிச்சத்தை மேய்ந்து கொண்டிருந்தது அது.

ஆ, ஒரு கதை அவன் படித்திருக்கிறான்... ஒருமுறை பனிப்புயலில் சிக்கிய மனிதன் ஒருவன், பனிக்கரடி ஒன்றைக் கொன்று அதன் உடம்பைக் கிழித்து உட்புகுந்துகொண்டு உயிர் பிழைத்த கதை! இந்த நாயைக் கொன்றுவிடலாம்! அதன் உடல்சூட்டில் விரலைச் செலுத்திக்கொள்ளலாம். பின் திரும்பவும் தீ மூட்ட முயற்சி பண்ணலாம்... அவன் அந்த நாயை அருகில் அழைத்தான். கூப்பிட முடியவில்லை. குரல் உணர்ச்சிக் கொந்தளிப்பில் நடுங்கியது. தனக்கே அந்நியமான குரல். நாயே பயந்தது அருகில் வர. மனிதனிடமிருந்து அப்படியொரு பேதலித்த குரல்... அது கேட்டதேயில்லை. என்னவோ ஆபத்து டோய்! அது புரிந்து கொண்டது. என்ன ஆபத்து, எப்படி ஆபத்து... தெரியாது. ஆனால் அதன் சூட்சுமத்தில் அது உணர்ந்து கொண்டது. நிலைமை சரியில்லை! இந்தாளை நம்ப ஏலாது. அதுபாட்டுக்கு நெருப்பின் ஸ்மரணையைத் தொடர்ந்தது. அதே கதகதப்பில் சுற்றியடிக்க ஆரம்பித்தது, இவனை சட்டை பண்ணாமல். கையை முட்டியை ஊன்றி அவன் நாயை நோக்கி ஊர்ந்தான். அவன் நடவடிக்கையே சரியாயில்லியே... நாய் விலகி எட்டிப் போனது லேசாய்.

இருடா இரு. நிதானம். அப்படியே உட்கார்ந்து மனதைக் கட்டுப்படுத்தினான் அவன். உறைகளைப் பூராவும் மாட்டிக் கொண்டான். மெல்ல எழுந்து கொண்டான். எலேய் நிக்கறியா? ஒருதரம் குனிந்து பார்த்துக் கொண்டான். கால் மரத்திருந்ததில் தரையில் நிற்கிற பாவனையே அத்துப் போயிருந்தது. சற்று விரைந்த நிற்றல். அது கூடச் சரியா இல்லியே... என நினைத்தது நாய். ஆனாலும் அந்த அதிகாரக் குரல், அதட்டல்.... நாய் பணிந்து சற்று கிட்டத்தில் வந்தது. கைக்கிட்டத்தில் அது வந்தஜோரில் அவன் தன்வயமிழந்தான். கையை ஆவேசமாய் வீசி... அட கண்றாவிச் சனியனே, கை எப்பவோ உறைந்திருந்தது. விரலை மடக்கவோ விரலால் பிடிக்கவோ அவனால் முடியாது... ஆனால் நாய் எகிறுமுன் அதை அப்படியே வாரியணைத்துக் கொண்டான். அப்படியே பனியில் உட்கார்ந்தான். நாய் உடலை நெளித்து கீச் கிச்சென்று முனகித் தவித்தது.

முடிஞ்சது அவ்வளவுதான். நாயைக் கட்டி இறுக்கிக் கொள்ளலாம். அவனால் நாயைக் கொல்ல இயலாது. ஆடையை நெகிழ்த்த இயலாது. உள்க்கத்தியை வெளியே எடுக்க இயலாது.

அப்படியே நாயை கழுத்தை நெறித்துக் கொல்லவும் வழியில்லை. அட விட்றா அதை... கப்பைக்குள் வாலைக் கொடுத்தபடி நாய் சிறு ஊளையிட்டது. பத்து நாப்பதடி தள்ளிப்போய் நின்று காது தூக்கி அவனை ஒரு நோட்டம் பார்த்தது. அவன் தன் கைகளையே பார்த்துக் கொண்டான். அதோ. உணர்ச்சியற்ற தன் கைகளை தானே பார்த்தே தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது, என அவன் திகைத்தான். அந்தக் கைகளைக் கையுறைகளுடன் நெஞ்சில் அறைந்து கொண்டான். ஒரு அஞ்சி நிமிஷம் விடாமல் அறைந்து கொண்டான். இதயத் துடிப்பு இப்போது அதிகரித்தது. நடுக்கம் சிறிது குறைந்தது. ஆனால் கையில் உணர்ச்சியே இல்லை. ஒரு கனமான பாரமாய்க் கைகள் தோளில் சேர்ந்தருப்பதாய் நினைத்தான். ஆனால் அதை உணரக் கூடவில்லை.

மரணத்தின் ஒருவிதமான பீதி, மங்கலான அழுத்தமான பீதி. எடேய் இது கையோ காலோ விரலோ உறைகிறதோ, விழுந்து போகிறதோ இல்லை, இது அதுக்கும் மேலே, வாழ்வா சாவா பிரச்னை. கப்பென்று ஏதோ உள்ளே அடைத்தது. திகிலுடன் அவன் அந்த மங்கிய பனிப்பாதையில் ஓடினான். நாய் கூட ஓடிவந்தது. வாழ்க்கையில் அப்படியொரு பதட்டத்தை அனுபவித்ததேயில்லை... நோக்கமின்றி ஒரு ஓட்டம். மெல்ல அவன் பார்வையில் எல்லாம் தெரியவந்தன... பாதையின் இருகரைகள். மரஅடுக்குகள். மொட்டைமரங்கள். வானம்... ஓடுவது தேவலாமாய் இருந்தது. உடல் நடுக்கமில்லை இப்போது. ஆனால் சீக்கிரமே முட்டி கலகலத்து விடும். ஒற்ற ஓட்டத்தில் திரும்பக் கூடாரத்துக்கு, பசங்களிடம் போய்ச் சேர்ந்துற முடியுமா? மூஞ்சி முகறை கைகால் விரல் அப்டியே சொரணை மரத்துக்கிட்டே வரும். ஆனால் பசங்கள் பார்த்துக்க மாட்டாங்களா அவனை? அட இதெல்லாம் நடக்கிற கதையா, என்றது இன்னொரு மனசு. உடம்பு குளிர்ந்துகொண்டே வரும். மகா பிரம்மாண்டக் குளிர். உடம்பே இறுகி ஆள் அவ்ட் ஆக வேண்டிதான். அட அப்டில்லாம் ஆவாது, என அலட்சித்தான். மற உடனே கெட்ட நினைப்புகளை மற...

காலால் ஓடுகிறதே நம்புகிறாப்போல இல்லை. இந்த உடம்புபாரத்தைத் தாங்கிக்கொண்டு இந்த பூமியில் பாதங்கள் அசைகிறதே அவனுக்குத் தெரியவில்லை. சற்று எட்டிப் பறக்கிறானா அவன்? வால் நட்த்திரம்... அதைப்போலவா என் நிலைமை?

கூடாரம் வரை, பசங்கள் வரை ஓடும் அவன் திட்டத்தில் ஒரு பிசகு. அவனால் தாக்குப் பிடித்து ஓட இயலவில்லை. அடிக்கடி தள்ளாடியது. அவனால் முடியாமல் தடுமாறி, கீழே சரிந்து, விழுந்தான். எழ முயற்சித்து, முடியவில்லை. அட உட்கார், அப்படியே ஓய்வெடு. அப்பறம் மெல்ல நடப்பம், அப்டியே நிற்காமல் கொள்ளாமல் நடப்பம். எழுந்து உட்கார்ந்து மூச்சைச் சீராக்கிக் கொண்டான். கதகதப்பு இருந்தது. பராவில்லையே என்றிருந்தது. உடல் நடுக்கம் இல்லை. நெஞ்சிலும் கழுத்திலும் ஒரு வெதுவெதுப்பு. மூக்கில் கன்னத்தில், ம்ஹூம், சொரணையே இல்லை. ஓடுயதில் அவற்றில் மாற்றம் எதுவுமில்லை போல. கை காலில் கூட ஒரு நெகிழ்ச்சியும் இல்லை. அப்புறம் அவன் நினைத்தான், இந்த உறைதல்... மெல்ல உடம்பின் பிற பகுதிக்கும் பரவும்... அட அதெல்லாம் இல்லை, என அந்த நினைப்பை உதற முயன்றான். வேறெதாச்சும் நினைக்க முயன்றான். குப்பென்று அந்தப் பீதி உள்ளே கனமாய் உட்கார்ந்திருந்தது. உடம்பு முழுக்கவே உறைந்தாப்போலவே ஒரு கணம் இருந்தது அவனுக்கு. ஐயோ, எனப் பதைத்து திரும்ப ஓட ஆரம்பித்தான். கொஞ்சம் தயங்கி நடக்கலாம் என நினைத்து, உறைஞ்சு போவே சனியனே, தொடர்ந்து ஓடினான்.

நாயும் கூடவே காலடியில் ஓடிவந்தது. அவன் ரெண்டாம் முறை விழுந்தான். அது சட்டெனத் தள்ளிப்போனது. தன் முன்னங்கால்களின் மேல் அமர்ந்துகொண்டு அது அவனைக் கூர்ந்து பார்த்தவாறிருந்தது. என்னாவறான் இவன், பார்ப்பம்! அடங் நொக்க மக்கா, என்னா

சவுரியமா இருக்கு இந்தப் பனில இது, அவனுக்கு ஆத்திரம் தாளவில்லை. அதைப் பிடித்துத் தள்ளினான். நாய் காதைக் கவிழ்த்துக் கொண்டது. குபீரென இப்போது உடம்பு சடசடவென நடுக்கங் காட்ட ஆரம்பித்து விட்டது. தாக்குப் பிடிக்க முடியாது என்றே பட்டது இப்போது. மெல்ல குளிர் எல்லாத் திசையில் இருந்தும் உள்ளே ஊடுருவியது. எழுந்திரு. ஓடு. ஒரு நூறடிகூட ஓடுமுன், தலைகுப்புற விழுந்தான். என்னவொரு திகில் உள்ளே. மூச்சைத் தாக்குப் பிடி. நிதானப்படு... ஆ சாவை நெஞ்சாற எதிர்கொள்ளலாம்... ஆனால் அது நினைச்சாப்போல முடியுமா? அட பைத்தாரப் பயலே, என நினைத்துக் கொண்டான். ஒரு கோழியின் தலையறுத்த முண்டம்போல சாவு தன்னைச் சுற்றி வருகிறது. மெல்ல உறைந்து, அப்டியே அடங்கீர்றது... சரி அப்டியே ஆவட்டும்னு காத்திருக்கலாம். மெல்ல மயங்கின நினைவுகள். அப்டியே தூங்கினாப்ல போய்ச் சேந்துறலாம்... மயக்க மருந்து முகர்ந்தாப் போல. அப்டியே உறையறது, அதொண்ணும் மோசமில்லை. அதைவிட மோசமான சாவுகள் எத்தெத்தனையோ இருக்கு.

காலைல பசங்க வந்து என் பொணத்தைப் பார்ப்பார்கள். அவர்கள் கூட நானே அந்தப் பனிப்பாதையில் தேடிவந்து என் பொணத்தையே தேடிவருகிறதாக, அப்டி ஒரு திருப்பத்தில் அவனையே அவன் பனியில் கண்டுபிடிக்கிறதாக ஒரு நினைப்பு. எனக்கு நானே சொந்தம் இல்லாமலாச்சு. அதோ நிற்கிறவன், நின்றபடி என்னையே பார்க்கிறானே அவன் யார்?... செமக் குளிரப்பா.... நாட்டுக்குத் திரும்பிப் போய், குளிர்னா என்னன்னு நான் சொல்வேன்! அந்த கந்தக மலை பெரிசு, வசதியா உட்கார்ந்து புகைக்குழாயைப் பற்ற வைத்து உட்கார்ந்திருக்கிறான். கரீட்டாச் சொல்ட்டியே பெர்சு... நீ கில்லாடி மாமோய்...

கண் மயங்கியது, இதுதான் பெரிய வசதியான திருப்தியோ திருப்தியான உறக்கம்... எதிரில் நாய் பார்த்தபடி காத்திருந்தது. சிறு பகல் மெல்ல வெளிறி நீர்த்தது. அப்டியே உக்காந்திருக்காப்டி, அந்தக் குளிரில், இன்னும் நெருப்பு மூட்ட யோசனையே இல்லியா இந்தாளுக்கு? மெல்ல உடலை வளைத்து நெளித்து சிறு சப்தமெழுப்பி அது அவனை முடுக்கிவிடப் பார்த்தது. அவனிடம் ஒரு அசைவுமில்லை. நாய் பெரிய ஊளையாய் இட்டது. இன்னுஞ் சிறிது கழித்து அவனை நெருங்கி முகர்ந்தது. ஆத்தி, செத்துட்டாம் போலுக்கே, எனத் துள்ளிப் பின்வாங்கியது. குளிர்ந்த வானம். நட்சத்திரங்கள் வழுக்கியிறங்கின. நாய் வானத்தைப் பார்த்து ஊளையிட்டது. பின் அது திரும்பி கூடாரம் இறக்கியிருந்த பகுதிநோக்கி, அதை அது அறிந்திருந்தது, உணவும் நெருப்பும் இருக்கிறதா என்று தேடிப்போக ஆரம்பித்தது.

>>>

To build a fire/Jack London

மனுசனைச் சீக்கிரம் சாக விடாமல் அவன் போராட்டத்தை விஸ்தரிச்சிப் போறார் எழுத்தாளர். அதில் அவனைப் பார்க்க இரக்கப் பட்டாப் போலவும் இல்லை. மனுசன் மகத்தானவன், எல்லாத்தையும் சமாளிப்பான், என்கிற திமிர்க்காட்டலும் இல்லை, என்கிற ஆச்சரியமான கதை. அப்டியே நடந்ததை நடந்தாப்ல சொல்லுவேன், என்கிறார். பார்வையாளன் என ஒரு நாயைக் கூட வைக்கிறார். ஒரு தாத்தா மவனே நீ செத்துறவடா, எனவும் திரும்பத் திரும்ப ஞாபகப் படுத்துகிறான். நாய் இல்லாமல் கதையின் திரைச்சீலை இத்தனை வண்ணங்களைப் பெற்றிருக்காது என்றுதான் தோணுகிறது.

## விவாகங்கள் விகாரங்கள் விவாதங்கள்

*ரிச்சர்ட் பாஷ் (அமெரிக்கா)*

"வில்லியம் கூம்ஸ். ரெண்டு ஓ." மெலனி பாலிங்கர் அப்பாவிடம் தொலைதூரத்தில் இருந்து தொலைபேசியில் சொன்னாள். "கூப்பிடும்போது, சீப்பு வருமே, கோம்ஸ், அதைப்போல. சொல்லுங்கப்பா..."

பாலிங்கர் திரும்பி அந்தப் பெயரைச் சொன்னார்.

"முழுப்பேரும் சொல்லுங்க."

"தெரியுண்டா. ஏன் சொல்லச் சொல்றே?"

"அப்பா, அவரை வீட்டுக்கு அழைச்சிட்டு வரேன். நாங்க கல்யாணம் பண்ணிக்கலாம்னிருக்கோம்."

அவருக்குப் பேச வரவில்லை.

"அப்பா, கேட்கறீங்களா?"

"ம்"

"அப்பறம்?"

மீண்டும் அவருக்குத் திண்டாட்டமாய் இருந்தது.

"அப்பா?"

"ம்... முக்கியமான சமாச்சாரம்தான்."

"அவ்ளதானாப்பா?"

"ஸ். அதாவது, மெலனி, அபார ஜரூர்... இல்லே?"

"அப்டில்லாம் இல்லப்பா. நீங்களும் அம்மாவும் எத்தனைநாள் காத்திட்டிருந்தீங்க?"

"அது ஞாபகமில்லை. ஆக அதுனாலதான் இந்த முடிவுன்றியா?"

"நீங்க ஆறு மாசமா யோசிச்சிட்டிருந்தீங்க. அப்புறம் ஒரு அஞ்சுமாசம் ஓடிட்டது. ஆனா அதைவெச்சி நாம பேச வேணாம். நானும் வில்லியமும் அஞ்சு மாசத்துக்கும் மேல பழகினவங்கதான். இப்ப இருபத்திமூணு முடியப்போகுது எனக்கு. அம்மாவின் கல்யாணவயசைவிட ரெண்டு வருஷம் ஜாஸ்தி... அப்ப அந்தக் காலம் வேறன்னுல்லாம் பேச வேணாம்..."

"இல்ல" என்றார். "எல்லாம் ஒண்ணுதான்-னு நினைக்கிறேன்."

"அப்பறம்?" அவள் கேட்டாள்.

"ம்" பாலிங்கர் சொன்னார். "உன் வாழ்க்கையைப் பத்தி... ரொம்ப சந்தோஷம்."

"உங்க குரல் அப்பிடிச் சொல்லலியே?"

"நான் சந்தோஷப்படறேன். மாப்ளையை நான் உடனே பாக்கணுமே?"

"நிஜமாவா? சத்தியமா? சும்மாவாச்சும் சொல்றீங்களா?"

"நல்ல சேதி கண்ணே. ஆச்சரியப்படுத்திட்டே, அது வாஸ்தவந்தான். எனக்கு விஷயம் உள்ள இறங்க அவகாசம் வேணாமா? திடுதிப்னு... நானும் அம்மாவும்... நீ ஒருத்தரோட பழகறதே தெரியாது எங்களுக்கு. ஆனா, அதைப்பத்தி என்ன, எனக்கு சந்தோஷம்தான். அந்த வாலிபனை உடனே நான் பாக்கணும்."

"சரி. இப்ப இன்னொரு விஷயம் நீங்க தெரிஞ்சிக்கணும்."

"நான் தயார்" என்றார் பாலிங்கர். புதிதாய்க் குடிவந்த வீட்டின் சமையலறை. இந்த வீட்டை மகள் அறிந்ததில்லை. ஜன்னலுக்கு அப்பால் அவர் மனைவி. மேரி. சிவப்புத் துவாலையைப் போர்த்திக்கொண்டு, வெள்ளை மஸ்லின் சட்டையும், ஜீன்ஸ் சாராயுமாய்த் தோட்ட வேலையில் இருந்தாள். இளமையாய் சந்தோஷமாய்... அவர்கள் ரொம்ப காலமாக சந்தோஷமாக இல்லைதான்.

"ம், இதை அத்தனை இதுவாச் சொல்ல முடியாது." ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து மகளின் குரல். "வேணா அப்பறமாச் சொல்..."

"இல்லல்ல. எதுவானாலும், சொல்லு. நான் எடுத்துக்கறேன்."

உண்மையில் அவரே அவளிடம் சேதி ஒன்று பகிர வேண்டியிருந்தது. ஒரு ஒருவாரம் முன்னாடி அவரும் மேரியும் விலகிக்கொள்ள தீர்மானம் எடுத்திருந்தார்கள். பேசி விவாதித்து முடிவு எடுக்கிற நேரமாய் இருந்தது. மெலனி வீட்டுக்கு வரட்டும், சொல்லிக் கொள்ளலாம் என்றிருந்தார்கள். ஆனால், மெலனி வரும்போது கூட வேறொருவரை அழைத்து வருகிறதாக இருக்கிறாள்...

மறுமுனையில் அவள் தையலும் கையுமாய் இருந்தாள். "தெர்ல, அப்பா. நான்... கடவுளே... எப்பிடி அதைச் சொல்லறது?"

காத்திருந்தார். சிகாகோவில் இருக்கிறாள். நாலு வருஷம் முன்னால் படிக்க அனுப்பியது. பட்டம் வாங்கியபின் அதே ஊரில் ஒரு தனியார் செய்தித்தாளில் வேலையும் ஏற்றுக் கொண்டாள். சர்லோட்ஸ்வில் பகுதி மையத்திலான இந்தச் சிறு வீட்டுக்கு இவர்கள் மாறிக் கொண்டார்கள். இடமாற்றம் சில நல்லம்சங்களைக் கொண்டு வரலாம் என நப்பாசை. வரவில்லை. மணமாகி இத்தனை வருஷம். இப்போது மனசு ஒட்டுவதாய் இல்லை.

"அப்பா?" என்றாள் அநாதரவாய்.

"சமத்தே, கேட்டுட்டிருக்கேன்."

"சரி, இதப்பாருங்கப்பா..." என்றாள் அவள். "நீங்க திட்டக்கூடாது... சத்தியம் பண்ணுங்க."

"அதுல்லாம் எப்பிடி முடியும் மெலனி?"

"அப்ப திட்டுவீங்க... கோபப்பட மாட்டேன்னு சத்தியம் பண்ணிக் குடுங்க."

"சமத்தே, நானும் உன்னாண்ட ஒண்ணு சொல்லப் போறேன். நீயும் கடுப்பாகக் கூடாது, எனக்கு சத்தியம் பண்ணு."

"சத்தியம்" என்றாள் அவள் - மனசில், என்ன ஆகப் போவுதோ?

"ம்" என்றார். "இப்ப நீ சொல்லு. எதுனாலும் சொல்லு." மனசில் ஒரு எண்ணம், அதிர்ச்சியாய்த் தாக்கியது. "மெலனி... நீ... நீ கர்ப்பமாய் இல்லேல்ல? இல்ல, இருக்கியா?"

அவள் கேட்டாள். "உங்களுக்கு எப்பிடித் தெரியும்?"

அவருக்கு நெஞ்சடைத்தது. "அட கடவுளே, நிஜத்தில்..."

"யேசுவே..." அவள். "சட்னு கண்டுபிடிச்சிட்டீங்க. ஆச்சர்யம்..."

"அப்டின்னா, நீ முழுகாம இருக்கே."

"ம். கடவுளே, நீங்க எதிராளி மனசைப் படிக்க அறிஞ்சவர் அப்பா."

"அப்டில்லாம் இல்ல மெலனி... நீ பேசறதை வெச்சி ஒரு யூகம்... இது, நிச்சயமாத் தெரியுமா?"

"ஆமாமாம், நிச்சயம். ஆனா அது இல்ல சிக்கல். நான் அப்பறமா, சொல்லட்டுமா..."

"ஏன் அப்பறமா?"

"மத்த விஷயத்துக்கும் நீங்க பழகிக்கற வரைக்கும்..."

அவர் பதில் பேசவில்லை. மறுபக்கம் அவள் குழப்பமாய் இருந்தாள். பெருமூச்செறித்தாள். பேச முயன்று நிறுத்திக் கொண்டாள்.

"தெர்ல" என்றாள் கடைசியாக. சட்டென்று அறையில் இருக்கிற இன்னொரு நபரிடம் அவள் பேசுவதாக உணர்ந்தார்.

"பெண்ணே, அம்மாவைக் கூப்பிடட்டுமா?"

"இல்லப்பா. முதல்ல உங்ககிட்ட சொல்லிறணும். எல்லாம் சொல்லி முடிச்சிட்டா நல்லது."

"எல்லாம் முடிச்சிர்றதுன்னா? மெலனி, என்ன பேசிட்டிருக்கோம் நாம. அம்மாவைக் கூப்பிடறேன்." கொஞ்சம் இடக்கு பண்ண ஏனோ தோணியது. "ஏன்னா, நான் கர்ப்பமா ஆனதில்லையே!"

"அட விஷயம் அது இல்லப்பா. அதை நீங்களே யூகிச்சிட்டீங்க."

காதோடு தொலைபேசியை அழுத்திக் கொண்டார். ஜன்னல் வெளியே குனிந்தும் நிமிர்ந்தும், கையுறையால் கீழ் முதுகுத்தண்டை வருடியபடி மனைவி. உடற்பயிற்சி. ஓ மேரி!

"கேட்கறீங்களா?" என்றாள் மகள்.

"இரு" என்றார். "ஒரு நிமிஷம். உட்கார்ந்துக்கிட்டா நல்லதா? ம், உட்கார்ந்துக்கறேன்." மேஜையருகில் இருந்து ஒரு நாற்காலியை இழுத்து உள்ளே அடங்கிக் கொண்டார். மறுமுனையில் அவளது மூச்சு. தூரத்து இணைப்பு. தொலைபேசி இரைச்சலாய்க் கூட இருக்கலாம். "சரி" என்றார். தொண்டை உள்ளிழுத்தது. "சொல்லு."

"வில்லியம் என்னைவிடக் கொஞ்சம்... வயசு கூடியவர்..." என்றவள், மூச்சுத் திகைப்பாய் உணர்ந்தாள்.

சிறிது விட்டு அவர் "அதான் விஷயமா?" என்றார்.

"ம், அது எவ்வளவுன்னு..."

"சரி சரி."

அவள் தன்னைத் தானே தூக்கி நிறுத்திக் கொள்ளப் போராடினாள். பெருமூச்சு. மௌனம். "நான் நினைச்சதைவிட கஷ்டமாகப் போகுது..."

"ஏய், நீ கர்ப்பமா இருக்கிறதை விட எக்குத்தப்பா எதாவது சொல்லப் போறியா?"

அவள் பேசவில்லை.

"யம்மாவே, நீ மீதியைச் சொல்லி முடி."

"ம், நீங்க அப்பிடிக் கேட்டதுக்கு என்ன அர்த்தம்?"

"மெலனி, மனசுக்குக் கஷ்டமான விஷயம்னு நீதானே சொன்னே?"

பதில் இல்லை.

"அடப் பெண்ணே, சொல்லும்மா."

"நான் கல்யாணம் கட்டிக்கப்..." நிறுத்தினாள். "அப்பா, வில்லியம் அறுபது வயசுக்காரர். அறுபது.... அறுபத்திமூணு வயசு."

எழுந்து நின்றுவிட்டார். வெளியே ஜன்னலுக்கப்பால் மனைவி மீண்டும் வேலையை ஆரம்பித்திருந்தாள். துலிப் செடிகளிடையே களை பறித்தவாறிருந்தாள். ஒளியூடுருவும் காலைக் கோடை. வீதி நெடுக அவரவர் வீடுகளில் வாசல் தோட்டத்தில் ஜனங்கள் புல்லும் பூவுமாய் இருந்தார்கள்.

"கேட்டுதா அப்பா? அதுனால பிர்சனை எதுவுமே இல்லை. ஏன்னா, அவர் அறுபத்திமூணு வயசு இளைஞர்தான்! வாலிபமும் ஆரோக்கியமும் உள்ளவர். ஜார்ஜ் பேர்ன்ஸ் மாதிரி..."

"ஜார்ஜ் பேர்ன்ஸ்?" என்றார். "மெலினி, புரியல்ல, அதாரது?"

"ச், இந்த நக்கலெல்லாம் வேணாம் அப்பா."

"இல்லல்ல, நீ என்ன சொல்லிட்டிருந்தே?" மனசு வெறுமையாய் இருந்தது.

"வில்லியமுக்கு வயசு அறுபத்திமூணுன்னு சொன்னேன்..."

"வில்லியம்? யாரு வில்லியம்?"

"நான் கட்டிக்கப் போறவர்..."

"இரு. இரு. நீ காதலர்ன்றே. நீ கட்டிக்கப் போறவர், அவர்... அவருக்கா அறுபத்திமூணு?"

"வாலிப 63."

"63?"

"அப்பா?"

"ஆறு அடி மூணு அங்குலம், அதுமாதிரிச் சொல்லலே, இல்லியா ?"

பதில் இல்லை.

"மெலனி?"

"ம்"

"பெண்ணே, இது தமாஷுக்காகத்தான். இல்லியா? நீ கிண்டல் அடிக்கறே என்னை, இல்லியா?"

"அப்டி இல்லப்பா..." அவள் சொன்னாள். "என்னால நம்பவே முடியல."

"உன்னால நம்ப முடியல்ல..." என்றார் அவர். "நம்பறா மாதிரி இல்லல்ல..."

"அப்பா?" என்றாள். "நான் அப்பவே சொன்னேன்." அறையில் இருக்கிற மற்ற நபரிடம் பேசுகிறாள் போலும். குரல் விலகிப் தேய்ந்தது.

"மெலனி, சரியா ஃபோனை கிட்ட வெச்சிக்கிட்டுப் பேசு..."

"கஷ்டமான விஷயம்தான்" என்றாள் அவள். "உங்களை ரொம்ப அழுத்தறேன்... தெரியுது."

"ச், இல்லல்ல" அவர் சொன்னார். இரத்தம் அதிர்கிறது உள்ளே. "அதைவிட அதிகமாயிருக்கு அவஸ்தை. மெலனி, அப்பிடித்தானா? இல்லை, வானிலை அறிக்கை மாதிரி.... சொல்லி நடக்காமப் போகுதே, அதுமாதிரி வேடிக்கையா?"

"இதெல்லாம் நான் எதிர்பார்த்திருக்கணும்..."

"மன்னிச்சுக்க" என்று சுருதி இறக்கினார். "ஆனா, ஒண்ணு உன்னைக் கேட்கணும்..."

"ச் பரவால்ல." அவளும் சகஜபாவனை கொண்டாடினாள். "என் காரியத்தை நான் பாத்துக்கத் தெரிஞ்சவள் அப்பா. எதும் தடாலடியா எடுத்தம் கவுத்தோம்னு நான் பண்ணல."

அவர் இடைமறித்தார். "அது சரி, கடவுளே, வேற யாரோ அவசரப் பட்டுட்டாங்க. இல்லியா?"

"அப்பா?"

"அவரை அப்படித்தான் கூப்பிடறியா நீ? இல்ல, நான் அப்பா. அவர்? தாத்தா!"

"இதைக் கிண்டலாக் கூட எடுத்துக்க முடியாது" என்றாள் அவள்.

"நானும் கிண்டலாச் சொல்லல, மெலனி. போகட்டும். என் கேள்வி அதல்ல." அவர் நிறுத்தினார். "தயவுசெஞ்சி மன்னிச்சுக்க, ஆனா எனக்குத் தெரிஞ்சாகணும்."

"வாஸ்தவத்தில் உங்களுக்குத் தெரியன்னு எதுவுங் கிடையாது அப்பா. நான் பெரிய பெண். குடும்ப முறைக்காக நான் பேசிட்டிருக்கேன்..."

"அது எனக்குப் புரியுது. ஒரு சம்பிரதாயம், அதேதான். நல்லாவே சொன்னே. சரி, அதே மரியாதைக்கு, மெலனி, சொல்லு... உன் வயித்துக் குழந்தை... அதுக்கு அப்பா.... அவர்தானா?"

"ஆமாம்". அவள் குரல் தாழ்ந்தது.

"கேள்வி கேட்டதுக்கு வருந்துகிறேன். ஆனா எல்லாம் கூட்டிக் கழிச்சுப் பாக்கணும். பாரு, நீ போடற குண்டையெல்லாம் ஒரே தடவையா நான் வாங்கிக்கணும், இல்லியா?"

"உங்க அவஸ்தை புரியுது, நான் முதல்லியே சொன்னேனே?"

"நீ புரிஞ்சிக்கிட்டதா நான் நினைக்கல. என் நிலைமை உனக்குப் புரியவில்லை..."

"சரி" என்றாள். "நான் உங்களைப் புரிஞ்சிக்கவில்லை. நீங்க எப்பிடி இதை எடுத்துக்குவீங்க, அதை நான் சரியாப் புரிஞ்சிக்கிட்டேன்னு நினைக்கிறேன்."

கொஞ்ச நேரம் மௌனம். தொலைபேசியில் தூர இணைப்பின் அலையிரைச்சல் மாத்திரம்.

"பெண்ணே, இது சரியா வருமா? நல்லா யோசிச்சிட்டியா?"

"கண்டிப்பா, பந்தயம் வைப்பேன் அதைப் பத்தி!" என்றாள் உற்சாகமாய்.

"நல்லது, ஆனா, கர்த்தரே..." பாலிங்கர் சொன்னார். "அவருக்கு வயசு என்னைவிட ஜாஸ்திம்மா, குழந்தே! அவரு... அவரு என்னை விடவும் ரொம்ப வயசாளி." பேசும்போதே அந்த வயசுக் கணக்கு மனசையே பாரமாக்கியது. "குட்டிப்பெண்ணே, 19 வருஷம். அவருக்கு என் வயசாகும் போது, இப்பத்தைய உன் வயசைவிட எனக்கு ரெண்டே வருஷந்தான் அதிகம்."

"அதைப் பத்தி என்ன?"

"மெலனி, இந்த டிசம்பரோட எனக்கு 45. நான் 44 வயசு வாலிபன்."

"எனக்கு உங்க பிறந்த நாள் தெரியும் அப்பா."

"ம், அட ஆண்டவா, அந்த மனுசர் உங்க அப்பாவை விட 19 வயசு கூடுதலானவர்!"

"எல்லாக் கணக்கும் என்ட்ட இருக்கு அப்பா. சரி, அம்மாட்டக் குடுங்க..."

"மெலனி, கொஞ்சம் என் வயசு அளவுக்காவது ஆள் நீ பார்த்திருக்க முடியாதா? கொஞ்சம் ஏப்ப சப்பையா ஒரு நாற்பது வயசில்..."

"நிறுத்துங்கப்பா" என்றாள் அவள். "தயவு செஞ்சி... அப்பா, நான் என்ன பண்றேன், எனக்குத் தெரியும்ப்பா."

"உன் குழந்தைக்குப் பத்து வயசுன்னும் போது அவர் வயசு என்ன தெரியுமா? தெரியுமா உனக்கு? அதைப் பத்தி கொஞ்சமாச்சும் யோசிச்சிப் பாத்தியா?"

அவள் பேசவில்லை.

அவர் பேசினார். "எத்தனை குழந்தைங்க பெத்துக்க ஆசைப்படறே?"

"அதெல்லாம் பத்தி யோசனையில்லை. இந்த நிமிஷம் இது. மத்ததைப் பத்தி அக்கறை இல்லை எனக்கு."

திரும்ப உட்கார்ந்தார். வேற மாதிரி சொல்ல யோசித்தார். இந்தக் கலவரம் தெரியாமல் வெளியே அவர் மனைவி. ஜன்னல் மறைப்புத் தட்டிகளின் ஊடே அவரைப் பார்த்துவிட்டுக் கையாட்டினாள். சிநேகபாவம், என்றாலும் சுமுகமாய் அது இல்லை. பாலிங்கர் திரும்ப அவரும் கையாட்டினார். "மெலனி?" என்றார். "வில்லியமை எங்க பார்த்தே, சொல்லலாமா? அதாவது உன்னைவிட 40 வயசு மூப்பான ஒருத்தரை. கல்லூரியில் முதியோர், இளையோர் கலந்து படிக்கறாங்களா என்ன?"

"நிறுத்துங்கப்பா" என்றாள் அவள்.

"இல்ல, எனக்கு அது தெரியணும். ஒரு செய்தித்தாளில் இந்த விஷயத்தை வாசித்திருந்தால், இந்த விவரத்தைத் தெரிந்து கொள்ள ஆர்வப் பட்டிருப்பேன். பத்திரிகைக்கே ஃபோன் பண்ணி விசாரித்திருப்பேன்."

"அம்மாவைக் கூப்பிடுங்க."

"எப்பிடி அவரைச் சந்திச்சே, சொல்லு. சொல்ல மாட்டியா?"

"கர்த்தரே..." என்றாள் அவள். பேசவில்லை. பாலிங்கர் காத்திருந்தார்.

"அவர் பேராசிரியர். உங்களையும் அம்மாவையும் போல. கல்லூரியில். எனக்கு இலக்கியம் எடுத்தார். இலக்கியத்தில் அவருக்குத் தெரியாத படைப்பே இல்லை. அவரைப்போல புத்திசாலி நான் பார்த்ததில்லை. அவருடைய பேச்சு அலுக்கவே அலுக்காது. உங்களுக்கு அதைப் பற்றியெல்லாம் தெரியாது."

"இனிமே நீ வேற என்ன செய்யப் போறே, மெலனி. நிறைய நிறைய வெறும் பேச்சு..."

"நீங்க சொல்றது தவறுன்னு சொல்ல என்கிட்ட நிரூபணம்... வளர்ந்துக்கிட்டிருக்கு!"

கட்டுப்படுத்த முடியாமல் கேட்டார். "இப்பிடிப் பேசச் சொல்லிக் குடுத்தாராக்கும்?"

"நான் ஃபோனை வைக்கப் போறேன்..."

"நானும் ஒண்ணு சொல்லணும்னேன்... நீ கேட்டுக்கறேன்னு சத்தியம் வேற பண்ணினியா இல்லியா?"

"ம்" என்றாள் பளிச்சென்று. "கேட்டுட்டிருக்கேன்..."

தரையில் கட்டைவிரலால் தாளம் போடுகிறாளோ? விளக்கம் கோரக் காத்திருக்கிறாள். அந்தப் பரபரப்பு. யோசித்தார் அவர். "அவர் பேராசிரியர், இல்லியா?"

"சொல்ல வந்த உங்க விஷயம் அது இல்லை... இல்லே?"

"ஆனா நீ, அவர் பேராசிரியர்னு சொன்னே."

"ஆமாம், சொன்னேன்."

"என்னைக் கிறுக்கன்னு நினைக்காதே மெலனி. எனக்கு விஷயம் பழகணும். அவர் கௌரவப் பேராசிரியர்தானே?"

"அது மதிப்புக்குரியதுன்னா, ஆமாம்! ஆனா நீங்க..."

"அதில்லை மெலனி. கௌரவப் பேராசிரியர்னா பதவி ஓய்வு பெற்றவர். நீ கல்லூரிக்குத்தானே போனே?"

அவளிடம் பதில் இல்லை.

"மன்னிச்சுக்கோ, ஆனா கடவுளே, நியாயமான கேள்வி அது."

"புண்ணாக்கு! அல்பத்தனமான கேள்வி." கண்ணீரை அடக்கப் பிரயத்தனப் படுகிறாள், என்று சொல்ல முடிந்தது

"இப்ப அங்க உங்கூட அவர் இருக்காரா?"

"ம்" என்றபோது குரல் உடைந்தது.

"அட கடவுளே."

"அப்பா ஏன் இப்பிடிப் பேசறீங்க?"

"நாம தனியா இதைப் பேசியிருக்கலாம்னு நினைக்கறியா? வேற ஃபோன்ல அவரும் கூட கேட்டுட்டிருக்காரா?"

"இல்ல"

"நல்ல வேளை. ஆண்டவருக்கு நன்றி."

"நான் வைக்கப் போறேன்."

"இல்ல வெச்சிறாதே. நாம அமைதியா இதைப் பேசலாம். நாம பேச வேண்டியதிருக்கு."

அவள் செருமி, மூக்குச் சிந்தினாள். அதுவரை ஃபோனை யாரோ வாங்கிக் கொண்டார்கள். ஏதோ கரகர சத்தம். அவள் திரும்ப வாங்கிக் கொண்டாள். "ம்" என்றாள்.

"அவர் உன்கூட அங்க இன்னும் இருக்காரா?"

"ஆமா" என்ற குரலில் விரைப்பு.

"எங்க இருக்கார்?"

"ஐயய்ய"

"மன்னிக்கணும். எனக்கு தெரியணும். அவர் உட்கார்ந்திருக்காரா?"

"என் பக்கத்தில் அவர் இருக்க நான் நினைக்கிறேன் அப்பா. நாங்க ரெண்டு பேருமே இப்ப சேர்ந்து இருக்கணும்னு நினைக்கிறோம்."

"அவர் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கறேன்றார்..."

"ஆமா" என்றாள் பொறுமையிழந்து.

"நான் அவரோட பேச முடியுமா?"

அவள் பேசியது அவருக்குக் கேட்கவில்லை. சில விநாடிகள் அவர்களுக்குள் கிசுகிசுப்பாகப் பேசிக் கொண்டார்கள் போல. அப்புறம் அவள் பேசினாள். "சத்தியமா அவரை நீங்க நையாண்டி பண்ணக் கூடாது."

"மெலனி, அப்டின்னு அவர் சத்தியம் வாங்கிக்கச் சொல்றாரா?"

"ச்... உறுதியாச் சொல்லுங்க" என்றாள். "இல்லாட்டி ஃபோனை வெச்சிடறேன்."

"சரி. சத்தியம். சத்தியமா நான் அவரை எடுத்தெறிஞ்சி பேச மாட்டேன்..."

சிறு சப்தங்கள். ஓர் ஆணின் குரல். "ஹலோ சார்?" சாதாரணக் குரல். உள்ளொடுங்கிய, தொலைபேசியில் கேட்காத குரல். புகைப்பாரோ? "எனக்குப் புரியுது... இந்த சமயம்..."

பாலிங்கர் இடைமறித்தார். "புகைப்பீர்களா?"

"இல்லையே."

"சரி, சொல்லுங்க."

"ம். உங்க கஷ்டம் அதை நான் புரிஞ்சிக்கறேன்..."

"மெலனி, அவளும் புரிஞ்சிக்கிட்டிருக்கிறதாச் சொல்றா..." பாலிங்கர் சொன்னார். "அதாவது, நீங்க அப்பிடி நினைச்சிக்கறீங்க..."

"மெலனியை உங்களோட பேசச் சொன்னதே நான்தான் சார்."

"அப்பிடின்னா அது நல்ல விஷயந்தான். இதை நான் சகஜப்படுத்திக்க நாளாவும்னு தெரிஞ்சி, அதுனாலதான்... நீங்க, மெலனி கர்ப்பமாறவரை... காத்திருந்தீங்களாக்கும்?"

மறுமுனையில் அவர் மெலிதாய்ப் பெருமூச்சு.

"ஆக நீங்க இலக்கியத்தில் பேராசிரியர்..."

"ஆமா சார்."

"என்னை சார் போடாதீங்க. ஏன்னா, நான் ஒரு பொடியன் இங்க..."

"குத்தல்லாம் வேணாம் சார்."

"ஓ அப்டில்லாம் இல்ல. தானா இந்தச் சூழல்ல வாய்ல வந்தது. உண்மைல... மிஸ்டர். கூம்ஸ், சரியா?"

"சரி சார்"

"கூம்ஸ். சீப்புக்கு வருமே!..."

மறுமுனையில் பதில் இல்லை.

"இதெல்லாம் எனக்கு ஒத்துக்க எத்தனை நாளாவும்னு நீங்க நினைக்கறீங்க? எனக்குப் பழகறதுக்குள்ள உங்களுக்கு எழுபது ஆரம்பிச்சிருமா? உங்களைவிட இருபத்தியோரு வயசு சின்னவ என் பெண்டாட்டி. அவளுக்குப் பழக எத்தனைகாலம் ஆகும்னு நினைக்கறீங்க?"

"... ..."

"அதும் என் சம்சாரத்துக்கு, நீங்க மகா வயசுக்காரர்... கடவுளே!"

"... ..."

"உங்க முதல் பேர்... திரும்பச் சொல்லுங்க..."

மறுமுனையில் அவர் பெருமூச்சுடன், "ரிங் ஆஃப் பண்ணிறலாம்னு தோணுது."

"ரிங் ஆஃப்னீங்கதானே? ரிங் ஆஃப். நீங்க எந்தப் பக்கத்து, எந்த நாட்டு ஆளு?

"அமெரிக்காதான். கொரியா சண்டையில் இருந்தேன்."

"'முதலாம்' உலகப் போரிலா!"

"... ..."

"எத்தனை முறை கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க?" பாலிங்கர் கேட்டார்.

"நல்ல கேள்வி. நீங்கள் இப்படிக் கேட்டதில் மகிழ்ச்..."

"ஆனால் நான் வகுப்பறைல இல்லை. எத்தனைன்னு சொன்னீங்க?"

"என்னைப் பேச விட்டீங்கன்னா, சொல்லலாம்."

"... ..."

"ரெண்டு சார். ரெண்டு முறை நான் மணம் முடித்தவன்."

"விவாகரத்தா?"

"ரெண்டு மனைவியுமே இறந்துட்டாங்க."

"ஆகா, புரியுது. அந்த மாதிரி உங்களுக்கு எதும் ஆயிறாதுன்னு நீங்க உறுதி பண்ணிக்க முயற்சிக்கறீங்க!..."

"இதெல்லாம் நல்லால்ல. நான்... ஃபோனை..." அவர் தடுமாறி, பேச்சை நிறுத்தி விட்டார்.

"எந்த மாதிரி இதுல்லாம் ஆவணும்ன்றீங்க?" என்று அழுத்தமாய்க் கேட்டார் பாலிங்கர்.

"வதைக்கப்டாது. அதையில்ல நான் எதிர்பார்த்ததுன்னு சொல்றேன்."

"என் பெண்ணுக்கு ஒரு நல்ல வாழ்க்கை நானே அமைச்சுக் குடுக்கு முன்னால அவளே தேடிக்கிட்டதை நான் சந்தோஷமா எடுத்துக்குவேன்னு நினைச்சீங்களா?"

"... ..."

"உங்களுக்கு வேற குழந்தைகள் இருக்கா?"

"ம். மூணு வாச்சது." அந்தக் குரலில் முரட்டுத்தனமான இறுக்கம் வந்திருந்தது.

"அவங்கல்லாம் என்னென்ன வயசு, கேட்கலாமா?"

காத்திருந்தார். அவர் மனைவி உள்ளே வந்தாள். கண்ணாடிப் பூசாடியில் தண்ணீரை ஊற்றி, கையில் கொண்டு வந்திருந்த பூக்களை அடுக்கினாள். அவருக்கு முதுகு காட்டியபடி நின்றிருந்தாள். மறுமுனையில் பேச்சே இல்லை. "மன்னிக்கணும்" என்றார் பாலிங்கர். "என் மனைவி இப்பதான் உள்ள நுழையறா. நீங்க பேசினதைக் கேட்கல நான். உங்களுடைய எந்தப் பெண்ணுக்காவது, என் மகள் வயசு காணுமா?"

"நான் சொன்னேன். என் கடைசிப் பையனுக்கு 38."

"உங்களுக்குத் தெரியுது. அவன் என் மகளைக் கல்யாணம் கட்ட ஆசைப்பட்டா, நான் திகைப்பேன்... அந்தளவு வயசு வித்தியாசம்." பாலிங்கரின் மனைவி கையைத் தாளில் துடைத்தபடி அவரை நோக்கி விஷயம் விளங்காத கவலையுடன் வந்தாள்.

"நான் முன்னமே சொல்ட்டேன், திரு பாலிங்கர். உங்க மனசு எனக்குப் புரியுது. விஷயம் என்னன்னா, இங்க ஒரு பெண் கர்ப்பமா இருக்கா. நாம ரெண்டு பேரும் அவளை நேசிக்கிறோம்."

"இல்ல" என்றார் பாலிங்கர். "அப்பிடியில்லை விஷயம். விஷயம் என்னன்னா, நீங்க வேற யாருமில்லை, ஒரு மோசமான, கற்பழிக்கிற காமகொடூரன். Statutory rapist. அதான் விஷயம்..." அவர் மனைவி தோளைப் பற்றிக் குலுக்கினாள். அவர் அவளைப் பார்த்தார். தலையைக் குலுக்கிக் கொண்டார்.

"என்னாச்சி?" அவள் கிசுகிசுத்தாள். "மெலனிக்கு ஒண்ணில்லியே?"

"அப்டி திட்டிட்டா அத்தோட சமாச்சாரம் முடிஞ்சிட்டதா என்ன?" மறுமுனையில் குரல்.

"ஒரு நிமிஷம்" பாலிங்கர் சொன்னார். "ஒரு கேள்வி. பொல்லாத உங்க பல்கலைக்கழகத்தில் என்னா அது, கொள்கை, வர்ற பிள்ளைங்களைத் துணிய அவுத்துப் பாக்கறதுன்னு?"

"அட கடவுளே!" அவர் மனைவியின் குரல். மறுமுனையில் அந்தக் குரல் திக்கித் திணறியது.

"சொல்லுங்க!"

"நாங்க செயல்பட்டப்ப மெலனி என்ட்ட படிக்கல..."

"ஓ அப்டிதான் சொல்லிக்குவீங்களா? நாங்க செயல்பட்டோம்!..."

"நான் மெலனிட்டப் பேசறேன்..." என்றாள் அவர் மனைவி.

"இங்க பார்..." என்றார் அவளிடம். "சித்த சும்மா இரு."

மெலனி ஃபோனை வாங்கிக் கொண்டிருந்தாள். "அப்பா? அப்பா?"

"நான் இங்கதான் இருக்கேன்..." என்றார் அவர். ஃபோனைப் பிடுங்க முயன்ற மனைவியைத் தவிர்த்தபடியே.

"அப்பா, நாங்க கல்யாணம் பண்ணிக்கப் போறம். இதுல நீங்க செய்ய எதுவுமில்லை. புரிஞ்சிக்கிட்டீங்களா?"

"மெலனி..." அவர் சொன்னார். தானறியாமல் கோபம் எகிறியிருந்தது. "கர்த்தராணை, அடியே உன் காதலருக்கு என்வயசு நீ பிறந்தப்ப... என்ன கருமாந்தரம்டி இது, குழந்தே. நீ சரியா இருக்கியா? பைத்தியம் கிய்த்தியம் பிடிச்சிட்டதா உனக்கு?"

அவரைத் தள்ளிவிட்டு அவர் மனைவி ஃபோனைப் பறிக்க வந்தாள். அவர் கொடுத்து விட்டார். எழுந்து நின்று கொண்டிருந்தார்.

"மெலனி" அவள் பேசினாள். "தங்கமே, பாரு குட்டி..."

"வெச்சிரு..." பாலிங்கர் சொன்னார். "கடவுளே. வை. ஃபோனை வெச்சிரு..."

"எய்யா நீங்க அந்த அறைக்குப் போங்க. நான் பேசிக்கறேன்..." என்றாள் மனைவி.

"அவகிட்ட சொல்லு. எனக்கே நிறைய மனுசாளைத் தெரியும். நாற்பது வயசில் நல்லாத்மாக்கள். எவனை வேணாலும் கட்டிக்கட்டும். நாற்பது வயசுக் குழந்தைகள். தொட்டிலாத்மாக்கள்... யாரை வேணாப் பண்ணிக்கட்டும். சொல்லு அவகிட்ட."

"ஜாக். நிறுத்தறீங்களா?" தொலைபேசியை நெஞ்சில் அழுத்திக் கொண்டாள். "நம்ம விவகாரம் பத்தி எதும் அவகிட்ட பேசினீங்களா?"

சிறிது கழித்து, "இல்ல" என்றார்.

அவருக்கு மறுபுறம் திரும்பிக் கொண்டாள். "மெலனி, என்னம்மா இதெல்லாம்? என்ன விஷயம் சொல்லு."

அவளை விட்டுவிட்டு அவர் வெளியே வந்தார். கூடம். முற்றம். திரும்ப சமையலறையைச் சுற்றி வந்தார். உடம்பு படபடத்து சோர்ந்து நடுங்கிக் கொண்டிருந்தது. மேரி நின்ற நிலையில் தலையை அவ்வப்போது ஆட்டிக் கொண்டு, ரெண்டு கையிலுமாகத் தொலைபேசியை அழுத்திக் கொண்டு, தோளை குறுக்கிக் கொண்டிருந்தாள், குளிரில் நடந்தாப் போல.

"மேரி?" கூப்பிட்டார். பதிலில்லை. படுக்கையறைக்குள் போனார். கதவைச் சாத்திக் கொண்டார். ஜன்னல் வழியே பொன்வண்ணக் கதிர்கள். அறையில் நீள நிழல்களின் ஆக்கிரமிப்பு. திடீரென்று அவர் தான் தனக்குத் தானே முணுமுணுத்துக் கொண்டிருப்பதை கவனித்தார். மூச்சை ஆழ இழுத்து, மனசை அடக்க முயன்றார். அடுத்த அறையில் இருந்து அவர் மனைவியின் குரல். "ம்ம்... நான் ஏத்துக்கறேன். ஆனா என்னால..."

வார்த்தை தேய்ந்தது. காத்திருந்தார். சில நிமிடங்கள் கழித்து அவள் அந்த அறைக்கதவைத் தட்டிவிட்டு, பின் உள் நுழைந்து பார்த்தாள்.

"என்னாச்சி?"

"அவங்க தீர்மானமா இருக்காங்க." வாசல் நிலைப்படியில் நின்றிருந்தாள் அவள்.

"இங்க வா."

அவர் பக்கத்தில் வந்து சாவகாசமாய் உட்கார்ந்தாள். சற்று நகர்ந்து அவள் உட்கார அவர் இடம் தந்தார். அவளை லேசாய்க் கட்டிக் கொண்டார். அசட்டுத்தனமாய் உணர்ந்து உடனே விலக்கிக் கொண்டார். ரெண்டு பேராலுமே எதுவும் பேச முடியவில்லை. அவர்கள் தங்களைப் பற்றி பேசித் தீர்த்தவை எல்லாம் இடையே பாறைபோல் நின்றன. மனைவி. மண்ணும் மலருமான தோட்டத்து வாடை.

"கடவுளே" என்றாள் அவள். "எனக்கு யோசனையே அத்துப் போச்சு."

"நாம ஒரு குழந்தை பெத்துக்குவம். மெலனியின் பாப்பாவுக்கு ஒரு அத்தையோ சித்தப்பனோ?"

மேரி ஒரு உயிரற்ற சிரிப்பு சிரித்துவிட்டு, திரும்ப அடங்கி விட்டாள்.

"நம்மப் பத்தி அவகிட்டப் பேசினியா?" என்றார் அவர்.

"ச்" என்றாள். "சந்தர்ப்பம் அமையல. என்னால சொல்ல முடியுமா, அதே தெரியல."

"அவளுக்கு இது ஒரு விஷயமாவே இருக்குமோ இருக்காதோ?"

"இல்லல்ல. அப்டி எடுத்துக்கிற முடியாது."

படுக்கையறைத் தொலைபேசி ஒலி அவர்களைப் பதறடித்தது. அவர் தொலைபேசியை எடுத்து அவளுக்குப் பிடித்தார். "ஹலோ?" என்றவள், "இருக்காரு..." என்று அவரிடம் தந்தாள். "ஹலோ" என்றார் அவர்.

மெலனியின் கண்ணீர்க் குரலில் கோபம். "என்னவோ அவரைச் சொல்லியிருக்கீங்க. சொல்லுங்க. என்ன அது?" அழுகை. குரலைச் செருமிக் கொண்டாள். "என்ன சொன்னீங்க?"

"அதெல்லாம் ஒண்ணில்ல கண்ணு. எனக்கு இப்ப ஞாபகம் கூட இல்ல."

"ஒண்ணு தெரிஞ்சுக்கங்கப்பா. உங்களை விட நான் நல்லாதான் இருப்பேன் அப்பா, அது எத்தனை கஷ்டகாலமா இருந்தாலும்! நான் சமாளிச்சுக்குவேன் அதிலேயே."

"ஆமா" என்றார். "உன்னால முடியும்."

"வெச்சிர்றேன். அப்பறமாச் சொல்றேன் வரோமா இல்லையான்னு. அம்மா இல்லைன்னா, வர்றாப்லகூட இருந்திருக்காது."

"அப்பறம் பேசலாம்" என்றார் அவர். "கண்ணே, நீங்க ரெண்டு பேருமே எனக்கு இன்னும் அவகாசம் குடுக்கணும்."

"எங்க ரெண்டுபேரைப் பொறுத்தவரை இனிமே யோசிக்க எதுவும் கிடையாது."

"அப்டில்லாம் இல்லம்மா. கல்யாணம்ன்றது..." வார்த்தை சிக்கியது. மூச்சு வாங்கிக் கொண்டார். "எல்லாக் கல்யாணத்துலயும் கூடிக் கலந்து பேச நாலு விஷயம் இருக்கத்தான் இருக்கு."

"எனக்கு என்ன தெரியும்ன்றது எனக்கு நல்லாவே தெரியும்."

"ம் ம்" என்றார் பாலிங்கர். " உன் வயசில் அப்படித் தோணும், சமத்தே."

"விடைபெறுவோம்." அவள் சொன்னாள். "மேல எதுவும் இல்லை."

"புரியுது" பாலிங்கர் சொன்னார். தொலைபேசி இணைப்பு துண்டுபட்டபின், மடியில் அந்த ஒலிக்கருவியை வைத்திருந்தார் கொஞ்ச நேரம். அருகில் மேரி. அவளிடம் அசைவேயில்லை.

"ம்" என்றார். "என்னாலயும் சொல்ல முடியல." தொலைபேசியை பீடத்தில் வைத்தார். "ஹா, அறுபத்திமூணு வயசில் எனக்கு மாப்ளை!"

"இந்த மாதிரி நடந்திருக்கு" - அவர் மேல் கைபோட்டவள், எடுத்துக் கொண்டாள். "எனக்கு நடுங்கிட்டது. ஆனா அதான் வேணும்ன்றா அவ."

"கேடுகாலம். மேரி, உனக்குத் தெரியுதில்ல, அந்தத் தடியன்... அவளோட வாத்தியார்!"

"என்ன பேச்சு இது? நம்ம பொண்ணு அது. நம்ம பொண்ணைப் பத்தியாக்கும் பேசறீங்க. அவ, செய்யற காரியத்தை, யோசனை பண்ணிச் செய்யறான்னு கூட உங்களால அவளை மதிக்க முடியல."

இரண்டு பேருமே பேசவில்லை.

"யார் கண்டா?" என்றாள் அவர் மனைவி.. " கொஞ்சநாள் அவங்க சந்தோஷமா இருக்கலாம்." அவள் குரலில் ஒரு சோகம். மனசில் நினைவுகளின் அலைபுரட்டல் என அறிந்தார். அவருக்கும் மேரியுடனான எளிமையான ஆரம்பகால உல்லாச கணங்கள் நினைவு வந்தது. பழைய வீடு. வேறு அறைகள். மெலனி. பாப்பாவின் சவாரிவண்டி வராண்டா. அம்மாவின் துணிகள் சுருட்டிய உடல். இத்தனை வருஷத்தில் அந்தக் காட்சி மாத்திரம் சட்டென்று ஏன் கவனம் பெற வேண்டும். மூச்சு தவிர வேறில்லாத அமைதி. அவரைச் சுற்றி ஒரு மாய வியூகம். மேல்தோலில் சுருக்கம் ஓடி உடனே அடங்கி விட்டது. நெஞ்சில் குப்பென ஒரு கனம். மூச்சடைப்பு. மனைவியைப் பார்த்தார். திரும்பிக் கொண்டிருந்தாள். தன் மடியின் துணியை அவள் நீவி விட்டபடி யிருந்தாள். பிறகு எழுந்து கொண்டாள். "ம்" என்றாள். "வேலை கிடக்கு" என வெளியே போனாள்.

"மேரி?" என மெல்ல அழைத்தார். அவள் கண்டுகொள்ளவில்லை. கதவைத் திறந்து கூடத்துக்கு வந்து, சமையலுள்ளுக்குப் போனாள். குனிந்து உடலை நீட்டி படுக்கையருகே விளக்கைப் போட்டு படுத்துக் கொண்டார். அமைதி. சுவர்ச் சித்திரங்கள். நிழல் உருவங்கள் அவரிடம் உரக்கப் பேச, அவர் கவனத்தைப் பெற முயன்றன. கண்ணை மூடிக் கொண்டபோது சமையலறையில் பாத்திரம் உருட்டும் சலனங்கள். பூவடுக்குதல். தண்ணீர்க் குழாய்ச் சத்தம். மேரி, என மென்மையாய்க் கூப்பிட்டார். அவள் வரை எட்டியிராது. அவள் திரும்பிப் பார்த்திருந்தால் சொல்லவும் அவரிடம் எதுவும் கிடையாது.

>>>

Richard Bausch

Aren't You happy for me?

மெம்ஃபிஸ் பல்கலைக்கழகத்தில் கௌரவப் பேராசிரியர் இவர். கதைகளில் உரையாடல்களூடே அபாரமான அழுத்தம் தருகிறார். அமெரிக்க வாழ்வை இப்படி தேங்காய் விடல் உடைப்பு உடைத்த கதை அபூர்வமாயிருக்கிறது. கதையில் என்ன யதார்த்தம் வைத்தாலும் அது - நமக்கு அசாத்திய த்வனியைத்தான் தர முடியும்.

அறுபத்தி மூணு வயசு ஆளின் பெயரை 'கோம்ஸ்' என்று சீப்பு போல உச்சரிக்கச் சொன்னதை நுணுக்கமாய் எள்ளியிருக்கிறார். பெண்ணிடம் பாலிங்கர் செய்தித்தாளில் இதை வாசித்திருந்தால், விவரம் கேட்டு நாளிதழுக்கே ஃபோனில் பேசி விசாரித்திருப்பேன், என்கிறதாக ஒரு கட்டம். பெண் வேலைபார்க்கிற நாளிதழிலேயே செய்தி வருவதாக ஒரு கற்பனை என்னில் எழுந்தது!

முழுதும் உரையாடல்களில் கதை அமைகிறதில் வாழ்க்கைச் சூழல் மண்ணீரம் போல ஒட்ட முடியாமல் போகிறது. வருத்தம் கிருத்தம் எதுவும் கிடையாது. ஒரு சந்தி சிரிச்ச நிலையை சிரிச்சிக்கிட்டே சொல்லிடலாம். கொரியச் சண்டையில் பங்கேற்ற அமெரிக்கர்கள் கொரியப்பெண்களைச் சூறையாடியதை எதிர்ப்புக் குரலில் பதிவு செய்ததை கவனித்தேன்.

பாலிங்கரின் மனைவி மேரி, இன்னொரு கல்யாணம் முடிக்கக் கூட சித்தப் பட்டிருக்கலாம். இளமையும் கலகலப்பும் அவள் மீளப் பெற்று வருகிறாப் போல பாலிங்கர் கவனிக்கிறார். ஓ அமெரிக்கா!

---

## தாமஸநாசினி

*தெலுங்கில் எண்டமூரி வீரேந்திரநாத்*

**தமிழாக்கம் கௌரிகிருபானந்தன்**

"அனுபந்தம் க்ஷயம் ஹிம்ஸா மனபேக்ஷ்யச பௌருஷம்."

என் உடல் நடங்கியது. தொலைவில் எங்கிருந்தோ மைக்கில் அந்த சுலோகம் ஒலித்துக் கொண்டிருந்தது. நள்ளிரவு தாண்டிவிட்டது. சுலோகத்தைக் கேட்டு உடல் நடுங்குவதாவது என்று உங்களுக்கு சந்தேகம் வரக் கூடும். நான் இருந்த நிலைமை அப்படிப்பட்டது.

வெட்டியானுக்கு பணம் கொடுத்து ஏதோ ஒரு சாக்கு சொல்லி வெளியே அனுப்பிவிட்டு நள்ளிரவு இரண்டு மணிக்கு சுடுகாட்டில் பிணத்தைத் தோண்டி வெளியே எடுக்கும் முயற்சியில் நான் ஈடுப்பட்டிருக்கும் போது, "தான் செய்யும் காரியங்களுக்கு பின்னால் ஏற்படும் சுகதுக்கங்களைப் பற்றி கவலைப்படாமல் செய்யப்படும் காரியங்கள்தான் தாமஸ கர்மாக்கள்" என்ற பொருள் அடங்கிய சுலோகம் ஒலித்த போது என் உடல் நடுங்கியதில் வியப்பு எதுவும் இல்லை. நள்ளிரவில் நான் எதற்காக பிணத்தைத் தோண்டி எடுக்கிறேன் என்று தெரிந்து கொள்ளணும் என்றால் என் கடந்த காலத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியவேண்டும்.

******************************************************************************

"இடிந்து போன பாலத்தின் கட்டுமான பணியில் உங்களுடைய பிரமேயமும் இருக்கிறது என்ற சந்தேகத்தின் காரணமாக உங்களை தற்காலிகமாக பணிநீக்கம் செய்கிறோம்."

ஆபீசிலிருந்து வந்த கடிதத்தைப் பார்த்த போது எனக்குச் சிரிப்புதான் வந்தது. இந்த நாடகமெல்லாம் வெறும் கண்துடைப்பு என்றும், எதிர்க்கட்சிக்காரர்களின் கோபத்தை தணிப்பதற்காக செய்யும் முயற்சி என்றும் எனக்குத் தெரியும். இந்த விஷயத்தை எங்கள் கூட்டாளியான அமைச்சரே சுயமாக தெரிவித்தார்.

பாலம் இடிந்து போன விபத்தில் நூறுபேர் வரையிலும் இறந்து போயிருக்கிறார்கள். அதில் தொண்ணூறு பேர் கட்டட தொழிலாளிகள். பாதி கட்டும் போதே பாலம் இடிந்து போய்விட்டது. அதுவும் ஒரு விதத்தில் அதிர்ஷ்டம்தான். முழுவதுமாக கட்டி முடித்த பிறகு இந்த விபத்து நடந்திருந்தால் இன்னும் அதிகமாக மக்கள் உயிரை இழந்திருப்பார்கள். கட்டடம் சுமார் என்று எங்கள் எல்லோருக்கும் தெரியும். ஆனால் இவ்வளவு சீக்கிரமாக, பாதி கட்டும் போதே இடிந்து போய்விடும் என்று மட்டும் எதிர்பார்க்கவில்லை. வேடிக்கை என்னவென்றால் நாங்கள் எல்லோரும் பணி நீக்கம் செய்யப் பட்டோம். ஆனால்

எல்லோரையும் விட முக்கியமானவர், ஏறக்குறைய கோடி ரூபாய் வரையிலும் சுருட்டிக் கொண்ட அமைச்சர் மட்டும் எப்போதும் போல் இருந்தார். பாலம் இடிந்து போன விபத்தில் உங்களுக்கும் பங்கு இருப்பதால் உங்களை பாராளுமன்றத்திலிருந்தும், அரசியலிலிருந்தும் சஸ்பென்ட் செய்கிறோம் என்று யாரும் அமைச்சருக்கு ஆர்டர் கொடுக்கப் போவதில்லை.

அதான் அவர் தைரியமாக நடமாடிக் கொண்டிருந்தார். எங்களுக்கு தைரியம் சொன்னதோடு ஆறுமாதங்களில் நிலைமை சரியாகிவிடும் என்று உறுதிமொழியும் தந்தார். அவருக்கு கோடி என்றால் எங்கள் எல்லோருக்கும் சேர்த்து ஐம்பது லட்சங்கள். அதில் என்னுடைய பங்கு ஐந்து லட்சம்.

தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டதற்கு நான் ஒன்றும் வருத்தப்படவில்லை.. சொல்லப் போனால் நானே ஒரு மாதம் விடுமுறை எடுத்துக் கொள்வதாக இருந்தேன், பிசினெஸ் விஷயங்களைப் பார்த்துக் கொள்வதற்காக. சொல்ல மறந்துவிட்டேன். சீஃப் இன்ஜினியராக வேலை பார்த்து வந்தாலும் எனக்கு மேலும் சில வியாபாரங்கள் இருந்தன. லாட்டரி கமிஷன் வியாபாரமும் இருந்தது. அதில் நல்ல வருமானம் இருக்கும் என்ற விஷயம் பெரும்பாலானவர்களுக்குத் தெரியாது.

ஆபீஸ் போக வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டதால் ஒருநாள் சாவகாசமாக உட்கார்ந்துகொண்டு என் சொத்து முழுவதும் இவ்வளவு இருக்கிறது என்று கணக்குப் பார்த்தேன். ஒரு மணி நேரம் பிடித்தது. மகளுக்கு வரதட்சிணையாக கொடுத்த இருபது லட்சங்களையும் செர்த்துக் கொண்டால் இரண்டரை கோடி என்று தெரிந்தது. இது சம்பளம் இல்லை. மேல் வரும்படி மட்டும்தான். வியாபாரத்தின் மூலமாக வந்த வருமானம் மேலும் ஒரு கோடியாவது இருக்கும். இறந்து போன என் மனைவியின் நகைகளின் மதிப்பு ஐம்பது லட்சம் வரையிலும் இருக்கும். அவளுக்கு நகைகள் மீது மோகம் அதிகம். அவள் இறந்து போனபிறகு அந்த நகைகளின் மீது மருமகளுக்கு ஒரு கண் இருப்பது எனக்குத் தெரியும். இந்த விஷயமாக அமெரிக்காவில் இருக்கும் என் மகளுக்கும் இந்தியாவில் இருக்கும் மருமகளுக்கும் நடுவில் ஒரு மௌனப் போர் நடந்து கொண்டிருந்தது. ஆயில் விஷயத்தில் அமெரிக்காவுக்கும், இராக் நாட்டுக்கும் நடுவில் போர் நடக்கவில்லையா? அது போலத்தான்.

சாதாரணமாக மாமியாருக்கும் மருமகளுக்கும் ஆகாது என்று சொல்லுவார்கள். ஆனால் என் மனைவியும் மருமகளும் வெளிப்பார்வைக்கு ஒத்துமையாகத்தான் இருந்தார்கள். உள்ளுக்குள் தனிப்பட்ட முறையில் திட்டங்களைத் தீட்டிக் கொண்டுதான் இருந்தார்கள். ஆனால் என் மனைவிக்கு கேன்சர் நோய் வந்த பிறகு என் மருமகள் போர் புரிவதை நிறுத்திவிட்டாள். ரஷ்யா பலவீனமடைந்து விட்டதென்று தெரிந்த பிறகு அமெரிக்கா நட்பு கரத்தை நீட்டியது போல். அந்த இருவரும் என் தாயை எதிரியாக நினைத்தார்கள்.

வயோதிகத்தில் இருக்கும் என் தாய்க்கும், கேன்சர் நோயாளியான என் மனைவிக்கும் தன்னால் பணிவிடை செய்ய முடியவில்லை என்று என் மருமகள் புகார் செய்தாள். அவளுடைய வாதம் எனக்கும் சரியென்று பட்டது. இரவில் தாயின் ஓயாத இருமல் சத்தம் … அவளுக்கு பணிவிடை செய்ய அடிக்கடி சேவை இல்லத்திலிருந்து தாதிகளை வரவழைப்பது …. இதெல்லாம் எரிச்சலாக இருந்தது. அதே செலவில் என் தாயை முதியோர் இல்லத்தில் சேர்த்துவிட்டேன்.

இப்பொழுது மயானத்தில் நான் தோண்டுவது அந்த தாயின் பிணத்தை வெளியில் எடுப்பதற்காகத்தான்.

****************************************************************************

மருமகன் போன் செய்தான். அமெரிகாவில் ஏதோ வியாபாரம் தொடங்கப் போகிறானாம். ஐம்பது வட்சம் முதலீடு செய்தால் அடுத்த வருடமே மும்மடங்காக திரும்பக் கிடைத்துவிடுமாம். அனுப்புவதற்கு எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. நான் சம்பாதிப்பது குழந்தைகளுக்காகத்தானே.

ஆனால் இதில் ஒரு சின்ன பிரச்னை இருந்தது. என் சொத்து முழுவதும் என் குழந்தைகளுக்குத்தான் என்றாலும் மருமகனுக்கு அத்தனை பணம் அனுப்புவதில் என் மகனுக்கு விருப்பம் இல்லை. அவனுக்குத் தெரியாமல் அனுப்ப வேண்டும். எப்படி அனுப்புவது?

என் பிரச்னைக்குக் கடவுளே ஒரு வழி காண்பித்தார். சில நாட்களுக்கு முன்புதான் லாட்டரியில் கோடி ரூபாய் சரி விழுந்ததாக தகவல் தெரிந்தது. எனக்கு லாட்டரி ஏஜென்ஸி இருப்பது உங்களுக்குத்தான் தெரியுமே. விற்றுப் போகாத டிக்கெட்டுகள் இருந்தால் அப்படியே விட்டு வைப்பது என் வழக்கம். அப்படி தங்கிவிட்ட டிக்கெட்டுகளில் ஒன்றுக்கு பரிசு கிடைத்திருக்கிறது. அந்தச் செய்தியை பேப்பரில் பார்த்த போது மகிழ்ச்சியில் என் இதயம் ஒரு நிமிடம் நின்று விட்டாற்போல் இருந்தது.

கோ....டி...ரூ .....பா...ய்...ப ...ரி..சு!

உடனே அந்த டிக்கெட்டுக்காக தேடினேன். கிடைக்கவில்லை. என்னுள் பதட்டம் அதிகரித்தது. நெற்றி முழுவதும் வியர்வை அரும்பியது. அப்பொழுதுதான் நினைவுக்கு வந்தது, அந்த லாட்டரி சீட்டு என் தாயிடம் இருக்கிறதென்று.

முதியோர் இல்லத்தில் இருந்த என் தாயை குசலம் விசாரித்து விட்டு வருவதற்காக போன போது அன்றுதான் அவளுடைய பிறந்தநாள் என்று தெரிந்தது. பரிசாக என்ன கொடுப்பது என்று புரியாமல் கைவசம் இருந்த மீந்துபோன லாட்டரி டிக்கெட்டுகளை கொடுத்தேன். சமயத்தில் சுறுசுறுப்பாக செயல்பட்ட என் மூளையை நானே மெச்சிக் கொண்டேன். அம்மா முறுவலித்தாள். தன்னுடைய பிறந்தநாளை மகன் மறந்துபோனதற்காகவோ அல்லது பூக்களுக்கு பதில் மீந்து போன லாட்டரி சீட்டுகளைத் தந்து பெற்றக் கடனை தீர்த்துக் கொண்டதற்காகவோ.

எதுவாக இருந்தால் என்ன? அந்த டிக்கெட்டுகளில் ஒரு டிக்கெட்டிற்குதான் பரிசு கிடைத்திருக்கிறது. பிணத்தைப் புதைக்கும் போது அந்த நபருக்கு பிடித்த உடைகளுடன், விருப்பமான ஓரிரண்டு பொருட்களுடன் புடைப்பது எங்களுடைய வழக்கம். இப்பொழுதுதான் நான் பிணத்தைத் தோண்டுவது அந்த உடையில் இருக்கும் லாட்டரி சீட்டுகளுக்காகத்தான்.

பிணத்தைத் தோண்டியெடுப்பது என்ற முடிவுக்கு வருவதற்கு நான் ரொம்ப யோசிக்க வேண்டியிருந்தது. இதற்கு ரொம்ப தைரியம் தேவை. நள்ளிரவில் மயானத்தில் தோண்டுவது அவ்வளவு சுலபமான வேலை இல்லை. அதிலும் யார் கண்ணிலும் படாமல் ரகசியமாக செய்ய வேண்டும். கூலி ஆடகளை வைத்து, பட்டப் பகலில் வெளிப்படையாக செய்ய வைக்கலாம்தான். ஆனால் விஷயம் தெரிந்தால் எல்லோரும் முகத்திற்கு நேராகவே ஏசுவார்கள். "இந்த நிலை எங்களுக்கு வந்தால் பத்துக்கோடி பரிசு விழுந்தாலும் நாங்கள் இந்தக் காரியத்தைச் செய்யமாட்டோம்" என்று வசனம் பேசுவார்கள். ஆனால் உண்மை

என்னவென்று அவரவர் மனச்சாட்சிக்குத்தான் தெரியும். இந்தப் பிரச்னைகள் எல்லாம் எதுக்கு என்றுதான் நானே தோண்டுவது என்ற முடிவுக்கு வந்தேன்.

தோண்டும் போது தூசி கிளம்பியதில் இருமல் வந்தது. சமீபத்தில் அடிக்கடி இருமல் வந்து கொண்டிருந்தது. "டி.பி.யாக இருக்குமோ?" என்று மருமகள் மகனிடம் சந்தேகத்தை வெளியிட்டது ஒரு நள்ளிரவு நேரத்தில் என் காதில் விழுந்தது. அவர்களுக்கும் குழந்தைகள் இருக்கிறார்கள். முன் ஜாக்கிரைதையுடன் இருப்பதில் தவறு இல்லையே?

என் மகளுக்கும் இந்தச் செய்தி தெரிந்தவிட்டது போலும். உடம்பை கவனமாக பார்த்துக் கொள்ளச் சொல்லி கரிசனத்துடன் கடிதம் எழுதினாள். மாப்பிள்ளை மட்டும் அமெரிக்காவில் எவ்வளவு முன்னேற்பாடாக உயில் எழுதி வைப்பார்களோ, அப்படி வைக்காததால் அம்பானி குடும்பத்தினர் எப்படியெல்லாம் சண்டை போட்டுக் கொள்கிறார்களோ உதாரணம் காட்டி கடிதம் எழுதி என் கடமையை மறைமுகமாக நினைவுப் படுத்தினான்.

யோசனையில் மூழ்கியிருந்தபடி தோண்டும் வேலையைத் தொடர்ந்தேன். பிணம் வெளிப்பட்டது. அவசர அவசரமாக உடைகளில் தேடினேன். கத்தையாக இருந்த லாட்டரி சீட்டுகள் தென்பட்டன. நடங்கும் விரல்களால் அவற்றில் தேடினேன். நடுவில் தென்பட்டது. அந்த எண் எனக்கு மனப்பாடம்தான். அந்த நம்பரேதான்.

பத்திரமாக அதை சட்டைப் பையில் வைத்துக் கொண்டே என் தாயின் முகத்தைப் பார்த்ததும் திடுக்கிட்டேன். கண்கள் இருக்கவில்லை. ஆனால் அந்தக் குழிகளிலிருந்து தன் இதயவாசல் வழியாக என்னையே பார்த்துக் கொண்டிருப்பது போல் தோன்றியது. பூச்சிகள் தின்னத் தொடங்கிவிட்டாலும் அந்த முகம் அமைதியாக தென்பட்டது.

"கண்ணா! என் பின்னாலேயே உன் பயணம். என்றாவது ஒரு நாள் முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டு நீயும் அனாதைப் பிணமாக இங்கே வந்து சேரத்தான் போகிறாய்" என்று சொல்லுவது போல் தோன்றியது.

திடீரென்று காற்று பலமாக வீசியது. எங்கள் கண் முன்னாலேயே பாலம் இடிந்து விழுந்த போது அதில் சிக்கிக் கொண்டு இறந்து போன கட்டடப் பணியாளர்களின் மரண ஓலம் போல் இருந்தது அந்தக் காற்றின் பேரிரைச்சல். அவர்களுடைய மனைவி குழந்தைகளின் அழுகைக் குரல்கள் எங்கும் எதிரொலிப்பது போன்ற பிரமை.

மயானம் எனக்கு பாடம் கற்றுத் தந்து கொண்டிருந்தது. சமாதிகளே போதி மரங்களாக மாறின. எரியும் சிதையின் நெருப்பு ஞானதீபமாக ஒளி வீசியது.

என் அகக் கண் திடீரென்று திறந்துகொண்டது. வயோதிகத்தில் அடியெடுத்து வைக்கும் இந்த வயதில் எந்த தவிப்புடன் என் தாயின் பிணத்தைத் தோண்டியெடுக்க முற்பட்டேனோ அந்த பேராசை பிசாசாக மாறி என்னைச் சுற்றி நாட்டியம் புரிவது போல் தோன்றியது. மருமகள் அணிந்து கொண்டிருந்த என் மனைவியின் நகைகள் ... மருமகனின் வியாபாரத் திட்டங்கள்.... இவற்றுக்காகவா நான் தவித்தேன்?

"ராஜாவாகவே இருந்தாலும் போகும் போது எதையும் மூட்டைக் கட்டிக் கொண்டு போக முடியாது" என்ற பொன்மொழி நினைவுக்கு வந்தது. கண்ணுக்குத் தெரியாத விலங்குகள் அறுந்து விட்டது போன்ற உணர்வு!

மெதுவாக திரும்பினேன். பகவத்கீதையின் சுலோகம் இன்னும் ஒலித்துக் கொண்டிருந்தது. இந்த முறை எனக்கு பயமாக இருக்கவில்லை. இறந்துபோன ஒவ்வொரு கூலியின் குடும்பத்தினருக்கும் நஷ்ட ஈடாக ஒரு லட்சரூபாயைத் தருவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த லாட்டரி சீட்டு வாழ்க்கையின் அர்த்தத்தைப் புரியவைத்தது. ஜெயிலில் கூட அதே உணர்வுதான் எனக்கு அமைதியைத் தரப்போகிறது.

முற்றும்